கிராமக் கவிதைவளமும்
சிந்தனைக் கட்டுரைகளும்

"சாரதா"
க. இ. சரவணமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To Pathmanabar Iyer

From. S. MAHESAN

14/12/2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கவிதைகளும்
சிந்தனைக் கட்டுரைகளும்

"சாரதா"

க. இ. சரவணமுத்து

'மகேஸ்வரம்'
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: கார்த்திகை 1993
பதிப்புரிமையுடையது
Coppyright Reserved

விலை ரூ.

அச்சிட்டோர்:
ஸ்ராார்லைன் பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிற்றெற்,
213, கிராண்ட்பாஸ் ரோட், கொழும்பு 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருரை

''ஆக்கியோன் பெயரை அறிந்து கொண்டு வாசிக்காமலே மதிப்பீடு செய்யும் 'அறிவாளி'களின் அதிகப் பிரசங்கித்தனத்துக்கு ஆளாகாமல் இருப்பதற்காகவே, எழுத்தாளர் சிலர் புனைபெயர் கொடுத்து எழுதுவ துண்டு. இந்த வகையில் ''இரட்டையர்'' என்ற புனைபெயரிலுஞ் சில கட்டுரைகளை வெளிப்படுத்தி வந்தேன்.

1939 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிற் பயிற்சிபெறச் செல்லுமுன்னரும், அங்கிருந்து மீண்டு இடந்தேடிக் கொண்டிருந்த போதும், பொழுதுபோக்கு முறையில் வாசித்துச் சிந்தனைத் தெளிவு பெறவும், புத்தம்புதிய இலக்கிய ஆக்கங்களைச் செய்யவும் உந்து சக்தியாயிருந்து ஊக்கியவர் என்ற வகையில், வடகோவை நண்பர் திரு. ச. பஞ்சாட்சர சர்மா அவர்களுக்கு எனது நன்றியோடு கலந்த பெருமதிப்புக் கொடுக்கிறேன்.

இலக்கியத்தில் ஆர்வம் துளிர்விட்ட காலப்பகுதியில், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பாலபண்டிதர், தென்னிந் திய சைவசித்தாந்த சமாசம் நடாத்திய இளஞ்சைவப் புலவர் ஆகிய பரீட்சைகளிலுஞ் சித்தியெய்தும் வாய்ப்புக்கிடைத்தமை, எனது எழுத் தாக்க முயற்சிகளுக்கு ஊக்கந் தருவதாயிருந்தது.

01.11.1944 இல் திரு. மு. க. சுப்பிரமணியம் ஆசிரியரின் உதவி யால், காவைமலை என்ற மலையகப் பாடசாலையில் நியமனம் பெற்றேன். ஆனால், அக்காலம் இலங்கை வித்தியாதிபதியாயிருந்த திரு. க. ச. அருணந்தி அவர்களின் நிர்வாக ஒழுங்கினால் K. மடவளை அரசினர் பாடசாலையில் ஆசிரிய நியமனம் கிடைத்ததால், அங்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், கெங்கல்லை, பேராதனை, மருதானை முதலிய வெளியூர் களிலுஞ் சேவை செய்தேன். அந்த நாள்களிலெல்லாம் பொழுது போக்கு முயற்சியாகப் பழமொழிகள், கிராமக் கவிதைகளைச் சேகரித்து அவற்றுக்கு ஏற்ற விமர்சன விளக்கங்கள் எழுதி, ஈழகேசரி, மறுமலர்ச்சிப் பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தேன்.

கட்டுரைகள் அல்லது கவிதைகள் என்ற வகையில் வாரந்தோறும் வெளியிடுவதில் திரு. இராஜ. அரியரத்தினம், திரு. மு. சபாரத்தினம் போன்றோரின் அனுசரணை பெரிதும் உதவியது என்பதையுஞ் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்தான் வேண்டும். நாங்கள் கூட்டு முயற்சியாகத் தொடங்கி நடத்தி வந்த 'மறுமலர்ச்சி'யிலும் எனது கவிதை, கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கிராமக் கவிதைகளைச் சேகரிப்பதில் மலையகத்தில் மட்டுமன்றி, மன்னார், வன்னி, உக்குவளை முதலிய பிரதேசங்களில் இருந்தும் நண்பர் சிலர் உதவினார்கள்.

திருந்திய தமிழாயின்றிக் கொச்சைத் தமிழிலேயே பெரும்பான்மையான பாடல்கள் அமைந்திருந்தன. அவற்றின் பொருளைக் கிரகித்து விளக்கம் எழுதுவது மிகவுஞ் சிரமமாகவே இருந்து வந்தது. இந்த வகையில் விளங்கிக்கொள்ள முடியாத பல கிராமியக் கவிதைகளும் இருந்தனவென்பதையும் குறித்துத்தான் ஆகவேண்டும்.

கலையெழுச்சி மிக்கோங்கும் இந்த நாள்களில் எனது கட்டுரைத் தொகுதியை அச்சிடுவித்து வெளியிடுதல் வேண்டும் என்னும் ஆவல் தூண்டியது. சுமார் அரை நூற்றாண்டு காலமாக, 'இரட்டையர்' என்ற புனைபெயரில் மட்டுமன்றி, சொந்தப்பெயர், 'ஆசாமி' 'சாரதா' முதலிய புனைபெயர்களிலும் யான் இடைக்கிடை பத்திரிகைகளில் வெளியிட்ட கட்டுரைகள் பலவற்றுடன், புதிய சில கட்டுரைகளையும் சேர்த்துக் ''கிராமக்கவிதைவளமும் சிந்தனைக்கட்டுரைகளும்'' என்ற தலைப்பில் இப்புத்தகத்தை வெளியிடுகின்றேன்.

இந்நூலில் கிராமக் கவிதைகள் சிறப்பாகவும், பேச்சுக் கிரகிப்புகள், இலக்கியச் சிந்தனைகள், விவாதத்துறைக் கட்டுரைகள், விட்ட பாடல் விளக்கங்கள், நூல் விதப்புரை, பழமொழி இலக்கியம் முதலிய பல துறைகளிலுமுள்ள கட்டுரைகள் பொதுவாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன. நாட்டாரியல் என்ற வகையில் பற்பல ஆய்வுகள் நடைபெறுமிவ் வேளையில், காய்தல் உவத்தலின்றி இந்நூலினை இரசிகவுலகம் ஏற்றுக் கொள்ளுமென எதிர்பார்க்கின்றேன்.

இந்தக் கட்டுரைத் தொகுப்புக்கு இனியதான நல்லதொரு முன்னுரை எழுதித் தந்த பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி. துரை. மனோகரன், எம்.ஏ., பிஎச்.டி., அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

எனது இலக்கிய ஆக்கங்களையும், கவிதை விமர்சனங்களையும் அடிக்கடி பாராட்டி ஊக்கமூட்டியதுடன், நூலுருவில் வெளியிடுமாறு தூண்டியும் வந்தவர்கள் என்ற வகையில், அன்பான அண்ணர் ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. இ. குமாரசாமி J.P. அவர்களுக்கும், ஆசிரிய மணி திரு. அ. பஞ்சாட்சரம் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுதியைப் பிழையின்றி அச்சிட்டுதவிய கொழும்பு 'ஸ்ரார்லைன்' அச்சகத்தாருக்கும், அச்சிடும் பொறுப்பினைக் கையேற்ற அருமை மக்களுக்கும், மருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். யாவற்றுக்கும் மேலாக இந்நூலை உருவாக்குவதில் உந்து சக்தியாயிருந்து ஊக்குவித்து ஆதரித்த எனது துணைவியைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

''**சாரதா**''
க. இ. சரவணமுத்து

'மகேஸ்வரம்'
உரும்பராய்தெற்கு
உரும்பராய்.
01.11.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைச் சிரேஷ்டவிரிவுரையாளர்

கலாநிதி. துரை. மனோகரன்

அவர்கள் தந்த

முன்னுரை

ஈழத்தின் நவீன இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்த முன்னோடிச் சஞ்சிகையான 'மறுமலர்ச்சி', இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களிடம் ஏற்படுத்திய தாக்கம் அபரிமிதமானது. 1942 இல் தோற்றம் பெற்ற இச்சஞ்சிகை, தமிழ்நாட்டின் மணிக்கொடிபோல், இந்நாட்டின் தமிழ் எழுத்தாளர்களுக்கு ஓர் அரிய பயிற்சிக்களமாகவும் அறிமுக அரங்கமாகவும் அமைந்தது. 'மறுமலர்ச்சி' அளித்த உற்சாகத்தில், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் முகிழ்த்தவர்கள், ஈழத்தின் இலக்கியக் களத்திற் பெயர் பொறித்தவர்களாகவும், தமது ஆளுமையின் சுவடுகளைப் பதித்தவர்களாகவும் விளங்கினர். அவர்களுள் ஒருவரே, இந்நூலின் ஆசிரியரான க. இ. சரவணமுத்து அவர்கள். சாரதா, மகேஸ்வரன், ஆசாமி என்ற புனைபெயர்களில், மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஈழநாடு, கலைச்செல்வி, வெற்றிமணி, இதயம், கிராம ஊழியன், கலாமோகினி முதலான பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், அவர் எழுதிவந்துள்ளார். 1938 முதல் நீண்ட ஆண்டுகள் இலக்கியத்துறையிற் கால் பதித்து நடந்த திரு. சரவணமுத்து, இடையிற் கணிசமான சில ஆண்டுகளை ''இளைப்பாறுவதற்காகப்'' பயன்படுத்தி, ''மீண்டும் தொடங்கும் மிடுக்''குடன் இலக்கியவுலகில் வலம் வரத் தொடங்கியுள்ளார்.

ஈழத்துத் தமிழ்க்கவிதை தொடர்பான நீண்ட காலப் பரிச்சயம் கொண்டோருக்குத் திரு. க. இ. சரவணமுத்துவைத் தெரியாவிடினும், ''சாரதா''வைத் தெரிந்திருக்கும். அந்த அளவுக்குச் ''சாரதா''வின் கவிதைகள் ஒரு காலத்தில் இலக்கியவுலகத்தில் தாக்கத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்தன. காலப்போக்கில், தாம் புனைபெயராக வரித்திருந்த ''சாரதா'' என்ற பெயரையே அவர் தமது மூத்த மகளுக்குச் சூட்டி மகிழ்ந்தார். நீண்ட காலம் இலக்கிய உணர்வோடும், எழுத்து அனுபவத்தோடும் தம்மை இரண்டறக் கலந்துவிட்ட திரு. சரவணமுத்து, ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவராவர். அவரது 'கவிச்சுவடு' என்ற கவிதைத் தொகுதி அண்மையில் வெளியாகியுள்ளது. அந்தச் ''சூட்டோடு சூடாக'', தமது கட்டுரைகள் அடங்கிய இந்த நூலையும் அவர் வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணமுத்து அவர்கள் தரமான ஒரு கவிஞர் மட்டுமன்றி, குறிப்பிடத்தக்க ஓர் உரைநடையாசிரியர் என்பதையும் இந்நூல் உணர்த்துகின்றது. இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் பலவும் பலவகையினவாக விளங்குகின்றன. அவரது இயல்பான ஆர்வங்களும், உணர்வுகளும், நோக்குகளும் கட்டுரைகளிற் பதிவு பெற்றுள்ளன.

இலங்கையில் இப்போது நாட்டாரியல் தொடர்பான ஆர்வமும், ஆய்வுகளும் அதிகரித்து வருகின்றன. இதற்கு, அண்மையில் கொழும்புத் தமிழ் சாகித்திய விழாவின் முக்கிய அங்கமான நாட்டாரியல் கருத்தரங்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னோடி முயற்சியாக அமைந்தது. அக்கருத்தரங்கு, பரவலாக இலங்கையில் தமிழ் பேசும் அறிஞர்கள் இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில் நாட்டாரியல் தொடர்பான ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள கிராமியக் கவிதைகள் தொடர்பான பத்துக் கட்டுரைகளையும், இன்றைய நாட்டாரியல் தொடர்பான ஆர்வங்களோடு பொருத்திப் பார்க்கின்றபோது, எனக்கு வியப்பும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. ஏனெனில், இந்நூலிலுள்ள கட்டுரைகள் எப்போதோ எழுதப்பட்டவை. அவை இன்றும் தமது ''சீரிளமைத் திறம்'' குன்றாமல் வாசகர் மத்தியில் உலவக் கூடியதாக இருப்பது களிப்பைத் தருகிறது.

பொதுவாகவே நவீன கவிதை உட்பட, நவீன இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டோர் நாட்டாரியலிலும் ஆர்வம் கொண்டவர்களாக விளங்குவதைக் காணலாம். இதற்கு முக்கிய காரணங்களாகச் சிலவற்றைக் கூறலாம். நவீன இலக்கியங்களும், நாட்டார் இலக்கியங்களும் சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. அதே வேளை பேச்சுமொழியின் பயன்பாடு, இவ்விரு இலக்கிய வகைகளிலும் இடம் பெறுகின்றன. மேலும் சமகால நிகழ்வுகள் நவீன இலக்கியங்களின் உள்ளடக்கமாக விளங்குகின்றன. அதேபோன்று, அவ்வக்காலச் சமுதாய அம்சங்களே நாட்டார் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன. இத்தகைய ஒற்றுமைகள், நவீன இலக்கியவாதிகளை நாட்டார் இலக்கியத்தின் பாலும் ஈடுபாடு கொள்ளச் செய்கின்றன எனலாம். அதே வேளை, இன்னொரு சுவாரசியமான விடயத்தையும் இது தொடர்பாகக் காண முடிகின்றது. நவீன இலக்கியங்களை எதிர்க்கும் பழமைவாதிகள், அதே வேகத்தில் நாட்டார் இலக்கியங்கள் மீதான தமது விருப்பமின்மையையும் வெளிக்காட்டுவதுண்டு. இந்நூலாசிரியர் திரு. சரவணமுத்து, நவீன மரபில் வந்த கவிஞராக விளங்குவதால், இயல்பாகவே அவரை நாட்டார் இலக்கியங்கள் கவர்ந்துள்ளன. அதன் பிரதிபலிப்பே, இந்நூலிலுள்ள கிராமியக் கவிதைகள் பற்றிய பத்துக் கட்டுரைகளும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் இயல்பாகவே பட்டணத்து ஆடம்பரங்களைவிட, கிராமியத்து மண் வாசனையை மிகவும் விரும்புபவர். எனவேதான், ஆர்வத்துடன் கிராமியக் கவிதைகள் தொடர்பாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார் எனல் வேண்டும்.

நூலாசிரியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராயினும், மலையகக் கிராமியப் பாடல்களுக்கும் முக்கியத்துவம் அளித்திருப்பது பாராட்டத்தக்கது. அதேவேளை, முஸ்லிம் மக்கள் மத்தியில் வழங்கும் கிராமியப் பாடல்கள் பற்றியும் ஆசிரியர் ஓரளவு கவனத்திற் கொண்டுள்ளார். வன்னிப் பிரதேசத்தில் வழங்கும் பன்றிப் பள்ளு பற்றிய அறிமுகம் சுவையாக அமைந்துள்ளது. பழமொழிகள் பற்றிய அவரது ஆர்வமும் நாட்டார் இலக்கியம் தொடர்பான அவரது ஈடுபாட்டின் விளைவேயாகும்.

இப்போதைய நிலையில் கிராமிய இலக்கியங்களைச் சமூகவியல் நோக்கிற் கணிசமானோர் ஆய்வு செய்ய முனைந்து வருகின்றனர். இது இத்துறையில் ஏற்பட்ட ஒரு வளர்ச்சி நிலையாகும். ஆனால் இந்நூலில் இடம்பெற்றுள்ள கிராமியக் கவிதைகள் பற்றிய கட்டுரைகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டமையால், இரசனைப் பாங்கு இணைந்து காணப்படுவது இயல்பானதேயாகும்.

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் பழந்தமிழ் மரபில் வந்த கவிஞராயினும், அவரது சில கவிதைகள் எளிமையும், சமுதாய நோக்கும், இனிமையும் கொண்டவையாக விளங்கி, எவரையும் கவரத்தக்கனவாக அமைந்துள்ளன. இந்நூலிலுள்ள புரட்சிக்கவிதை என்ற கட்டுரை, சோமசுந்தரப் புலவரின் சமுதாய நோக்கை இனங் காட்டத்தக்க நல்லதோர் ஆக்கமாகவிளங்குகின்றது.

தமிழக எழுத்தாளரான வெ. சாமிநாத சர்மாவை அறியாத தரமான வாசகர்கள் இருக்கமாட்டார்கள். அந்தளவுக்குத் தமது பரந்த வாசிப்பினாலும், சிந்தனைத் தெளிவினாலும், எழுத்தாற்றலாலும் தமிழ் வாசகர் உலகைக் கவர்ந்தவர், அவர். அத்தகையவர் பற்றிய ஒரு தரமான அறிமுகமாக அமைந்துள்ளது, சிந்தனைப் பட்டறை என்ற கட்டுரை.

இன்றைய நிலையில் இலக்கிய ஆய்வில் பாடபேதத் திறனாய்வு (Textual Criticism) என்ற பிரிவு வளர்ச்சி பெற்று வருகிறது. பழைய நூல்களில் (ஏன், பாரதியின் கவிதைகளிற்கூட) பாடபேதங்கள் பல காணப்படுவதுண்டு. குறிப்பிட்ட நூல்களின் பதிப்பாசிரியர் தமக்குச் சரியெனப்பட்ட பாடத்தைத் தேர்ந்தெடுத்து, மிகுதியான பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதங்களை அடிக்குறிப்பிற் சுட்டுவதுண்டு. அவ்வாறு ஒரு பாடத்தைச் சரியெனத் தேர்ந்தெடுக்கும்போது, அது அந்தச் சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமானதா, நூலாசிரியரின் கருத்துக்கு இசைவானதா அவரது பாணிக்கு ஏற்றதாக விளங்குகிறதா என்பது போன்ற அம்சங்களை மனங்கொண்டு தீர்மானிக்க வேண்டும். தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை, இரசிகமணி டி. கே. சி. அவர்கள், தமது மன விருப்பத்திற்கு ஏற்றவாறு விரும்பியவாறெல்லாம் பழந்தமிழ்க் கவிதைகளில் திருத்தம் செய்ய முனைந்திருக்கிறார். அதனால் பல தவறான பாடங்களும் அவரது பழந்தமிழ்ப் பதிப்புக்களில் இடம்பெற்று விட்டன. அவற்றில் ஒன்றையே, இந்நூலிலுள்ள பாட்டுந் திருத்தமும் என்ற கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது. டி. கே. சி. யின் பாடம் தவறானது என்பதை, நூலாசிரியர் தர்க்கமுறையில் எடுத்துக் காட்டுவது, கட்டுரைக்குத் தரத்தை ஏற்படுத்துகின்றது.

பாரதிதாசன் தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைத்த சிறந்தவொரு சொத்து என்பதிற் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. ஆனால், அதே பாரதிதாசன் சிலவேளைகளில் தமக்குள் தாமே முரண்படும் ஒருவராகவும் விளங்குகின்றார். அத்தகைய கருத்து முரண் ஒன்றையே நூலாசிரியர் 'பகுத்தறிவாகுமா?' என்ற கட்டுரையில் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். நூலாசிரியரின் ''நக்கீரப் பார்வை'' வரவேற்கத்தக்கது.

எங்களூர் வைத்தியர்கள், மினக்கெட்டான் வேம்பு, வைக்கற்பட்டடை நாய் ஆகிய சுவையான நடைச்சித்திரங்களும் இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

இந்நூலிலுள்ள சில கட்டுரைகள் இரசனைப் பாங்கானவையாக அமைந்துள்ளன. சுவையாக விடயங்களைக் கூறும் பாணி அவற்றிற் கையாளப்பட்டிருக்கிறது. ஓரிரு கட்டுரைகள் அறிஞர் சிலரது சொற்பொழிவுகளின் சாராம்சமாக அமைந்துள்ளன.

நூலாசிரியர் சரவணமுத்து அவர்கள் பழைய மரபிற் காலூன்றி, புதிய சிந்தனைகளிற் திளைத்துத் தமது கட்டுரைகளை ஆக்கியுள்ளார். அவரது நீண்டகால எழுத்துப் பணியின் ஓர் அறுவடையாக இந்நூல் விளங்குகின்றது. ஒரு பழம்பெரும் எழுத்தாளரும், கவிஞருமாகிய க. இ. சரவணமுத்து (சாரதா) அவர்களின் இந்நூல் வாசகருக்குச் சுவையையும், புதிய அனுபவத்தையும் ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

துரை. மனோகரன்

தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
30.11.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

			பக்கம்
1.	கிராமக் கவிதைகள் I	...	1
2.	கிராமக் கவிதைகள் II	...	6
3.	கிராமக் கவிதைகள் III	...	12
4.	கிராமக் கவிதைகள் IV	...	18
5.	கிராமக் கவிதைகள் V	...	24
6.	கிராமக் கவிதைகள் VI	...	29
7.	கிராமக் கவிதைகள் VII	...	33
8.	கிராமக் கவிதைகள் VIII	...	36
9.	கிராமக் கவிதைகள் IX	...	40
10.	கிராமக் கவிதைகள் X	...	45
11.	புதுமைத்தமிழ்	...	53
12.	இலக்கியமாவது யாது?	...	59
13.	இலக்கியக் கல்வி	...	62
14.	கவியுங் கற்பனையும்	...	66
15.	கற்பனையும் பாரதியும்	...	70
16.	புதிய ஆத்திசூடி	...	74
17.	புரட்சிக் கவிதை	...	77
18.	பாட்டுந்திருத்தமும்	...	81
19.	பகுத்தறிவாகுமா?	...	84
20.	பெண்களுக்கு ஆபரணந் தேவையா?	...	88
21.	தமிழுக்கு ரோமன்லிபி	...	89
22.	விற்பதற்கோ? கொள்வதற்கோ?	...	90
23.	தண்டனை ...	...	92
24.	முத்தொள்ளாயிரக் காதல் I	...	95
25.	முத்தொள்ளாயிரக் காதல் II	...	99
26.	இலக்கிய நோக்கில்: புலவர் வறுமை 1,2,3	...	103
27.	'எங்களூர் வைத்தியர்கள்'	...	106
28.	மினக்கட்டான் வேம்பு	...	110
29.	'வைக்கற்' பட்டடை நாய்	...	114
30.	சிந்தனைப் பட்டறை!	...	116
31.	பழமொழி இலக்கியம்	...	121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கவிதைவளமும்
சிந்தனைக் கட்டுரைகளும்

"சாரதா"

க. இ. சரவணமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கவிதைகள்!

"நாட்டுப் புறத்து இலக்கியங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்" என்ற கிளர்ச்சி வலுப்பெற்று வருகின்றது. ஆங்காங்கு தேடுவாரற்றுக் கிடந்த எத்தனையோ கிராமியப் பாடல்கள், இந்த இயக்கத்தின் பயனாய் அம்பலத்துக்கு வந்து விட்டன. உயிருள்ள அக்கவிதைகள், கல்வி வாசனை சிறிதுமில்லாத சாதாரண ஜனங்களின் உள்ளத் துடிப்புகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கிராமக் கவிதைகளிலே யாப்பிலக்கண அமைதி இல்லாமல் இருக்கலாம்; நன்னூல் இலக்கணம் செல்லாமல் இருக்கலாம். ஆனால், சொற்செட்டும், பொருள் ஆழமும், ஓசைநயமும் பார்க்கப் போனால் அக்கவிகளுக்கு நிகர் வேறில்லை.

பால் குடிக்கும் குழந்தைகள் முதல், பல்விழுந்த கிழங்கள் வரை கிராமியப் பாடல்களைப் பாடுகிறார்கள்; இரசிக்கிறார்கள். கிராம வாழ்க்கையின் பல கோணங்களில் இருந்து பார்க்கும் போதும் கவி வாணியின் விஸ்வரூபம் நமக்குப் புலப்படாமல் இருப்பதில்லை.

தாய், பிள்ளையைத் தாலாட்டும் போதும்; சிறுவர், கூட்டமாக விளையாடும் போதும்; பெண்கள், செத்த வீட்டிலே 'ஒப்பாரி' வைக்கும் போதும்; கட்டை வண்டிக்காரர், 'தெம்மாங்கு' இசைக்கும் போதும்; மாலுமிகள் ஓடஞ் செலுத்தும் போதும்; தோட்டக்காரர் 'ஏற்றம்' இறைக்கும் போதும்; கிணறு வெட்டிகள், 'கொந்தாலி' போடும் போதும்; அக்கிரகாரத்திலே மணமக்களுக்கு 'நலங்' கிடும் போதும்—இப்படியாக வாழ்க்கைத் துறைகள் ஒவ்வொன்றிலுமே—அற்புதமான கவிதையூற்றுகள் சுரக்கின்றன.

'சினிமா'ப் பாடல்களும், தெலுங்குக் கீதங்களும் ஐரோப்பிய நாகரீக அலைகளோடு கலந்தடித்தாலும் கூட, இந்தப் பழமையான கர்ண பரம்பரைக் கவிதைகளின் வளப்பம் குன்றிப்போய் விடவில்லை; குன்றிப் போகவும் மாட்டா.

புராதனமான இந்தக் கலையைப் பேணி வளர்ப்பவர்கள் பாமர மக்களே. அதிலும், பாட்டிமாரும்—பிச்சைக்காரரும்—தொழிலாளிகளும் செய்துவரும் தொண்டுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல்—வீரம்—சோகம் முதலிய பல நிலைகளிலும் கிராமியப் பாடல்கள் காட்சியளிக்கின்றன. அவற்றைத் தேடித் தொகுப்பதற்கு ஊர்கள் தோறும் 'தேவேந்திரநாத் சத்தியார்த்தி'கள் பலர் கிழம்ப வேண்டும்! தமிழுக்கு ஆக்கந்தரும் முயற்சிகளில் அதுவே முக்கிய மானது.

''சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிக் காட்டிடையே
நில்லென்று வைத்து
நெடுந்தூரம் போயினையே!''

என்ற ஒப்பாரிப் பாட்டைக் கேட்க எவ்வளவு தூரம் மனம் குழைந்து விடுகின்றோம். சேற்றிலே தாமரை மலர்வது போலவும், சிப்பிக்குள் முத்து விளைவது போலவும் நாட்டுப் புறத்தாரிடையே வழங்கும் இப்படியான இன்கவிகளை மறந்து, வெறும் வரட்டு (முரட்டு—கஞ்சல்—குப்பை)ப் பாடல்களிலே, 'எதுகை—மோனை'களின் வாலைப் பிடித்துக் கொண்டு வீணிற் காலத்தைப் போக்கி விட்டோம்! காட்டு முல்லையின் இனிய வாசனையை நுகராது, கனகாம்பரத்தின் புற அழகிலே மயங்கும் இந்த மனப்பான்மை, விரைவில் ஒழிய வேண்டும். 'ஜீவன் கவிதா' என்று வங்காளிகள் நாடோடிப் பாடல்களுக்குக் கொடுக்கும் மதிப்பை உணர்ந்தால், தமிழ்நாட்டார் இனியும் 'மண்டு'களாக இருப்பார்களா?

''மூங்கில் இலைமேலே தூங்குபனி நீரே'' என்ற ஏற்றப்பாட்டைப் பூரணமாய் அறிவதற்கு, ஓரிரவு முழுவதும் 'சிவராத்திரி விரதம்' அனுட்டித்தாராம் ஒரு புலவர். ''தூங்குபனி நீரை வாங்கு கதிரோனே''—என்று பொழுது புலர்ந்த பின்னரே அவரது விரதபலன் கைகூடிற்றாம்! கிராமியக் கவிதைகளைக் கிரகிப்பதிலே பொறுமையும், சகிப்புத்திறமையும் இருக்க வேண்டும் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

தமிழ்க்கவிப் பித்தர்களே! தமிழ் வெறியர்களே!! எழுங்கள். தமிழ்ப் பணி புரிவதற்கு உங்கள் காதுகளைச் சீராக உபயோகியுங்கள்.

''ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்;
காசுக்கு இரண்டு விற்கச் சொல்லிக்
காகிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரன் பணம் என்னபணம்—அது
வேடிக்கை செய்கிற வெள்ளிப்பணம்
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டே—அவள்
வெட்கிப் போனாளாம் மீனாட்சி!''

'இட்டதே சட்டம்' என்றிருக்கும் அதிகாரவர்க்கத்தின் இறுமாப்பைக் குத்திக் காட்டுகிறது இப்பாடல். குடிகளின் கஷ்ட நஷ்டங்களை உணராது 'வெட்டினால் மொட்டை; விட்டால் குடுமி' என்பதுபோல, மனம்போன போக்கிலே சட்டமியற்றுகிற அரசாங்கத்தை மட்டந் தட்டுகிற இப்பாட்டு ஒரு 'கிண்டல் சித்திர'மே! காசுக்கு இரண்டு வெள்ளரிக்காய் விற்பதென்றால், கமக்காரன் உருப்பட்டாற் போலத் தான்! அத்தோடு, ''பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்'' என்ற விதமாக, வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டு வெட்கிப்போன ஒரு பெண்ணின் ஒழுக்கத் தவறைக் குறிப்பாகக் குத்திக் காட்டுகிறது இப்பாட்டு. பெரிய பெரிய பிரசார இலக்கியங்களாலுஞ் செய்ய முடியாத ஒரு சமூகச் சீர்திருத்த வேலையை இந்தச் சிறிய கிராமியப் பாடல் செய்துவிடுவதை இங்கு பார்க்கிறோம்.

''மன்னன் வருவாரென்று
மாலை தொடுத்து வைத்தேன்;
மன்னன் வரவில்லை,
மாலையுமோ வாடிப்போச்சு!''

தலைவன் வரவை எதிர்பார்த்தேங்கும் ஒரு தலைவியின் உணர்ச்சிப் பெருக்கை இப்பாடல் புலப்படுத்துகிறது. மன்னனுக்குச் சூட்டி மகிழ் வதற்கென்று, கஷ்டப்பட்டுத் தொடுத்து வைத்த மாலை வாடி விடுகிற தாம்; ஆனால், மன்னன் வந்தபாடில்லையாம்! அந்தப் பெண் உள்ளத் தின் அங்கலாய்ப்பை இந்த இரண்டுவரிப் பாட்டு எவ்வளவு தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது!

''எல்லாரும் பொன்பூண
என்மகளோ பார்த்திருப்பாள்;
வாடி மகளே,
வறையோட்டைக் கட்டிவிட!''

ஏழைக் குடும்பம்; 'கூப்பன்' அரிசி வாங்குவதற்கே தொல்லைப்படு கிறது. ஆண் மூச்சனை இல்லாத அந்தக் குடும்பத்திலே இரு சீவன்கள் (ஒன்று தாய் மற்றது, மகள்) இழுபடுகின்றன. ஆனால், பெண்பிள்ளை இருக்கிறாளே, அவளுக்குத் தன்னை மறந்த எண்ணம்; ஊரிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீக மங்கையர் போலத் தானும் உடுத்துப் படுத்துத் திரியவேண்டும் என்று விரும்புகிறாள். ''புது நகைகள் வந்திருக்கின்றன—அம்மா! எனக்கும் அவைபோல வாங்கித்தர வேண்டும்'' என்று ஓயாமல் அவள் தாயை நச்சரிக்கிறாள்—பாவம்! தாயால் இதற்கு என்ன செய்ய முடியும்? பல புத்திகளையும் சொல்லிப் பார்த்தாள்; கேட்கவில்லை. அந்த நிலையில் சிறிது ஆத்திரங் கலந்த கேலியாக இப்படிச் சொல்லு கிறாள் போலும்!

''சின்னச் சின்ன வண்டிகட்டிச்
சிவத்தைமாடு இரண்டு பூட்டி
வாழைக்காய்ப் பாரமேற்றி
வா றாண்டி உன்புருஷன்;
மாடுமோ செத்தல் மாடு
மணலுமோ கும்பி மணல்
மாடிழுக்க மாட்டாமல்
மாய்கிறாண்டி உன்புருஷன்!''

ஒரு கேலிச் சித்திரம் இது. செத்தல் மாடுகளை வைத்து வேலை வாங் கும் கொடுமையையும்; அதிலுள்ள அவஸ்தைகளையும் சுட்டிக் காட்டு கிறது பாட்டு. ''மாடிழுக்க மாட்டாமல் மாய்கிறாண்டி உன்புருஷன்'' என்று சொல்லும்போது சிரிப்புடன் கலந்த ஒருவகையான வேதனை உதிக்கப் பார்க்கிறது!

''சொம்பு போல் குடுவைக்குள்ளே
சோறுபோல் கொதிக்கும் கள்ளே
அன்புடன் வளர்த்த கள்ளே
ஆதரித் தணைத்த கள்ளே
எங்குநீ சென்றொளித்தாய்
ஏழையேன் தவிக்கின்றேனே!''

கள்ளுச்சாமியின் தாசானுதாசன் ஒருவனுடைய பிரலாபம் இது. அன்புடன் வளர்த்த—ஆதரித்தணைத்த—கள்ளுப் பெருமான் மறைந்து விட்டாரென்றால், அந்த ஏழைப் பக்தனுக்கு எவ்வளவு ஆத்திரமாக இருக்கும்! தன்னுடைய தவிப்பை அவன் சொல்லும் அழகைப் பார்த் தீர்களா? சேலத்திலே 'மதுவிலக்கு' இருந்ததே அந்தச் சந்தர்ப்பத்துக் கேற்றது போல இப்பாட்டு அமைந்துள்ளது.

''மழையே மழையே மெத்தப்பெய்
வண்ணான் குண்டு நிரம்பப்பெய்
குப்பையில் சாம்பல் குமுறப்பெய்
கூழாங்கல்லுத் தெறிக்கப்பெய்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக் காலங்களிலே கிராமச் சிறுவர் இப்படிப் பாடி ஆரவாரிக்கிறார்கள். மலைவளமோ ஆற்றுவளமோ இல்லாத நமது யாழ்ப்பாணத்தில், மழையின் வரவை எதிர்பார்த்தேங்கும் மக்களின் உள்ளத் துடிப்பைப் பாட்டுக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது. வண்ணான் குண்டு நிரம்பலாம்; குப்பையில் சாம்பல் குமுறலாம். ஆனால், கூழாங்கல்லுத் தெறிப்பதெப்படி? "கல்லுமழை பெய்தாலும்—ஆலாங்கட்டி விழுந்தாலும்" சம்மதமே என்று சொல்வது போலப் பாடல் அமைந்துள்ளது.

"'அ'னா 'மு'னாக் கடையிலே
அரிசி விற்கிற விலையிலே,
பெண்டுகள் படுகிற பாட்டிலே
பொலிஸுக்காரன் வருகிற வரையிலே!"

கொள்ளைலாபம் அடிக்கும் கள்ள வியாபாரிகளிடத்தில் பொதுமக்கள் அனுபவிக்கிற கஷ்டத்தின் எதிரொலி இது. எங்களூர்ச் சிறுவரிடத்திலேயே இப்பாடலைக் கேட்டறிந்தோம். 'கூப்பன்' கட்டுப்பாடு ஏற்பட்டதன்பின் இது உலாவி வருகிறது.

"காக்காக் குஞ்சுக்குக் கலியாணம்
காவடி ஓட்டம் தேரோட்டம்
நாலு கரண்டி மண்ணெண்ணை
நாற்பத்தெட்டுத் தீவாளி
வாறார் வாறார் சுப்பையர்
வழியை விலத்தடி மீனாட்சி!"

சிறுவர் படிக்கும் பாட்டுத்தான் இதுவும். இங்கே ஒரு கலியாணக் காட்சி கற்பனை செய்யப்படுகிறது. தமது தகுதியை உணராது, பெரிய எடுப்பிலே சிவியத்தை நடத்திக் 'கந்தறுகிற' பேர்வழிகளுக்கு இது ஓர் அடியாகுமோ? நாலு கரண்டி எண்ணெய் நாற்பத்தெட்டு விளக்குக்குப் போதுமா என்று கேட்க வராதீர்கள். இது ஒரு பரிகாசப் பாட்டு!

"தங்கரத்தினம் தகரப்பெட்டி
நான் வளர்த்தது பூனைக்குட்டி"

தாய்மார், தம் குழந்தைகளைச் செல்வமாகக் கொஞ்சிப் பாராட்டும் போது இப்படிச் சொல்லுகிறார்கள். வாத்ஸல்யத்தில் வடித்தெடுத்த சொற்கள் அவர்கள் வாக்கில் உருளுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முன்னமென் குடிகெடுத்தநீ
முப்பது சக்கர மழித்தநீ
பின்னை என்குடி கெடுக்கவோ—நுனித்
திண்ணையில் வந்திருக்கிறாய்?''

சிநேகிதத் துரோகி ஒருவனை ஏசுவது இது. 'ஏழரை வீட்டான்' போல இன்னும் என்னைத் தொடருகிறானே பாவி—என்று மனம் வெதும்பிப் பாடியது போலிருக்கிறது. ஓசைப் பொலிவுள்ள பாட்டு.

கிராமியப் பாடல்களைச் சேகரித்து வெளியிட வேண்டும் என்ற உணர்ச்சி யாழ்ப்பாணத்திலும் தீவிரமாகப் பரவ வேண்டுமென்பது எங்கள் அவா. அது சம்பந்தமாக இனி வெளிவரப்போகும் கட்டுரை களுக்கு இது ஒரு முன்னுரையாக இருக்குமென நம்புகிறோம்.

கிராமக் கவிதைகள் II

'உள்ளக்கிடக்கை சொல்லிலே பிரதிபலிக்கும்'—என்பார்கள். கிராமக் கவிதைகளை அனுபவிக்கும்போது இவ்விதி ஞாபகம் வருகிறது. படிப்பு வாசனையில்லாத பாமர ஜனங்கள், உணர்ச்சி வேகத்திலே உயர்ந்த கவிதைகளைச் சிருஷ்டித்து விடுகிறார்கள். அச்சிருஷ்டிகள் யாவும் உயிருடன் சோபிக்கின்றன.

கிராமவாசிகளின் இருதயத்திலிருந்து பிறந்த அக்கவிகளில் யாப்பமைதி பார்க்க முடியாது. ஆனால், சிறந்த கட்டுக்கோப்பைக் காணலாம். கவிதாரஸத்துக்குக் காரிகைப் புலவர்களின் பாட்டுகள் பிச்சை வாங்க வேண்டும்!

வேதத்துக்குச் 'சுருதி'—காதினால் கேட்கப்படுவது—என்று ஒரு பெயருண்டு. கிராமக் கவிதைகள் கூட, கர்ண பரம்பரைச் சொத்தாக இருப்பதால், அவற்றையும் 'சுருதிகள்' என்று குறிப்பிடலாம் போலத் தோன்றுகிறது!

காலத்தின் போக்கு, கிராமத்தின் மகிமையைக் கூட்டி வருகிறது. யுத்தத்துக்கு ஒதுங்குமிடம், பஞ்சத்தைத் தாங்குமிடம், புராதன, கலைச் செல்வங்களையெல்லாம் போற்றுமிடம்—கிராமந்தான். கிரா மத்தைக் கைவிட்டால் நமக்கு வாழ வழியில்லை. ''பட்டிக்காட்டார்'' என்று 'நொட்டை' சொல்லி ஒதுக்கி வைத்த காலம் போய், ''உயிர்ப் பிச்சை தாருங்கள்'', ''உயிர்க் கவிதையைக் கூறுங்கள்''—என்றெல் லாம் குறையிரக்கும் காலமும் வந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய மறுமலர்ச்சிக்காரர், கிராமங்களிலே மங்கிக் கிடக்கும் 'நாடோடி'ப் பாடல்களைத் திரட்டி வெளிப்படுத்துவதை முக்கிய தொண்டாகக் கருதுகிறார்கள். இவ்வுணர்ச்சி தமிழ் நாட்டிலும் உருப் பெற்று வருகிறது. யாழ்ப்பாணத்திலும் இவ்வுணர்ச்சி பரவவேண்டும்.

''காரை கிடைக்காத
காந்தாரிப் பஞ்சத்திலே
கீரை கொடுப்பானோ
கீழ்சாதி வெள்ளாளன்?''

இயற்கையாகவே, 'வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணா தான்'. அப்படிப்பட்ட ஒருவனிடத்திலேயே, கீரைதானும் வாங்க முடியவில்லையாம். பஞ்சத்தில் அடிபட்ட சலிப்பு, பரோபகார சீல னாகிய வேளாளனையே 'கீழ்சாதி' என்று தூற்றச் செய்கிறது.. 'கூப்பன் அரிசி' என்று கூக்குரல் போடும் இந்நாட்களில், பழமையான இக்கிராமப் பாட்டு வழங்கி வருவதில் ஆச்சரியமில்லை.

''அரிசி வித்த விலையிலே
அவர் கிடந்த கிடையிலே,
இரண்டு பெண்டாட்டி ஆசை;
இழுபடுகுதே மீசை!''

இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு திண்டாட்டந்தானே! "அரிசிவா" ''அரிசிவா'' என்று ஜனங்களெல்லாம் ஆலாய்ப் பறக்கிறபோது, சோம்பேறி மாப்பிள்ளையைச் சும்மா விடுவார்களா அவனுடைய தர்ம பத்தினிகள்! பரிகாசங் கலந்த பரிதாபப் பாடல் இது.

''வெள்ளி வெளிச்சத்திலே
விடியப்புறச் சாமத்திலே
இடியப்பக் காரிவந்து
குடியைக் கெடுக்கிறாள்!''

கடன்பட்டார் நெஞ்சம் கலங்குவதற்கு இது ஒரு காட்டு. நித்திரை யையும் குழப்பி, எழும்புகிற போதே கடனைப் பற்றியும் நினைப் பூட்டுவதென்றால் எவ்வளவு ஆத்திரமுண்டாகும்? அந்த ஆத்திரம் ''குடியைக் கெடுக்கின்றாள்'' என்று இடியப்பக்காரிமேல் எரிந்து விழ வல்லவா செய்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாக்கு வெத்திலை கேட்கிறாரவர்
போக்கணங் கெட்ட மாப்பிள்ளை
பசிக்குதென்று சோறு கேட்டால்
அடிக்க வாறார் மாப்பிள்ளை
மடியைக் காட்டிப் பிச்சைகேட்டால்
தடியைக் காட்டுறார்;
அடிபணிந்து தெண்டனிட்டால்,
வெளியே போடி என்கிறார்"

இது ஒரு பிச்சைக்காரி பாட்டு. 'பிச்சைக்கு வந்தவளைப் பெண்டாள நினைக்கிறான்' என்ற விதமாக அவள் ஏளனஞ் செய்கிற முறையைப் பார்த்தீர்களா? "போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர்.... பாவலர்". பிச்சைக்காரரும் அவர்களுக்குச் சகோதரங்களாகத்தான் இருக்க வேண்டும்!

"ஆட்காட்டி! ஆட்காட்டி!
எங்கெங்கே முட்டையிட்டாய்?
கல்லுக் கிழப்பிய
கடலோரம் முட்டையிட்டேன்;
இட்டதுமோ மூன்று முட்டை.
பொரித்ததுமோ இரண்டுகுஞ்சு
மூத்தபிள்ளைக் கிரைதேடி
மூன்றுமலை நான்கடந்தேன்
இளையபிள்ளைக் கிரைதேடி
இரண்டுமலை நான்கடந்தேன்
நானழுத கண்ணீரும்
குஞ்சழுத கண்ணீரும்
வாய்க்கால் நிரம்பி
வழிப்போக்கன் கால்கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்த(இ)டத்தே
இலாமிச்சை வேருன்றி
மஞ்சளுக்குப் பாய்ந்த(இ)டத்தே
மாதாளை வேருன்றி
தாழைக்குப் பாய்கையிலே
தழும்பினது தண்ணீர்
வாழைக்குப் பாய்கையிலே
வற்றியது கண்ணீர்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப பாரம் தாங்கமுடியாத ஒரு தொழிலாளியின் தவிப்பை ஆட்காட்டியின் வாயிலாகப் புலப்படுத்துகிறது கவிதை. தாய்மார் குழந்தைகளின் அழுகையை அடக்குவதற்கும் பராக்குக் காட்டிப் பாடுகிற தொட்டிற் பாட்டுகளில் இதுவுமொன்றாக இருக்கவேண்டும். சிறு பிள்ளைகள் பாடக் கேட்டறிந்தோம்.

''தங்கரத்தினமே தாலிகட்டினனே
தாலிகட்டின மூன்றா நாத்துப் பாடைகட்டினனே!''

மனைவி இறந்த துயரத்தில் ஒரு ஆடவன் பிரலாபித்தது. 'வெண்ணெய் திரண்டு வருகிறபோது தாழி உடைந்தது' போல, வாழ்க்கை இன்பத்தை நுகரவேண்டிய காலத்தில் அதை இழந்தேன்; கொடுத்துவைக்காத பாவி!—என்று ஏங்குவது போல, அவனுடைய உருக்கமிருக்கிறது. தாலிகட்டின கையாலேயே பாடையும் கட்டின விரைவை அவன் புலப்படுத்துவதிலுள்ள சோகக் காட்சியைப் பார்த்தீர்களா?

''அச்சுவேலித் திருவிழாவாம்
அதற்கேற்ற சப்பறமாம்
வாணவிளையாட்டு களாம்
வண்டிற் சவாரிகளாம்''

திருவிழாப் பார்க்கப்போன ஒரு இரசிகனுடைய உள்ளத்தில் மலர்ந்த இது, இப்பொழுது எங்கும் அடிபடுகிறது. அச்சுவேலிப் பிள்ளையார் கோவிலிலே திருவிழாவென்றால், அதற்கு அலாதியான மதிப்புக் கொடுத்த காலமும் ஒன்றுண்டு. சப்பறம்—வாண விளையாட்டு—வண்டிற் சவாரி என்பன எவ்வளவுக்குப் பிரதானமுற்றிருந்ததென் பதை இப்பாடல் நன்கு புலப்படுத்தும். பழைய 'தெம்மாங்கு'ப் பாடல்களில் இதுவுமொன்று.

''ஆத்திலே தலைமுழுகி
ஆவரம்பூப் பட்டுடுத்துத்
தூத்துகிறாள் தலைமயிரைத்
துரைமக்கள் கையெடுக்க''.

பெண்மையின் அழகுபொலிந்த ஒரு இன்பக் காட்சியை இப்பாடல் சுட்டுகிறது. 'தூத்துகிறாள் தலைமயிரை'—என்றால், தலைமயிரை யல்ல; அழகையே அள்ளித் தூற்றுகிறாள் என்று சொல்லத் தோன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது! துரைமக்கள் கும்பிட்டுக் குறையிரக்கும் படியான வசீகரம் உடையவள் அப்பெண் என்பதை, 'சுருங்கச்சொல்லி விளங்கவைத்த, முறை இலக்கிய இரசிகருக்கு ஒரு நல்விருந்து.

''பெட்டி வேண்டாம் பேனை வேண்டாம்
சின்னமாமி—உந்தன்
பெண்டுகளைத் தந்திடணை சின்னமாமி
தாலிவேண்டாம் கூறைவேண்டாம்
சின்னமாமி—உந்தன்
தையலரைத் தந்திடணை சின்னமாமி''

அளவுகடந்த அங்கலாய்ப்புள்ள ஒரு 'பைத்திய'த்தின் பாடல் இது. ''வேறொன்றும் வேண்டாம். உன் பெண்ணையே தந்துவிட்டால் போதும்''—என்று அந்தப் 'பெண்—பைத்தியம்' அலட்டுவதைப் பார்த்தால், சிரிப்பு வராதவர்களுக்குக்கூட, ஓயாத சிரிப்பு வந்துவிடும். பெண்களைப் பெற்று வைத்துக் கொண்டு திண்டாடுகிற பேர்வழிகளுக்கு இப்படியான மாப்பிள்ளை தேடக் கிடைக்காதல்லவா?

''மாப்பிள்ளை வருகுது
மணிச்சத்தம் கேட்குது
மாமியார் வீடு
திடின்புடின் என்குது''

மாப்பிள்ளை வருவதை மணிச்சத்தம் உணர்த்துகிறது; மாமியார் வீட்டுப் பெண்களின் மருட்சியை, அவர்கள் அங்குமிங்கும் ஓடித்திரிகிற வெருட்சிக் குறிப்பு—'திடின் புடின்'—உணர்த்துகிறது. எவ்வளவு தமுக்கான கவிக் குறிப்பு.

''பாவற் கொடியருகே
பாம்புண்டு பல்லியுண்டு
பார்த்துக் கிடவும்
பதனமாய்ப் பூச்சியரே—(ஆரா)

''பாலும் அடுப்பினிலே
பாலகனும் தொட்டிலிலே
பாலகனைப் பெற்றெடுத்த
பர்த்தாவும் கட்டிலிலே—(ஆரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொள்ளி எடுத்தார்
குறங்கொள்ளி வாயிலிட்டார்
எல்லை கடந்தார்
இனிவாரும் பூச்சியரே''—(ஆரா)

சொந்தப் புருஷனுக்குத் தெரியாமலே, சோரநாயகனைத் 'தாக்காட்டு'வதற்கு ஒரு சாகஸக்காரி செய்த சூழ்ச்சிப் பாட்டிது. பாவற் கொடியருகே பதுங்கு—என்பதும், சந்தர்ப்பம் சரியில்லை—என்பதும், அவர் போய் விட்டார் இனிவா—என்பதும் எவ்வளவு சாதுரியமான குறிப்பு மொழிகளால் புலப்படுத்தப்படுகின்றன! பிள்ளையைத் தாலாட்டுகிறவள், பிறர் சந்தேகிக்காத வகையில் சோரநாயகனுக்குச் சமிக்ஞை காட்டுகிற திறமைதானென்னே! பூச்சி, குறங்கொள்ளி என்பன பரிபாஷைச் சொற்கள்.

''தூரா தூரத்திலே—பறங்கி
துப்பட்டி விற்குதடா
துப்பட்டி வாங்கித்தாடா—பறங்கி
தோளுக்கு மட்டம் பார்த்து;
துலுக்கன் சந்தையிலே—பறங்கி
உலக்கை விற்குதடா;
உலக்கை வாங்கித்தாடா—பறங்கி
குலுக்கி மாவிடிக்க;
காலா காலத்திலே—பறங்கி
காலாழி விற்குதடா
காலாழி வாங்கித்தாடா—பறங்கி
காலிலே போட்டுக் கொள்ள''.

இது பழைய சரித்திர நிகழ்ச்சியொன்றை உள்ளடக்கிய பாட்டு. பறங்கியர் இங்கு ஆட்சி நடத்திய காலத்தில் சுதேசிப் பெண்களை மணம் புரிந்தனர் என்ற குறிப்பு இதனாற் புலப்படுகிறது. பறங்கித் துரைமாரில் 'இடங்கண்ட' அந்தப் பெண்கள், தம்மனம் போனபடியெல்லாம் அவர்களை ஆடச் செய்தார்கள். அந்த நாடக விசேஷங்களிற் சில, இப்படியான பாடல் வடிவில் பரிமளிக்கின்றன!

''ஏலேலோ ஏலிலலோ—தத்தையா
ஏலேலோ ஏலிலலோ''
''நாழிகை யொன்றுக்கு நானூறு கப்பல்
நாள்தோறும் தப்பாமல் தினம் வந்திறங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடைய நெடியநகர்க் கப்பல்வரும் சேதி
சென்னைப் பட்டினங் கோட்டை சனங்களெல்லாம் கேட்டு
பூரித்து ஆனந்த பரவசரராகி
புதுமைகளைப் பார்க்கவென்று கரைதனிலே நிற்ச
குண்டுகள் மருந்துகள் ரொம்பவே கொட்டிக்
குணமான துப்பாக்கி மாஹூமை கட்டிப்
பண்டுசெய்த பிராமணரைப் பக்கமா யிருத்திப்
பதமான ராட்சதரைப் பாய்மரமாய்க்கட்டி
கிறுகிறென்று சுற்றுதடா சிங்காரக்கப்பல்
பொன்னான துறைமுகம் விட்டுப் போகவே''—(ஏலேலோ)

''பக்கான வள்ளியம்மை சுக்கான் பிடிக்க
ஆனதோர் மீனாட்சி ஆஞ்சான் வலிக்க
பொக்குவாய் முத்துப்பிள்ளை பீரங்கிதூக்க
கட்டையற்றை கதிராமர் கப்பிவலிக்க
கதிரியற்றை சுப்பர் மீசையை முறுக்க—
கிறுகிறென்று சுற்றுதடா—''(ஏலேலோ)

இங்கு காட்டியது ஒரு கப்பற்பாட்டு. ஏழைத் தொழிலாளிகள் தமது வேலைக் கஷ்டங்களை மறப்பதற்காக, இப்படியான அருமையான பாடல்களை அமைத்துப் பாடிக் கொள்கிறார்கள் கூழுக்குப் பயறு போட்டதுபோல, கொச்சை மொழிகளும் பரிபாஷைச் சொற்களும் ஆங்காங்கு கலந்துள்ளன. நகைச்சுவை நிறைந்த இந்த இனிய கவிதை 'அன்ன ஊஞ்சல்' கட்டி ஆடுமிடங்களிலும் உலாவி வருகின்றன.

கிராமக் கவிதைகள் III

கவிதையின் உயிர்மூச்சு உணர்ச்சி. இன்பதுன்ப வேதனைகளின் எதிரொலிதான் கவிதை. கஷ்ட நஷ்டங்களிலும், இஷ்ட சல்லாபங் களிலும் கவிதை நமக்குக் கைகொடுத்துதவுகிறது, உற்ற உயிர் நண்பன் போல.

கவிதையிற் பலரகம். கிராமக் கவிதை அவற்றில் தனி வழி. பேர் ஊர் அறியப்படாத நாடோடிப் புலவனின் வாய்வீச்சு, கிராமக் கவிதை. கர்ண பரம்பரையாக வழங்கிவரும் இதனைக் 'காற்றிலே மிதந்து வந்த கவிதை' என்றாலும் தகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சு வேலைகளும் இயந்திர சாதனங்களும் மலிந்த இக்காலத்திலும் கிராமக் கவிதைக்கு மகிமை இருக்கத்தான் செய்கிறது. யாப்பிலக்கணம் படியாமல், மோனை எதுகை பாராமல், ஓசைப் பொருத்தமொன்றையே முக்கிய அளவுகோலாகக் கொண்டு உணர்ச்சிப் பெருக்கை உடைத்து விடுகிறான் கிராமக் கவிஞன்—அந்த அநாமதேயப் பேர்வழி. அது ஊருராய்ப் பரவிப் பாய்ந்து, ஏழைத் தொழிலாளிகளின் இருதயத்தைக் குளிர்விக்கும் இன்ப மருந்தாக மாறிவிடுகிறது. குக்கிராமவாசிகளின் எக்காளத்தொனியாக அக்கவிதைகள் கக்கப்படுகின்றன.

கிராமக் கவிதை இல்லாத இடமில்லை. எந்தப் பாஷையிலும் இதன் சுவடு மங்காமல் இருக்கிறது. நவநாகரீக மோகச் சூழலில் அகப்பட்ட பெரிய நகரங்களிற்கூட, நாடோடிப் பாடல்கள் அடிபடுகின்றன. அவற்றை அனுபவிப்போர் அங்குந்தான் இருக்கிறார்கள்.

பூமிக்குள் புதைந்து கிடக்கும் பொன்னை அகழ்ந்தெடுத்துத் துருப் போக்கிப் பிரகாசிக்கச் செய்வது போல, கிராமங்களின் மூலைமுடுக்குகளில் மறைந்து கிடக்கும் இவ்வுயிர்க் கவிதைகளையும் நாம் பொறுக்கிச் சேர்த்து உருப்படியாக்க வேண்டும். வேலை தொடங்கிவிட்டது. கவிதா ரசிகர் பலர் விழிப்படைந்திருக்கிறார்கள். என்றுமில்லாத வகையில் கிராமக் கவிதைகளுக்கு யோகமடித்திருக்கிறது, மறுமலர்ச்சி இலக்கியகாரரின் தயவால்.

எதிர்பாராத வகையில் மலைநாட்டில் வாழும் அனுபவம் நமக்குக் கிடைத்தது. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் எங்கள் சகோதரரின் ஆசாபாசங்களை அவதானிக்கச் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. கஷ்ட நிலையிலும் கலங்காது வேலை செய்யும் அவர்களிடையே, நாடோடிப் பாடல்கள் பல உலாவுகின்றன. தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கைப் பிரதிபலிப்பாக அவை மின்னுகின்றன.

தேசவாரியாகப் பார்க்கும்போதுதான் இலங்கைத் தமிழன் இந்தியத் தமிழன் என்ற பாகுபாடுகளைக் கற்பிக்கிறோம். பாஷா ரீதியில் அவ்வித இன வேற்றுமைக்கு இடமேயிருக்காது, பேச்சு வழக்கிலுள்ள பல பேதங்களைத் தவிர்த்து.

''காட்டுத் தொங்கல் நிரைப்பிடித்து
வேட்டை நாயை முன்னேவிட்டு
வேடிக்கை பார்க்கச் சொல்லி
கல்லுமேலே கணக்கப்பிள்ளை;
கண்டாக்கையா றோட்டோரம்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலையில் கொழுந்தெடுக்கும் பெண்கள், இப்படிப் பாடுவார்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலுக்கு இப்பாட்டு நல்ல ஓர் உதாரணம். கூட்டங் கூட்டமாக ஆட்களைவைத்து வேலை வாங்கு வார்கள் அதிகாரிகள். அந்த அதிகார வர்க்கத்தில் கங்காணி—அதற்கு மேல் கணக்கப்பிள்ளை—அதற்கு மேலாக 'கண்டாக்டர்'..... என்று இப்படியாகக் குட்டித் தேவதைகள் பல இருக்கும். நேரடியாகவே நின்று, தொழிலாளரை நடத்துகிற கங்காணிமாரைத்தான் 'வேட்டை நா'யென்று குத்திக் காட்டுகிறார்கள், பாட்டில். சும்மா நின்று, தொழிலாளிகளுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருக்கிற அந்தச் சோம்பேறி வர்க்கத்துக்கு நல்ல சூடு போடுகிறார்கள் பெண்கள். கொடுமையாய் நடத்துவதற்குக் கிடைக்கிற எதிர்ப்பைப் பார்த்தீர்களா? உணர்ச்சியின் எல்லை பாட்டாய் முடிந்தது!

''கோடையிலே கொழுந்துமில்லை
கொழுந்தெடுக்கச் சிந்தையில்லை;
கங்காணி ஏசிறது பாஞ்சால மயிலே—எனக்குக்
கவலையாய்த் தோணுதடி பூஞ்சோலைக் குயிலே!

''ஓடியோடி நிரைப்பிடித்து
ஒரு கூடை கொழுந்தெடுத்தும்
பாவி கணக்கப்பிள்ளை பாஞ்சால மயிலே—எனக்கு
பத்து றாத்தல் போட்டானடி பூஞ்சோலைக்குயிலே!''

இதுவும் ஒரு கொழுந்துப் பாட்டுத்தான். கோடையில் தேயிலை துளிர்ப்பது குறைவு. அப்படியிருந்தும் கஷ்டப்பட்டுக் கூடைநிறையக் கொழுந்தெடுப்பதற்குப் பலன்: முதலில் கங்காணியின் கொடுமொழிகள்; பின் கணக்கப்பிள்ளையின் நிறுவைக் குறைவு. கூடை நிறைய வரும் கொழுந்து எப்படியும் ஐம்பது றாத்தலுக்குப் பதியாதென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தக் குட்டி அதிகாரிகளுக்குப் பிடித்தமாக நடக்காது போனால், ஏச்சுப் பேச்சும் வெட்டுக் கொத்துகளும் நம்பிக்கையாகவே கிடைக்கும். கூலி குறைந்தால் ஏழையின் வயிறு தாங்குமா? சோகத்திலே பிறந்த பாட்டு; தொழிலாளியின் இன்னல்கள் தொனிக்கின்றன!

''சின்னக்கிணற்றிலே பாம்படித்துச்
சிங்காரத்தோப்பிலே வேட்டையாடி
வேட்டையாடித்துரை வீட்டுக்குப் போறாராம்
வெள்ளிக்குஞ்சம்கட்டி விசிறுங்கடி!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துரைமாரின் சொகுசான வாழ்க்கை முறையைச் சொல்லாமலே சொல்லிக் கேலி செய்கிறாள் ஒருத்தி. காரிலே அங்குமிங்கும் ஓடித்திரிவதும், வேட்டையாடுவதும், ஹோட்டலை நாடுவதுமாயிருக்கிற துரைமக்களின் இடாம்பீகத்தைக் குறிப்பாகப் புலப்படுத்துவது இப்பாட்டு. கும்மியடித்துப் பாடுவார்கள். அழகான இளங் குட்டிகளில் தமது காமவெறியைத் தீர்க்கிற அதிகாரப் புலிகளுக்கும் இப்பாட்டு உரித்தாகலாம்! சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் (குறிப்பாகப்)பொருள் கொள்ள வேண்டும்.

''கட்டைக் கம்பளம் கிழிந்துகிடக்குது
தைக்க நாதியில்லை;
புல்லாங் கிழங்கு கொட்டிக்கிடக்குது
பொறுக்க நாதியில்லை;
ராஜாமகள் கோவித்துப் போனாள்
அழைக்க நேரமில்லை!''

'அடங்காப்பிடாரி' ஒருத்தியைக் கலியாணம் பண்ணி வாழ்க்கையில் அலுப்புற்ற ஒரு ஆடவனின் ஏக்க உணர்ச்சி, இப்பாட்டில் எதிரொலிக்கிறது. புருஷனோடு சண்டை பிடித்துக்கொண்டு பிறந்தகத்துக்கு ஓடிவிட்டாள் மனைவி. பாவம், அந்த 'அசட்டு அம்மாஞ்சி' தனது வாழ்க்கைச் சங்கடத்தைப் பாட்டாகக் கட்டி விட்டான். ராஜாமகள் கோவித்துப் போனாள்—என்று சொல்லும்போது எவ்வளவு எளிமை பிறக்கிறது, அவன் வாக்கில்!

''பச்சைக் கருவேப்பிலை
நானும் சிவத்தைப் பிள்ளை;
என்னப்பன் கணக்கப்பிள்ளை;
எங்கள்ஆய் துலுக்கப்பிள்ளை;
கட்டிக் குடுத்தாங்கோ
கடனை ஒழிச்சாங்கோ;
முண்டைப்பயல் வாசலிலே
முள்ளுமுள்ளாய்க் குத்துகுது;
ஈரொட்டுத் தண்ணியிலே
இறங்கிவிட்டால் குற்றமில்லை!''

புக்ககத்தில் நெருக்கிடைப்பட்ட ஒரு பெண்பிள்ளையின் சலிப்பு இது. அழகாயிருந்த காரணத்தால், கடனையும் கட்டி, அவளை எடுத்தான் ஒரு ஆம்படையான். அதற்காக, அடிமை முறையில் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்து அவலப்பட வேண்டுமா, என்ன? வாழ்வு கசந்து போய்விட்டது. முன்யோசனையில்லாமல் அந்த 'முண்டைப்பய'லுக்குக் கட்டிக் கொடுத்த குற்றத்துக்குப் பெற்றாரையும், அதற்கும் முதலாகத் தனது அழகையும் நொந்து கொள்ளுகிறாள் அவள். தாயின் சொல்லைக் கேட்டுக்கொண்டு தன்னைக் கொடுமையாக நடத்தின கணவனை 'முண்டைப் பயல்' என்று சொல்வதிலே எவ்வளவு ஆர்வமிருக்கிறது அவளுக்கு. தன் கணவனைச் சொல்வதன் மூலமாகவே, தமது மாமியின் கொடுமையையும் குறிப்பாகப் புலப்படுத்திவிட்டாள்!

''சீனாக் கொல்லை றோட்டிலொரு
சிறுக்கி வந்து நிற்கிறாள்
சிறுக்கி யைத்தான் பார்ப்பனா?
'சிகறற்' றைத்தான் குடிப்பனா?;
கொட்டி யாக்கலை றோட்டிலொரு
குட்டி வந்து நிற்கிறாள்
குட்டி யைத்தான் பார்ப்பனா?
றொட்டி யைத்தான் தின்பனா?''

முஸ்பாத்திப் பாட்டு இது. என்றாலும், நவீன மோஸ்தரில்—காம வெறிப்பட்டு அலையும் வாலிப உலகத்தைக் கேலி செய்யும் முறை யாக அமைந்திருக்கிறது; நவயுவ—யுவதிகளின் போக்கை வேசாகவே படம் பிடித்துக் காட்டுகிறது.

''பத்தாம் நம்பர் றோட்டு
பட்டுக் கரை வேட்டி
பயல் கொடுத்த றொட்டி
தின்னத் தின்ன ஆசை
விளக்கு மாத்துப் பூசை!''

இப்பாடலும் அதே ரகம் தான். கள்ளப் புருஷன் கொடுத்த றொட்டி அவளைக் காட்டிக் கொடுத்து விடுகிறது, கட்டிய கணவனுக்கு. தின்னத் தின்ன ஆசை; விளக்குமாத்துப் பூசை—நல்லாய் வாங்கிக் கட்டட்டும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. வேறு நாமிதற்கு என்ன செய்ய முடியும்? அந்தக் 'காமாட்டி'ப் பயலை நமக்கு அறிமுகம் செய்துவைத்த முறையைப் பார்த்தீர்களா? பகட்டாய்த் திரிகிற பக்காப் பேர்வழி அவன் என்பதைப் பட்டுக்கரை வேட்டி தெட்டத்தெளியக் காட்டு கின்றதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்து வைக்கும் பவளம்வைக்கும் அத்தே
வாழைப்பூச் சேலைவைக்கும் அத்தே
வாங்கிவைத்துச் செத்தாயென்றால் நானும்
வரிந்து கட்டி மாரடிப்பேன் அத்தே!"

இது ஓர் ஒப்பாரிப் பாட்டு; மாமியைக் குறித்துப் புலம்புகிறாள். அத்தை தனக்கு மட்டும் ஒன்றும் வைத்துவிட்டுப் போகவில்லையே என்ற மனக் கொதிப்பில் பாடுகிறாள். அந்த அத்தைக்கு மூளை கிடந்தால் இப்படிச் செய்திருப்பாளா? தனது மருகி தனக்காக வரிந்து கட்டி மாரடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குக் கிடையாது போலும். வேறு யாருக்கோ என்னென்னவெல்லாம் வைத்துச் செத்தாள், பாவி!

"ஓடுகிற தண்ணியிலே—மணிதங்கமே
உரைத்துவிட்ட சந்தனந்தான்—மணிதங்கமே
சேர்ந்திட்டுதோ சேரலையோ—மணிதங்கமே
சிவத்தமச்சான் நெத்தியிலே—மணிதங்கமே;
அரிசி கொடுத்ததுரை—மணிதங்கமே
ஆக்கித்தின்னச் சொன்னதுரை—மணிதங்கமே
சீலை கொடுத்ததுரை—மணிதங்கமே
சிரிக்கிறாராம் ஜன்னலிலே—மணிதங்கமே!"

காதற்குறிப்புத் தோன்றப் பாடுகிறாள் ஒருத்தி. மச்சானின் தாராள குணத்தை மெச்சி, துரையாக மதிக்கிறாள் அவள். என்றாலும், ஜன்னலருகே நின்று கண்ணடிக்கிறதை மட்டும் குறும்பாகக் கிண்டல் செய்யாமல் இருக்க முடியவில்லை, அவளுக்கு! இவ்வளவையும் கேட்ட பிறகு, அந்த அசட்டு ஆண்பிள்ளை அருகே நிற்பானென்றா நினைக்கிறீர்கள்? மெல்ல நழுவிப் போய்விட வேண்டியதுதான்!

"ஆற்றோரம் கொடிக்காவாம்
அரும்பரும்பாய் வெத்திலையாம்
காய்க்குதில்லைப் பூக்குதில்லைக்
கண்மணியே உன்மயக்கம்!
மலையோரம் மாமரமாம்
மாமன்மகள் குத்தகையாம்
காய்க்குதில்லைப் பூக்குதில்லைக்
கண்மணியே உன்மயக்கம்!

இது ஒரு காதற் கவிதை. பூக்காமல் காய்க்காமல் இருப்பதெல்லாம் மச்சானின் மேற்கொண்ட மயக்கத்தாலே தானாம்! எப்படி? மாமன் மகள் குத்தகை—என்று சொல்லும் போது, ஓயாமல் அவளை அந்தப் பக்கமாகக் காணுகிறதை நினைப்பூட்டி வைக்கிறான் அவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கவிதைகள் IV

''கிராமங்களுக்குத் திரும்புங்கள்'' என்று பிரசாரம் கிழம்பியிருக்கிறது. கிராம வாழ்க்கையின் முக்கியத்துவத்தை யுத்தந்தான் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. நாகரீகம் என்ற வெளிப்பூச்சினால் மயக்கி, மனிதனை உருப்படவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது, நகர சீவியம். அதுதானே இப்பொழுது நரக சீவியமாகத் தோன்றுமளவுக்கு மாறியிருக்கிறது, இந்த யுத்தத்தினால், நல்ல படிப்பினை தா'னே!

கிராமம் நமக்குப் பஞ்சந்தாங்கியாக உபயோகப்படுவதுபோலவே, சிறந்த இலக்கிய இன்பத்துக்கும் நிலைக்களனாக விளங்குகிறது. எழுதா மறைகளான நாடோடிப் பாடல்கள் வாழ்க்கையின் பற்பல கோணங்களில் இருந்தும் ஒலித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால், இந்த உண்மை புலப்படாமற் போகாது.

கவிதாதேவியின் விஸ்வருபத்தைக் கிராமத்திலேதான் நாம் தெளிவாகக் காண முடியும். கிராமவாசிகளின் ஒவ்வொரு உயிர் மூச்சிலும் அவளது தெய்வீக வாடை கமழத்தான் செய்கிறது. இந்த இனிய கவி வாசனையை நுகர்வதற்காகவேனும், நாம் கிராமத்தைத் தேடிப் போக வேண்டியவர்களே.

தேயிலைத் தோட்டக் கூலியாட்களும் கிராமவாசிகள் தான். அவர்களது வாழ்க்கைமுறை அசல் நாட்டுப் புறங்களிலும் கேவலமானது. சஞ்சலச் சூழலிலும் சாந்தமாக வேலை செய்யும் அவர்கள், இயற்கையாகவே இனிய கவிதைகளை முழக்கிக் கொண்டிருப்பது ஆச்சரியப் படத்தக்க விஷயம்!

சொற்செட்டும் பொருள் ஆழமும் உள்ள பற்பல கவிதைகள் தேயிலைத் தோட்டங்களில் வழங்கி வருகின்றன. அவற்றைத் தேடிப் பிரசுரிக்கும் முயற்சியின் இரண்டாம் அங்கம் இது.

''அயினா மலை சயினாக்கோப்பி
அரும் பெடுக்காதே—தங்கமே
அரும் பெடுக்காதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன் மகளே மருக்கொழுந்தே
மட்டம் பணியாதே—தங்கமே
மட்டம் பணியாதே

கறுத்தைப் பிள்ளை கருங்குயிலே
காம் பொடியாதே—தங்கமே
காம் பொடியாதே

மூத்த பிள்ளை முழிபுரட்டி
மொட் டெடுக்காதே—தங்கமே
மொட் டெடுக்காதே

வத்தலை வதங்கலைத் தொத்தலைத் தூங்கலை
முத்தலை ஒடியாதே—தங்கமே
முத்தலை ஒடியாதே

வளையல் கார வர்ணக்குயிலே
வங்கி ஒடிச்சுப்போடி—தங்கமே
வங்கி ஒடிச்சுப்போடி

கையி ளைக்காதே சந்தனம்
காசு கேட்காதே—தங்கமே
காசு கேட்காதே

முகத்தைப் பார்க்காதே சந்தனம்
மோசஞ் செய்யாதே—தங்கமே
மோசஞ் செய்யாதே''.

இது ஒரு கொழுந்துப் பாட்டு. இப்பொழுது தேயிலைச்செய்கை நடைபெறுமிடங்கள், ஆரம்பத்தில் கோப்பித் தோட்டங்களாக இருந்தனவென்றும், அந்தத் தொடர்பினாலேயே கோப்பி என்ற சொல் தேயிலைக்குப் பதிலாக இடம் பெற்றிருக்கிறது என்றும் சொல்லப் படுகிறது.

அரும்பெடுத்தல், மட்டம் பணித்தல் (குறைத்தல்), காம்பொடித் தல், மொட்டுக் கிள்ளுதல், வத்தல் வதங்கல்....முத்தல் ஒடித்தல்—இவையெல்லாம் சட்டவிரோதமானவை. தேயிலைச் செடியில் துளிர்க் காமல் சடைந்திருக்கும் பகுதியைத்தான் 'வங்கி' என்ற பரிபாஷைச் சொல் உணர்த்துகிறது. அப்படியிருக்கும் பாகங்களைக் கொழுந்தெடுத் துப் போகும்போதே கையோடு ஒடித்தெறிந்து விட வேண்டியதுதான் விதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தித்தத்தி மலைமலையாய்த் தொத்தியேறித் தளிரெடுக்கும் பெண்கள் வேலையிலுள்ள அலுப்பை மறப்பதற்கு இப்படிப் பாடுவார்கள். ஆடவன் ஒருவனின் வாய்மொழியாகப் பாட்டு அமைந்திருக்கிறது.

''ஆற்றருகே ஏலேலோ வங்களாவாம்
அடுக்கடுக்காய் ஏலேலோ பூஞ்செடியாம்
பூஞ்செடியை ஏலேலோ மறைவுவைத்துப்
புண்ணியரோ ஏலேலோ பார்க்கிறது?''

தேயிலைத் தோட்ட அதிகாரி ஒருவரின் கொடுமையான போக்கைக் குத்திக் காட்டுவது இப்பாட்டு. பூஞ்செடி மறைவில் நின்று பார்க்கிறாராம் அந்தப் புண்ணியவாளன். எப்படி? 'புண்ணியரோ' என்ற ஒரு பதப் பிரயோகத்திலேயே தங்கள் வேதனைத் துடிப்பைக் காட்டி விட்டார்கள் பெண்கள். உத்தியோகச் சட்டையைப் போர்த்தவுடன் உலகத்தை மறந்து சர்வாதிகாரம் செய்ய முற்படுகிற ஆத்மாக்களுக்கு இது நல்ல பாடமாக இருக்கட்டும்.

''கீழ்றோட்டாம் மேல்றோட்டாம்
தில்லாலே லாலே
கிழக்கைபோற அஞ்சுறோட்டாம்
தில்லாலே லாலே
அலைகிறாராம் கணக்கப்பிள்ளை
தில்லாலே லாலே,—
'புக்'குப் 'புக்'காய்ப் புஸ்தகமாம்
தில்லாலே லாலே
பொம்பாய்க் குச்சாம் பேனாக்குச்சாம்
தில்லாலே லாலே
போட்டுவிட்டு அலைகிறாராம்
தில்லாலே லாலே
பொடியன் கணக்கப்பிள்ளை
தில்லாலே லாலே!''

யாரோ ஒரு கணக்கப்பிள்ளைமேல் உண்டான துவேஷம், இப்படியான ஒரு பாட்டைக் கட்டுவதற்குத் தூண்டியிருக்கிறது. பென்சிலோ பேனாவோ ஒன்று கைதவறிவிட்டது. கணக்கப்பிள்ளை தேடித்தேடி அலைகிறார். பெண்களுக்கு அவர்மேல் அனுதாபம் பிறப்பதற்குப் பதிலாக, கேலிதான் முனைத்து நிற்கிறது. அருமையான ஒரு நிகழ்ச்சிச் சித்திரம். 'பொடியன் கணக்கப்பிள்ளை'—எவ்வளவு எளிமையான வார்த்தை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொங்கிறீற்று ஏலேலோ கல்லுடைத்து
குமரிக்கெல்லாம் ஏலேலோ வீடுகட்டி
கும்மியடிக்க ஏலேலோ போறபோது
குனிந்து குனிந்து ஏலேலோ சிரிக்கிறாராம்!''

பெண்களைப் பார்த்துப் பல்லிளிக்கிற ஒரு 'பேய்த்தரவளி'க்குச் சொல்லம்பு தொடுக்கிறார்கள் பெண்கள். கும்மியடிக்கப் போகிற பெண்களைப் பார்த்து அவர், குனிந்து குனிந்து சிரிக்க வேண்டிய அவசியமென்ன? பெண்களின் சாதுரியமான பேச்சுமுறை இப்பாட்டிலே தொனிக்கிறது.

''கல்லுக் கட்டிலேறி—எங்கண்ணன்
கணக்குப் படிக்கையிலே
கானாம் பறைச்சி மகள்
வந்திருந்தாள் ஊஞ்சலுக்கு;
ஊஞ்சலுக்குக் கீழே
ஒண்டிருந்தாள் தேவடியாள்
''மாமா சரண''மென்று
மடிமேல் கைபோட்டாள்
இதென்ன பாவமென்று—எங்கண்ணை
எடுத்திட்டார் மாங்கலியம்!''

இங்கு வழங்கும் கலியாண (நலங்கு)ப் பாடல்களில் ஒரு பகுதி இது. ஊஞ்சலிலே தம்பதிகளை இருத்தி, இப்படியான பாடல்களைப் பொழிந்து தள்ளுவார்கள் பெண்கள். மாப்பிள்ளையின் சகோதரி முறையான ஒருத்தி சொல்வதாக உள்ள பகுதிதான் மேலே தரப் பட்டது. 'குத்த'லாகக் 'குறிப்'பாகக் 'கிண்ட'லாகக் 'கேலி'யாக வெல்லாம் வாய்வீச்சு நடக்குமாம், இவ்வித சந்தர்ப்பங்களில். மனோ தர்மக் கற்பனைகள், இந்த எளிய நாட்டுப்புறத்தாரிடம் வெளிப்படுகிற முறையில் எவ்வளவு அழகிருக்கிறது!

படித்துக் கொண்டிருக்கிற அண்ணனுக்குப் பக்கத்திலே பறைச்சி மகள்—தேவடியாள் வந்திருந்து கொண்டு ''மாமா சரணம்'' என்று மடிமேலே கைபோடுவதென்றால்....! ஆம். பாவத்துக் கிரங்கித் தான் அண்ணா மாங்கலியப்பிச்சை கொடுத்தாரென்று தங்கள் குடும்பத் தாரின் இரக்க சுபாவத்தை நிறுவிக் காட்டுகிறாள் அப்பெண்—'அண்ணா பக்தி' நிறைந்த அந்தத் தங்கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கத்தரிக்காய்த் தோட்டத்திலே
கதை கதைச் சாங்கோ;
கண்டுகிட்டேன் என்று சொல்லி
இந்தத் தொல்லைங்கோ!''

ஒரு வாலிபன், மங்கையொருத்தியுடன் சரச சல்லாபஞ் செய்கிறதைப் பார்த்துவிட்டு ஊரெல்லாம் வம்பளந்தான் ஒருத்தன். அதனால் அவனுக்கு எதிர்பாராத சங்கடங்கள் வந்து சேருகின்றன. உலகியலில் இப்படியான நிகழ்ச்சிகள் அநந்தமுண்டு. 'கண்டது நின்றது' சொன்னதால், அவன் அடைந்த தொல்லைகள் எவையென்பதை ஊகித்துத்தான் உணர வேண்டும். சுருக்க விளக்கமான பாட்டு.

''ஓடுகிற தண்ணியிலே—ஒரு
ஓலை எழுதிப் போட்டுவிட்டால்,
ஓலை வந்து சேரமுந்தி—நான்
ஓடி வந்து சேர்ந்திருப்பேன்;
பறக்கிற தண்ணியிலே—ஒரு
பாட்டெழுதிப் போட்டுவிட்டால்,
பாட்டு வந்து சேரமுந்தி—நான்
பறந்து வந்து சேர்ந்திருப்பேன்!''

ஒரு ஒப்பாரிப் பாட்டு இது. ''அபாயம்; உடனே வா'' என்று அவசரத் தந்தி அடிக்கத்தான் உங்களுக்குச் சரிப்படவில்லையாக்கும். ஓடுகிற தண்ணீரிலேயாவது ஒரு ஓலை (ஒரு பாட்டு!) எழுதிப் போட்டிருந்தாலாவது நான் ஓடிவந்து பார்த்திருப்பேனே. சண்டாளிகள்; செத்த பிறகுதானா எனக்கு அறிவிக்க மனம் வந்தது? என்றிவ்வாறு தனது உள்ளத்துடிப்பைச் சொல்லியழுகிறாள் ஒருத்தி. ஆற்றிலே எழுதிப்போட்டால் அது அவளுக்குக் கிடைத்திருக்குமா என்பதை நாம் ஆராய வேண்டியதில்லை. அவளுடைய அப்போதைய மனநிலையில், பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கிற ஆற்றைத் தொடர்புபடுத்தாமல் இருக்க முடியவில்லை. ஆறுதான் இரங்கினாலும் அந்த உறவினருக்கு இரக்கமில்லை என்பது தொனிப்பொருள்.

''ஆரு வந்தாங்க எங்க மாமி வந்தாங்க;
ஆத்திலே இருக்கிற பாகற்காயை
அறுக்கச் சொன்னாங்க
அதிலே கொஞ்சம் நெய்யை ஊத்திப்
பொரிக்கச் சொன்னாங்க;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரிச்சுக் கிரிச்சு முன்னாலே வைக்கச்
சிரிச்சுக் கிட்டாங்க;
கும்பாவைக் கழுவியந்து
கொட்டச் சொன்னாங்க;
கொண்டைமேலே கையை வைச்சுத்
தூங்கச் சொன்னாங்க!''

மாமிக்கடங்கின மருமகள் ஒருத்தி இப்படிச் சொல்லுகிறாள். இட்ட கட்டளையெல்லாம் சட்டுச்சட்டென நிறைவேறுகின்றன. 'கொண்டை மேலே கையை வைத்துத்தூங்கு'ம்படி விடைகொடுத்து அனுப்புகிறாள், மருமகளை. மாமிக்குக் கீழே தனக்கு உண்மையில் சுதந்திரம் இல்லை யென்று ஒப்புக்கொள்ளும் முறையாகவே அவள் பேச்சிருக்கிறது என்று சொன்னாலும் பிசகில்லை. உறங்குவதுகூட மாமியின் கட்டளைப்படி தான் நடக்க வேண்டுமா, என்ன?

''பணிந்து குடுகுடு அடிக்கவே
பல்லிரண்டு உடையவே
உங்க ஆய்க்கும் அப்பனுக்கும்
பத்துரூபா தெண்டம்!''

மூச்சு விடாமல் இப்படிச் சொல்லிக்கொண்டு எதிரிகளைப் பிடிக்க வேண்டும். சிறுவரின் 'குடுகுடு' விளையாட்டுப் பாட்டிது.

ஆனாலும், அதில் எவ்வளவு இகழ்ச்சிக் குறிப்பு எதிரொலிக்கிறது! உடையாத பல்லை உடைந்ததாகச் சொல்லிப் பத்து ரூபா தண்டமும் இறுத்ததாகக் கற்பனைப்படுத்தி எதிரிக்கு ஆவேசம் உண்டாக்குகிற முறையை நேரில் நின்று பார்க்க வேண்டும்!

''காக்காச் சோளமும் கருஞ்சோளமும்
கலந்துகுத்தியே நான் வடித்தேன்
இந்தச் சோத்துக்கு வக்கணம்பேசுறாய்
இந்தாடா பயலே உன்தாலி!''

இப்பாடல் ஒரு மனைவியின் கோப வார்த்தைகள். இப்பாடலைப் படிக்கும்போது ''காலத்தாலே சென்று பாலுங்கறந்து கமுகம்பூப்போல் அரிசியும் தீட்டிக் காய்ச்சிய கஞ்சியைக் காலாலுதைத்தான் காண் ஆண்டே''—என்ற கதிரமலைப் பள்ளுப்பாட்டு நினைவில் ஏனோ வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கவிதைகள் V

''காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று''. குக்கிராமங்களிலே வழங்கும் நாடோடிப் பாடல்களைக் கேட்டு அனுபவித்தவர்களுக்கு இந்த உண்மை தெளிவாகும்.

ஆம். ஏழைக் கிராமவாசிகளில் எழுத்தறிவு உள்ளவர்கள் மிகச் சொற்பம். ஆனால், இயற்கையான கவியாற்றல் படைத்தவர்கள் மிகமிக அதிகம். நன்மை—தீமை, வாழ்வு—தாழ்வு.... இவைகளி லெல்லாம் அவர்களுக்குக் கவிதை தான் சமையசஞ்சீவி. உற்றவிடத்தில் உயிர் வழங்கும் உத்தம நண்பன்போல, கவிதைகள் அவர்களது ஆசா பாசங்களிலெல்லாம் கலந்து உதவுகிறது. பேச்சு வழக்கில் இலக்கண வரம்பில்லா—ஆனால் இசைப்பொருத்தமும் கருத்தாற்றலுமுள்ள இனிய பாடல்களை அவர்கள் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு கட்டி விடு கிறார்கள். எல்லாம் கர்ண பரம்பரையாக—வாய்மொழியாகவே— வழங்கி வருகின்றன.

யமகம் திரிபு இப்படியான பண்டித வம்புகளுக்கெல்லாம் நாட்டுப் பாடல்களில் இடமில்லை. எல்லாம் பச்சைப்படியான சொல்லடுக்குகள். கொச்சைமொழி கலந்திருந்தாலும், குற்றம் பிடிப்பதற்கு நாங்கள் யார்?.

இயற்கையான இன்பக் கவியமுதம் இந்த நாடோடிப் பாடல்கள். இவற்றை நேரடியாகக் கேட்டுச் சுவைப்பதற்குக் கொடுத்து வைக்க வேண்டும்!

நவநாகரீகச் சுழலில் இழுபட்டுக் கண்விண் தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறது உலகம். கிராமங்களையும் இந்தப் போலி அதிர்ச்சி தாக்கத்தான் செய்கிறது. அதனால் இனிய கிராமக் கவிதைகள் முழங் கிக் கொண்டிருந்த இடங்களிலெல்லாம் குப்பை கூழச் சினிமாக் குழறு படிகள் கூத்தாடத் தொடங்கி விட்டன. இந்த இயற்கைக் கவி காள மேகங்களின் சிந்தனையூற்று இப்படியா வரண்டுபோக வேண்டும்?......

போனது போகட்டும். இனியாகிலும் புத்தியாக இருப்போம். காலச் சுழலில் ஆங்காங்கு மங்கி மறைந்து கொண்டிருக்கிற இந்த இலக்கிய மணிகளைக் கூடியமட்டில் தேடித் தொகுப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுண்டானால் இடமுண்டு. தமிழன்பர்கள்—இலக்கிய இரசிகர்கள்—கவிதைப் பித்தர்கள் இந்த முயற்சிக்கு ஒத்தாசை செய்வார்களென எதிர்பார்க்கிறோம். பொழுதுபோக்காக இந்த முயற்சி நடைபெறட்டும்.

தேயிலைத் தோட்டங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காதிலடிபட்ட சில கிராமக் கவிதைகள் கீழே தரப்படுகின்றன. படித்துப் பாருங்கள்!

''வங்களா ஓரத்திலே
வளர்ந்தமட்டம் ஒடிக்கையிலே
ஒருவாது பணிஞ்சுதின்னு—தங்கரத்தினமே
உதைச்சாண்டி சப்பாத்தாலே—பொண்ணு ரத்தினமே!

''கோணக்கோண மலையேறிக்
கோப்பிப்புல்லு வெட்டையிலே
சீமைப்புல் லிருந்துதின்னு—தங்கரத்தினமே
சீரைக்குலைத் தானடியென்—பொண்ணுரத்தினமே!

''கூடைமேலே கூடைபோட்டுக்
கொழுந்தெடுக்கப் போறதங்கம்,
வயிற்றை வலிக்குதின்னு—தங்கரத்தினமே
வந்திடடி யென்பிறகே—பொண்ணுரத்தினமே!''

தேயிலைத் தோட்டக் கூலியொருத்தன், தனது அன்புக்குரிய ஒருத்தியிடம் தனது கஷ்டானுபவங்களை அம்பலப்படுத்துகிறான். போதும் போதாததற்குத் தன்னோடு கூட்டிக் கொண்டுபோய், எங்காவது ஆறுதலாக ஒதுங்குதற்காக அந்தப் பெண்ணுக்குக் கூறும் உபாயம் எப்படி இருக்கிறது?

''கண்டிக்குப் போனமச்சான்
கடையப்பம் தின்றமச்சான்
கொழும்புக்குப் போனமச்சான்
கொண்டுவந்த காசுஎங்கே?''

''கண்டியிலே மூணுமாதம்
கப்பலிலே ஆறுமாதம்
சீக்கிலே ஏழுமாதம்
செலவழிச்சேன்; என்னசெய்ய?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்விட்டுத் தேசம்விட்டு உழைத்து மிச்சம் பிடிக்கப் போனானாம் ஒருத்தன். அங்கு அவனுக்கு எதிர்பார்த்த சுகம் கிட்டவில்லை. எதிர் பாராத மன எழுச்சிகள் அவனைக் கஷ்டத்துக்குள்ளாக்கி விடுகின்றன. சில காலம் இங்குமங்குமாக அலைந்துவிட்டு மனமடிவுடன் ஊருக்குத் திரும்புகின்றான். மச்சானின் உண்மை நிலைபரத்தை ஊகித்துணர்ந்து கொண்டவள்போல, கொஞ்சம் கேலியாகவும் கிண்டலாகவும் ''கொண்டுவந்த காசு எங்கே?'' என்று மடியைப் பிடிக்கிறாள் அவன் மனைவி—காதலி. தன்னைத் தவிக்கவிட்டுப்போன 'தயாள'த்தைச் சொல்லாமற் சொல்லிப் பழிவாங்குவது போலிருக்கிறது அவள் பேச்சு. அதற்கு அந்த 'ஏமாந்த சோணகிரி' சொல்வதைப் பார்க்க யாருக்குத் தான் பரிதாபமுண்டாகாது?. ''கண்டியிலே மூணுமாதம், கப்பலிலே ஆறுமாதம்; சீக்கிலே ஏழுமாதம் செலவழித்தால்'' அப்புறம் ரொக் கத்துக்கெங்கே போவது? யோசனைக்குரிய விஷயந்தான்!

உணர்ச்சி முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிறது இந்தப் பாடலில். உலக அனுபவத்தை உணர்த்தும் ஒரு தெருப்பாடல் இது.

''பாட்டுக்குப் பணியலயம்
பந்தடிக்கு மேட்டுலயம்
பேச்சுக்குப் பீவிக்கரை
வாய்ச்சுதடி மன்னனுக்கு!''

'ஷோக்'குப் பேர்வழி ஒருத்தனுக்கு வாய்த்த சொகுசான சூழல் நிலபரங்களைச் சுட்டிக் காட்டுகிறாள் ஒருபெண். தட்டுத் தடங்கல் இல்லாமல் அவள் வார்த்தை கொட்டப்படுவதைப் பார்த்தால் நமக்கும் கொஞ்சம் பொறாமை உண்டாகச் செய்கிறது, அந்த 'மன்னன்' பேரில். எளிய சொற்கள்; கருத்தாழமுள்ள குட்டிக் கவிதை. யாரோ ஒரு கங்காணியோ கணக்கப்பிள்ளையோ இந்தப் பெண்ணின் சொல்லம் புக்கு இலக்காக, என்ன லீலைகள் புரிந்தானோ? பாவம்!

''அடிச்சிட்டாராம் மயிலுவேலு
அன்னக்குச்சாலே
அழுதிருச்சாம் செகச்செம்பா
செல்ல வாயாலே!''

''துடைச்சிட்டாராம் மயிலுவேலு
துவலைத் துணியாலே
சிரிச்சிருச்சாம் செகச்செம்பா
செல்ல வாயாலே!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலுவேலுவுக்கும் செகச்செம்பாவுக்கும் நடந்த சிறு ஊடல் நாடகத்தைப் பாட்டிலே அமைத்துவிட்டான் ஒரு வாயாடி. அகப்பொருள் இலக்கணக்காரர் ஊடல்—கூடல் அது இது என்றெல்லாம் ஏதோ பெரிய கற்பனாலங்காரம் பண்ணுகிறார்கள். ஆனால், இந்த எளிய கவிமிடுக்குக்கு அவர்களின் பாடல்கள் எம்மாத்திரம்? இவ்வித செல்லச் சண்டைகளை இங்குள்ள ஏழைக் கூலிகளின் இடையே அடிக்கடி காணலாம். பார்க்கப் பரிமளிப்பாயிருக்கும். இயற்கை நிகழ்ச்சிகள் கவியெழுச்சிகளாக மலர்ந்து விடுகின்றன இப்படி!

''கானக் கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிற்கட்டுமா? போகட்டுமா?''

''நிற்கச் சொன்னால் நிஷ்டூரம்
போகச் சொன்னால் பொல்லாப்பு
பொழுதிருந்தால் வந்திடுங்க—
கண்ணுச்சாமியே,
பொல்லாப்பு வையாதிங்கோ—
மன்னா மன்னவரே!''

கானக் கரிசலிலே களையெடுக்கும் பெண்ணைப் பார்த்து ''மயிலே!'' ''குயிலே!'' என்றெல்லாம் அளந்து கொட்டுகிறான் ஒருத்தன். அவனுடைய காமக் குறிப்பைக் கண்ட பெண்ணுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இந்தப் பரமசங்கடமான நிலைமையில் பெண்களுக்குரிய இயற்கையான சாதுரியத் தன்மை புலப்படும்படி மிடுக்காகப் பதில் கூறுகிறாள் அவள். கவியின் போக்கைக் கண்டு மிரள வேண்டாம். கருத்தடக்கத்தை மட்டும் கவனித்தால் போதும்.

''சின்னஞ் சிறிசுகள் கூடிக்கிட்டு—ஒரு
சிங்காரக் கும்மி அடிக்கையிலே
பெரிய பொம்பிளை டாலுக்காரி
இல்லாதும் பொல்லாதும் சொல்லுறாளே!''

குமர்ப்பெண்கள் சிலர் கூடிக் கும்மியடித்துக் கும்மாளம் போடுகிறார்கள். பெரிய பெண் ஒருத்திக்கு இவர்களது ஆர்ப்பாட்டங்கள் பிடிக்கவில்லை. இவர்களது அனுபவ எல்லையைக் கடந்து விட்டதாலோ அன்றி இவர்களது மானச உணர்ச்சிக்குப் புறம்பான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியில் இழுபடுவதாலேதான் அவள் இந்தக் குமர்ச் சேஷ்டைகளைக் கண்டிக்கிறாள். சிறுக்கிகளா சும்மா விடுவார்கள்? வாய்த்துடுக்காக அவளை வம்புக்கிழுக்கிறார்கள். ''பெரிய பொம்பிளை'' ''டாலுக்காரி'' என்றெல்லாம் அவளைக் குத்திக் காட்டுகிறார்கள். ''அவன் கிடக்கிறான் குடிகாரன். நீ போடு அரைக்கிளாசு'' என்று சொல்லும் பாவனையாக அல்லவோ இருக்கிறது, இந்தப் பெரிய 'பொம்பிளை'யின் அதிகப் பிரசங்கித்தனமும்!

''ஸ்டோரு கட்டியாச்சு
இஞ்சினிறு பூட்டியாச்சு
என்சோட்டுப் பெண்டுகளா
இலைபொறுக்க வாங்களடி!''

''தகரத்திலே தண்ணிவரத்
தந்திரமாய் றோதையாட
மந்திரமாய் நான்வருவேன்
மறந்திடாதே சிவத்தைக்குட்டி!''

வேளை வந்துவிட்டது. வேலை செய்ய எல்லாரும் விழுந்தடித்து ஓடுகிறார்கள். போகிறபோது அவரவர் தமக்குப் பிடித்தமானவர்களையும் கூப்பிட்டுக் கொண்டு போவது வழக்கம். 'சிவத்தைக்குட்டி' என்பவள் எல்லாரையும் முந்திக்கொண்டு தன் கூட்டாளிகளை அழைக்கிறாள். அவள் அப்படி அழைப்பதிலும் உள்ளீடான காரணம் ஒன்று இருக்கத்தானே வேண்டும்? ஆம். எதிர்பாராத வகையில் ''தகரத்திலே தண்ணிவரத் தந்திரமாய் றோதை (சக்கரம்) ஆட, மந்திரமாய் நான் வருவேன் மறத்திடாதே சிவத்தைக்குட்டி!'' என்று ஒரு ஆண் குரல் சுழுவாகப் பதிலுரைப்பதென்றால்.... அதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் செய்கிறது. வேண்டாம் எமக்கிந்த வம்பு வழக்கு. அவர்களின் இயல்பூக்கத்துக்கு முட்டுக்கட்டை போடாமல் ஒதுங்கிக் கொள்வோம், நாகரீகமாக.

ஆற்றுத் தண்ணீரை மடுத்துக்கட்டி, அதனைப் 'பைப்'பிலே வரச் செய்து தேயிலைத் தொழிற்சாலை இயந்திரங்களை இயக்குவதை அவன் தனக்குத் தெரிந்த பாஷையில் வெளிப்படுத்துகிறான். 'சிவத்தைக்குட்டி' தான் அவனை மறந்தாலும் நாம்மட்டும் மறப்பதற்கில்லை!

''அப்பாக்குட்டிமகன் சுப்பாக்குட்டி
சுப்பாக்குட்டி பிள்ளை சுண்டெலியாம்
சுண்டெலி ராஜாவுக்குக் கலியாணமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோளத்தட்டுப் பல்லக்கு ஊர்க்கோலமாம்
பாம்பைக் கூப்பிடுங்கோ பல்லக்குத் தூக்கட்டும்
தவளையைக் கூப்பிடுங்கோ தாரை ஊதட்டும்
நண்டைக் கூப்பிடுங்கோ நாட்டிய மாடட்டும்!''

குழந்தைகளின் அசம்பாவிதமான கற்பனை இது. ஆனால், ஒரு கலியாண வைபவம் அலங்காரமாகச் சோடிக்கப்பட்டிருக்கிறது, அவர்களது மழலைப் பாஷையிலே. மாப்பிள்ளையின் பரம்பரை என்ன? மணக்கோலம் என்ன? பல்லக்குத் தூக்குவோர், சங்கீதகாரர், நாட்டிய ராணிகள் என்ன—எல்லாம் அற்புதக் கற்பனை! போதுமா?

இராமக் கவிதைகள் VI

உடலுக்கும் உளத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உடலின் அதிர்ச்சி உள்ளத்தையும், உள்ளத்தின் அதிர்ச்சி உடலையும் பாதிக்கின்றன. சுகதுக்க உணர்ச்சிகளே இவ்வித உபாதைகளைக் கிழப்பி விடுகின்றன.

பிறப்பு—இறப்பு என்ற இரு எல்லைக் கோடுகளின் உள்ளே நின்று, பிராணாதாரப் பிரயத்தனம் செய்யும் நமக்கு வாழ்க்கை முழுவதும் துக்கமயமாகவோ அன்றிச் சுகமயமாகவோ அமைவதில்லை. எதிர்பார்த்தோ எதிர்பாராமலோ இவ்விருவித உணர்ச்சிகளையும் அனுபவிக்கிறோம். ஒன்றாக அல்லது தனித்தனி அவை நம்மை ஆட்சிப் படுத்துகின்றன; ஆட்டி வைக்கின்றன.

உணர்ச்சியின் வசப்பட்டவன் வெறுமனே 'உம்மாண்டி'யாக இருத்தல் முடியாது. அதன் சலனத்தை—உணர்ச்சித் துடிப்பை—'ரெலிபோன்' இயந்திரம்போல உடனுக்குடன் வெளிப்படுத்தித் தீர வேண்டியவன் ஆகின்றான். இல்லையேல், அவன் வாழ்க்கை பெரியவோர் நரகக் குழியாகிவிடும். இதற்காகவே நமக்குப் பாஷை அவசியமாயிற்று.

பாஷையினாலேதான் ஒருவன் தன் மனக் கருத்தை (பாட்டாகவோ அன்றி வசனமாகவோ) மற்றவர்களுக்கு வெளிப்படுத்த முடிகிறது. இசைமயமான இந்த உலகில் வசனத்தைவிடப் பாட்டே நமது உணர்ச்சிகளை அவற்றின் முழு வேகத்துடன் எளிதாகப் பிரதிபலித்துக் காட்டுகிறது. அதுதான் நடைமுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டிலும் இருவகையுண்டு: ஒன்று இலக்கண வரம்புகளுக்குக் கட்டுப்பட்டது. பெரும்பாலும் யாப்பு அணி அறிவினாலே அமைக்கப் படும் சொல்லலங்கார வேலைப்பாடு உள்ளது அது. தங்கமுலாம் பூசிய பித்தளை நகைபோல. ஆனால், இயற்கையான கவியாற்றலின் முதிர்ச்சியினால் பிறக்கும் மற்றொருவகைப் பாடல் இருக்கிறதே, அதுதான் உயர்ந்தது; உயிரும் ஒளியும் நிறைந்தது; மாற்றுக் குறையாத தங்க நகை போன்றது அது.

நாடோடிப் பாடல்கள் என்று நாம் கூறும் கிராமக் கவிதைகள் எங்கே, எப்படிப் பிறக்கின்றன? உண்மையில், நாகரீக உலகத்தாரால் 'பட்டிக்காடுகள்' என்று இழிவாகக் குறிப்பிடப்படுகிற நாட்டுப் புறங்களிலே தான் அவை உற்பத்தியாகின்றன. அவ்விடங்களிலுள்ள ஏழைத் தொழிலாளியும் உழவனும்—வேறு என்ன, அவர்கள் பெரிய செல்வச் சீமான்களாகவா இருக்கிறார்கள்?—தங்கள் உழைப்பின் களைப்பை மறப்பதற்கும், இன்பமாகப் பொழுதுபோக்குவதற்குமாகத் தத்தமது சூழலுக்கு இயைந்த சிறுச்சிறு பாடல்களை ஆக்கிக் கொள்ளு கிறார்கள். பொருள் ஆழமும் நல்ல இசைப் பொருத்தமும் உள்ள பாடல்களாக அவை அமைந்து விடுகின்றன. அவற்றை எழுத்தில் அமைப்பதற்கான சாதனங்களோ எழுத்தறிவோ அவர்களிடம் ஏது? எனவே வாய்மொழியாக—எழுதாமறையாக—அவற்றை வளர்த்து வருகிறார்கள்.

இந்தக் கர்ணபரம்பரைக் கவிதைகளில் காதல், வீரம், சோகம், கிண்டல், கேலி ஆகிய இவையெல்லாம் அவர்களின் உணர்ச்சிக்கேற்ப இடம் பெறுகின்றன.

இவ்வகைக் கிராமக் கவிதைகளைத் தேடித் தொடுக்கும் முயற்சி, தமிழ்நாட்டில் இப்போது சிலகாலமாக வளர்ந்து வருகிறது. இது இலக்கிய இரசிகர்களால் நன்கு வரவேற்கப்பட வேண்டியது.

கிராமியப் பாடல்களில் தாலாட்டும் ஒப்பாரியுமே அதிக அளவுக்குப் பொதுமக்களிடையே பரவியிருக்கின்றன. தாலாட்டுப் பாடல்களில், தாயுள்ளத்தில் பொங்கியெழும் புத்திரவாத்சல்யம் அப்படியே புலப் படுகின்றது. தாய்மார் தம் சின்னஞ்சிறு குழந்தைகளை வைத்துச் சீராட்டிப் பாராட்டிப் பாட்டிசைக்கும் போது அவை, அந்த இன்ப நாதத்தில் என்ன சுகமாகத் தூங்குகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
சீராரும் எங்கள்குலச்
சிகாமணியே கண்வளராய்!
ஆரடித்து நீயழுதாய்
அழுத கண்ணில் நீர்தழும்ப?
பேரை உரைத்தால் நான்
பெருவிலங்கு பூட்டிடுவேன்!
அத்தை அடித்தாளோ
அமுதூட்டும் கையாலே;
சற்றே மனம் பொறுத்துச்
சண்முகனே கண்வளராய்!
பாட்டி அடித்தாளோ
பா லூட்டும் கையாலே;
கூப்பிட்டு நான்கேட்பேன்
குஞ்சரமே கண்வளராய்!
மாமி அடித்தாளோ
மைதீட்டுங் கையாலே;
சாமி,மனம் பொறுத்துச்
சண்முகனே கண்வளராய்!
அக்காள் அடித்தாளோ
அம்மான்மார் வைதாரோ;
விக்கி விக்கித் தேம்புவதேன்?
வித்தகனே கண்வளராய்!
பெரியதாய் தப்பிதமோ
பெற்றாள் அடித்ததுண்டோ
அறியாமற் செய்தாலும்,
ஆரமுதே கண்வளராய்!

இது ஒரு தாலாட்டுப் பாட்டின் ஒரு பகுதி. திடுக்கிட்டு அழுகிறது குழந்தை. திகைத்து ஓடிவருகிறாள் தாய். ''ஆரடித்து அழுகிறாய்?'' என்று ஆத்திரப்பட்டுக் கேட்கிறாள். ''பேரை உரைத்தால் பெரு விலங்கு பூட்டிடுவேன்'' என்று வீரம் பேசும் அவள், அத்தை பாட்டி.... எல்லோரையும் குறிப்பிட்டு அவர்கள் சார்பில் மன்னிப்புக் கேட்கும் பாவனையில், ''அறியாமற் செய்தாலும் ஆரமுதே கண்வளராய்'' என்று பிள்ளையைச் சாந்தப்படுத்துகிறாள். கிராமப் புறங்களில் வித விதமான தாலாட்டுப் பாடல்கள் வழங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டுக்கு அடுத்தபடியாகத் தழைத்திருப்பது ஒப்பாரி. தாலாட்டிற் போலவே பின்வரும் ஒப்பாரியிலும் ஒரு தாயின் புத்திரவாஞ்சை சோக உணர்ச்சியில் வெடித்தெழுகிறது:

''ஐயோ மகளாரே:
யாருக் குனைவளர்த்தேன்?
குய்யோ குய்யோ எனுமுன்
குரல் பறந்து செல்லுகுதே!
நாளாய்க் கருத்தரித்து
நாள்விதம் முட்டையிட்டு,
ஏழ்மூன் றிரவுபகல்
இரணமின்றிக் காத்தேனே!
முதிரா இளஞ்சடலம்
முற்றாத முள்ளெலும்பு
சிதறப் பிடித்தானே
சிர்கேடன் செம்பருந்து!
முட்டைக்குள் ளேயிருந்து
முகங்காட்டும் வேளையிலே
செட்டைக்குள் ளேயுனைநான்
சேர்த்து முத்தம் செய்தேனே!
அவ்வா றுனைவளர்த்து
ஆகாசத் தியமனுக்குக்
கவ்வக் கொடுத்தேனே
கடும்பாவி ஆனேனே!
மண்ணைக் கிளறியொரு
மண்புழுவைக் கண்டுவிட்டால்,
அண்ணன்மார் பின்தொடர
அங்குமிங்கும் ஓடுவையே!
ஆகாசத் தேகையிலே
''அம்மா, எனைமீட்க
ஆகாதோ உன்னாலே
வா'' என் றலறினையே!
பாழும் பருந்தைவிடப்
பருத்துக் கொழுத்திருந்தும்
பறக்கும் செயலறியேன்,
பாவிநான் உனைமீட்க!
உன்நிலையைக் கண்டேங்கி
உயிர்மாய்க்கப் போகையிலுன்
அண்ணன்மா ரின்பாசம்
அழுத்திப் பிடிக்குதையோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சைப் பருந்து 'இறாஞ்சி'க் கொண்டு போய்விட்டது. தாய்க் கோழி மனம் நவித்துப் புலம்புகிறது. பெற்ற வயிறு பொறுத்திருக்குமா இந்தக் கோரச்செயலைப் பார்த்துக் கொண்டு? தான் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சாக்கி வளர்த்த அருமையையும் அந்தக் குஞ்சினது பாலலீலைகளையும் அது சொல்லிச் சொல்லிப் புலம்புகிறது. பருந்து குஞ்சைத் தூக்க வரும்போது, தாய்க்கோழி படுகிற அவஸ்தைகளைப் பார்த்தவர்களுக்கு இந்த உணர்ச்சி புலப்படும்.

பேட்டுக்கோழியின் பரிதவிப்பை, மனித உணர்ச்சிகளின் சாயலில் யாரோ ஒரு கிராமக் கவிஞன் இட்டுக் கட்டிய பாட்டு இது.

கிராமக் கவிதைகள் VII

காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப மக்களது மனோபாவம் மாறுவது இயற்கை. இந்த நியதி கிராமக் கவிதைகளைப் பொறுத்தமட்டில் முற்றுமுழுதாக ஒத்து வருகிறது. துக்கசுகம் இரண்டும் நித்தம் சூழ்ந்து வரும் வாழ்வில், சொர்க்கசுகம் இல்லையென்று, சோராது வேலை செய்யும்— நாட்டுப்புறத்தாருக்கு, நல்ல களைப்பாற்றியாக உதவுகிறது கிராமக் கவிதை. பாலர் முதல் வயோதிபர் ஈறாக அனைவரும் அனுபவிப்பதற்கேற்ற பாடல்கள் எழுதாமறைகளாக ஊர்கள்தோறும் முழங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கேட்டுப் பிரசுரிக்கும் முயற்சியின் ஓரங்கம் இது. இந்தத் தொகுப்பிலும் சில கதம்பக் கவிகளே தரப்படுகின்றன. இனி, உள்ளே போகலாம்.

''ஆலமரமுறங்கக்—குட்டி
அடிமரத்து வண்டுறங்க
மடியிலே நானுறங்க—குட்டி
வரம்பெற்று வந்தேனடி!''

''ஒருநாள் ஒருபொழுதும்—மச்சான்
உங்கள் முகம் காணாமலே,
ஓடைக்கரை மண்ணெடுத்து—மச்சான்
உருவஞ்செய்து பார்த்திருந்தேன்!''

இது ஒரு காதற் சம்பாஷணை அமைந்த தெம்மாங்குப் பாடல். கட்டை வண்டிகளில் தூரப் பிரயாணஞ் செய்யும்போது, வண்டிக்காரர் இராத் தூக்கத்தை மறப்பதற்காக இவ்வித முஸ்பாத்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு போவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்த காதலன் வந்துவிட்டான். ஆலமரத்தடியில் காதலியின் மடிமேல் சாய்ந்து படுத்திருக்கிறான். அந்த ஆனந்த உணர்ச்சியில் ஏதோ வரம் பெற்று வந்ததை 'வாய்ப்பந்தல்' போடுகிறான். சூழ் நிலையின் தொந்தரவுகளின்றித் தமது காதலைச் சுகிக்க முடிகிறதே என்ற எக்களிப்பு அவனுக்கு. இல்லையேல், ஆலமரத்தையும், அடி மரத்து வண்டையும் சுட்டிக்காட்டும் அவசியம் எதற்கு?

இத்தனைக்கும் 'சாடிக்கேற்ற மூடி'யான அந்த மச்சாள்—காதலி, சும்மா இருப்பாளா என்ன? ''ஓடைக்கரை மண்ணெடுத்து உருவஞ் செய்து பார்த்திருந்தேன்'' என்று தனது பற்று மிகுதியையும், பிரிவுத் துயரத்தை மறக்க மேற்கொண்ட உபாயத்தையும் புலப்படுத்துகிறாள்.

கிராமப்புறத்து ஏழைத்தொழிலாளிகளின் காதல் சமாச்சாரங் களைச் சுருக்க விளக்கமாகப் படம்பிடித்துக் காட்டும் பாடல் இது.

''மச்சியும் மச்சியும் கூடிக்கொண்டு,
மருத மரத்திலே ஏறிக்கொண்டு,
நாட்டு மச்சி சீட்டெழுத,
நம்ம மச்சிக்குக் கொண்டாட்டம்!''

ஒரு நிகழ்ச்சிச் சித்திரம் இது. கொல்லைப் புறத்திலே சாய்ந்த மருது. இரண்டு குமர்ப் பெண்கள் அதிலே ஏறி நிற்கிறார்கள். ஒருத்தி தனது காதலனுக்குச் சீட்டெழுத அந்தத் தருணத்தைப் பயன்படுத்துகிறாள், மற்றவள்?..... ஆம், எதிர் வீட்டு விறாந்தையிலே காத்துக் கொண் டிருக்கிற தனது காதலனோடு 'கண்ணடிப்பு' வேலை. ''நம்ம மச்சிக்குக் கொண்டாட்டம்'' என்று உரிமை பாராட்டிப் பேசுகிறவர்கள் தங்கள் கொண்டாட்டத்தின் மர்மத்தைக் கிண்டலாகச் சொல்லுகிறவர். அந்த நாட்டு மச்சிக்குத் தான் பாவம், திண்டாட்டம்; அங்கே அவள் காதலன் இல்லையே!

''டிங்கு டிங்காளே
மாவிடிச் சாளே
றொட்டி சுட்டாளே
எனக்குந் தந்தாளே
வாரக் கட்டாலே
பூசை(ப்) பட்டாளே''.

இது கிண்டற் கவிதை. அம்மான் மாமி இல்லாத நேரம் பார்த்து மச்சாளைச் சந்திக்கும் ஒரு 'குஷி'ப் பேர்வழியின் வம்புச் சிருஷ்டி இது. சொல்லாமல் சொல்லி, அழாமல் அழவைக்கும் சூட்சுமந் தெரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன், ''வாரக்கட்டாலே பூசை(ப்) பட்டாளே'' என்று குத்திக் காட்டுகிறான். விளக்குமாற்றால் அடிபடுவது யாருக்குத்தான் அவமான மாக இருக்காது?

இங்கே நிகழ்ச்சியல்ல முக்கியம். விளையாட்டுப் பிள்ளைகளின் வாய்வீச்சிலுள்ள கற்பனைத் திறமையைத்தான் பார்க்க வேண்டும்!

''ஆற்றுமணலாலே சோறாக்கி
அவரைக்காய்ப் பூவாலே கறியாக்கி
மின்மினிப் பூச்சியால் விளக்கேற்றி
மீராஜா ஆண்டவர் வருவாரென்று
வெள்ளிப் பானையில் தீயவைத்து
வெங்கலப் பானையில் வேகவைத்து,
பாலடுப்புக் கத்தரிக்காயைப்
பார்த்திறக்கடி சக்களத்தி!''

சின்னஞ்சிறு பிள்ளைகளின் சிங்காரப் பாட்டிது. மணல் விளை யாட்டில் சோறுகறி ஆக்கும் பாவனை வேலை நடக்கிறது. அந்த நிகழ்ச்சிக் கற்பனையில் ஆற்று மணலாலே சோறாம்; அவரைக்காய்ப் பூவாலே கறியாம்; மின்மினிப் பூச்சியால் விளக்காம்—மீராஜா ஆண்ட வர் வருகைக்காக இவ்வளவு முன்னேற்பாடுகள்! இந்த ஆரவாரங் களுக்குள்ளே ''பாலடுப்புக் கத்தரிக்காயைப் பார்த்திறக்கடி சக்களத்தி'' என்று அதிகாரம் பண்ணுகிறது ஒரு பெண் குரல். இது ஒரு முஸ்லீம் கிராமப் பாட்டென்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா?

''புலுட்டரிவி கொய்ய வென்று
பொடியளுக்கும் சொல்லிப்
புழுத்தகரு வாட்டிலொரு
புளித்தண்ணியும் வைத்து
அரியரிவி துருவரிவி
சங்கார வேலே—அவள்
ஆளெண்ணி முறியெடுப்பாள்
நாசமறு வாளே!''

அரிவி வெட்டுக்காரர், தமது வேலைக் களைப்பை மறப்பதற்காக அமைத்துப் பாடும் பாடலின் ஒரு சிறு பகுதி இது. கொழுத்தும் வெயிலில், 'சுணை'க்குள் இருந்து அரிவி வெட்டுவதென்றால் இலேசான காரியமா என்ன? சமயோசிதமாகச் சிருஷ்டித்துப் பாடும் சந்தப் பாட்டிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ ஒரு அம்மாள், கடும் லோபித்தனமுள்ளவள்; ஏமாற்றிக் காரியம் பார்ப்பவள்—இவ்வாறு தொழிலாளரது கேலிக்கு இடமாகின்றாள்.

''ஆளெண்ணி முறியெடுக்கும்'' அந்த அம்மாளைத் திட்டாமலே திட்டும் அழகைப் பாருங்கள்! போதுமா?

கிராமக் கவிதைகள் VIII

பன்றிப் பள்ளு

உண்மையான கிராம வாழ்க்கையைப் பார்க்க வேண்டுமானால், வன்னிப் பக்கங்களுக்குத்தான் போக வேண்டும் அங்குமிங்குந் தொட்டந்தொட்டமாக இருக்கும் ஜனங்கள், மலேரியாச் சுரத்தாலும், வன விலங்குகளாலும் வருந் தொந்தரவுகளைச் சகித்துக் கொண்டு, அந்தரப் பிழைப்புப் பிழைக்கிறார்கள். விந்தையான இயந்திர சாதனங்கள் மலிந்த இந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களது சீவியத்தில் மலர்ச்சியில்லை. இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் நமது முதாதைகள் எப்படி விவசாயத்தை நடத்தினார்களோ, அதே முறையிற்றான் இப்பொழுதும் தொழில் நடைபெறுகிறது!

சினிமா முதலிய நாகரீக வசதிகள் வன்னி நாடுகளில் கிடையா. என்றாலும், ஏதாவது தெருக்கூத்துகளோ, சிறு நாடகங்களோ நடத்தித் தங்கள் வேலையொழிந்த வேளைகளை, வேடிக்கையாகக் கழிக்கிறார்கள், அங்குள்ளவர்கள். விவசாயத்தின் ஒவ்வொரு துறையிலும் பொருத்தமான—எளிய—இனிய—கவிதைகளை அமைத்துப் பாடுந் திறம் அவர்களுக்குண்டு. பார்க்கப்போனால், நல்ல நாடோடிப் பாடல்கள் அங்குதான் உற்பத்தியாகின்றன என்று கூடச் சொல்லலாம்.

நெல் விளைந்து கொண்டிருக்கும்போது, பன்றி முதலிய பிராணிகளாற் சேதம் வராது காக்க வேண்டும். அந்தக் காவலும் வேலையாகத் தோன்றாமல் விளையாட்டாக நடப்பதற்காக ''பன்றிப் பள்ளு'' முதலிய குட்டி நாடகங்களை நடிப்பார்கள். கல்வி வாசனையில்லாத அவர்களது சொல்லாட்சியிலே, கருத்தழகும் சொற்செட்டும் ஓசை நயமும் அமைந்திருப்பதைப் பார்த்தால், ஆச்சரியப்படவே செய்யும். மாதிரிக்குப் ''டன்றிப் பள்ளு'' என்ற கவிதைத் தொடரிற் சில பொறுக்குமணிகள் தரப்படுகின்றன. படித்துப் பாருங்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வனத்தை அறுத்து நெருப்பைக் கொழுத்தி
மரத்தில் தடிகள் பொறுக்கியே,
வளைத்து வேலி நிரைத்துக் கறுத்த
வளர்நெல் விதைகள் தூவியே,
புனத்தில் அடரும் கரிகண்டுடனே
புள்ளிமான்பல சாதிக்கும்
பிரித்துக் கொடுத்துத் தனக்கு மிஞ்சிய
பொருள்கொண்டேகும் மனிதரே''.

என்று, தம்மைத் துரத்த வந்த மனிதருக்குப் புத்தி புகட்டத் தொடங்குகின்றன பன்றிகள்—இங்கே நாடகப் பன்றிகள்! வன்னியில் நெல் வேளாண்மை நடக்கும் முறையும், ''வேளாளன் சொத்து வேலியிலும் காலையிலும்'' என்ற விதமாகச் சகல சீவராசிகளுக்கும் பயன்படும் உண்மையையும் சுருக்கவிளக்கமாக இதிற் சொல்லப்பட்டிருக்கின்றன. நீங்கள் தருமவான்கள், கொடை வள்ளல்கள், கருணை உள்ளம் படைத்தவர்கள் என்றெல்லாம் சொல்லாமலே சொல்லி, முகஸ்துதி செய்கின்றனவாம் அவை. அப்புறந்தான் அந்தப் பன்றிகள் தமது சுய புராணத்தை—தாங்கள் வயலுள் வந்த காரணத்தை — அவிழ்க்கத் தொடங்குகின்றன.

''இனத்திற் பெரியசாதி நாங்கள்
பிழைக்க வழியில் லாமலே,
எவர்க்கும் பெருமை கொடுக்கும் சென்னெல்
விளையும் தறைக்குள் ஏகிறோம்;
கனக்க விளைவிங்கிருக்கும் செய்தியை
நமக்கிங் கொருவர் உரைத்திடார்;
கன்னி துயிலில் கண்ட கனவைக்
கழறக் கேளும் மனிதரே''.

மிருகங்களுக்குள்ளே அதிகம் அருவருப்பானது பன்றி. ''பன்றி பல குட்டிகளைப் பயந்ததனால் ஏதுபயன்?'' என்றுகூட ஒரு புலவர் பாடிவிட்டார். அப்படியான அவமதிப்புக்குரிய அந்தப் பிராணியே சொல்லுகிறதாம், ''இனத்திற் பெரிய சாதி நாங்கள்; பிழைக்க வழியில்லாமலே, எவர்க்கும் பெருமை கொடுக்கும் சென்னெல் விளையுந் தறைக்குள் ஏகிறோம்'' என்று. அது மாத்திரமா? ''நெல்லு நல்லாய் விளைந்த செய்தியைக்கூட, எமக்கு வேறொருவர் உரைக்கவில்லை; எனது மனைவி கண்ட கனவின் பலனாகவே அதை உணர்ந்தோம்', என்றும் கதைகட்டுகிறது வந்த தலையாரிப் பன்றி. கனவைக் கேளுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாமும் நம்மடை பெண்டிலும் பிள்ளையும்
நடுவனத்திலே திரியக்கே,
நயந்து கவலைக் கிழங்கு கிண்டி
நாங்கள் தின்று திரியக்கே,
வானில் இருந்து மழைகள் பொழிய
மாரி வெள்ளம் பாயவே
வாழைக்கிழங்கும் பாலைப்பழமும்
மகிழ்ந்து பொறுக்கித் திரியக்கே,
கானில் இருந்து மயிலுங் குயிலும்
கடிபட்டேசல் பாடக்கே,
காட்டுக் கிளியும் கூட்டுப் புறாவும்
கடிபட்டொருசொற் கூறவும்
தேனில் இனிய மனைவி கண்டு
திடுக்கிட்டெழுந்து என்னுடன்
செப்பிடப் பொருள்தேர்ந்து பார்த்துநான்
தேவி யாருடன் கூறினேன்".

இங்கே கனவின் விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. உணவுக்காகப் பன்றிக் குடும்பம் காட்டில் அலைகிறது. அப்போது எதிர்பாராத வகையில் மழை பொழிகிறது. வெள்ளம் பாய்கிறது. மயிலும் குயிலும் கிளியும் புறாவும் கடிபடுகின்றன. இந்த ஆரவார நிகழ்ச்சிகளைத் 'தேனில் இனிய மனைவி' கண்டு திடுக்கிட்டெழுந்து ஆண் பன்றியிடம் சொல்லியதாம். அந்த ஆண் பன்றிக்குச் சாடையாகச் சோதிடமும் வரும். உடனே கனவின் பலன் உரைக்கத் தொடங்குகிறது.

"கன்னெல் களையும் செந்நெல் விளையும்
கால மென்றறி யாயோடி;
காட்டுப் பிழைப்பு ஓட்டும் மானுடர்
நாட்டிற் சென்றிட லாமடி;
மண்ணில் நமது கண்ணுக்கினிய
மக்களைத் துரந்து அழையடி
வன்ன வயலில் செந்நெல் நாங்கள்
வருந்தி யருந்த லாமடி".

மழை பெய்ய, குருவிகள் கடிபடக் கண்டால் விருந்து வரவு என்று எப்படியோ கண்டு பிடித்துவிட்டது ஆண் பன்றி. உடனே தனது பரிவாரங்களையெல்லாம் அழைக்கும்படி உத்தரவிடுகிறது பெண் பன்றிக்கு. கால தாமதமில்லாமல் வயலுக்குப் போய் நெல்லை உண்ணலா மென்ற ஆவல் அதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பன்னும் அடியும் நுனியும் தறித்த
பனந் துண்டம் போல் அழகினாள்;
பாவை எனது ஆசைக்கிசைந்த
பருத்த உரல்போல் இடையினாள்.
சொன்ன படியின் உடனே கமத்தைச்
சூழ்ந்து பண்டிகள் யாவரும்
சுறுக்கில் விளையும் தறைக்குள் வந்தோம்,
துரத்த வேண்டாம் மனிதரே''.

பனந்துண்டம் போன்ற வடிவும் பருத்த உரல் போன்ற இடையுமுள்ள அந்தப் பதிவிரதை, பின்னும் தாமதிப்பாளா? உடனே தன் பிள்ளைகளை அழைக்கிறாள். எல்லாம் உடன்வர, வயலுள்ளே வந்தோம்; எங்களைத் துரத்த வேண்டாம் மனிதரே—என்று வேண்டிக் கொள்ளுகிறது ஆண் பன்றி. ஒருவேளை, தானுரைத்த கனவின் பலன் விபரீதமாக முடிந்துவிடுமோ என்ற ஏக்கமும் இருக்கிறதாக்கும் அதற்கு! இவ்வளவும் ஒரு காட்சி—நாடகத்திலே ஒரு அங்கம். இனிவருவது பன்றி தனது குட்டிகளுக்குக் கூறும் போதனைப் பாட்டு:

''காட்டி லோடிவிளையாடு மாப்போல்
கடத்தி நேரத்தைப் போக்கவும் வேண்டாம்;
நாட்டு மானுடர் செய்திடும் சென்னெலை
நாளுந் தின்னக் கிடையாது மக்காள்;
''தாயை விட்டுப் பிரியவும் வேண்டாம்;
தனியே தூரத்தே போகவும் வேண்டாம்;
வேசை மக்கள் உலாவியே வந்தால்,
வெருட்டு வாரோடித் தப்பவும் மாட்டீர்;
''ஒட்டுங் கச்சையு மாகத் துரத்துவர்;
சுளட்டிச் சூளினால் ஊட்டி முறிப்பர்;
குட்டியென்றும் மனமிரங்கார் குறங்
கொள்ளி யாலுயிர் கொல்லுவர் மக்காள்;
''பெற்ற தாய்க்கும் பிதாவுக்கு மல்லாது
பிள்ளைச் செல்வம் பிறரறி வாரோ?
உற்ற தோரெலி தன்விளை யாட்டில்
உறங்கும் பூனைக்குவப்பில்லைக் கண்டீர்....''.

என்று தொடர்ந்து போகிறது பள்ளு. பன்றிகளைப் பற்றிய செய்தியாக இருந்தாலும், மனித உணர்ச்சியின் சாயலில் பின்னப்பட்டிருக்கிறது கவிதை. வன்னிப் பிரதேசங்களில் இப்படி வழங்கும் பாடல்கள் இன்னும் எத்தனை எத்தனையோ—யாரறிவார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கவிதைகள் IX

காதல் அரங்கம்

மனித சமுதாயம் தோன்றிய நாளில் இருந்தே பாஷையும் வளர்ந்து வருகிறது. உலகிற் பல்வேறு வகையான பாஷைகள் வழங்கி வந்தாலும், அவற்றின் பொதுத் தன்மை ஒன்றுதான்: மனக் கருத்தை வெளிப் படுத்துவது. பாஷையின் சிறப்பியல்பு, அதன் இலக்கிய சௌந்தர்யங் களிலேயே தங்கியிருக்கிறது. இலக்கிய அளவுகோலைக் கொண்டுதான், ஒரு சமுதாயத்தின் நாகரீகத்தை மதிப்பிடமுடியும்; மதிப்பிடுகிறார்கள். இலக்கியம் என்றவுடனே பொதுவாக, வசனம், பாட்டு என்ற இரண்டும் ஞாபகத்துக்கு வரும். என்றாலும், பாட்டைத்தான் சிறப்பாகக் குறிப் பிடுகிறது இலக்கியம். ஏனென்றால், இன்ப துன்ப வேதனைகளில் எல்லாம் பாட்டுத்தான் மனிதனைச் சமநிலைப்படுத்துகிறது. இது அனுபவத்தில் கண்டறிந்த உண்மை.

பாட்டிலும் இரு வகை. ஒன்று: யாப்பணி கற்று இலக்கணக் கட்டுப் பாட்டுள் அடங்கிப் பாடுவது. பாரதம் இராமாயணம் திருக்குறள் சிலப்பதிகாரம் முதலியன, பழைய இலக்கண சம்பிரதாயத்தை அனு சரித்து எழுந்தவை. பொதுவாக, அவற்றைப் படித்தவர்கள் மட்டுந் தான் உணர்ந்து அனுபவிக்க முடியும். ஆனால், பாட்டின் மற்றொரு வகை இருக்கிறதே—கிராமக் கவிதை, அது படிப்பு வாசனை சிறிது மில்லாத ஏழைப் பட்டிக்காட்டுச் சனங்களின் இருதய உணர்ச்சியை அம்பலப்படுத்துகிறது. எழுத்துப் பயிற்சியில்லாதவர்கள், இலக்கண சித்தாந்தங்களை எங்கே கவனிக்கப் போகிறார்கள்? ஏதோ தமக்கு வாலாயமான ஓசையில், தமது இதய ஒலியை எழுப்பிவிடுகிறார்கள். அந்த ஒலிகளிலே, அவர்களது ஆசாபாசங்களின் அந்தரங்கம் வெளி யாகிறது. கர்ண பரம்பரையாக மட்டும் வழங்கிவருவதால், அவற்றை நாடோடிப் பாடல்கள், காற்றிலே வரும் கீதம்—முதலிய பெயர்க ளிட்டு அழைக்கிறோம்.

பொதுவாக, இப்பாடல்கள் சூழ்நிலையை (காலதேச வர்த்தமானம் என்று சொல்லுகிறோமே—சமையம், இடம், சந்தர்ப்பம் மூன்றையும்) ஆதாரமாகக் கொண்டே கிளம்புகின்றன. இதனால், ஏராளமான பாடல்கள் மங்கி மறைவதற்கும் இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பஞ்சாயத்து முறையைப் புதுப்பிக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கம் திட்டமிடுவதாகப் பத்திரிகைகளிற் படித்த ஞாபகம். பொலீஸுக்கு அதிகாரங் கூட்டுவது, பொதுசன பாதுகாப்புச் சட்டம் இயற்றுவது—முதலான அதிகப் பிரசங்கித்தனமான ஆட்சி முறையை நடத்தும் அதிகார வர்க்கம், கிராமச் சனங்களின் அபிலாஷைகளுக்கும் அடிப்படையான தத்துவங்களுக்கும் மதிப்புக் கொடுத்தால், கொலை களவு முதலான பஞ்சமா பாதகங்களை இலகுவில் வேரறுக்கலாமே..... அது வேறு விஷயம்! ஆனால், எவ்வளவு நாகரீகத்தில் ஏறி நின்றாலும், கிராமங்களின் அமைதியான சூழ்நிலையையும் தேவைகளையும் நாம் புறக்கணிப்பதற்கில்லை. நீதி பரிபாலனத்தில் இந்திய அரசாங்கம் காட்டும் முன்மாதிரியை இலக்கிய பரிபாலனத்தில் தமிழர்களும் பின் பற்றுவார்களா?...... ஆம். கிராமக் கவிதைகளைத் தேடித் தொகுக்கும் 'தேவேந்திரநாத் சத்தியார்த்தி'கள் பலர் கிளம்பத்தான் வேண்டும்!

சாஞ்சி சின்னங்களையும், அஜந்தாக் குகை ஓவியங்களையும் பாது காப்பதிலுள்ள ஆர்வம், நமது (காண) பரம்பரைத் தமிழ்ச் செல்வங் களைப் பாதுகாப்பதிலும் ஏற்படத்தான் செய்கிறது. இந்த வகையில், நமது காதுக்கெட்டிய சில கிராமக் கவிதைகளைக் கீழே தருகின்றோம். பாடல்களின் பொதுவான தன்மை காதலுணர்ச்சியைப் பிரதிபலிப்ப தால், ''காதலரங்கம்'' என்ற தலைப்புக் கொடுத்திருக்கிறோம்.

''கூடினமே கூடினமே—மச்சான்
கூட்டுவண்டிக் காலைப்போலே;
சோடியாக நாமிருந்தால்—மச்சான்
சோறு தண்ணி வேண்டாமடா!''

''மாவிடிச்சு மனைமெழுகி—மச்சான்
மஞ்சள் பூசித் தலைமுழுகி,
காரைக் கூடை கக்கத்திலே—எந்தன்
கறுத்தை மச்சான் பக்கத்திலே!''

தேயிலைத் தோட்டத்தில் வழங்கும் தெம்மாங்குப் பாடல் இது. காரைக்கூடை கக்கத்திலே கொண்டு, கறுத்தை மச்சான் பக்கத்திலே வரக் கொழுந்தெடுக்கப் போகும் ஒரு 'குட்டி'யின் இதயத் துடிப்பை இங்கு காண்கிறோம். காதலின் எக்களிப்பு ஒவ்வொரு வரியிலும் எதிரொலிக்கிறது. ஒத்த நலனும் ஒத்த குணமும் ஒத்த கல்வியும் உடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முள் மனங்கலந்து ஒன்றி வாழ்வதைப் பற்றி அகப்பொருள் இலக்கணங்கள் வகுத்து வைத்திருக்கின்றன. ஆனால், நடைமுறையில் அந்த இலட்சிய வாழ்வைப் புலப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடியாக இருப்பதற்கு அவள் ஆசைப்படுவது போலத் தெரிகிறது. ''கூட்டுவண்டிக் காலைப்போலே, சோடியாக நாமிருந்தால்......'' என்ன அழகான கற்பனை செய்கிறாள் தமது குடும்ப வாழ்வை! புருஷனை 'அம்மாஞ்சி'யாக்கி அதிகாரஞ் செய்யும் இந்தக்கால 'நாகரீக மோகினி'களுக்கும் இந்த நாட்டுப்புறப் பெண்ணுக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். தன்னடக்கமாகத் தனது குடும்பக்கடமைகளையும் சொல்லி வைக்கிறாள். ஆண் கறுப்பாயிருக்கிற காரணத்தால், 'அவனைக் கட்ட மாட்டேன்' என்று பிடிவாதம் பண்ணுகிற நவ யுவதிகளும் இருக்கிறார்கள் தான். ஆனால், இந்தக் குட்டிக்குத் தனது ஆசை மச்சானின் கறுப்பிலேயே அபார மோகம் பிறந்து விடுகிறது. 'அடா' என்று ஒரு பெண் தனது காதலனை அழைக்கலாமோ என்று நாங்கள் யோசிக்கலாம். அன்பின் முதிர்ச்சியினாலே கடவுளையே நாம் அப்படி அழைக்கும்போது இது பிரமாதமா?

''காகக் கறுப்பி யென்று
எல்லாரும் சொல்லுறாரே,
அல்லா படைத்ததனை
அழித்தும் படைக்கலாமோ?''

இது ஒரு கன்னிப் பெண்ணின் மன அங்கலாய்ப்பைப் புலப்படுத்தும் சோக சித்திரம். ஆண் கறுப்பாயிருந்தாலும் பரவாயில்லை; பெண் கறுப்பியாக இருந்து விட்டாலோ?...... ஆம், விவாக விஷயத்தில் அவள் ஒரு 'துர்அதிஷ்டக் கட்டை'யாகவே மதிக்கப்படுவாள். இது பொதுவாக எந்தச் சமூகத்திலும் உள்ள குறை. அல்லா (ஆண்டவன்) படைப்பை மாற்றுவது கஷ்டம் என்பதை எல்லாரும் அறிவர். ''பிறப்பிலே சொத்தியைப் பேய்க்கிட்டுக் கழித்தாலும் மாறாது'' என்பது பழமொழியல்லவா? ஆகவே, அவள் தன்னைப் படைத்த கடவுளை நோவதன்றி, வேறென்ன செய்வாள்?

''நாகான நாகிருக்க—நல்ல
நாகுதரம் இங்கிருக்க,
கள்ளாக்காலி நாகோடே—நீர்
காட்டோரம் போவதென்ன?''

சொந்தப் பெண்டிலை மறந்து, கள்ளப் பெண்டிலைத் தேடிப் போகிறான் ஒருவன். இது சொந்தப் பெண்டிலுக்குப் பிடிக்குமா? ஆனால், தனது அதிருப்தியை மௌனமாகச் சகித்திருக்கவில்லை அவள் கணவனது தவறைச் சாதுரியமாகப் புலப்படுத்துகிறாள். நாகு, நாகு தரம்—என்ற பரிபாஷைகளின் மூலம், தான் இல்லறத்திலும் பிரம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியம் அனுஷ்டிப்பதைச் சொல்லாமலே சொல்லித் தனது சோகத்தைப் புலப்படுத்துகிறாள். கள்ளாக்காலி என்பது கட்டாக்காலி என்பதன் திரிபு. ''வீட்டிலே நானிருக்க, வெளியிலே வேசியைத் தேடிப் போகாதே'' என்பது தொனிப்பொருள். உறியிலே வெண்ணெயிருக்க ஊரெல்லாம் நெய்க்குத் திரிகிற முட்டாளாயிருக்கிறாயே'' என்று குத்திக் காட்டுவது போல் இருக்கிறது அவள் பேச்சு. இத்தனைக்கும் அவன் திருந்தாவிட்டால் ஆண்பிள்ளையல்ல; உணர்ச்சியற்ற மரக் கட்டை!

இப்படியான வியபிசார நாடகங்கள் கிராமப் புறங்களில் எத்தனையோ உண்டு. பெண்களின் கற்பை மட்டும் வற்புறுத்திச் சட்டங்கள் செய்துவிட்டாற் போதாது. ஆண்களுக்கும் அதே விதி இருக்க வேண்டும் என்பதை இந்தப் பாடலின் சார்பாக உணர்ந்து கொள்வது நல்லது.

> ''சட்டை போட்டுப் பட்டுடுத்தித்
> தண்ணிக்குப் போற பெண்ணே,
> சட்டை போட்ட கையாலே
> தண்ணி தந்தால் ஆகாதோ?
> ''வாய்க்காலில் தண்ணி மச்சான்
> வம்பு வரும் தும்பு வரும்;
> கூடத்துக்கு வாங்கோ மச்சான்
> குளிர்ந்த தண்ணி நான் தருவேன்!
> ''கூட்டமும் நானறிவேன்,
> குளக்கரையும் நானறிவேன்;
> குளிர்ந்த தண்ணி தேவையில்லை;
> கூசாமற் செல்லுகிறேன்!''

சட்டை போட்டுப் பட்டுடுத்தித் தண்ணிக்குப் போகிறாள் ஒரு சிங்கார யுவதி. ''சட்டை போட்ட கையாலே தண்ணி தந்தால் ஆகாதோ?''—என்று, குறிப்பாக வம்புக்கிழுக்கிறான், அவளது வாலிப மச்சான். பெண்ணுக்கோ யாராவது பார்த்து விட்டால் சங்கடமாய் விடுமே என்ற பயம். அதனால், ''வாய்க்காலில் தண்ணி—(ஆற்றுப் பாய்ச்சலுள்ள இடங்களின் நிகழ்ச்சி இது). மச்சான் வம்பு வரும் தும்பு வரும்; கூடத்துக்கு வாங்கோ மச்சான் குளிர்ந்த தண்ணி நான் தருவேன்'' என்று சிலேடையாகத் தனது சம்மதத்தைப் புலப்படுத்து கிறாள். அதாவது, தாங்கள் கூடியின்புறுவதற்கு அந்த இடம் தகுதி யில்லை என்பது அவள் குறிப்பு. ஆனால், அந்த வாலிபனுக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்துக்குப் போனால், கையுங்களவுமாகப் பிடிபடக் கூடும் என்ற சந்தேகம். ஆகவே தெந்தெட்டாகக் காரியம் பார்க்க அவள் சம்மதப் படாளென்பதைக் கண்டதும் வெற்றிகரமாகப் பின்வாங்கி விடுகிறான், அந்த இடத்தை விட்டு!

''தண்ணீர்க்கரையில் நிற்கும்
தனி விளாத்திப் பிஞ்சதுபோல்,
கன்னியுடை மார்பிரண்டும்
கண்ணை மயக்குதடி!''

பெண் மோகம் கொண்டலையும் ஒரு பித்தனின் வர்ணனைப் பாடல் இது. பொதுவாக, கன்னிப் பெண்களின் மேனிவனப்பு எவர் மனதையும் கவரக் கூடியது. தண்ணீர்க் கரையில் நிற்கும் தனி விளாத்தியின் பிஞ்சு எவ்வளவு மதர்த்து நிற்குமோ அப்படி இருக்கிறதாம் கன்னியின் மார்பு; அழகுதான்!

''அக்கரையில் கொக்காரே,
அழகுமணித் தாராவே,
இக்கரைக்கு வந்தாயானால்
சக்கரப்பாய் போட்டிடுவேன்!''

ஒரு பெண் நீர்த்துறையில் நின்று கொண்டு, எதிர்க்கரையில் தனக்காகக் காத்திருக்கும் தனது காதலனை இப்படி வரவேற்கிறாள். கொக்கு—தாரா என்பன குறிப்பு மொழிகள். சக்கரப்பாய்—அலங்கார வேலைப்பாடமைந்த பாய். அதாவது, ''உனக்கு இன்ப சுகந்தரக் காத்திருக்கிறேன் இவ்விடம் வா'' என்பது இதன் சாரம்.

''காட்டருகே நின்று கொண்டு
கன்னி குழல் ஊதினனே;
காயாம் பூ மேனியர்க்குக்
காதுஞ் செவிடாச்சோ?''

''காதுஞ் செவிடு இல்லை;
காகங் கரைய வில்லை;
மாலையிலே மறந் திடாமல்
மனமார வந்திடுவேன்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காதலி, தனது காதலனை வரும்படி (குழல் ஊதிச்) சைகை கொடுக்கிறாள். ஆனால், சனசஞ்சடி அதிகம் இருப்பதால், தங்கள் களவொழுக்கம் அம்பலமாகி விடக்கூடும் என்ற பயம் அவனுக்கு. அதனால், சந்தர்ப்பம் சரியில்லை என்பதை உணர்த்திவிட்டு, மாலையிலே வருவதாகச் சொல்லி மறைகிறான். காகம் என்றது இங்கே சனக்கும்பலை. ''உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?''—என்பதை எண்ணியே அவன் அப்படி வர மறுத்திருக்க வேண்டும்! காயாம்பூ மேனியன் என்றது அவனது கறுப்பு நிறத்தைக் குறிப்பதாகும். ''காதுஞ் செவிடாச்சோ?'' என்பதில் தனது ஏமாற்றத்தை எதிரொலிக்கிறாள் அவள்.

''கொழும்பு நடையானுக்கும்,
கோட்டுச் சட்டை போட்டவர்க்கும்,
இந்தியா ஓதலுக்கும்,
இனி மறக்கப் போவதில்லை!''

இந்தியாவிலே போய்ப் படித்து மௌலவி (முஸ்லிம் மதகுரு)ப் பட்டம் பெற்று வந்த ஒரு நாகரிகப் பேர் வழியில், ஒரு நாட்டுப் புறத்துப் பெண் 'கண்போடு'கிறாள். வெளிவேஷங்களில் மயங்குமியல்பு பெண்களுக்கு அதிகமுண்டு. அதைப் பிரதிபலிக்கிறது பாட்டு. கொழும்பு நடை, 'கோட்', 'ஷேட்', இந்தியா படிப்பு—எல்லாவற்றிலுமே அவளுக்கு மோகம் பிறந்துவிட்டதாம். அதனால் அந்த உல்லாசப் பேர்வழியை ''இனிமறக்கப் போவதில்லை'' என்று மனதில் சங்கற்பஞ் செய்து கொள்ளுகிறாளாம். எப்படி இருக்கிறது நாடகம்? இதை நாங்களும் மறக்கப் போவதில்லை. (இங்கு காட்டிய முதற்பாடலொழிந்த மற்றவை மன்னார்ப் பகுதியில் வழங்குவன. இன்னுமுண்டு; அடுத்த கட்டுரைகளிற் பார்ப்போம்).

கிராமக் கவிதைகள் X

காதல் அரங்கம்

'வாழ்க்கையின் விமர்சனம் கலை'—என்பது றெஜினோல்ட் ஆணல்ட் என்பவரின் கருத்து. கலையின் ஒருறுப்பான இலக்கியத்துக்கும்—முக்கியமாக, நாட்டுப் பாடல், உபகதை, பழமொழி, தெருக்கூத்து முதலிய கிராம இலக்கியங்களுக்கு—இவ்வபிப்பிராயம் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித அறிவுச் சூழலிலே உணர்ச்சி அலைகள் செய்யுங் கூத்துக்கு அளவில்லை. இதனாலேயே ''மனிதன் எப்பொழுதும் சந்தர்ப்பத்துக்கு அடிமை'' என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. சந்தர்ப்பம் என்பது பெரும்பாலும் சூழலைப் பொறுத்துவருவது. 'இடங்களின் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப இலக்கியத்தின் தன்மையும் மாறுபடுகிறது' என்றால் சூழல்: வாழ்க்கையையும், வாழ்க்கை: இலக்கியத்தையும்—மாற்றுகின்றன என்றுதானே அர்த்தம்?

நாட்டுப் பாடல்களின் செல்வாக்கு வரவரக் கூடிவிட்டது. வானொலி நிலையங்களிற்கூட பாமரமக்களின் (அநாமதேயக்)கவிவாணி அரங்கேறத் தொடங்கி விட்டது. ஆனால் சில பிரமுகர்கள் அபிப்பிராயப்படுகிறபடி 'பழமையானவற்றையே தேடித் தொகுக்க வேண்டு'மென்ற கொள்கை நமக்கில்லை. புதுமையானவற்றிலும் கிராமியவாடை வீசும் சுவையான கவிகளையும் நாம் ஒப்புக்கொள்ளலாம்; ஒப்புக் கொள்ளுகிறோம்! பாலே தயிராகப் பரிணமிக்கிறதென்றால், புதுமையும் பழமையாகலாந் தானே?

இலங்கையின் அதிவரண்ட பிரதேசங்களில் ஒன்று மன்னார். அங்கு வழங்கும் பாடல்கள் பெரும்பாலும் காதற் கருத்துள்ளவை. காரணம் ஆராய்தற்குரியது. காதலரங்கத்தின் இரண்டாங் காட்சி இனித் தொடங்குகிறது:

''மானா மதுரையிலே
மயிலாள் தலை முழுகையிலே
மீனாக வந்து,
மிதக்கத் தவஞ் செய்யேனோ?''

ஆண் அழகா? பெண் அழகா?—என்ற விவாதம் அடிக்கடி கிளம்புகிறது. யானை ஆடு மாடு முதலிய மிருகங்களையும், மயில் கோழி புறா முதலிய பறவைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆண் வர்க்கந்தான் ஒழுங்காகத் தோன்றுகிறது. ஆனால், மனிதருக்குள்ளே இருபாலாரிலும் அழகானவர்களும் குரூபிகளும் கலந்திருந்தாலும், பொதுசன அபிப்பிராயம் பெண்தான் அழகென்று தீர்ப்புக்கட்டுகிறது. இந்த நிலையில், ஒரு வாலிபன், ஒரு பெண்ணின் அங்கவனப்பில் மனதைப் பறிகொடுத்து, அவளையடைவதற்குத் தவம் புரியவுந் தயாராயிருக்கிறானென்றால், அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

'மனித உருவுடன்தான் தன் காதலியைச் சேர்ந்து சுகிக்கக் கொடுத்துவைக்கவில்லை. மீனாகப் பிறந்துவிட்டால் எவ்வளவு இலகுவாயிருக்கும், அவளையணுக'—என்று கற்பனை பண்ணுகிறான் அந்த ஏமாந்த சோணகிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்கரையில் மறைந்துநின்று தன்காதலி நீராடும் அழகையும் மீன்கள் சுதந்திரமாக அவள்மேல் துள்ளிப் பாய்ந்து விளையாடுவதை யும் அடிக்கடி அவதானித்த அவனுக்கு, வேறெதிலும் நாட்டமிருப்ப தாகத் தெரியவில்லை. அவள்—அவளாயிருக்க, தான் மட்டும் மீனாக மாறி மிதந்து விளையாட வேண்டுமென்று தன் பசுற்கனவைத் தன்பாட்டில் சொல்லுங் கட்டம் இது. ஒரு காதல் உள்ளத்தின் அங்கலாய்ப்பு, ஏக்கமாக எதிரொலிக்கிறது பாட்டில்!

''மாடப் புறாவே,
மலைக்காட்டு நங்கணமே,
கூடப் பறப்பதற்குக்
குடும்பத்தார் செப்பமில்லை!''

சின்னஞ்சிறு வயதில் சேர்ந்து விளையாடியவள், கன்னிப் பருவம் வந்ததும் இயல்பாகவே அடக்க ஒடுக்கமாக நடமாடத் தெரிந்து கொள்ளுகிறாள். சமூகம் என்ற தராசு தன்னை ''ஒரு நல்ல பெண்'' என நிறுத்துக் காட்ட வேண்டுமே என்ற கவலை அவளை உள்ளூர வெருட்டுகிறது. ஆகவே, பெட்டியிற் பாம்புபோல, குடும்ப எல்லைக் குள், தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளுகிறாள். இந்த நிலை யில், அவள் தனது கலியாணக் கட்டத்தைப் பற்றி 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மனம் புண்ணாவ'தை விட்டு வேறு என்ன செய்ய இருக்கிறது? அப்படியான ஒரு யுவதியிடம், ஒரு யுவன் தனதுசிறுபருவ நட்புரிமையை விட்டுக்கொடுக்காமல், பகிரங்கமாகக் காதல் புரிய முடியுமா, என்ன? தப்பித்தவறி அப்படியொன்று நடந்து விட்டாலும் சமூகம் விட்டுக்கொடுக்குமா? தமது பரம்பரை என்ற பிரம்பினால், அவர்கள் மண்டையில் ஓங்கி அறையத் தொடங்கி விடும்! இதை நினைத்துத்தானோ என்னவோ, ''கலியாணம் என்பது உலக வழக்காகிப் போன கட்டுப்பாடே தவிர வேறில்லை. காதலுக் காகக் கட்டுப்பாட்டை உடைத்துவிடலாம்'' என்று சொன்ன ஷெல்லி, தான் முதலில் மணந்த மனைவியைத் தள்ளி, வேறொருத்தியைக் காதல்மணம் புரிந்து கொண்டானாம்!

அந்த ஷெல்லியைப்போல், தீரமில்லாத—ஆனால், காதல் வயப் பட்ட ஒருவன், ''கூடப்பறப்பதற்குக் குடும்பத்தார் செப்பமில்லை'' என்று தனது ஆற்றாமையைப் புலப்படுத்துங் கட்டம் இது. 'மாடப் புறாவே, மலைக்காட்டு நங்கணமே' என்ற தொடர்களில், அந்தப் பெண்ணுக்கிருக்கும் சுதந்திரந்தானும் தனக்கில்லையே என்ற சோக வுணர்ச்சியைத் தொனிக்கச் செய்கிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆலில் கிளி தூங்க
அடிமரத்தில் தேன் தூங்க,
உன் மார்பில் நான் தூங்க,
உலகம் பொறுக்குதில்லை!''

இதுவும் ஒரு காதற் பிரலாபந்தான். ஆலில் கிளி தூங்குவதும் அடி மரத்தில் தேன் தூங்குவதும் இயற்கையாயிருக்க, நான் மட்டும் உன் மார்பில் தூங்குவதை உலகம் பொறுக்குதில்லை என்று, தனது விரக்தியை வெளிப்படுத்துகிறான். இந்த இடத்திலும், குடும்பக் கட்டுப்பாட்டின் விரிவான நகல் போன்ற சமூக எதிர்ப்பைத்தான் சுட்டிக் காட்டுகிறான்! தாபம், அதனுடன் கோபம்—ஆகிய கலப்புணர்ச்சி இப்பாட்டிலும் பின்னிக் கிடக்கின்றது.

''மானுக்கு மேலழகு;
மயிலுக்கு வாலழகு;
தேனுக்கு ஈயழகு;
தேன்மொழிக்கு நானழகு!''

காதலின் வசியமருந்து பரஸ்பர முகங்களிலாகும். இதை யார் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், காதலர்கள் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இல்லையென்று மறுத்தால், அவர்களுக்குக் காதலைப்பற்றி ஒன்றுமே புரியாதென்ற முடிவுக்கு வரவேண்டியதுதான்.

''மிடுக்கிலாதானை வீமனே விறல் விஜயனே வில்லுக்கிவனென்றும், கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரில்லை...'' என்று சொல்வதை ஓரளவுக்கு நம்பினாலும், ''கட்டிக் கரும்பே தேனே கனியே மோகினி மானே, அட்டி செய்யாதே'' என்ற நாடக பாணியில், முகஸ்துதிப் புராணம் படிப்பதிற் காதல் பலிக்காதென்று யாரும் சொல்லவந்தால், அதைமட்டும் நம்பாதீர்கள்......! ஆம், காதலருக்கு இது ஓர் எச்சரிக்கை!

ஆகவே; மானுக்கு—மேலழகு என்றும், மயிலுக்கு—வாலழகு என்றும், தேனுக்கு—ஈயழகு என்றும் பொருத்தம் பார்த்துச் சொன்ன காதலன், தேன்மொழியென்று காதலியின் குரலழகைப் பாராட்டி அவளுக்கு—நான்தான் அழகு!—என்று முடிக்கும் அழகைப் பாராட்டாமலா இருக்கப் போகிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாதி நடுக்கலவியிலே, காதல் பேசிப்பகலெல்லாம் இரவெல்லாங் குருவிபோலே காதலிலே மாதருடன் களித்து வாழ்ந்தால், படைத் தலைவர் போர்த் தொழிலைக் கருதுவாரோ?'' என்று நமது பாரதி யாரே வழிசொல்லித் தந்திருக்கும் போது, ''காதலுக்கழகு முகஸ்துதி'' என்று நாமுஞ் சொல்ல நியாயமிருக்கத்தானே செய்கிறது?

''நாலைந்து நாளாக
நவமணியைக் காணாமல்
செம்பிற் குடிக்குந்தண்ணீர்
சிரசில் அடிக்குதப்பா!''

சாப்பிடும்போது அல்லது தண்ணீர் குடிக்கும்போது விக்கல் அல்லது புரையேற்றம் உண்டானால், ''யாரோ நினைக்கிறார்கள்'' என்று சொல்வது வழக்கம். அதே முறையில், செம்பிற் குடிக்குந் தண்ணீர் சிரசில் அடித்ததைக் காரணகாரிய முறையாக ருசுப்படுத்திய செய்தி இது. அந்தரங்கக் காதல் அம்பலப்படுகிறது இப்படி!

''பொட்டிட்ட நெற்றிக்கும்
பூவர்ணச் சேலைக்கும்
கட்டுண்டு நின்று
கலங்குதடி என்மனது!''

பாபநாசஞ்சிவன் எழுதும் சினிமாப் பாடல்களை, முற்றுமுழுக்க யாப்பமைதி உள்ளவை என்று கொள்ள முடியாது. என்றாலும் அவர் பாடல்களை அனுபவிக்கிறோம். ஏன்? பாபநாசஞ்சிவன் தனது பாடல் களுக்கு அமைக்கும் மெட்டுகளிலேயுள்ள வசிகர சக்தியும், பாடும் நடிகரின் குரற்பொருத்தமும் சேர்ந்து நம்மை அவ்வாறு ஆகர்ஷிக் கின்றன. இதுதானே மர்மம்?

அதுபோல, இயற்கையழகில்லாதவர்களையும் செயற்கை அணியலங் கார முறைகளால் சோபிக்கச் செய்யலாம் என்பது அனுபவ உண்மை. அப்படியான ஓர் அலங்கார யுவதியிடம் தனது மனதைப் பறிகொடுத்த ஒருவன் சொன்ன செய்தி இது! பொட்டிட்ட நெற்றி, பூவர்ணச் சேலை—இரண்டிலுங் கட்டுண்டு மனங்கலங்குகிறதென்றால், அது அவனது சதை உணர்ச்சியின் தூண்டுதலாற் பிறந்த முகஸ்துதி வேலை என்பது புலனாகிறதல்லவா? இது போன்றதே பின்வரும் பாடலும்:

''ஓலைக்கட்டுக் கொண்டு
ஓடியோடிப் போறபெண்ணே,
முன்னிரண்டுங் குலுங்காதோ?
முதுசெலும்பும் நோகாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாழைப் பழமே,
வலதுகைச் சர்க்கரையே,
உள்ளங்கைத் தேனே,
உருகுகிறேன் உன்னாலே!''

காதல் வசியமருந்தை இங்கு அளவுக்கதிகமாகவே உபயோகிக்கிறான்! ஓலைக்கட்டுக் கொண்டு ஓடியோடிப் போகிறவளிடம், இப்படியெல்லாம் சரசமாடலாமா?—என்று கேட்பீர்களாக்கும். ''இது தீராத ஒரு கொடுநோய்''—என்ற குறிப்புக்கு காசம்—காமம் என்ற இரு சொல்லையும் போட்டுவிட்டு, ''காசத்தை மாற்றுவதற்கு வழிகண்டுவிட்டார்கள்; ஆதலின் காமம் தான் சரியாக இருக்கலாம்'' என்று நாமும் போட்டி விமர்சனஞ் செய்துதான் காமத்தின் தன்மையை விளக்கிவைக்க வேண்டுமா, என்ன?

''ஆக்கின சோற்றினிலே,
அரிசியிருந்து மின்னுமாப்போல்
புத்திகெட்ட மாமாவீட்டில்—ஒரு
பொண்ணிருந்து மின்னுதப்பா!''

ஆக்கின சோற்றிலே அரிசி கிடந்தால் அதன் பளபளப்பிலேயே அறிந்து விடலாம். அதுபோலவே, பெற்றுப் பெருகி வாழ்ந்து சுகிக்க வேண்டிய ஒரு பெண்ணை, பேசாமல் வைத்துக் கொண்டிருக்கிறாரே மாமா. புத்தியிருந்தால், நானும் ஒருத்தன் இருப்பதை மறந்திருப்பாரா?—என்று ஆசை மச்சாளில் நேசம் வைத்த அவன், சொல்லுகிறான். 'மின்னுது' என்ற குறிப்பில், பெண்ணின் சோக நிலையையும் உணர்த்துகிறான். உவமை நயமுள்ள நல்ல பாட்டு இது. அந்த வீட்டில் அவளொருத்திதான் குடும்பசுகத்தை அறியாதிருக்கிறாள் என்பது உள்ளுறை.

''முத்தான முத்துருள,
முகத்தாலே வெயர்வை சிந்த,
தங்கப்பூ மார்குலுங்கத்
தனியுலக்கை போடலாமோ?''

இதுவும் முகஸ்துதிப் படலத்தின் ஓர் அங்கந்தான். கள்ளமாகத் தனது காதலியைத் தேடிப் போனவன், அவள் களைக்கக் களைக்க நின்று நெற்குத்துவதைப் பார்த்துப் பச்சாதாபப் படுகிறானாம். தனது அனுதாபத்தைத் தெரிவிக்கும்போதும், அவளைப் புகழ்ந்து ஆலாபனஞ் செய்யத் தவறவில்லை அவன்! வேலை செய்யும் நிலையிலும் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகவே தோன்றுகிறாள் என்பது அவள் வர்ணனைமூலம் வெளி யாகிறது. தங்கப்பூ மார்(பு) என்றதில் உள்ள உருவகச் சிறப்பைப் பாருங்கள்! ஆடவரை மயக்குஞ்சக்தி பெண் மார்பில் அதிகமுண் டென்பதற்கு இதுவுமொரு எடுத்துக் காட்டு!

''பட்டென்றால் நல்லபட்டு;
பளிங்குநிற மானபட்டு;
சாட்டியன் பட்டென்றாலும்,
சாச்சி யெல்லோ ஒருமுறைக்கு!''

எதை அடக்கினாலும் சிந்தையை அடக்குவதுதான் மிகக் கடின மானது. அதிலும் காமவழியிற் செல்லும் மனத்தை அடக்குவதற்குச் சொல்லவா வேண்டும்? சிறியதாய் தன் பெறாமகனையே பலாத்காரஞ் செய்யத் தூண்டியதென்றால், காமத்தின் அசுரத்தன்மை விளங்கா மலா இருக்கும்? இளவரசன்மேல் சிற்றன்னை இச்சைவைத்த கொடுமையை 'அசோக்குமார்' படத்தில் அறிந்திருக்கிறோம். அப்படி யான ஒரு நிகழ்ச்சிச் சித்திரந்தான் இப்பாடலிலும் அமைந்திருக்கிறது.

தன்மேல் முறையற்ற காதல் கொள்ள முயற்சிக்கும் சிற்றன்னைக்கு (சாச்சி—முஸ்லீம் வழக்கு) ''உன்னுடைய உடையலங்காரமெல்லாம் நல்லாய்த்தானிருக்கிறது. ஆனால், நீ ஒருமுறையில் எனக்குச் சாச்சி யல்லவா?—என்று குத்தலாகப் பதில் கொடுத்தால் எப்படியிருக்கும்? இந்தப் பாடலைப் பெருந்திணை (பொருந்தாக் காமத்து)க்கு உதாரண மாகக் கொள்ளலாம்.

''பட்ச மிருக்குப்
பறக்கச் சிறகிருக்கு,
எண்ண மிருக்கு மச்சான்
எழுத்து விதி எப்படியோ?''

ஒரு பெண், மச்சான் மேல் தனக்குள்ள அன்பை வெளிப்படுத்துங் கட்டம் இது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு நியதியை மக்கள் விதி—ஊழ்—தலையெழுத்து என்றெல்லாம் அழைக்கிறார்கள். தங்கள் காதலுக்கு ஊரில் எதிர்ப்பிருப்பதை உணர்ந்த காதலன், இரகசியமாக இருவரும் ஓடிவிடத் திட்டம் போடுகிறான். அதற்கு அவள் தனது பூரண சம்மதத்தைத் தெரிவித்தாலும், முடிவாகத் தலைவிதியில் பழி யைப் போட்டு வைக்கிறாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வளவுக்கே சக்கசாம்;
வாசலுக்கே கற்கிணறாம்;
மேசையிலே போசனமாம்—மச்சானுக்கு
மெத்தையிலே நித்திரையாம்!''

ஒரு பெண், தனது மச்சானின் இடம்பாச்சாரித்தனத்தை இவ்வாறு கிண்டல் செய்கிறாள். சுகவாசியென்றால், அவனைத்தான் சொல்ல வேண்டும். கொடுத்து வைத்தவன்!

''வேலியிற் சாரைபோலே
வேந்தன் திரிகிறாண்டி;
மஞ்சள் நிறத்தாளை
மணம் முடிக்க வேண்டுமென்று!''

வேலியிற் சாரை ஓயாமல் அங்குமிங்கும் அலைந்து திரிவது இயற்கை. அதைப்போல யாரோ ஒரு வாலிபன், தனது மச்சாளைக் 'கிளப்ப' வேண்டுமென்று அலைந்து திரிவதாக, அவனது மர்ம நடவடிக்கைகளை நன்கு அவதானித்த ஒருத்தி, வேறொருத்திக்குச் சொன்ன செய்தியிது. அடிக்கடி அப்பெண்ணின் வேலியோரம் வந்து திரிகிறானென்பது, 'வேலியிற் சாரை போல' என்ற உவமையிலிருந்து வெளியாகிறது. பெண்ணின் மஞ்சள் நிறந்தான் அவனை இப்படியெல்லாம் அங்கலாய்க்கப் பண்ணுகிறதாக்கும்!

''சின்னப் பயலென்று,
சிவரோரம் போட்டிருந்தேன்;
பாய்ந்தான் புலிபோலே,
பாதியொரு சாமத்திலே!''

பாலுக்குப் பூனையைக் காவல் வைத்தது போல, ஒரு பையனைப் படுக்கைத் துணையாக வைத்திருந்தாளாம் ஒருத்தி. ஆனால் அவன் சும்மா கிடக்கவில்லையாம். அவளைப் பதம்பார்க்கத் தொடங்கி விட்டானாம்! அந்த நிகழ்ச்சியைப் பெண் இப்படி வர்ணிக்கிறாள் வேறொருத்திக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைத்தமிழ்

'புதுமை' என்றால் பழமையின் வளர்ச்சி அல்லது பழமையின் பரிணாமம். 'பழமை' என்ற அடிவேரிலிருந்து கிளைத்ததுதான் புதுமை; பழமை என்ற மொட்டு புதுமையாகின்றது.

'புதிது' என்பது 'புதுமை'யின் மிக வேறுபட்டது. முன்னில்லாத ஒன்றே புதிது. 'நான் கடையில் புதிதாக ஒரு பொருளை வாங்கினேன்' என்று சொல்வதிலுள்ள 'புதி'தைப் பாருங்கள்!

'பழந்தமிழ்' என்ற அத்திவாரத்திலே 'புதுமைத்தமிழ்' என்ற கட்டிடம் எழும்பியிருக்கிறது. பழந்தமிழை அடியொற்றிப் புதுமைத் தமிழ் வளர்ந்து கொண்டிருக்கிறது.

வளர்ச்சிக்குக் காரணம் புரட்சி. மக்களின் உள்ளப் போராட்டங் களைப் படம் பிடிப்பவர்கள் புலவர்கள். சமைய சஞ்சிவிபோல, மக் களை வாழ்க்கைப் பாதையில் நேர்ப்படுத்தி விடுபவர்களும் அப்புலவர் களே. உணர்ச்சித் துடிப்பு, புலவர்கள் வாக்குகளில் உருவாகும்.

''நிலத்தைப் பகிர்ந்தளித்து, நீர்ப்பாசன வசதிகளைச் சீர்ப்படுத்தி, நாட்டைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றும் மன்னர் (பிரமதேவனுக்குச் சரியாக) உடம்பையும் உயிரையும் படைப்பவராகின்றார்கள்'' என்று மொழிந்தான் ஒரு புலவன்; அவன் ஒரு பொருளாதார நிபுணன்.

''புறாவுக்குதவத் தன்னுயிரைத் தியாகஞ்செய்தவனுடைய குடியிலே, பசுக்கன்றுக்காகத் தன் மகனைக் கொன்றவனது மரபிலே—உதித்த நீ, ஒன்றுமறியாத இந்த இளஞ்சிறுவரை யானையின் காலிலே கட்டி யடிக்கவும் துணிந்தனையோ?'' என்று தடுத்தான் ஒரு புலவன்; அவன் ஒரு நீதிமான்.

''அரசனுஞ்சரி, ஆனைப்பாகனுஞ்சரி'' என்று போதித்தான் ஒரு புலவன்; அவன் ஒரு சமரசஞானி. இவ்வாறு தமிழ்ப் புலவர்கள், சமூகத்தின் ஊன்றுகோலாக விளங்கிய செய்திகள் பல. 'புறநானூறு' போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து வெளியாகின்றன.

கண்ணகி என்ற வீரப் பெண்மணி, அறநெறி பிறழ்ந்த பாண்டிய மன்னனின் ஆட்சிக் கொடுமையைப் போக்கடிக்கின்றாள். ''அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைத்தோர்க்கறங் கூற்றாவ''தை அவளுடைய அரசியற் புரட்சி காட்டி வைத்தது! ''அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்திறை முறை பிழைத்தோன்'' என்றும், ''தேரா மன்னா என்றும், அவள் பாண்டியனை இகழ்ந்ததில் இருந்தே, அக்காலத்து அங்கு நிலவிய மற ஆட்சியின் தன்மை புலனாகின்றது.

''எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புல்லுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
தான் தன்,
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகாரென் பதியே......''

என்று, பாண்டியனுக்குச் சுடச்சுடப் பதிலிறுத்ததில் இருந்தே அவளுடைய நாட்டுப்பற்றுப் புலனாகின்றதல்லவா?

மதுரையில் நடந்த இந்தக் கலம்பகம்—அரசியற் புரட்சி—வஞ்சியில் இருந்த ஒரு புலவரை (இளங்கோவடிகளை) எவ்வளவு தூரம் கவர்ந் திருக்கிறது. பாருங்கள்! கண்ணகியின் காற்சிலம்பு நிகழ்ச்சியைத் தமிழரின் ''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார''மாக அமைத்துத்தந்த இளங் கோவின் பெருமையே பெருமை!

நெடுங்காலமாக ஒரு வழக்கம் இருந்து வந்தது: புலவர்கள், அரசரையும் பிரபுக்களையும் புகழ்ந்து பாடி—அவர்களுக்கு இதமாகப்பேசி— பரிசு பெறுவது. இந்த வழக்கத்துக்கு ஒரு முற்றுப்புள்ளியிட்டு, புதிய வழிகளிலே பாட வேண்டும் என்ற புரட்சி மனப்பான்மையை உண் டாக்கியவர் நக்கீரர். இளமையும் அழகும் நிறைந்தவனாய், எவர்க்கும் எளியனாய் விளங்கும் முருகப்பெருமானைப்பாடி, அருள் பெறுமாறு வழிகாட்டிய பெருமை நக்கீரரையே சாரும்.

''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்று, புலவர்களுக்கு இருக்க வேண்டிய நேர்மையையும் பொறுப்புணர்ச்சியையும் காட்டி வைத்தவரல்லவா அந்த நக்கீரர்! இக்காலத்தவர் சொல்வதுபோல அவர் சிறந்த ஒரு 'கிரிடிக்'.

பாண்டிய நாட்டிலே மற்றொரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. அரசன் சமண மதத்திலே சேருகிறான். குடிகளும் அவனையே பின்பற்றுகிறார்கள்; கண்மூடித்தனமாக. ஆங்கிலேயரைப் பின்பற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணவும்—உடுக்கவும்—வாழ்க்கை நடத்தவும் துணிந்த எங்களைப் போல, பாண்டி நாட்டவரும் ஒரு காலத்தில் இவ்வாறு சமண—புத்த ஒழுக்கங்களை மேற்கொண்டார்கள். அந்த நாட்டிலே மிச்சமாக இருந்தது இரண்டே இரண்டு பேர்தான்: ஒருவர் பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசி. மற்றவர் மந்திரி குலச்சிறையார். இவ்விருவருமாக அரசனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து மறைந்து கொண்டிருக்கும் சைவ நீதியை—சைவ அரசைப் பிறரும் ஸ்தாபிப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

'மண்ணென்றும் மரமென்றும் புழுவென்றும்' பெண்ணை இகழ்ந்தொதுக்கி, புராதன கலைப்பெருமை மிகுந்த சைவக் கோயில்களையெல்லாம் அழித்து, நரிகள் போலக் குகை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த அந்தப் பரசமய வாதிகளையெல்லாம் அடக்கி ஒடுக்குவதற்கும் ஒரு வீரப்புலவனே உதவி செய்தான். அவன் பெயர்தான் சம்பந்தர் என்பது.

இலக்கியக் கண்கொண்டு நோக்கும்போது, சம்பந்தர், மங்கையர்க்கரசிக்குப் பக்கபலமாக நின்ற ஒரு புரட்சிப் புலவனாக எமக்குக் காட்சியளிக்கிறார்.

இன்னொரு புரட்சிப்புலவன் இருந்தான். அவன் பெயர் சயங்கொண்டான். கலிங்க நாட்டிலே நடந்த போர் நிகழ்ச்சியை நேரிற் பார்த்து வந்த அவர் ''கலிங்கத்துப் பரணி'' என்ற தமது நூலிலே அதைத் சுவைப்படப் பாடி வைத்தார்.

வெற்றிவெறியோடு வீரர்கள் எல்லோரும் தம்மூருக்கு மீண்டு வருகிறார்கள். கதவடைத்திருந்த பெண்களுக்குக் ''கடைதிறப்பு''ப் பாடுகிறார் புலவர். சுவைமிக்க பாடல்கள் சந்தர்ப்பத்துக்குத் தகுதியானவையாக வெளிப்படுகின்றன, புலவர் வாயிலிருந்து. இன்றும் ''கடைதிறப்பு''ப் பாடவேண்டிய அவசியம் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. சயங்கொண்டாரைப்போல, இலக்கியப் புரட்சிக்காரர் அப்பொழுது தோன்றுவார்களாக!

சமூக சம்பந்தமான ஒரு பெரிய புரட்சியை உருவாக்கி விட்டவர், கோபாலகிருஷ்ணபாரதியார். மிராசுதாரர்களும்—நிலச்சுவாந்தாரர்களும் (—முதலாளி வர்க்கம்) அடிமைகளை (—தொழிலாளர்களை) வைத்து வேலைவாங்கிய கொடுமைகளைக் கண்டு, மனம் பொறாது, தமது அதிருப்தியை ''நந்தன் சரித்திரக் கீர்த்தனமாக'' வெளிப்படுத்தினார். அவர் தமிழ்நாட்டின் 'கோர்க்கி'!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையிழந்து, சுகமிழந்து, பரிதவிக்கும் தாழ்த்தப்பட்ட சகோதர ருக்கெல்லாம் அவருடைய இலக்கியப்புரட்சி ஆறுதல் அளித்தது.

தேசியக்கனல் கொழுந்துவிட்டெரிந்த மகா புரட்சிக் காலத்திலே தோன்றியவர் நமது வரகவி. சி. சுப்பிரமணிய பாரதியார். அதனால், அவருடைய பாடல்களெல்லாம் நாட்டு மக்களைத் தட்டியெழுப்பி சுதந்திரப் போருக்குத் தூண்டி விடுவனவாயிருந்தன. சாதி சமயச் சண்டைகளையெல்லாம் ஒழித்து, ''எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓரினம்; எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்ற தேசிய உணர்ச்சியை ஊட்டி வைத்தவர் நம்பாரதியார்.

இயற்கைகளைப்பற்றிப் பாடும்போதும், காதல் வீரம் முதலிய வற்றைக் குறித்துப் பாடும்போதும் அவர் சிறந்த புரட்சிப் புலவராகவே எம்முன் தோன்றுகிறார். அவர் பாடல்கள் அவரைச் சிரஞ்சீவித்தன்மை பெறச் செய்துவிட்டன.

பாரதியாருக்குப் பிறகு தமிழ்மொழியில் வளர்ச்சி இல்லையென்றே சொல்லலாம். அங்ஙனம் ஏதாவது உண்டானால், அவையெல்லாம் தேய்வை நோக்கிய வளர்ச்சியென்றே கூறவேண்டும்!

தமிழ்நாட்டிலே இன்று ஒரு பெரிய வியாதி தோன்றியிருக்கிறது. அதுதான் காதற்கதைகளையும், காதற் கவிதைகளையும் எழுதிக் குவிப் பது!

''றெயில் வண்டியிலே ஒரு ஆடவனும் ஒரு பெண்ணும் சந்திக்கிறார் கள். கண்டவுடனேயே அவர்களுக்கிடையில் காதல் உண்டாகி விடு கிறது. பிறகு அவர்களுடைய விவாகத்துக்குப் பெற்றார் இடையூறாய் நிற்கவே அவள் கயிறு போட்டுத் தூங்குகிறாள்; அவன் சமுத்திரத்தில் விழுந்து இறக்கிறான்''. இந்த மாதிரியான இயற்கைக்கு முற்றும் முரணான கதைகளைப் பத்திரிகைகளிலும் நாவல்களிலும் பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கிறார்கள். இதனால் நம்மவர் அடையும் பயன் என்ன?

படக்காட்சிகளைத்தான் பாருங்கள். அங்கு நமது தமிழ்ச் சமூகத்தின் ஊழல்களைப் போக்கி, அவர்களை உருவாக்கக் கூடிய ஏதாவது அம்சமுண்டோ? என்றால், இல்லையென்றே சொல்ல வேண்டும்.

காம உணர்ச்சியை ஊட்டத்தக்க ஆபாசமான காட்சிகளைக் காட்டு வதால் பட முதலாளிகளின் பணப்பை நிரம்பும்; பொதுமக்கள் அநியாய மாகக் கெட்டழிகிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் முழுவதும் ஆபிசிலே வேலைசெய்து, குழிவிழுந்த கண்களோடு வாடி வதங்கிப்போய் வருகிறான் புருஷன். வீட்டிலே மனைவியும் பிள்ளைகளுமாகச் சினிமாவுக்குப் போகவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். அலுப்பையும் மறந்து நடைப்பிணம்போல அவன் அங்கும், இரவு பன்னிரண்டு மணி வரையில் அலைய வேண்டியதாகின்றது. பாவம் அவன் கஷ்டங்களைக்கூட அலட்சியம் பண்ண வைத்துவிடுகின்றது, அன்றைய புராண ஆபாசப்படம்!

சின்னஞ்சிறு பிள்ளைகள் முதல் பல்லுவிழுந்த கிழங்கள் வரை காதற்கதைகள் என்ற காமக்குப்பைகளைப் படிப்பதாலும், அவை சம்பந்தமான படங்களைப் பார்ப்பதாலுமே எமது தமிழ்ச் சமூகத்தின் வீரவுணர்ச்சி குன்றி, அடிமைமோகம் வலுப்பெற்று வருகிறதென்று துணிந்து சொல்லலாம்.

பிரான்சைப் பாருங்கள்! 'பிளம்' என்ற ஒரு சிகாமணி—தருமாத்மா—எழுதிக்குவித்த காதல் நவீனங்களைப் படித்ததன் பேறாய் இன்று தமது வீரமிழந்து, மானமிழந்து, அன்னியருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கிறார்கள் பிரான்சியர். புராதனமான கலைப்பெருமையும், வீரப் பெருமையும் அழிந்துபோன கொடுமையைப் பார்த்தீர்களா?

பண்டைத்தமிழர் காதல் கொள்ளவில்லையா? காதல் இலக்கியங்களைப் பாடவில்லையா? என்று சிலர் கேட்கலாம். காதல் வாழ்க்கை அக்காலத்தில் இருந்ததும் உண்மை; காதல் இலக்கியங்கள் எழுந்ததும் உண்மைதான். ஆனால் அந்தக் காதல் இயற்கைக் காதலாக இருந்தது; காதலர் இருவரும் ஒருவரே என்ற உணர்ச்சியோடிருந்தார்கள்; தெய்வீகத் தன்மை செறிந்த காதல் அதுதான்.

இக்காலத்துக் காதல்முறை இயற்கைக்கு முற்றும் முரணானது; காதலர் இருவரும் வேறு என்ற பிரிவுணர்ச்சியுடன் இருக்கிறார்கள்; காம உணர்ச்சியின் தூண்டுதலாய் இருப்பதால் அதில் அசுரத்தன்மை நிறைந்திருக்கிறது.

''செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே'' என்றும்;

''முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்து ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''.

என்றும் வரும் இலக்கிய அடிகள் பழந்தமிழ்க் காதல் நெறியைப் புலப் படுத்துகின்றன.

இன்று நமக்கு வேண்டியது காதற் கதைகளல்ல; காதற் கவிதைகளு மல்ல. அடிமையிலும், மிடிமையிலும், மடமையிலும் அழுந்திக் கிடக் கிற தமிழருக்கு, அவை வேண்டவே வேண்டாம். வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை!

''உப்பில்லை; புளியில்லை; அரிசியில்லை; விறகில்லை'' என்று கூக்குரல் போடுகிற நிலையில் இருக்கும் போதா, நமக்குக் காதல் கதைகள் வேண்டும்? எப்பொழுது நம் தலைமேல் யப்பான் குண்டு விழுமோ என்று ஏங்குகிற போதா காதலைப் பற்றிச் சிந்திப்பது? வங்காளத்திலே இலையிலுள்ள எச்சிற் கவளத்துக்காக மனிதனும் நாயும் போராடி மடியும் இந்த வேளையிலா எமக்குக் காதற் பைத்தியம் வேண்டும்? மகாபலிபுரம் போன்ற நமது புராதன கலைப்பொக்கிஷங்க ளெல்லாம் இன்று இருந்த இடந்தெரியாமல் போகப்போகிறதோ என்று கவலைப்பட வேண்டிய நேரத்திலா எங்களுக்குக் காதல் வம்பு வேணும்?

நல்லது, எழுத்தாளர்களே! எழுதுங்கள். உங்கள் பேனா, வாள் முனையிலும் கூரானது. அந்தப் பேனாவினால் நமக்கு இன்று அவ சியமான தற்காப்பு இலக்கியங்களை (Defence Literature) எழுதிக் குவியுங்கள். ருஷிய சீன எழுத்தாளர் இன்று செய்யும் தொண்டுகளை நீங்களேன் செய்யக்கூடாது? வங்காளிகள், மராட்டியர், ஆந்திரர், மலையாளிகள் போல ஏன் நாமும் எமது பேனா முனையினாலே தமிழ்ச்சாதியைப் புனருத்தாரணம் செய்யக்கூடாது?

[நவசக்தி ஆசிரியர் (ஸ்ரீ சக்திதாசன்—சுப்பிரமணியன் அவர்கள்) 21.12.43 இல் ட்லா நிலையத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்க மாக இது வெளிவருகிறது].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமாவது யாது?

'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்கிறார்கள். அதற்கப்பாலும் உண்டென்கிறார்கள். அந்தக் கணக்கு (வழக்கு) நமக்கு வேண்டிய தில்லை. ஆனால், அக்கலைகளெல்லாம் நுண்கலைகள், இரசிகக் கலைகள் என்ற இரண்டு பெரும்பகுதிகளுள் அடங்கிவிடுவதை யாரும் மறுப்பதற்கில்லை.

நுண்கலைகள் என்று சொல்லும்போது அறிவுக்கும், இரசிகக் கலைகள் என்னும்போது அழகுணர்ச்சிக்கும் பிரதானத்துவம் கொடுக்கப் படுகிறது. அறிவின் ஆட்சி கூடிய இடத்தில் அழகுணர்ச்சி இல்லாமற் போகலாம். ஆனால், அழகோட்டம் நிரம்பிய இடத்தில் அறிவுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படலாம். அதற்கொரு உதாரணம் இலக்கியம்.

இலக்கியம் எந்தக் கலையினத்தைச் சேர்ந்தது? இதுதான் இப்போது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

இதுவரை சித்திரம் சங்கீதம் இலக்கியம் என்பன இரசிகக் கலையைச் சேர்ந்தவை என நம்பியிருந்தோம். ஆனால், அவ்வெண்ணத்தைச் சிதறடிக்கிறார் அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள். தாரண ஆண்டு மார்கழி மாதச் 'சக்தி' இதழில் அவர் எழுதுகிறார், ''இலக்கியமென்பது நுண்கலைகளுள் ஒன்றாகும்''...... என்று. அவர் கூறியபடி பார்த்தால், ஓவியம் சிற்பம் முதலியன கூட நுண்கலையினத்தைச் சேர்ந்து விடுகின்றன. அப்படியானால், கணிதம் விஞ்ஞானம் முதலிய அறிவியல் நூல்கள் எப்பகுப்புள் அடங்கும்? அவற்றை எவ்வினக் கலைகள் என்றழைப்பது?

''...... நாம் கற்றற்கு எடுத்தது செவிக்கினிய சிறு செய்யுளாயினும் சரி; சிந்தைக்கினிய சீரிய பெருநூலாயினும் சரி—கற்கும் அந்நேரத்திலாவது ஒரு புதியவுலகத்தைப் புதிதாகக் காண்கிறோம். இவ்வுலகு கண்கூடாயுள்ள நமது உலகத்தினின்றும் எத்தனையோ வகையில் வேறுபட்டது; கனவும் மாயமும் நிகழும் அற்புத உலகமாயுள்ளது. இப்புது உலகிலே, புகுந்து நுகர்ந்து இன்புறுதலே தலைசிறந்த செயற்பாடாவது. நல்ல நூல்களை வேறு பயன் கருதாது, அவற்றின் பொருட்டே அன்பு பூண்டு கற்பதுதான் இலக்கியக் கல்வியாளன் மேற்கொள்ள வேண்டுவது......, என்று ராவ் ஸாஹேப் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாகப் பேசும்போதெல்லாம், இலக்கியம் ஒரு அழகு—இன்ப—இரசிகக்கலை என்ற கருத்துத்தான் தொனித்துக் கொண்டிருக்கிறது. அப்படியானால், 'அறிவும் மனோபாவமும் கலந்து தொழிற்பட்டு' வியப்புறுத்தும் முறையில் முன்பின்னில்லாத புதுமையாய் அமைந்து இன்பம் விளைத்தல் என்ற அம்சம் நுண்கலைக்கு எவ்வாறமையும்! நுண்கலை என்பதற்கு அவர் கூறும் வரைவிலக்கணம் பொருந்துமா? என்னவோ, அவர் கட்டுரையில் தெளிவில்லை. தமிழன்பர் பலரும் அந்தக் கட்டுரையை, ஒரு முறையாவது ஊன்றிப் படிக்க வேண்டுகிறோம்.

''சேலுண்ட உங்க ணாரில்
திரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி
கன்றுள்ளிச் சொரியச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
தேரைதா லாட்டும் பண்ணை''.

இது கம்பன் பாடல். நாட்டு வளப்பம் கூறும் பகுதி. அன்னங்கள், நாற்றுநடும் பெண்களைப் பார்த்து நடைபழகுவதும் அவற்றின் குஞ்சுகள் எருமைப்பாலைக் குடித்துறங்கத் தேரைகள் தாலாட்டுவதும், உண்மையான நிகழ்ச்சிகள் தானா? இவ்விபரீதக் கற்பனையிலும், சிறந்த ஒரு இரசானுபவத்தை நமக்களிக்கிறார் கம்பர். எப்படி?

கோசல நாட்டுப் பெண்கள் இயற்கை அழகு பொலிந்தவர்களென்பதையும், அவ்வூர்ச் சனங்களிடம் இரக்க சுபாவம் மிகுதியும் உண்டென்பதையும் சொல்லாமலே சொல்லி வைக்கும் தந்திரம் இது. உள்ளதை உள்ளபடி சொல்வதிலும் பார்க்க, உணர்ச்சியைக் கிளறும் முறையில் (மறைமுகமாக) கம்பர் தரும் இலக்கிய இன்பம் இது.

''அரக்க ரோர் அழிவு செய்து
கழிவ ரேல் அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கமெங் குகுத்தாய் என்பால்
எப்பிழை கண்டா யப்பா;
பரக்கழி இதுநீ பூண்டால்,
தருமமார் பரிக்கற் பாலார்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து நின்று அம்பெய்த இராமனை வாலி இழித்துரைக்கும் பகுதி இது.

குற்றம் ஒருவனிடத்தில் இருக்க, ஒன்றுமறியாத ஒரு அப்பாவியைத் தண்டிப்பது இராஜ நீதியாகாது. இதை வாலி வாயிலாக வெளிப்படுத்த வந்த கம்பர் தமது பகுத்தறிவு வாதத்தில் திடீரென விழுந்து விடுகிறார். இராமபக்தி அவரது இலக்கிய மேதையை மழுப்பிவிட்டதென்றே சொல்ல வேண்டும். என்றாலும், இங்கு காட்டியது கம்பரது அருங்கவிகளுள் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

கற்பனைக் கவிதைதான் சிறந்த இலக்கியமென்பதற்கில்லை. நிதர்சன விஷயமும் புலவனது சொல்லாற்றலால் சிறந்த இலக்கிய இன்பத்தை அளிக்குமென்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு:

''எந்தையாய் முதலிய
கிளைஞர் யார்க்குமென்
வந்தனை விளம்புதி......''

என்று, மொட்டையாகப் பெற்றாருக்குச் செய்தி அனுப்புகிறாள் சீதை, அனுமானிடம். இது பொருந்துமா? புத்தகத்தைப் பற்றித் தூற்றுமியல்பு தமிழ்ப் பெண்களிடம் இல்லையென்பதைக் கம்பர் குறிப்பாகப் புலப்படுத்திய பகுதி இது.

காலதேச வர்த்தமானங்களுக்கேற்பப் புலவனது மனோபாவம் தொழிற்படுமாற்றலையும், கவிதையின்பம் நமது உள்ளுணர்ச்சியை எழுப்பிவிடும் வகையையும் கம்பனது இந்த மூன்று பாடற் பகுதிகளின் மூலம் கண்டோம். இவற்றிலெல்லாம் நாம் கூறக் கூடியது என்னவென்றால், இலக்கியத்துக்கு உணர்ச்சிதான் முக்கியம்; அதுவும் நல்ல இரசானுபவத்தால் பெறப்பட வேண்டும் என்பதே. மனிதனது வாழ்வோட்டத்தைத் தொட்டும் தொடாமலும் செல்லும் இந்த இரசிகக் கலை வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கல்வி

இலக்கிய பாடத்தை வெறும் பாஷைப் பாடமாகவோ அல்லது மொழிப் பாடமாகவோ நடத்துங் கொள்கை, அதிகமான ஆசிரியர் களிடங் காணப்படுகின்றது. அது மிகவும் பிழையானதும் வெறுத்தற் குரியதுமான ஒரு கொள்கை.

சித்திரம், சிற்பம், சங்கீதம் (இசை), நாடகம் என்பன போன்று இலக்கியமும் ஒரு கலையாகும். கலைக்கண்கொண்டு நோக்குவார்க்கு, அதில் ஒரு விசேஷம் இருப்பது புலனாகும்.

கலைகளினால் ஒரு நயப்பு—களிப்பு—அடைதலே அக்கலைகளின் முக்கிய நோக்கமாகும். மிக நுண்மையாகப் புலவரால் ஆக்கப்பெற்ற இலக்கியங்களில், மக்களைக் களிப்புறுத்தும் இயல்பு மிகுதியும் உண்டு.

மக்களின் உணர்ச்சிகளைச் சொல்லாற்றலினாற் புலப்படுத்தும் தன்மை அமைந்தபோது—அது இலக்கியம் என்னும் பெயர் பெறுதற் குத் தகுதியுடையதாகின்றது. ஒலிக்கூட்டத்திலும் ஒரு தாளம்—ஒரு வரையறை—முறையாக அமைந்திருக்குமானால், அதுவும் இலக்கியத் துக்குரிய தோற்றம் பெறுகின்றது.

இலக்கியம் கற்பிக்கும்போது மனக்கருத்தில் உணர்ச்சி ததும்ப வேண்டும். கேட்பவருள்ளத்தில் கிளர்ச்சி கூட வேண்டும். அவ்வாறின் றேல் அது, வெறுஞ் சொற்கூட்டமுள்ளதாகவே கொள்ளப்படும்.

ஒருவனுடைய அங்க அமைதிகள் எப்படி நமக்கு அழகுணர்ச்சியைத் தருமோ, அவ்வாறே ஓர் இலக்கியம்—செய்யுளும் என்க. இவ்வுண்மை யைச் சில ஆசிரியர்கள் முற்றாக மறந்து, மொழித்திறம் முட்டறுப் பதுவே தமது கருத்தாகக் கொள்கின்றனர். இது, ஒருவனுடைய விரல் அல்லது வேறு உறுப்புகளை அளந்து அவனுடைய அழகை அனுமானிக்க —தீர்ப்பிட—முயல்வது போலாமென விடுக்க. இலக்கிய பாடத்தில் ஒரு வைத்திய மாணவன் போன்று நடப்பது மிகவும் வெறுக்கத்தக்கது. அழகுணர்ச்சி இல்லாதபோது—இரசிக விருந்து இல்லாதபோது—இலக் கிய பாடங் கற்பிக்க முயல்வது அபாயமாகும்.

செய்யுள் கற்பிப்பதற்கு ஒரேயொருமுறை—ஒருவரையறை—தான் உண்டென்று கொள்வதன்று. ஒரே சாவியைக் கொண்டே எல்லாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவுகளையுந் திறப்பது எப்படி அசாத்தியமோ, அப்படியே ஒரு முறையைப் பின்பற்றி, எவ்வகையான செய்யுளையுங் கற்பிக்க முயல் வதுமென்க.

சிலவேளைகளில் மட்டும் இரண்டு மூன்று பூட்டுகளுக்கு ஒரு சாவி பொருந்துவதாக இருக்கலாம். ஆனால், அவ்வாறமைவது அரிதாக இருக்க வேண்டும்.

இலக்கியம், செய்யுள் வழக்கு. உலக வழக்கை அறிந்ததினால் செய்யுள் வழக்கையும் அறிந்துவிட முடியாது. 'ஆழமுடைத்தாதல்' எனும் இலக்கிய அழகை நாம் இலேசாக மதித்தலாகாது.

செய்யுள் என்றதும் சிலர் அதனை மூடிவைக்கப் பார்க்கிறார்கள். இவ்வுணர்ச்சி, செய்யுளை நயக்கும் மனப்பான்மை சிறுவயது முதலே இல்லாமையால் வந்ததாகும். செய்யுளை நயக்குமியல்பு இன்மைக்கு அதனைக் கற்பித்தவரின் பிழையேயன்றி, அச்செய்யுளை ஆக்கிய புலவரின் பிழைதான் காரணமென்று கொள்ளுவதற்கில்லை.

இயைந்த—இலகுவான—அனுபவத்துக்கமைந்த—செய்யுளைக் கற்பி யாமையே படிப்பிப்பவர் விடுந்தவறாகும். சிறுவருக்கு அனுபவமான —ஆவலைக் கூட்டும்—செய்யுளையே முதலிற் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிக்கும் போதும் ஒரு வகுப்பில் ஒருசிலர் மட்டும் பயன் பெற, மற்றவர்கள் செய்யுள் கற்றலில் வெறுப்படையச் செய்வது இலக்கிய நோக்கமாகக் கொள்ளக் கூடாது.

ஒரு விருந்திலே பாயசம் முதலிய உணவுகள் கிடைத்த போது ''ஆ என்ன சுவை!'' என்று சொல்லிக் கொண்டிருந்தால், அதன் சுவையுணர்ச்சி வெளிப்பட்டு விடாது. கண்ணாடிப் பெட்டிக்குள் ஒரு பண்டத்தை வைத்துவிட்டு, அதன் சுவையைப் பற்றிப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தால், வரும் பயனொன்றில்லை. கற்போர், தாமாக ஈடுபட்டு அதிலுள்ள சுவையைத் தாமாகவே அறியச் செய்வது தான் ஆசிரியர் தொழில். மாணவர், மனோதிடங் கொண்டு ஊக்க மாகக் கற்கும் மனப்பான்மையை விருத்தியாக்குவதே இலக்கிய ஆசிரி யனது நோக்கமாக வேண்டும். மாணவரது மனதிலே சுவையுணர்ச்சி யாகிய ஊற்றுப் பெருக்கெடுத்தோட ஆசிரியன் வழிப்படுத்த வேண்டும். (வாசிப்புப் பாடத்துக்கும் இவை பொருந்தும்).

ஒரு கத்தரிக்காய் நாலு சதமாக நாலு கத்தரிக்காய்க்கு விலை சொல்லி ஒரு வாழைக்காய் நாலு சதமாக நாலு கத்தரிக்காய்க்கு விலை கேட்கும் மயக்கமுறைதான் இக்காலம் பெரிதும் காணப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் 'பேச்சு வழக்குக்கு மாறாயிருப்பது' என்ற உண்மையைக் கருத்தில் வைத்து அதற்கேற்றபடி செய்யுளை மாற்றியமைத்துப் படிப்பிக்க வேண்டும்.

செய்யுளில் பலவகையுண்டு. அவ்வவற்றால் நாமடையும் பலன்களும் பலவே. சரித்திர உண்மை, இலக்கிய அமைதி, பொருளின் விவரம் என்பவற்றைக் கூறுவதால் மட்டும் இலக்கியச் சுவை வந்துவிடாது. சிறுவருக்கு இலகுவான பாட்டுகளையே கற்பிக்க வேண்டும். "நிலா நிலா வா வா......" "அம்மா சுட்ட தோசை......" முதலியன மாணவருக்கு மிகவும் கவர்ச்சியைத் தருவன. நகைச்சுவை, சொற்சுவை அமைந்த விளையாட்டுப் பாடல்களும் சிறுவருக்கு இன்பந் தரவல்லன. "ஏண்டி கூடையைக் கேட்கிறாய்—எடி......" "கீச்சி மாச்சித் தம் பலங் கியோமாயோ தம்பலம்......" என்பன போன்ற பாடல்கள் பாலருக்கு ஏற்றவை.

படிப்படியாக, மாணவருக்குச் செய்யுள் பெருத்து—கூடி—வரலாம்; சிறிய பூசினியில் பெரிய காய் வளர்வது போல.

ஆசிரியர், இலக்கியங் கற்பிக்கும்போது மாணவர்க்குத் தடையாய் நிற்றல் ஆகாது. மாணவருக்கு உதவியாளராக ஏவுதல் வேண்டும்; அவர்களை வழிநடத்த வேண்டும். மாணவர்க்கு ஆராயுஞ் சக்தியைக் கூட்டுதல் மிக அவசியம். இவ்வாறு இலக்கியங் கற்றலில் மாணவர் தாமாகவே தொழிற்பட, ஆசிரியர் ஈற்றில் தமது கருத்தை வெளிப் படுத்தலாம்.

ஒரு கொடியானது மரத்தைச் சென்று பற்றுவது போல, மாணவர் தாமாக விஷயத்தை ஆராய்பவராக இருக்க வேண்டும்.

முகவுரை தனிச் செய்யுளுக்கே தேவை. அதுவும் ஒரு வார்த்தையில் அமைவதாயினும் நல்லதே. செய்யுளின் கடின பதங்களை அமைத்து முகவுரையிற் கூறலாம். உதாரணமாக, "அஞ்சல் மடவனமே......" என்ற செய்யுளுக்கு முகவுரையாக "நளன் என்ற ஓர் இராசா இருந் தான். அவன் ஒருநாள் சோலைக்குப் போனான்......" என்றிப்படியாக, சந்தர்ப்பத்துக்கேற்ற வகையாகக் கூறுவது நன்று. வேண்டிய மெய்ப்பாட்டோடு திருப்பித் திருப்பி ஓசைபடப்—பொருள் விளங்கப்—பாடுவதே ஏற்ற முகவுரையாகும். அவ்வாறு வாசிக்கும்போதும் சாதாரணமாக வாசித்து, அடுத்த முறைகளில் தொலுக்கு (தொலுக் காரிப்பு)ப் பண்ணுவது போல வாசிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை, பதங்களைப் பிரித்தல் என்பன இலக்கியத்தில் தவறான கொள்கைகள். நேரடியாகவோ, மாணவர் பொருளறிதற்கு வழி நடத்தப்பட வேண்டும்.

மாணவர் புத்தகத்தையே பார்த்து வாசிக்கவும், ஐந்து நிமிஷம் வரை பாட்டை ஆராயவும் விடுதல் ஏற்றதாகும். அதன்மேல், ஆசிரியர் ''இதிலென்ன அறிந்தீர்கள்?'' எனக் கேட்டு, பலருங் கூறும் விடைகளை ஏற்று, அவற்றுள் சரி பிழைகளை விளக்கலாம். அதுவும் பிள்ளைகளின் அபிப்பிராயத்தைக் கொண்டே எது சரியென விளக்கலாம்.

பொருட்சுவை, ஓசையின்பம் மிக்க செய்யுள்களாய் இருக்கும்போது —அவற்றைச் சுவைப்பதன் பயன், தானுமவ்வாறே செய்யுள் செய்யும் வன்மையைப் பெறுதலாகும்.

கற்கண்டில் வேப்பெண்ணையைக் கலந்தது போல, இலக்கியப் பாடத்தில் சொல்லாராய்ச்சி, இலக்கண ஆராய்ச்சி நடத்த முற்படுதல் வேண்டாம். அவை வேறோர் பாடவேளையில் நடக்கட்டும்.

வெற்றெனத் தொடுத்தல் இலக்கியத்துக்கு அழகு தருவதன்று. செஞ்சொல்—இயற்சொல்—இல்லாமல், குறிப்பினால்—இலக்கணையாகக்—கூறப்படுந் தன்மை இலக்கியத்தின் தனிச் சிறப்பாகும். 'சிவன்' என்று சொல்லாமல், 'முக்கணன்' என்று சொல்வதும், 'இந்திரன்' என்று சொல்லாமல் 'ஆயிரங் கண்ணன்' என்று கூறுவதும் இலக்கியத்தில் சுவை பற்றி வருவன.

இன்று கற்பிக்கும் பாடத்தில் உள்ள கடின பதங்களை நேற்றே வேறு தொடர்பில் விளக்கலாம்.

பொருள் நயங்காணுதலில் இரு அம்சங்கள் சிறப்பானவை: அணி நயம், கற்பனை நயம் என்பன அவை. மோனை எதுகை இயைபு நயங்களும் நல்லனவே.

''மந்தாகினியணி வேணிப்பிரான் வெங்கை மன்னவநீ......'' என்ற செய்யுளில் தலைவியின் பேச்சைப் படத்தில் வரைவதெப்படி?—என்ற குறிப்புக் காணப்படுகிறது. இது குறிப்பினால் வருவதற்கு உதாரணம்.

''அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் நீண்டுயர்ந்த நிலையுருவ......'' என்ற செய்யுளில் சொல்நயம் (உருவ, உருவ என்ற விதமாக) மிகுதியாக உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச் சுவையை வளர்த்தற்கு நீதிச் செய்யுள்கள் உகந்தனவல்ல. எனினும் தூலமாக—உதாரண மூலம்—கற்பிக்கலாம். ''நன்றியொருவர்க்குச் செய்தக்காலந்நன்றி.......'' ''நல்லாரொருவருக்குச் செய்த உபகாரம்........'' ''அட்டாலும் பால் சுவையிற் குன்றாதள வளாய்......'' என்பன போன்ற செய்யுள்களை ஒருவாறு கற்பிக்கலாம்.

முடிவாக, மாணவரின் நிலைக்கேற்பப் படங்களையும் உதவியாகக் கொள்வது நல்லது.

[*வலிகாமங் கிழக்குத் தமிழாசிரியர் சங்க ஆதரவில், வித்தியாதரிசி தி. சதாசிவ ஐயர் அவர்கள் 9.11.41 இல் நிகழ்த்திய விரிவுரையின் சாரம் இது].

கவியுங்கற்பனையும்

சிறந்த கவி எது?—என்பது பற்றி இலக்கிய உலகில் ஒரு விவாதம் இருந்து வருகிறது. 'உள்ளதை உள்ளபடி சொல்வதுதான் உயர்ந்தது' என்பது ஒரு சாரார் கொள்கை. 'கூழுக்குப் பயறு போட்டாற் போல, கற்பனையும் உடன் கலந்துவரப் பாடுவதுதான் திறம்' என்பது மறு சாரார் கருத்து.

பார்க்கப்போனால், உள்ளதை உள்ளபடி சொல்வது மிக எளிது. ஆனால் இரசிப்பதற்கு அதில் ஏதும் இருக்காது. சாரம் இருக்க, வெறும் சக்கையை விழுங்குவது போலவே அதனை அனுபவிப்பதும் ஆகும்.

ஒரு பாடகனின் இசைக் கச்சேரியை, அதன் பக்கவாத்தியங்கள் சோபிக்கச் செய்வது போலவும், ஓவியன் ஒருவனின் சித்திரத்தை அதன் பக்கக் காட்சிகள் (Back-ground) எடுப்பாகக் காட்டுவது போலவும் கற்பனைகள் உண்மைக்கு மெருகேற்றுகின்றன.

'தாமரை பூத்தது' என்று சும்மா சொல்வதிலும் பார்க்க, 'தையல் முகமெனத் தாமரை பூத்தது' என்று சொல்வதிற் சுவை இருக்கிறதல்லவா? 'கொண்டல் முழங்குது' என்பதைக் 'குண்டு வெடித்தெனக் கொண்டல் முழங்குது' என்று சொல்லிப் பாருங்கள்; கற்பனையின் பொருட்பொலிவு அங்கு புலப்படும். காலத்துக்குக் காலம் கவிதையின் போக்கு மாறுபடுகின்றது. அதனால், கற்பனையும் வரவர மறுமலர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றே வந்திருக்கிறது. புதுப்புது உவமைகள் என்றும், புத்தம் புதிய கற்பனைகள் என்றும் ஏற்பட்டுப் பாஷையை வளம்படுத்துகின்றன.

தமிழ்ப் பாஷையின் சிறப்புக்கு—அதன் இலக்கிய வளர்ச்சிக்கு—வடமொழி எத்தனையோ வகையில் உதவியிருக்கிறது. முக்கியமாக, காவிய அலங்கார சாஸ்திரம் ஆரிய சம்பந்தத்தினாலேயே தமிழில் கிளைத்தது என்று சொன்னால் அது பிழையாகாது.

ஆதியில் உவமை, இறைச்சிப் பொருள்கோள் முதலிய இரண்டொரு அணியலங்காரங்களே தமிழிலக்கியத்தில் உருவாகியிருந்தன. நாளடைவில், நூற்றுக் கணக்கான அணிவகைகள் வடமொழித் தொடர்பு காரணமாகத் தமிழில் இடம்பெற்று விட்டன. இதை, வடமொழியால் தமிழுக்கு வாய்த்த ஓர் அதிர்ஷ்டமாகவே கொள்ள வேண்டும்.

உத்பிரேக்ஷாலங்காரம் என்பது வடமொழியில் ஒரு அணி. தற்குறிப் பேற்றம் என்ற பெயரில் அது தமிழில் வழங்குகிறது. கவி, ஒரு காட்சியையோ அன்றி ஒரு நிகழ்ச்சியையோ வர்ணிக்கும்போது தனது (சுய) குறிப்புத் தோன்றச் சொல்வது அது.

'தம்பி பிறக்கத் தரை மட்டமாச்சுது' என்று நாடோடியாகச் சொல்வார்கள். தரை என்றுதொட்டோ மட்டமாகத்தான் இருந்தது. ஆனால், தம்பியின் 'அவதார மகிமை'யைப் புலப்படுத்துவதற்காக, தாயோ அன்றி வேறு யாரோ இப்படி ஒரு குறிப்பைக் குத்தலாக வைத்துச் சொல்லுகிறார்கள். 'மச்சான் வருகின்றார் மழையும் இருளுகுது' என்பதிலும் இவ்வாறே. பல நாட்களாக மச்சான் தங்கள் வீட்டை எட்டியும் பார்க்கவில்லையே என்ற ஏக்கக் குறிப்பை (மச்சானைப் போலவே) அபூர்வமாகக் கிடைக்கும் மழையின் வரவிலே ஏற்றிச் சொன்னது இதுவாகும்.

மறுமலர்ச்சித் தமிழிலக்கியத்தில் தற்குறிப்பேற்றம் அமோகமாகக் கையாளப்பட்டு வருகின்றது. கற்பனைச் செழிப்புள்ள தற்குறிப்பேற்றப் பாடல்களை இலக்கிய இரசிகர்கள் பெரிதும் அனுபவிக்கிறார்கள். அவர்கள், புதுமையை வரவேற்கிற ஆர்வத்தில், பழமையை எங்கு முற்றாக மறந்து விடுவார்களோ என்று பயப்படும்படியாக இருக்கிறது. புது இலக்கியங்கள் வளரவேண்டுமானால், பழைய இலக்கியப் பயிற்சியும் ஓரளவாவது இருக்கத்தான் வேண்டும். அத்திவாரம் சரியாக இருந்தால்தானே கட்டிடமும் உறுதியாக நிற்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் வாணரின் கற்பனைப் போக்கை ஆராய்வது ஒரு ருசியான கருமம். காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அவர்களது சிந்தனை அலைகள் கொந்தளித்தெழுவதைப் பார்ப்பதே இன்பமான பொழுது போக்கு எனலாம்.

கம்பராமாயணம், சிலப்பதிகாரம், வில்லிபாரதம் முதலியவை கதையுணர்ச்சியோடு கற்பனைச் சித்திரங்களையும் எழுப்பிச் செல்லும் இனிய இலக்கியக் கருவூலங்கள். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பச் சுவைக் கவியமுதை அவற்றின் ஆசிரியர்கள் நமக்கு அள்ளித் தருகின்றார்கள்.

பொதுவாக அவர்களது பாடல்களெல்லாம் மிக இனியன. ஆனால் அவர்களது உட்கோளை முற்றாகப் புலப்படுத்துவன ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் பல தற்குறிப்பேற்றக் கற்பனைகள்தான்.

மாதிரிக்காக, அவர்களது தற்குறிப்பேற்றப் பாடல்களில் ஒவ்வொன்றை இங்கு எடுத்துக் கொள்வோம்.

''மையறு மலரின் நீங்கி
யாஞ்செய்மா தவத்தால் வந்து
செய்யவள் இருந்தாளென்று
செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்(று)
அழைப்பது போன்ற தம்மா!''

இது ஒரு கம்ப சிருஷ்டி; இராமாயணத்தில் உள்ளது. இதில் மிதிலை மாநகரத்து மதிற்புறத்துள்ள கொடித்திரைகளெல்லாம் இராமனுக்கு ஒரு இன்பமான வரவேற்பு அளிப்பதாகக் கற்பிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இது நடக்குமா?

ஆனால், கம்பனின் கவித்துவ சக்தியால் வெறும் கொடிச்சீலைகளே உயிர்பெற்று விட்டன போலத் தோன்றுகிறதல்லவா? கம்மா காற்றில் ஆடிய கொடிகளில், தனது கற்பனைப் பொலிவைப் பிரகாசிக்கச் செய்கிறான் கம்பன். கம்பன் தனது இராம பக்தியைக் குறிப்பாகப் புலப்படுத்துமிடங்களில் இதுவுமொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனைத் திருமாலின் அம்சமாகவும், சீதையை இலக்குமியின் அம்சமாகவும் கருதுகிற கவிக்கு, அந்தக் குறிப்பைப் புலப்படுத்துதற் கேற்ற தருணங் கிடைக்கிறது. முன்னொரு காலத்தில் திருப்பாற்கடலில் இருந்து பிரிந்துபோன இருவரும் இப்பொழுது மிதிலாபுரியில் மறுபடியும் சந்திக்கப் போவதை உத்தேசித்துக் கம்பன் இவ்வாறு அமைத்திருக்கிறான்.

'கண்ணாம்பூச்சி' விளையாட்டால் குழந்தைகள் அடைகிற இன்பத்திலும் கூடின அளவு இன்பம், இந்த நிகழ்ச்சியை வர்ணிப்பதில் கம்பனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். ஒளித்திருக்கிற சீதையை வெளிப்படுத்துவதற்குத் துடிக்கிற நகரம், தனது கொடிக்கரங்களால் இராமனுக்குச் சைகை காட்டுகின்றதாம்! எப்படி? அந்த நகரம் இப்படியாக ஒரு குதூகலமான வரவேற்பை நிகழ்த்தியதென்று கற்பனைப்படுத்தப்பட்டாலும், உண்மையில் கம்பன் தனது அகக்காட்சியில் இராமனுக்களித்த ஒரு நல்வரவேற்பாகவே நாமிதைக் கொள்ளல் வேண்டும்!

''சண்டுநீ வரினு மெங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர்க் கல்லால் வேறு
படைத்துணை ஆக மாட்டான்;''
'''மீண்டுபோபோ' வென்றந்த
வியன்நகர்க் குடிமிதோறும்
காண்டகு பதாகை ஆடை,
கைகளை விரிப்ப போன்ற!''

வில்லிபுத்தூராரின் வேலைப்பாடிது; பாரதப் பாட்டு. கண்ணனது உதவி பெற்றாலன்றிப் பாண்டவரை வெல்வது கடினம் என்றுணர்ந்த துரியோதனன், துவாரகை நோக்கிச் செல்லுகிறான், கண்ணனைக் காண்பதற்கு. இங்கு, கொடிச்சீலைகளின் அசைவில் வெறுப்பான ஒரு எதிர்ப்பைச் சிருஷ்டிக்கிறார் வில்லி.

தரும வீரரான பாண்டவரிடத்துள்ள மதிப்பையும், வஞ்சகம் பொறாமை சூது முதலிய துர்க்குணங்கள் நிறைந்த துரியோதனனிடத்துக் கொண்ட வெறுப்பையும் கவி சூசகமாகவே சுட்டிக் காட்டுகிறார்.

இதனால், நீசத்தனங்களில் தமக்குள்ள இயல்பான அருவருப்பைக் கொடிகளின் அசைவில் வைத்துக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார் கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தையலுங் கணவனும் தனித்துறுதுயரம்
ஐயம் இன்றி அறிந்தனபோல......
போருழந் தெடுத்த வாரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல் மறித்துக் கைகாட்ட''

இளங்கோவின் தற்குறிப்பேற்றக் கற்பனைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு. சிலப்பதிகாரத்திலுள்ளவை இச்செய்யுள் வரிகள்.

வியாபாரஞ் செய்து பொருளீட்டும் நோக்கமாகக் கண்ணகியுடன் கோவலன் மதுரைக்கு வருகின்றான். வஞ்சிப்பத்தனின் சூழ்ச்சியால், அவன் ஆராயாது கொல்லப்படப்போவதை முன்கூட்டியே உணர்ந்து, மதுரை நகரக் கொடிகள் கருணையோடு அவர்களைத் தடுப்பதாகப் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

பிறர் துன்பங் கண்டு இரங்குகிற தமது சுபாவத்தைக் கொடிகளின் கருணையான தடுப்பினாற் குறிப்பாகப் புலப்படுத்துகிறார் இளங்கோ.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம்'. கவிகளின் கற்பனைகளை அனுபவிக்க வழிகாட்டுவது இச்சிறு முயற்சி.

கொடிகளின் அசைவை மையமாகக் கொண்டு, கம்பன் வில்லி இளங்கோ—ஆகிய மூவரதும் தற்குறிப்பேற்றக் கற்பனைகள் முறையே இன்பமான வரவேற்பு, வெறுப்பான எதிர்ப்பு, கருணையான தடுப்புக்களை எவ்வாறு புலப்படுத்தின என்பதை இங்கு கண்டோம்.

கற்பனையும் பாரதியும்

இந்துமதக் கோவில்கள் சிலவற்றில், காராம்பசு என்றொரு வாகனம் இருப்பதுண்டு. மனித முகமும், மாட்டின் உடலுங் கொண்டது அவ்வுருவம். யாரோ ஒரு மரச்சிற்பியின் வினோத வேலைப்பாடுகளிலே அதுவும் ஒன்று. அவன் அதை எவ்வாறு சிருஷ்டித்தான் என்பது ஒரு பிரச்சினை.

'இல்லது வாராது; உள்ளது போகாது' என்று சொல்வார்கள். இயற்கை ரீதியில் பார்த்தால், காராம்பசு உயிர்வாழும் பொருளாக இருக்கமுடியாது. ஆகவே, அது உள்ள பொருளன்று. அப்படியானால், இல்லாத பொருள் எவ்வாறு உருவாகமுடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை இதுதான்: மரச்சிற்பி மாட்டைப் பார்த்தான்; மனிதனையும் பார்த்தான். உள்ள இவ்விரு பொருள்களில் இருந்தும் ஒவ்வொரு அம்சத்தைப் பிரித்தெடுத்து, ஒட்டுவேலை செய்து பார்த்தது அவனுள்ளம். இந்த மானச ஒட்டுவேலையின் பயனாகவே, காராம்பசு என்ற செயற்கைப் பொருள் உற்பத்தியானது; நாமும் பார்த்து வியக்கிறோம்.

கற்பனை என்பதை விளக்குவதற்குக் காராம்பசு ஒரு நல்ல உதாரணம். உண்மை என்ற அடிப்படையிலிருந்து எழுவதுதான் கற்பனை இதை இன்னொரு வகையாகவும் சொல்லலாம். எந்தக் கற்பனையிலும் ஏதாவதொரு உண்மை கலந்துதான் இருக்கும்.

பெரிய பெரிய கவிஞர்கள் என்ன, சிற்பிகள் என்ன, ஓவியர்கள் என்ன—எல்லாரும் கற்பனைக்கு அடிமைப்பட்டவர்களே. இயற்கைச் சக்திகளையே கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு இன்றைய விஞ்ஞான உலகம் முன்னேறிக் கொண்டிருப்பது எதனால்? கற்பனையினாலல்லவா? மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டே, கற்பனையும் அவர்களிடையே விருத்தியடைந்து வந்துகொண்டிருக்கிறது. அழகுக்காக, ஆக்கத்துக்காக, அழிவுக்காக, மனிதர் ஓயாமல் கற்பனை செய்கிறார்கள். கற்பனைதான் நாகரீகத்தின் ஆதியூற்று—ஏன்? அதன் சங்கமமும் அதிலேதான் தங்கியிருக்கிறதென்பதை இன்றைய அணுக்குண்டு ஆராய்ச்சியிலிருந்து அனுமானிக்க முடிகிறதல்லவா?

''கற்பனை கடந்தசோதி'' என்றும், ''எறிதரங்கம் உடுக்கும் புவனங் கடந்துநின்ற ஒருவன், திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே'' என்றும், ''காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்துப் பழம்பாடற் கடவுள் மணியே'' என்றும் பக்திமான்கள் கடவுளையே ஒரு கற்பனைப் பொருளாகத் தியானிக்கவில்லையா? கற்பனையினால் தானே ஞானிகள், கடவுளோடு இரண்டறக் கலக்கிறார்கள்—அத்துவிதநிலை பெறுகிறார்கள்!

வேறு பிராணிகளில் இருந்து மனிதனைப் பிரித்துக் காட்டும் ஏதுக்களில் இந்தக் கற்பனையும் ஒன்றெனச் சொல்லலாம். அளவில் வேறுபடினும் எல்லா மனிதரிடத்தும் கற்பனை உண்டென்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. புலவர்களின் அற்புதமான கற்பனைகளெல்லாம் அவர்களது சூழலில் இருந்துதான் வெடித்தெழுகின்றன. நாளாந்த வாழ்க்கையிலே காணும் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான உண்மைகளின் மீதே அவர்களது கவிமாடங்கள் எழுகின்றன. ஆனால், சாதாரண மனிதனுக்கு அற்பமாகப் படுகிற நிகழ்ச்சிகள், தோற்றங்கள்—எல்லாம், புலவரின் கற்பனை மெருகினாற் புடமிடப்பட்டதும், அலாதியான சோபையுடன் பிரகாசிக்கத் தொடங்குகின்றன.

பெருப்பித்தல்—சிறுப்பித்தல், கூட்டுதல்—குறைத்தல், புதுக்குதல்—திருத்துதல் முதலிய கவிதா சாமர்த்தியங்களால், கவிஞன், காலதேச வர்த்தமானங்களைக் கடந்து செல்வதுமுண்டு. சுருக்கமாக, கவிஞர்கள், கற்பனையினால் வாழுகிறார்கள்; கற்பனை, கவிஞர்களால் வாழுகிறது!

தமிழ்நாட்டில், அரசியல் சமுதாயம் இலக்கியம் முதலியவற்றிலே ஒரு புதிய எழுச்சியையும் மலர்ச்சியையும் தோற்றுவித்தவர் பாரதி. 'மறுமலர்ச்சி யுகம்' என்பதற்கு விதைபோட்டு வைத்தவர் பாரதி. பாரதியாரின் செல்வாக்கு இன்று தமிழ்நாடு முழுவதிலும் பரவிவிட்டதென்றால், அதற்குக் காரணம் அவரது கவிதைகள் தான். பட்டிக்காட்டான்கூட, படித்து மகிழத்தக்க அவ்வளவு இனிமையும் எளிமையும் அவர் பாடல்களில் உண்டு. 'கண்கண்டதைக் கைசெய்யும்' என்று இல்லாமல்—அதாவது, உள்ளதை உள்ளபடியே சொல்லாமல்—கற்பனையையும் இடைக்கிடை கலந்து, கவியமுதம் படைத்தார் பாரதி. இதைப் பாரதியாரே விளக்குகிறார் பாருங்கள்:

''வாழ்க மனைவியாங் கவிதைத் தலைவி!
தினமும் இவ்வுலகில் சிதறியே நிகழும்
பற்பல பொருளிலாப் பாழ்படுசெய்தியை
வாழ்க்கைப் பாலையில் வளர்பல முட்கள்போல்
பேதையுலகைப் பேதமைப்படுத்தும்
வெறுங்கதைத் திரளை......
...... ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள்
அனைத்தையும் பயனிறை அனுபவமாக்கி,
உயிரிலாச் செய்திகட் குயிர்மிகக் கொடுத்து,
ஒளியிலாச் செய்திகட் கொளியருள் புரிந்து,
வான சாஸ்திரம், மகமது வீழ்ச்சி
சின்னப் பையல் சேவகத் திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையு மாங்கே அழகுறச்செய்து,
இலௌகிக வாழ்க்கையிற் பொருளினை இணைக்கும்
பேதை மாசத்தியின் பெண்ணே வாழ்க!......''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்களின் மனம் எவ்வாறு வேலை செய்கிறது? கற்பனையிலே அவர்களது கவியூற்று எழுவதெப்படி? பதில் பாரதியாரே சொல்லு கிறார்:

''பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றிற்
படுத்துப் புரளாதே,
வென்றியை நாடியிவ் வானத்திலோட,
விரும்பி விரைந்திடுமே;
முன்றிலி லோடுமோர் வண்டியைப் போலன்று
மூன்றுலகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்!''

பாரதியாரின் 'குயி'லைப் பற்றிப் பலரும் பலவிதமாக விமர்சனம் செய்கிறார்கள். ஆனால், பாரதியாரே சொல்லி வைத்திருக்கிறார், அது ஒரு கற்பனைப் பாட்டு என்று. (மன அவஸ்தைகளைத்தான் வேதாந்தமாக விளங்க வேண்டும்).

''பட்டப் பகலினிலே
பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின்
நிகழ்ச்சியிலே—கண்டேன்யான்......;
''...... விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச்
சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம்,
பழம்பாய்—வரிசையெல்லாம்—
ஒத்திருக்க 'யாம்வீட்டில்
உள்ளோம்' எனவுணர்ந்தேன்;
சோலை,குயில்,காதல்
சொன்ன கதை அத்தனையும்,
மாலை யழகின்
மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றிய தோர் கற்பனையின்
சூழ்ச்சியென்றே கண்டுகொண்டேன்!''

இவ்வாறெல்லாம் பாரதியார், தமது கவிதைகளுக்கு விமர்சனம் செய்துகொண்டு போகையிலேயே, கற்பனைக்கும் விமர்சனம் செய்து விட்டிருப்பதைப் பல கவிதைகளில் பார்த்து அனுமானிக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது சொற்புதிது, சோதி மிக்க நவகவிதை, எந்நாளுமழியாத மகாகவிதை......'' என்று அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய விதமாகத் தமது கவிதைகளுக்குத் தாமே விமர்சனம் செய்த 'கவியரசர்'—பாரதி, ''பார்மீது யான் சாகாதிருப்பேன், காண்பீர்! மலிவு கண்டீர் இவ்வுண்மை, பொய் கூறேன் யான், மடிந்தாலும் பொய் கூறேன்.....'' என்று சத்தியமும் பண்ணியிருக்கிறார். ஆம். பாரதியார் இறக்கவில்லை; அவர் நம்மோடிருக்கிறார்—இதற்கு அவர் கவிதைகளே சாட்சி!

புதிய ஆத்திசூடி

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்'—உள்ளது தமிழ். இல்லையேல், ''அறஞ்செய விரும்பு'' ''ஆறுவது சினம்''...... என்றெல்லாம் பரம்பரை விதிவிலக்குகள் அமைய ஔவையார் செய்து வைத்த ஆத்திசூடி போதாதென்று, ''அச்சந்தவிர்'' ''ஆண்மை தவறேல்''...... என்ற வகையில் புதுமை தழுவிய பாரதியின் ஆத்திசூடி கிழம்பியிருக்குமா, என்ன?

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அடியிட்டவர் பாரதி. பழமைக்கும் புதுமைக்கும் சமரசப் பாலமிட்டு வைத்தவர் பாரதி. அடிமையிலும், மிடிமையிலும், மடமையிலும் அழுந்திக் கிடக்கும் நம்மவர்க்கு ஓரளவாவது சுய உணர்ச்சிவரச் செய்தவர் பாரதி. அவரது இலக்கியக் குளிசைகளுக்குள்ளே புதிய ஆத்திசூடி ஒரு தினிசு; நம்மவரிடையே மண்டிக் கிடக்கிற பல தணிசான மனவியாதிகளுக்கெல்லாம் நல்ல மாற்று மருந்தாக உபயோகப்படத்தக்கது.

''ஆத்திசூடி இளம்பிறையணிந்து
மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங்கொண்டு பாற்கடல் மிசைக்கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை—எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்......''

வாழ்த்துடன் தொடங்குகிறது பாரதியின் ஆத்திசூடி. எம்மதமுஞ் சம்மதமாக ஏற்கத்தக்க உபதேசங்களைச் செய்யப் போகிறவர், பொது வாழ்த்தொன்றுடன் நூலைத் தொடங்குவது மிகமிகப் பொருத்தமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. இந்தச் சமரச ஞானமே நமது சாதிமதப் பூசல்—பாரிச வாதங்களை அகற்றுவதற்குத்தக்க ஒரு பொது மருந்தாகிறது என்று கூடச் சொல்லலாம்! இனி, நூல் தொடங்குகிறது.

அச்சந்தவிர்: வீரத்தமிழர் வாழ்வில் வேண்டாப் பழக்கமாகக் கலந்து இருக்கிறது அச்சம் என்ற வியாதி. பரம்பரை பரம்பரையாகப் பேய் என்றும் பூதமென்றும் பயந்து சாகிற பேடித்தனத்தைப் பெருப்பித்து விட்டது அன்னியரின் அடிமை ஆட்சி. அதிகார வர்க்கத்தின் முன்னே வாயில்லாப் பிராணிகளாக அடங்கி ஒடுங்கி மண்டியிடுகிற நமது அடிமைப் புத்திக்கு நல்ல மாற்று மருந்தாகிறது, இந்த அச்சந்தவிர்—போதனை. சுயநம்பிக்கையும் சுதந்திர உணர்ச்சியும் உள்ளவர்களாகத் தமிழர் வாழவேண்டும் என்று விரும்புகிறவர் பாரதி. ''இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்......'' ''உச்சிமீது வானிடிந்து உருகி வீழ்ந்த போதினும்: அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!'' என வீரகர்ச்சனை செய்கிற கவிச்சிங்கம் அவர். சத்திர சிகிச்சை செய்வதற்குமுன் இரணமுள்ள இடத்திற் பூசப்படுகிற விறைப்பு மருந்து போலிருக்கிறது அவரது அச்சந்தவிர்—கூற்று!

ஆண்மை தவறேல்: வீட்டிலே நெருப்புப் பற்றி எரிகிறது. கூடத்துக்குள்ளே குழந்தையொன்று தூங்குகிறது. வெளியிலே நின்று கொண்டு ''கூ'' ''கா'' என்று கூச்சல் போடமட்டும் நமக்குத் தெரியும். எரிகிற வீட்டை அணைக்கவோ அபாயத்திற் சிக்கிய குழந்தையைத் தூக்கி வரவோ நமக்குத் துணிச்சல் பிறப்பதில்லை; முயற்சிக்கவும் மாட்டோம் இந்தவிதமான மந்தபுத்தி தமிழரிடத்திலே மிகுதியாக உண்டு. சில சந்தர்ப்பங்களில், பெண்களாகவே முன்வந்து செய்யும் சில துணிச்சலான காரியங்களைக்கூட, செய்ய முடியாதவர்களாய்ப் பின்னடைந்து விடுகிறார்கள் ஆண்கள். நெஞ்சில் உரமிருக்க வேண்டும்; நேர்மைத் திறமிருக்க வேண்டும்; 'வாய் பேசும் பிடாரி கும்பிடும்' படியாக நடக்கக் கூடாது. சுருங்கச் சொன்னால் வாய் வேதாந்தம் பேசிப் பிழைக்கும் போலி நிலைமை ஒழியவேண்டுமென்பதை மனதில் வைத்தே பாரதி இதைச் சொல்லியிருக்க வேண்டும்!

இளைத்தல் இகழ்ச்சி: சிந்தனையிலோ சொல்லிலோ செயலிலோ சோர்ந்துவிடக் கூடாது. ஒரு இலட்சியவாதிக்குரிய முக்கிய லட்சணங்களிலே இதுவும் ஒன்று. மகாத்மா காந்திஜியைப் பாருங்கள். அவருடைய வாழ்க்கை ஏடுகளைப் புரட்டினால், எல்லாம் ''சத்திய சோதனை'' யாகவே முடிந்து வருவதைக் காணலாம். எத்தனை எதிர்ப்புகள், எத்தனை இடுக்கண்கள், எத்தனை போராட்டங்களின் மத்தியிலே—அவரது இலட்சியப் பாதை போய்க் கொண்டிருக்கிறது? முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த காலைப் பின்வைக்காத வீரந்துறவியல்லவா அவர்! சோம்பலும் மனப்பெலவீனமும் நமது வளர்ச்சியைத் தடுத்துவிடும். மஹாத்மாவின் வாழ்க்கை முறையை முற்றாகப் பின்பற்றுவது கஷ்டமாக இருந்தாலும், பாரதியாரின் இந்த வார்த்தைக்காவது ஓரளவு மதிப்புக் கொடுக்கத்தான் வேண்டும்! வெற்றி தோல்விகளால் நிதானந் தவறுவோருக்கும், விதியின்மேற் பழிபோட்டுக் கொண்டிருப்போருக்கும், 'இளைத்தல் இகழ்ச்சி'—நல்ல மருந்து.

ஈகைதிறன்: 'எச்சிற்கையாற் காகந்துரத்தாத' எத்தனையோ தருமாத்துமாக்கள் நம்மிடையே இருக்கிறார்கள். தரும வைத்தியசாலை, பொதுசன வாசிகசாலை, அனாதைகள் விடுதி...... என்பன போன்ற காரியங்களில் அவர்கள் வெறுங்கை விரிக்கக் கூசார்கள். கூன்குருடு செவிடு சப்பாணிகளைக் கண்டால், அவர்களுக்கு எரிச்சலாயிருக்கும். ஆனால், பட்டம் பதவிகளுக்கும் படாடோப வேலைகளுக்கும் அவர்கள் பணம் தண்ணீர் பட்டபாடுபடும்! இவர்களையும் மிஞ்சக் கூடியவர்களாக, இன்னொரு பகுதியார் இருக்கிறார்கள். அவர்கள், பணத்துக்கு மேல் பணமாகச் சம்பாதிப்பார்கள். தாம் அனுபவிக்கவோ பிறருக்குதவவோ அவர்களுக்குச் சம்மதமில்லை. 'வைக்கற்பட்டடை நாய்' போல வாழும் அவர்களாலும் உலகத்துக்குப் பயனில்லை. இவ்விதமான வினோதப் பிறவிகளுக்காகவே பாரதியார் ''ஈகை திறன்'' என்று சொல்லி வைத்திருக்க வேண்டும். ''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட மானிடரே, கேளுங்கள்!'' என்றுதான் நமக்குஞ் சொல்லத் தோன்றுகின்றது.

இன்றைய நிலைமையில், தமிழ்நாட்டுக்குத் தேவையானவை எவை? தேவையில்லாதன எவை?—என்பவற்றை ஆராய்ந்தே பாரதியார், இந்த நூலைச் செய்திருக்கிறார். ''கொடுமையை எதிர்த்து நில்'' என்றும், ''நையப்புடை'' என்றும் சொல்லும்போதெல்லாம், அவருடைய சுதந்திரத் தாகந்தான் அப்படித் தூண்டியிருக்க வேண்டும். ''புதியன விரும்பு'' என்று சொல்லும்போது, அவரது புதுமைப்பற்றுத் தொனிக்கிறது. ''சோதிடந்தனையிகழ்'' என்று சொல்லும்போது, பகுத்தறிவுள்ள மனிதனது வாழ்க்கையை எங்கெங்கோ இருக்கும் சடவஸ்துக்களான நவக்கிரகங்களும் நட்சத்திரங்களும் எவ்வாறு நிர்ணயிக்க முடியும் என்ற கேள்வி இயல்பாகவே பாரதியின் மனதில் எழுந்திருக்க வேண்டும்!

இப்படியாகப் பாரதியின் ''ஆத்திசூடி''க்கு வியாக்கியானம் எழுதுவது நமது நோக்கமல்ல. அவரது நூலை நினைப்பூட்டுவதன் மூலம், தமிழரைச் சிறிது சிந்திக்கச் செய்ய வேண்டுமென்ற தூண்டுதலாலேயே இக்கட்டுரை எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிக் கவிதை

''நமது கவிஞர்'' என்று உரிமையோடு பெருமையாகப் பேசுதற்கு யாழ்ப்பாணத்தில் ஒருவர் இருக்கிறாரென்றால், நவாலியூர் ஸ்ரீ க. சோமசுந்தரப் புலவரைத்தான் சொல்ல வேண்டும். மேதையிலாகட்டும், தன்னடக்கத்திலாகட்டும் மதிப்பாக வாழும் பெரியார் அவர். மங்கலமான மனைமாட்சியும், அதற்கு நன்கலமான நன்மக்கட்பேறும் உடைய அவர், சாந்தமாக இருந்து கொண்டு, தமிழ்த்தொண்டு செய்கிறார். ''குலனருள் தெய்வங்கொள்கை மேன்மை கலைபயில், தெளிவு கட்டுரைவன்மை''—எல்லாம் ஒருங்கமைந்த இந்தத் தமிழாசிரிய மணியின் இலக்கியச் சுடர்கள் தமிழ்நாடெங்கும் ஒளிவீசும் நன்னாளை எதிர்பார்க்கிறோம். மேலும் மேலும் அவரது ஆக்கவேலைகளை வரவேற்கிறோம்.

'பாரதி பரம்பரை' என்று அவர் தம்மைச் சொல்லிக்கொள்ளாவிட்டாலும், பாரதியின் அடிச்சுவட்டிலே பல புதுமையான இலக்கியங்களை அமைத்துப் பார்த்திருக்கிறார். ''ஏறாத மேட்டுக்கு இரண்டு துலை'' என்ற சிறிய கவித்தொடர், இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். நமது சமூகத்திலே உள்ள சில போலி மனப்பான்மைகளைக் கிண்டல் செய்யும் பாணியில் அமைந்திருக்கிறது அக்கவிதை.

''ஏறாத தனி மேட்டுக்
கிரண்டுதுலை யிட்டிறைக்கும்
பேறான கதையுரைப்பேன்
பிரியமுடன் கேட்டிடுவீர்!''

என்று, பாட்டி குழந்தைகளுக்குக் கதை சொல்லும் பாவனையில் தொடங்குகிறார் கவிஞர். கசப்பான சில உண்மைகளைச் சொல்வதற்கு முன், ''பிரியமுடன் கேட்டிடுவீர்'' என்று அவையடக்கம் சொல்வது பாராட்டத்தக்கது.

''மானமுள முடிமன்னர்
மண்டலங்கள் மூன்றினுடன்
தானுமொரு மண்டலமாய்த்
தனிவிளங்கும் தனித்தீவு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்குள்ளார் வாவரக்கர்
ஆண்டதென்று வடுவுரைக்க,
இங்குள்ளார் ''சிவபூமி''
என்றுயர்த்தும் மணித்தீவு;
''பொன்னிலங்கும் மணியிலங்கும்
புகழிலங்கும் வளமிலங்கும்
தென்னிலங்கைத் தனித்தீவு;
செப்புகின்ற மணித்தீவு''

என்று நாட்டுவளம் கூறித் தமது தாய்நாட்டுப் பற்றை வெளிப்படுத்தி வந்த கவிஞர்,

''அத்தீவின் வடகோடி
அங்கணொரு செல்வநகர்;
எத்திசையும் புகழ்ந்துரைக்கும்;
யானுரைக்க இடமில்லை''.

என முத்தாய்ப்பு வைத்துப் பேசுகிறார். 'நகரை அறிமுகஞ் செய்வதற்கு இதற்கப்பால் முடியாதாப்பா!' என்று சொல்லாமலே சொல்லி நல்ல புகழ் மெருகை ஏற்றுகிறார். இந்தக் கற்பனை நகரத்தின் மேற்குப் புறத்திலே மாவலியூர் என ஒன்றைச் சிருஷ்டித்து, அந்த இடத்தில் நடந்ததாக ஒரு கதையைக் கட்டுகிறார் புலவர்.

''நாறுமழுக்குத் துணிக்குள் நாகமணி பிறந்தது போல''வும் ''கூறு புலாலிப்பியிடைக் குலமுத்துப் பிறந்தது போல''வும் நீலன் என்பவன் பிறக்கிறான், பறைய சேரியிலே. அவனுக்கு இயற்கையான அறிவாற்றல் கொஞ்சம் இருந்தது. சடையன் என்ற தங்கள் 'மூப்ப' விடம் பாலசிட்சை பெற்று, சைவ ஆசாரங்களையும் கற்றுணருகிறான். அதிலிருந்து, தங்கள் சாதியின் நிலைமைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் பழகுகிறான். பயன்......? புலவரே சொல்லட்டும்.

''தங்குலத்தைத் தீண்டாத
சாதியாக் கியதெல்லாம்
வெங்கொலையும் கொடும்புலையும்
மிகுகுடியும் என்றுணர்ந்தான்;
''பொல்லாத குடியோடு
புலால் மிசையும் தொழில்விட்டு,
நல்லார்கள் தொடர்புடனே
நாளுமவ னுயர்கின்றான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வடிவினிலே வெண்ணீறு
வாக்கினிலே சிவசிவா
கடியகொலை புலையில்லைக்
கழுத்தினிலோர் கண்ம ணியே;
''காலையிலே எழுந்திடுவான்
கடவுளடி கைதொழுவான்
வேலையிலே பிசகில்லை
வேறாக ஒழுகிடுவான்''—

இப்படியெல்லாம் தீவிர சீர்திருத்தப் பாதையில் அவன் போய்க்கொண்டிருப்பதனை ஊரார் சகிப்பார்களா? உற்றார்கள்தான் மதிப்பார்களா? எப்படியும் அவனை மட்டந்தட்ட ஆட்கள் கிளம்புவார்கள் தானே! இந்தச் சந்தர்ப்பத்திற் கவி வேறொரு கதாபாத்திரத்தை நமக்கு அறிமுகஞ் செய்கிறார். ''ஏராயம் புடைசூழ இருந்து தன்னைப் புழுகுதலால், 'பூராய மாமுதலி' எனப்'' பட்டம் பெற்ற ஒரு வேளாளப் பிரபு அவர். அவருக்குச் சாதிக்கிறுக்கு அதிகம். 'வெளிப்பூச்சு' வேலையில் அவர் விண்ணர். ''படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்'' என்ற பழமொழியை மெய்ப்பிப்பவர் அவர். அவருக்கு நீலனுடைய ஆசார சீலங்கள் எப்படிப் பிடிக்கும்?

''நீலனை வீதியிற் கண்டால்
நில்லடா என்றுறுக்கிச்
சாலவுமே வைதிடுவார்
'சைவமோ தம்பி?' என்பார்''.

இப்படியாக வேற்றுமை வளர்ந்து கொண்டிருக்கிறபோது ஒருநாள் அவர் வீட்டில் பெரிய விருந்தொன்று நடக்கிறது. இனசனங்களெல்லாம் தின்று குடித்து அரட்டையடிக்கிறார்கள். ''நீலனையும் புலாலுணவு நெருங்கியுணச் சொன்னார்கள்''. நீலன் அதற்கு ''நான் நயிந்தை, நம்முடைய சோறுதான் உண்கிறேன்; ஊன் மிசைந்த உணவையென்றும் உண்ணேன்'' என்று ஓடிவிடுகிறான். முதலியாரின் ஆத்திரம் முழுவதும் வசைமாரியில் முடிகிறது!

மற்றொருநாள். முதலியார் எண்ணெய் முழுக்காடும் தினம். ''என்ன கறிவைப்பது? என்று கேட்கிறான் சமையற்கார வேலன். ''சாவலொன் றடித்து ஆணஞ் செய், கறியுஞ் செய், அரியதொரு பொரியல்லை.....'' என்று கட்டளை பிறக்கிறது. ''நீலன் வீட்டயலினிலே நிறைவடலிக் கூடலுக்குள் காலையில் சுழித்த மலம் கால் கிழறியுண்ட'' சேவலைத் தேடிப்பிடித்து, எஜமான் சொன்னபடி ஆக்கி வைக்கிறான். முழுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வந்த முதலியாரும் (வாயார) வயிறார உண்டுவிட்டு, 'கும்ப கர்ணப்படலம்' வாசிக்கத் தொடங்குகிறார், சாய்வு நாற்காலியிலே. பொறுப்பான கட்டம் இப்பொழுதுதான் தொடங்குகிறது. கவிஞரே பேசட்டும்:

''ஐயா வென் றொருசத்தம்
ஆரடா வென் றெழுந்தார்;
கையிலே கோ லெடுத்தார்
கண்டவுடன் நீலனையே;
''புலையனென்றே எமைக்கழிப்பீர்
புலையர்தம் மலமுண்டு
நிலையுண்ட சேவல்தனை
நீருண்டீர் இன்றென்றான்;
''ஏறாத மேட்டினுக்கே
இரண்டுதுலை இட்டதுபோல்
நாறுகின்ற மலமதனை
நாங்கோழி வயிற்றேற்றி,—
''நயிந்தைவயிற் றேற்றுகிறோம்
நாங்களதை அறியாமல்
உயர்ந்தகுலம் நாமென்ப
துண்மையோ?—உரைக்கவென்றான்!''

இவ்வாறு நீலன் செய்த வாதம், முதலியாருக்கு அருவருப்பை உண்டாக்கி, அவர் தின்றதெல்லாவற்றையும் கக்கச் செய்துவிட்டது! முதலியார் பாவம், 'அன்று விட்டேன் கோண்டலடி' என்று, புலா லுணவையே வெறுத்தார். கதை அவ்வளவோடு நின்றுவிடுகிறது.

பள்ளக் காணிகளில் இருக்கும் கிணறுகளிலிருந்து, திடலான காணி களுக்கு நீர்ப்பாய்ச்சும் முறையைப் புலவர் நன்கு அவதானித்திருக் கிறார். கிணற்றிலிருந்து இறைக்கப்படும் நீர் திடலருகேயுள்ள ஒரு குழிக்குள் நிரப்பப்படும். பின் அங்குள்ள சிறு துலாப்பட்டைமூலம் மேலேயுள்ள திடலுக்குப் பாய்ச்சப்படும். இதைத்தான் 'எத்தல்', இறைப்பு என்றும் 'ஏற்றம்' போட்டிறைத்தல் என்றும் சொல்லு கிறோம். இந்தக் கருத்துவமையில் புலவர் போட்ட கதைமுடிச்சு, நீலன் வாய்மொழியாகவே அவிழ்க்கப்படுகிறது. புலவரின் சாதுரியமான கவியாற்றலை மெச்சுகிறோம்.

எளிய நடையிலே, மிடுக்கான புரட்சிக் கருத்தோடு வெளிப்படும் இவ்வகையான பிரசார இலக்கியங்கள் இன்னும் தேவை. ஈழகேசரி (1941)—ஆண்டு மடலில் இக்கவிதை இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுந்திருத்தமும்

''கவிதை என்பது ஒரு வேலையும் இல்லாமல் சோம்பேறியாக இருப்பவன் இரண்டெழுத்துப் படிக்கக் கற்றுவிட்டு, காரிகையை நெட்டுருப் பண்ணிவிட்டு, பொழுதுபோகாமல் இருக்கும்போது, எதுகையும் மோனையும் யமகமும் திரிபும் வைத்துச் சொற்களைப் பின்னிவைக்கும் காரியமல்ல''. உண்மையான—நியாயமான ஒரு வார்த்தை. இந்த விஷயத்தில் தமிழன்பர் ஸ்ரீ மு. அருணாசலம் அவர்களுடன் 'ஒத்துப் பாட' நாம் தயங்கமாட்டோம். ஆனால்......?

தமிழ்ப்பாஷைக்குத் தாமே சர்வாதிகாரிகள் என்று நினைத்துக் கொண்டு, மனம் போனபடியெல்லாம் சிலர் தங்கள் இரசிக மேதையை வெளிப்படுத்துவதும், அவர்களின் 'பக்த (சிஷ்ய) கோடிகள்' என்று சொல்லிக்கொண்டு பந்தம் பிடிக்க வருவதும்தான் நமக்குப் பிடிக்கவில்லை.

''எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான். பாடினவன் பாட்டைக் கெடுத்தான்'' என்ற முறையாக, பழந் தமிழ்ப் பாடல்களின் இயற்கை உருவம் எழுந்தமானத்திற் சிதைக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. அதனால், பொருத்தமான திருத்தப்பாடுகளை எதிர்த்து நிற்கும் பிற்போக்காளராகவே நாம் இருந்துவிடப் போவதுமில்லை!

''ஊசல் மறந்தாலும்
ஒண்கழல் அம்மானை
வீசல் மறந்தாலும்
மெல்லியல் என்பேதை
பூசலின் ஐங்கணை
வேள்பொர, நந்தி! நின்
பாசிலை அந்தொடை
பாட மறந்திலளே!''

இது ஒரு பழம்பாட்டு. 'நந்திக் கலம்பகம்' என்ற சிறு நூலில் உள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டில் காஞ்சீபுரத்தை ஆண்ட நந்திவர்மன் என்ற பல்லவ அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.

''இளம் மங்கை ஒருத்தி இந்த நந்திவர்மனைக் கண்டு காதல் கொண்டாள். எந்நேரமும் அவன் நினைவுதான். ஆனால், அரசனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலைப் பெறுவது எளிதான காரியமா? இல்லை. ஆயினும் அவளுடைய மனம், நந்திவர்மனைத் தவிர வேறு எதையும் நினைப்பதாயில்லை. முன்னெல்லாம் அவள் ஊஞ்சலில் உட்கார்ந்து தன் தோழிகளோடு சுகமாக ஆடி விளையாடிக் கொண்டிருப்பாள். தோழிகளும் தானுமாக கழற்சிக்காய்களை அம்மானைகளாய் வீசியெறிந்து விளையாடுவாள். இப்படியெல்லாம் விளையாடிக் கவலையின்றிப் பொழுதுபோக்கி இன்புற்றிருந்த இவள், இப்போது இவற்றையெல்லாம் மறந்துவிட்டாள் என்று இப்பெண்ணின் தாய் சொல்லுகிறாள்.

''நந்தியிடம் காதல் கொண்டாளாம். மன்மதன்—பஞ்ச பாணங்களையுடைய மன்மதன்—தன் அம்புகளை இந்த மென்மையான இயல்புடைய சிறு பெண்மீது எய்து போரிடுகிறான். இவள் என்ன செய்ய முடியும்? பாவம், வருந்துகிறாள். ஊஞ்சலையும் அம்மானையையும் மறந்துவிட்டபோதிலும், ஒன்றை மட்டும் மறக்கவில்லை. அது என்ன? நந்திவர்மனது காதலைத் தான் பெறுவதற்கு அடையாளமாக, அவன் அணிந்துள்ள மாலையைப்—பசுமையான இலையோடு கூடிய ஆதொண்டை மாலையை—தான் பெற்றுவிட வேண்டுமென்ற ஆவலில், மறக்காமல் எந்நேரமும் அதையே புகழ்ந்து பாடிக்கொண்டிருக்கிறாள்.

''தன்மகள் மனம் இப்படியாகக் காதல் நோய் கொண்டு வருந்துகிறதே என்று தாய்சொல்லி இரங்குகிறாள். இது பாட்டின் பாவம்...''.

இப்படியாக, அருமையான இலக்கிய விமர்சனம் செய்துகொண்டு வந்த அன்பர் அருணாசலம், தமது மனச்சாட்சியை மீறின விதமாக, டி. கே. சி. அவர்களின் திருத்தமொன்றைச் சரியெனச் சாதிக்க முன் வந்தது நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. டி. கே. சி. யின் திருத்தமென்று சொல்லப்படுவதுதான் பாட்டிற் கண்ட கடைசி அடி. அதன் பழைய உருவம்:

''பாசிலை அந்தொடை
அல்லது பாடாளே'' என்பது.

நந்திவர்மன்மேல் கொண்ட காதலால், தன் மகள் ஊஞ்சல், அம்மானை முதலிய சுகானுபவங்களையெல்லாம் மறந்து, பாடும் பைத்தியமாக—மாறிவிட்டாள் என்பதையே தாய் உணர்த்த முற்பட்டாள். எதை மறந்தாலும் இதை மறக்கவில்லை என்று சொல்வதில் கொஞ்சம் பொருள் தொடர்பு இருக்கிறதுதான். ஆனால், எதையெல்லாமோ மறந்து என் மகள் பெரிய பாட்டுக்காரியாகிவிட்டாள். பாட்டிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்மாலையைத் தவிர வேறொன்றையும் பாடாள் என்று சொல்வதில் எவ்வளவு சொல்லாற்றல் இருக்கிறது என்பதை யோசிக்க வேண்டு கிறோம்.

துரோணாச்சாரியார் குருகுலச் சிறுவருக்கு ஒரு விவேகப் பரீட்சை நடத்திப் பார்த்தாராம். ஓங்கி வளர்ந்த ஓர் மரத்தின் உச்சியில் இருக்கும் ஒரு சிறு குருவி. அதை அம்பால் எய்து விழுத்த வேண்டும். இராச குமாரர் ஒவ்வொருவராக முன்வந்தார்கள். துரோணர் அவர்களை யெல்லாம் கேட்ட கேள்வி இதுதான்: ''நீ எதைக் காண்கிறாய்?''— எல்லாரும் என்னென்னவோவெல்லாம் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால், அருச்சுனன் ஒருவன் வாயில் இருந்துதான் ''அந்தக் குருவியின் கழுத்தையன்றி, வேறொன்றும் காணேன்'' என்ற பதில் வந்தது. இதை எதற்காகச் சொன்னோமென்றால், ''என் மகள் நின் மாலையொன்றிலேயே குறியாக இருக்கிறாள்; எதை எதை மறந்தாலும் அதையன்றி வேறறியாது அலட்டிக் கொண்டிருக்கிறாள்'' என்று அந்தத்தாய் சொல்வதிலுள்ள கருத்தடக்கத்தைக் காட்டுதற்கே டி. கே. சி. யின் திருத்தப் பாட்டில் இவ்வித தொனிப் பொருள் இருக்கிறதா? ''பாசிலை அந்தொடை பாடமறந்திலள்'' என்று சொல்லும்போது, அந்த மறப்பின்மையால் வேறு நினைப்பெல்லாம் அடங்கி விடலாமேயன்றி, அழிந்து விடுதற்கிடமில்லை என்பது புலப்படுகிறது. ஆனால், ''பாசிலை அந்தொடை அல்லது பாடாள்'' என்பதில் மாலையைப் பாடுவதொன்றிலுமே அவள் இலயித்திருக்கிறாள், வேறு தன்னுணர்வின்றி—என்பது பெறப்படுகிறது. இந்தத் தொடரிலேதான் அவளது இலட்சிய வாதம். தெளிவாகப் பிரதிபலிக்கிறது என்றால் இழுக்குண்டா?

ஆகவே, பாட்டின் கடைசி அடி:

''பாசிலையந்தொடை
அல்லது பாடாளே''

என்று பழைய உருவுடன் இருப்பதே சிறப்பென நினைக்கிறோம். டி. கே. சி. அவர்கள் அந்தப் பாட்டிலே 'கைவைத்திருக்க' நியாயமே இல்லை. 'வேலிக்கு ஓணான் சாட்சி' சொல்வது போல அன்பர் அருணாசலம், அவருக்காகப் பரிந்து பேசவேண்டியதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையென்பது வெறும் சோம்பேறி வேலையன்று. புலவனது தனிப்பட்ட அனுபவத்தையும் உணர்ச்சிப் பெருக்கையும் வெளியிட வல்ல கருவி கவிதை. ஆக்கியோனது உட்கோளை முற்றாக உணராமல், அந்தப் பாட்டில் இது சரியில்லை; அது இப்படித்தான் இருக்கவேண்டும் என்றெல்லாம் எழுந்தமானத் தீர்ப்பிட முயல்வது பிசகு.

பகுத்தறிவாகுமா?

பாரதியின் இலக்கிய பரம்பரையில் உதித்த கவிப்பிரமுகர்களுள்ளே 'பாரதி தாசன்' என்ற கனக—சுப்புரத்தினத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

அவர். சிறந்த ஒரு ஆவேசக்கவி; தமிழ்வெறி படைத்த புரட்சி வீரருங்கூட. சுயமரியாதை இயக்கத்தில் கலந்து நின்று, தமிழரின் சமூக ஊழல்களைக் கிண்டல்செய்து, நவயுகங் காணத் துடிக்கும் பேர் வழி அவர்.

பகுத்தறிவுத்தாகமே அவர் வேகம். தமிழ் மொழி மோகமே அவர் போகம். பொய்—புளுகு—புனைசுருட்கள் அவருக்குப் பிடிக்கா. தமிழனை இழிவுபடுத்துவதாகத் தோன்றும் கட்டுக்கதைகளை அவர் அறவே வெறுப்பார்.

'தமிழே சிறந்த பாஷை; தமிழரே சிறந்த சாதி'—இவையே அவர் சித்தாந்தங்கள். இந்த அடிப்படையான உணர்ச்சிப் பாறையிலேதான், அவரது புரட்சிகரமான கவிதை ஊற்றுச் சுரந்து கொண்டிருக்கிறது.

பாரதிதாசனின் அறிவியக்கப் புலமையை மெச்சுகிறோம். சோர்ந்து கிடக்கும் தமிழ்நாட்டைத் துயில் எழுப்பும் அவர் கவிதா சக்தியைப் பாராட்டுகிறோம்.

ஆனால், உலக மகாகவிகளுக்குள்ளே கம்பனை உயர்ந்தவனாகப் போற்றுகிறார்கள் பல அறிஞர்கள். 'கம்பராமாயண இரசனை' என்ற கட்டுரையில் கம்பனின் மேதையை, உள்ளபடியே வெளிக்காட்டுகிறார் தமிழ்ப் பெரியார் வ. வெ. சு. ஐயர் அவர்கள். கம்பகாவியம் முதல் நூலாகிய வான்மீகத்தையே பல அம்சங்களில் வென்றுவிட்டதாக அவர் விளக்கியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி என்ன சொல்லுகிறார்:

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்......
பூமிதனின் யாங்கணுமே கண்டதில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை'' என்று அறுதியிடுகிறார்.

இவர்களெல்லாம் இப்படி எதற்காகச் சொல்லுகிறார்கள்? ஒவ்வொரு பாஷையாளரும் தத்தம் புலவர்களையே உலகில் உயர்வாகப் பேசுவதால், தாமும் அப்படி ஏதாவது சொல்லிவைக்க வேண்டும் என்ற அபிமானத்தினாலா?

அப்படி நினைக்க இடமில்லை. உண்மையில் கம்ப சிருஷ்டி உயர்ந்தது—உத்தமமானது—என உணர்ந்துதான், அவ்வாறு கூறியிருக்க வேண்டும். தமிழில் மட்டுமல்ல,—சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய அன்னிய பாஷைகளிலும் புலமையுள்ள அவர்கள் கம்பனைத் தூக்கி வைத்துப் பேசுவதென்றால்......! ஆம். அவர்கள் கூற்றுக்களை ஏற்கத்தானே வேண்டும்.

பாரதிதாசனைப் பார்க்கிலும், நூறு—ஆயிரம் மடங்கு தமிழ்வெறியும் தீவிர தேசப்பற்றும் படைத்த அவர்கள்; தமிழும் தமிழ்நாடும் ஓங்கவேண்டுமென்று திரிகரண சுத்தியோடு உழைத்த அவர்கள்; தமிழகத்திலே நவயுகத்தை எழுப்பவேண்டுமென்று கனவுகண்டுகொண்டிருந்த அவர்கள்—கம்பராமாயணத்தைப் பெருமையாகப் புகழ்ந்து விட்டிருக்க, இந்தக் கவிஞர் பாரதிதாசன் மட்டும் சொல்லுவதென்ன?

''ராமா யணமென்ற
நலிவு தருங்கதை
பூமியில் இருப்பதையிப்
போதே அறிகின்றேன்''

என்பதாகும். இது சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற அவர் பாடலில் இருக்கிறது. இப்படிக் 'குப்பன்' என்ற கதாபாத்திரத்தைச் சொல்ல வைக்கிறார்—சொல்லுகின்றார்!

தமிழனை இழிவுபடுத்தும் செய்திகள் இராமாயணத்தில் இருக்கிறதாக வெருட்சி கொள்கிறது சுயமரியாதை இயக்கம். ஆரியத்துவேஷத்தை விளைவித்துக் கொண்டிருக்கிற இந்தச் 'சூனாமானா'க்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல், பாரதிதாசனை மருட்டிவிட்டதோ என்று எண்ணும்படியாக இருக்கிறது. அதுதான் போகட்டும்!

''இப்புவி உண்டாகி
எவ்வளவு நாளிருக்கும்
அப்போது தொட்டிந்த
அந்திநே ரம்வரைக்கும்
மாமலையைத் தூக்கும்
மனிதன் இருந்ததில்லை
ஓமண வாளரே,
இன்னும் உரைக்கின்றேன்
மன்னும் உலகம்
மறைந்தொழியும் காலமட்டும்
பின்னும் மலைதூக்கும்
மனிதன் பிறப்பதில்லை;
அவ்வாறே ஓர்மனிதன்
ஆகாயம் பூமிமட்டும்
எவ்வாறு நீண்டு
வளருவான்? இல்லையில்லை!''

என்று அதே சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் 'வஞ்சி' என்ற இன்னொரு கதாபாத்திரத்தைச் சொல்லவைத்து -சொல்லி, பகுத்தறிவு வாத மிடும் அவர் 'வீரத் தமிழன்' என்று இராவணனைப் புகழ்ந்தேத்தும் போது,

''ஐயிரண்டு திசைமுகத்தும்
அன்பு தழைக்க வைத்தோன்;
குன்றெடுக்கும் பெருந்தோளான்''—

என்று குறிப்பிடுவது எவ்வாறு பொருந்துமோ? யாமறியோம்! மனுக் குலத்தில் வேறெவருக்கும் இல்லாத மலைபுரட்டும் சக்தி இராவணனுக் குண்டென்றால், அதை நம்பலாமா? அது பகுத்தறிவுக்கொத்ததா என்றுங் கேட்கிறோம்.

இராமாயணத்தை இழித்தொதுக்கும் இவர், அதிலுள்ள கதைக் குறிப்பை வைத்துக்கொண்டுதானே கவி புனைந்திருக்கிறார்! இரா வணனை,

''...... சாதல் வர நேர்ந்திடினும்
சூழ்ச்சி விரும்பாத பெருந்தகை—''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடுகிறாரே. கபட சந்நியாசி வேஷம் பூண்டு சீதையை அபகரித்தது போன்ற செயல்கள் சூழ்ச்சியின் பாற்பட்டன அல்லவா? ஒருவேளை, சீதை தானாகவே இராவணனுடன் கூடி ஓடிவிட்டது நிகழ்ச்சியாயிருக்க, வேறுவகையாகக் கதைகட்டி ஆரியர் சூழ்ச்சி செய்தார்கள் என்று எண்ணுவாரா?

எழுத்தாளனுடைய சக்தி மகத்தானது. அவனுடைய பேனாமுனை, போர்வீரனுடைய வாள்முனையிலும் கூரானது.

புது எண்ணங்களை மக்களுடைய உள்ளத்திலே உறைக்கச் செய்கிற ஆற்றல் எழுத்தாளனுக்கு—முக்கியமாகக் கவிஞனுக்கே—உண்டு. அவன் தனது எழுத்தினாற் சொல்லிவைக்கும் சில கொள்கைகளைச் சமூகம் அப்படியே அனுசரிக்கத் தொடங்கிவிடுகிறது. அதனால் எழுத்தாளன் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவனாகிறான்.

ஒரு பெண்ணும், ஓராணும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். அவர்களுக்கிடையில் தொடர்பேற்படாதபடி பெற்றார் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அப்போது காதலருக்கு ஒரேயொரு குறுக்கு வழிதான் தோன்றுகிறது. விஷம் குடித்தோ கடலுள் வீழ்ந்தோ இருவரும் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்.

இதில் என்ன புதுமை இருக்கிறது? இப்படித் தற்கொலை செய்கிற வியாதி தப்பித் தவறிச் சமூகத்திலே இருந்தாலும், அதைப் போக்கக் கூடிய வேறொரு மார்க்கத்தைப் போதிப்பதல்லவா எழுத்தாளனுடைய கடமை!

தமிழ்நாட்டுச் சிறுகதை எழுத்தாளர், தாமெழுதும் கதைகளிலே காதலரைத் தற்கொலை மூலம் கொன்று தீர்க்கிற இந்தக் கொடிய வழக்கம், புரட்சிக்கவி பாரதிதாசன் கவிதைகளிலுமா இடம் பெற வேண்டும்?

காதலி துயர் தாங்க முடியாமல், கிராமபோனை முடுக்கிவிட்டுப் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்—என்ற மேனாட்டுக் கருத்துப் போன்ற புதுவித கருத்துக்களை நாமும் ஏன் உற்பத்தி செய்யக் கூடாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு ஆபரணந் தேவையா?

எடுத்ததற்கெல்லாம் மேல்நாடுகளை உதாரணங் காட்டும் ஒரு கெட்ட பழக்கம் துர்அதிர்ஷ்டவசமாக நம்மிடையே பரவி வருகின்றது. இது கீழ்நாட்டவராகிய நமக்கு நாமே 'முட்டாள் பட்டம்' கட்டிக் கொள்வதாகும் அல்லவா?

அரசியலிலோ பொருளாதாரத்திலோ மேல்நாட்டவர் முன்னேறியிருக்கலாம். அவற்றுக்காக, அவர்களைப் பின்பற்ற வேண்டுமென்று சொன்னாலும் பாதகமில்லை. ஆனால், நமது கலாசாரம், பாரம்பரிய வழக்கம்—எல்லாம் தவறானவை; அவற்றையெல்லாம் ஒழித்துத் தலைமுழுக்குப் போட்டு விடவேண்டும் என்று நம்மிடையே சில 'மேதாவிகள்' துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காமாலைக் கண்ணர்களின் எண்ணந்தான் என்ன? மேல்நாட்டார் செய்வதெல்லாவற்றையும் நாம் 'ஈயடிச்சான் கொப்பி' அடிக்க வேண்டுமென்பதா?

ஐரோப்பியப் பெண்கள் ஆபரணம் அணிவதில்லை. அவர்களுடைய வெள்ளைத் தோலுக்கு இந்தத் தங்க ஆபரணங்கள் ஒத்துவராததாலோ அல்லது தாங்கள் ஏதோ நாகரீக சாதியார் என்ற கர்வத்தினாலோ, அவர்கள் அப்படிச் செய்யலாம். ஆனால், அழகான கூந்தலைக் கத்தரிப்பது, அரை நிர்வாணமாக ஆடை அணிவது, சொண்டு முகம் மயிர் இவற்றுக்கு வர்ணம் பூசுவது, குருவி இறகுகளையெல்லாம் தொப்பியில் வைப்பது போன்ற அலங்கார வேலைகளை அவர்கள் ஏன் செய்கிறார்கள்? அவையெல்லாம் இந்தக் காமாலைக் கண்ணருக்கு அநாகரீகமாகப் படுவதில்லையா?

சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். பெண்கள் ஆபரணம் அணியும் பழக்கம் நமக்குப் பழமையானது. நமது மூதாதையர்கள் இதை ஒரு கலையாகவே பேணிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஆபரணங்களைப் பற்றிய பலவகைச் செய்திகள் பரந்துபட்டிருக்கின்றன. இயற்கை அழகில்லாதவர்களே ஆபரணங்களாற் பொலிவுபடுத்தலாம் என்ற நம்பிக்கையை அவர்கள் பெற்றிருந்தார்கள். 'அழகுக்கிட்டால் ஆபத்துக்குதவும்' என்ற அனுபவ சித்தாந்தத்தை அவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே புராதனமான இந்தப் பழக்கத்தை நாம் கைவிடுவது புத்திசாலித்தனமல்லவென எண்ணுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாப் பழக்கங்களால் நமது வருவாயை அழித்துவிடாமல், பெறுமதியுள்ள இவ்விதப் பொருள்களை வாங்கிச் சேமிப்பது மேலல்லவா? பகுத்தறிவுடையார் இதைச் சிந்தித்துப் பார்க்க! பெண்களுக்கு ஆபரணம் அவசியமென்பதை மறுமுறையும் வற்புறுத்துகிறேன்.

தமிழுக்கு ரோமன்லிபி

தமிழின் வளர்ச்சிக்கு அதன் வரிவடிவம் உதவி செய்ய வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், ரோமன் லிபியைக் கையாள்வதை எதிர்க்கின்றோம்!

தமிழுக்கென்று பல்லாயிரம் ஆண்டுகளாக ஒரு தனியுருவம்—வரி வடிவம்—இருந்து வருகிறது. அது நமக்கு திருப்தியளிக்கவில்லை என்ற காரணத்தாலோ அன்றி, பிறபாஷையாளரும் தமிழை விளங்கிக் கொள்ள வேண்டும்—விரும்பிக் கற்க வேண்டும் என்ற காரணத்தாலோ, ரோமன் லிபியை எடுத்தாளலாம் என்று சிலர் கருதுகின்றார்கள். அவர்களது முயற்சி 'தலையைச் சுற்றி மூக்கைத் தொடும்' முறையாக இருப்பதோடு, அனுபவ சாத்தியமற்றதாகவும் நமக்குப் படுகிறது.

தமிழ்ப் பெண்ணுக்கு ஆங்கில முறையில் அல்லது ஆங்கிலப் பெண்ணுக்குத் தமிழ் முறையில் உடை உடுத்துப் பார்த்தால், எவ்வளவு அநாகரிகமாயும் அவலட்சணமாயும் தோன்றுமோ, அவ்விதமே ரோமன் லிபியில் தமிழை எழுத முற்படுவதும் இருக்கும். இன்னுமொன்று, எத்தனையோ ஆயிரக்கணக்கான பழந் தமிழ்ச்சுவடிகள் நாளாவட்டத்தில் கவனிப்பாரற்று அழிந்தொழியவுங்கூடும். ஏனென்றால், இப்பொழுதிருக்கும் தமிழ் நூல்களையெல்லாம், ரோமன் லிபிக்கு மாற்றுவது கஷ்டமாதலின், வழமையான வரி வடிவில் இருப்பவற்றை வருங்காலச் சந்ததிகள் விளங்கிக் கொள்ள மாட்டாது இடர்ப்படுவர், பழைய சிலாசாசனங்களை வாசிப்பதற்கு இப்பொழுது கஷ்டப்படுவது போல. ஆதலால், பழந்தமிழ் இலக்கியப் பயிற்சி மங்கும்!

மற்றுமொன்று: தமிழ்நாட்டிலே தமிழ் எழுத்துக்களுக்கு இடத்துக்கிடம் வெவ்வேறு விதமான உச்சரிப்புகள் உண்டு. இந்த வேறுபாடுகள் வாய்ப்பேச்சிலே தான். எழுத்திலே இவ்வேற்றுமைகள் பெரும்பாலும் இருப்பதில்லை. ரோமன் லிபி, நடைமுறையில் வந்தால், ஒவ்வொருவரும் தத்தமது உச்சரிப்பை நிலைநாட்டத் தொடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகப் பிறகு என்ற சொல்லை Piraku, Pirahu, Piragu என்றெல்லாம் எழுதுவர். இக்குழப்பத்தைச் சென்ற வைகாசி மாதச் 'சக்தி'யிலேயே காண முடிகிறது!

புதுவரி முகப்பிலும், பெயர்களின் முதலிலும் பெரிய (Capital) எழுத்துக்களையே போடுகிற ஆங்கில வழக்கத்துக்கு விரோதமாக, தமிழில் ரோமன் லிபியைக் கையாள வேண்டியும் இருக்கும். உதாரணமாகக் 'கம்பன்' என்பது 'Kampan' எனவருகிறதே. 'நடராஜா' என்பதை எழுதும்போது பெரிய 'N' ஐ உபயோகித்தால் 'ணடராஜா' என உச்சரிக்கப்படுமே! ஆகவே, தமிழர்க்கு மட்டுமன்றி அன்னிய பாஷையாளருக்கும் அந்த முறை பெரிய சிக்கல்களை உண்டாக்கிவிடும்.

இவற்றையெல்லாம் ஆராய்ந்துதான் 'ரோமன் லிபி'யைக் கொண்டு வந்து புகுத்துவது சரியன்று. அதனை மக்கள் ஆதரிக்கவும் மாட்டார்கள், அவர்களுக்கு உண்மையான விழிப்பேற்படும்போது, வேண்டாதபடி புகுத்தப்பட்டிருக்கும் அனைத்தையும் உதறித் தள்ளிவிடுவார்கள் —என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார்.

ஆகவே, ரோமன்லிபி முயற்சியைக் கைவிட்டு, தமிழ் வரிவடிவிலேயே சில ஆக்க வேலைகளைச் செய்வதுதான் நல்லது.

விற்பதற்கோ? கொள்வதற்கோ?

அவன் ஊர்பேர் யாருக்கும் தெரியாது; இளம் வாலிபன்; மதுரை வீதியில் வளையல் விற்று வருகிறான். அவனுடைய அழகான தோற்றமும், புன்முறுவல் பூத்த முகமும் கவர்ச்சியான பேச்சும் ஆடவர்களைக் கூட, வளையல் வாங்கி அணியும்படி தூண்டுகின்றன என்றால், பெண்களைப் பற்றிப் பேசவேண்டுமோ? காந்தத்தினால் இரும்பு கவரப்படுதல் போல, மதுரையில் உள்ள இளம் பெண்களெல்லாம் அவனுடைய வளையலுக்கு—இல்லையில்லை, அவனுக்குத்தான்—அடிமைகளாகி இருக்கிறார்கள்.

''வளையல்! வளையல்!'' என்று அவன் கூவிக் கொண்டு வரும் போது பார்க்க வேண்டும். அக்கம்பக்கத்திலுள்ள பெண்களெல்லாம் 'வேணுகானத்தில் மயங்கிய கோபியர் போல்' அவனைச் சூழ்ந்து கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரியோடு பேரம் பேசுவர் சிலர். அவனுடைய பொருள்களைத் தொட்டிழுத்து வேடிக்கை பார்ப்பவர் சிலர். அந்த வாலிபன் கைக் காவலுக்காக வைத்துக் கொள்ளும் 'மழு' என்ற ஆயுதத்தைக் குறித்து உரையாடுவர் சிலர். இப்படியாக, அந்தப் பெண்களனைவரும் தத் தமது உள்ளக் கிளர்ச்சியை ஏக காலத்தில் வெளிக்காட்டிக் கொண் டாலுங்கூட, வாலிபன் அவர்களுக்குச் சற்றும் சளைப்பதில்லை. எல்லா ருக்கும் திருப்தியான முறையில் தனது வேலையை முடித்துக்கொண்டு சென்று விடுவான்.

''சுற்றியுஞ் சுற்றியும் சுப்பர் கொல்லையில் தான்'' என்பது போல வியாபாரியும் அந்த ஊரிலே நிலைத்துவிட்டான். பெண்களும் அவனைப் பிரிவதற்கு மனமின்றி ''வளைவளை'' என்று வளையம் போடுகிறார்கள். இந்த நிலையில் எமக்கு ஒருவகையான சந்தேகம் உதிக்கிறது. மதுரைப் பெண்கள் செல்வச் செருக்குள்ளவர்களா? அல்லது வளையல்காரன் ஒரு சில்லறைச் சூழ்ச்சிக்காரனா?

கடைசியில் உண்மை வெளியாகிறது. அந்த வாலிபன் உண்மையான வியாபாரியல்ல; பெண்களையெல்லாம் தமது மாய நடிப்பினாலே மயக்கி, அவர்களிடத்துள்ள வளையல்களையே கொள்ளையடிக்க வந்த 'மாயாவி' அவன்.

எப்படி இருக்கிறது? 'வளையல் விற்கவந்து வளையல் பறிக்கும் கள்வனை'த் தேடிப்பிடித்து நல்ல படிப்பினையோடு ஊரைவிட்டு ஓட்ட வேண்டும். இதுதான் சரியான காரியமல்லவா?

ஆனால், மதுரை நகரிலுள்ள எவராவது எங்களைப்போல நினைக்க வில்லை. மதுரைப் பகுதியிலுள்ள உயர்குடிப் பெண்களுக்கெல்லாம் அவசியம் வேண்டியவனான ஒருவனை—அம்மங்கை நல்லாரின் உயிருக் குயிராய் இருக்கிற ஒருவனை—அவர்களா இழக்கத் துணிவர்? இருந் தாலும், அவனைக் கொஞ்சம் கிண்டல் செய்து, அவனது உள்ளப் பண்பைச் சிறிதளவாயினும் அறிந்து விடவேண்டுமென்று, அனுபவ முள்ள ஒரு வாயாடிப்பெண் துணிந்து விட்டாள்.

அவள், அவனை எல்லாரும் கூப்பிடுவது போல ''வளையல்காரா'' என்றோ, ''ஏவளையல்'' என்றோ அழைக்க விரும்பவில்லை. ஆனால், வியாபாரியின் உண்மைப் பெயரோ ஒருவருக்கும் தெரியாது. அப்படி யானால் எப்படி அவனை விளிப்பது? அவனுடைய போலி வேடத்தைச் சுட்டிச் சிறிது கேலி செய்யும் முகமாகவே அழைக்கவும் வேண்டும்; அதற்கேற்ற வகையில் ஏசவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வலங்கொண்ட மழுவுடையீர்''—இதுதான் அவள் தொடங்கிய விதம் ''வளையல்கள் விற்பதற்கோ கொள்வதற்கோ புறப்பட்டீர்''—இதுதான் அவள் இறுதியாகக் கேட்ட விஷயம். இடையிலே 'குத்த'லாக 'கிண்ட'லாக, 'குறிப்'பாக எத்தனையோ காரியங்களைப் புலப்படுத்தி விடுகிறாள். ''மதுரை மாநகரிலுள்ள மங்கையரெல்லாம் உன்னிடத்து 'மையல்' கொண்டு, உருக்குலைந்து வருகிறார்கள்'' என்ற செய்தியும், கதையோடு கதையாக அவள் பேச்சிலே கலந்து விடுகிறது! சொல்லாமற் சொல்லும் தந்திரவுத்தியிலே பெண்கள் திறமை புலப்படுவதைப் பாருங்கள்:

''வலங்கொண்ட மழுவுடையீர்
வளைகொண்டு விற்பீர்போல் மதுரைமூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார்
கைவளையெல்லாங் கொள்ளைகொள்கின்றீரால்;
பலங்கொண்ட செட்டுமக்குப்
பலித்தது நன்றால்; நீரிப் பாவை மார்க்குப்
பொலங் கொண்ட வரிவளைகள்
விற்பதற்கோ கொள்வதற்கோ புறப்பட்டீரே?''

(குலங்கொண்ட—உயர்குடியிற் பிறந்த, பலம்—பலன், செட்டு—வியாபாரம், பலித்தல்—பயன் பெறுதல்).

சோமசுந்தரக் கடவுள் வளையல் விற்கப் புறப்பட்ட காலத்துப் பெண்கள்பால் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கண்டாளொருத்தி, இவ்வாறு கூறினாளெனக் 'கவி தெரிவிக்கின்றது'.

தண்டனை*

தாய்மாமன் மகள்—கோசல நாட்டு இளவரசியைத்தான் இராமன் மணம் புரிவானென்று எல்லோரும் நம்பியிருந்தார்கள். அந்த நம்பிக்கையைப் பறக்கடிக்கிறது, மிதிலாபுரியில் இருந்து வந்த செய்தி. 'இராமன்—சீதை' திருமணவோலை அரண்மனையுள் மட்டுமல்ல, அயோத்தி முழுவதிலுமே ஆசாடங்கத்தின் அறிகுறியாக அடிபடுகிறது.

தசரதனுக்கு இதைக் குறித்துப் பெரிய மனக்கொதிப்பு; தன்பிள்ளை—இராமன், ஜனகனின் வளர்ப்பிலிப்பெண் சீதையில் 'மையல்', கொண்டானே என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கேற்காத இந்த அபகீர்த்தியை, குலப்பெருமையை அழிக்க வந்த இந்த இழிசெயலை அவன் மனம் மறக்க மறுத்தது! அவன் சிந்தனைப் புயலெழுகிறது:

''கொடியிலே பிறந்து செடியிலே விழுவது' போல, இராமன்தான் மூளையில்லாமல் நடந்து கொண்டாலும், அந்த 'இராஜரிஷி' கௌசிகனுக்குமா மதிமயக்கம்! 'இராமா இது உனக்குத் தகாது' என்று ஒரு வார்த்தை சொல்லித் தடுத்தானா பாவி. தன்பிள்ளை என்றால் தானே, அவனுக்குக் கவலையிருக்கும். அன்னியன் பிள்ளை எக்கேடு கெட்டாலென்ன—என்று இருந்து விட்டானாக்கும், சண்டாளன்!

இராமனைத்தா, இல்லையேல் பிடிசாபம்—என்று பிடிவாதமாக நின்று கூட்டிப் போனவன், வேள்வி காப்பதிலே பயன்படுத்தியபின் இராமனை விருதாவாக விட்டுவிட்டாயே. 'நம்பநட; நம்பி நடவாதே' என்பதை இன்று மெய்ப்பித்து விட்டான் துரோகி!

''முனிவர் என்ற சாட்டில், ஜனகனுக்குக் கையாளாக இருந்து இந்தச் சூழ்ச்சியைச் செய்தானோ? அல்லது மேனகை என்ற தேவ அரம்பையின் மேனிமினுக்கிலே ஈடுபட்டுச் சகுந்தலைக்குத் தந்தையானாற் போல, யாரோ ஒரு வேசியின் கண்வெட்டிலே சொக்கி, இந்தச் சீதைக்கும் தகப்பன் ஆனானோ?

''வம்புப்பிள்ளை'' என்ற வசை பரவாமல், ''தெய்வக்குழந்தை'' என்று சீதையைப் பெருமைப்படுத்தி, சிவவில்லுத் திருவிளையாட்டையும் ஏற்பாடு செய்து...... இப்படியெல்லாம் நாடகம் நடித்தது இந்தக் கொடியவனின் தந்திரங்கள் தானா?

''போகட்டும். இந்த இலக்குவன்தான் நல்ல புத்திசாலியாயிற்றே. இராமனுக்குத் துணையாயிருப்பானென்று அனுப்பி வைத்தேனே. அவனுமா இந்தச் சதியாலோசனையை உணராமல் போனான்? 'மூத்தது மோழை; இளையது காளை' என்றதெல்லாம் பொய்த்துவிட்டது; 'சாடிக்கேற்ற மூடி' போல, தமையனுக்கேற்ற தம்பி வாய்த்தான்!

''நல்லது. தாய்தந்தையை மதியாமல் தன் எண்ணப்படி நடந்து கொண்ட இந்தத் தடிப்பயல் இராமனுக்கு ஏற்ற புத்தி கற்பிக்கிறேன். வரட்டும்!''.

தசரதனுடைய சூழ்ச்சி பலித்துவிட்டது. பரதனுக்குப் பட்டம் கட்டி, இராமனைக் காட்டுக்கனுப்பும் வேலையும் பூர்த்தியாகிவிட்டது. கூனி என்ற 'மகா மாய மந்திர'த்தால் கைகேசியைக் 'கிளறி'விட்டு, அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரங்களுக்காக இராமனை—மட்டுமல்ல, இலக்குமணன், சீதை என் போரையுந்தான்—'பலிகொடுக்க' ஏற்பாடு நடந்து விட்டது.

இப்பொழுது ''பழிக்குப்பழி' வாங்கியதைக் குறித்துத் தசரதன் மகிழ்ந்து கொண்டிருக்க வேண்டியவன்; ஆனால், அப்படியில்லை. ஏதோ 'பிரமகத்தி' பிடித்தவன் போலப் பொலிவிழந்து எதற்கோ ஏங்கிச் சாகிறானே! அது ஏன்? தசரதனது சிந்தனாசக்கரம் இதற்கு ஏதாவது விடை சொல்லுகிறதா, பார்ப்போம்:

''......ஆம். நான் மகாபாபி! ஈவிரக்கமில்லாத கல் நெஞ்சன்! ஒரு பாவமுமறியாத அந்த இராமனுக்கு இவ்வளவு கொடுந் தண்டனை விதித்தது அநியாயம்! அநியாயம்!!

''மன்னவன் பணியன்றாகில்
நும்பணி மறுப்பனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ!
என் இனி உறுதி அப்பால்;
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்''.

என்று, கைகேசிக்குச் சொல்லிவிட்டுப் போனானே, இராமன்—என் கண்மணி. ஆ! என் சூழ்ச்சியினாலேதான் இவையெல்லாம் நடந்தன வென்று அறியவரின், அந்த இராமன் என்ன நினைப்பான்? உலகம் என்ன நினைக்கும்? மனுநீதி தவறாத மன்னர் குடிக்கு மாசிழைக்க வந்தானே மாபாவி! இனி நான் இந்தப் பாவமூட்டையைச் சுமந்து கொண்டிருப்பதிலும் இறப்பதே மேல்......''.

தசரதர் மூர்ச்சையாகிறார். மனச்சாட்சி அவரைக் கொன்றது. ''புத்திர சோகத்தால் தான் இறந்தான் தசரதன்'' என்று மற்றவர் கள் நினைக்கிறார்கள்.

[*'கம்பனை'ப் புரட்டிக் கொண்டிருந்ததில், இந்த அசம்பாவிதமான யோசனை உண்டாகியிருக்கிறது. இதுவரை கம்பனைப் படிக்காதவர் களை இனியாவது பார்க்கச் செய்வதற்கு இந்தத் தண்டனையை—வம்புக் கதையைச் சிருஷ்டித்து விட்டேன். நடக்குமா?]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தொள்ளாயிரக்காதல் I

விட்ட பாடல்கள்*

கண்டி—தலதா மாளிகையில் நடந்த ஒரு சம்பவம்: புத்த தந்தத்தைப் பொதுசன பார்வைக்கு வைத்திருந்தார்கள். ஆண்—பெண், வாலிபர்—வயோதிபர், ஏழை—பணக்காரன்...... என்ற பேதமின்றிப் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் அங்கு வந்து கொண்டிருந்தார்கள். ஜன சமுத்திரம் அங்கு அலைமோதிக் கொண்டிருந்தது. வெப்பம் பசி களைப்பு முதலிய வேதனைகளையும் பொருட்படுத்தாது, நாட்கணக்காகக் காத்துக் கிடந்தவர் பலர். ''எட்டாத பழம் புளிக்கும்'' என்ற போக்கில், 'வெற்றிகரமாகப் பின்வாங்கினவர்களும் உண்டு'.

பிரயாண அலுப்பையும் பாராது நாலைந்து நாள் அலைந்து 'ஏமாந்த சோணகிரி' ஒருவர் சொன்னார், ''இந்த ஆட்களின் தலையிலே ஏறிப்போய்ப் பார்த்தாலென்ன?'' என்று. அவருடைய அதிருப்திதான், இந்த அதிதீவிரமான அதிகப்பிரசங்கித்தனத்தைக் கிளப்பி விட்டிருக்க வேண்டும். பார்க்கப்போனால், ஒரேயொரு பல்லு—அதுவும் பொய்ப்பல்லோ என்று சந்தேகிக்கும்படியான நிலையில் இருக்கிறது. ஆனால், ஜனங்களின் ஆவலும் பயபக்தியும்......ஆம். ஆச்சரியமான சம்பவந்தான்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் மதுரையிலும் இப்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்தது:

பாண்டிய மன்னன் ஒருவன் மதுரை வீதியில் பவனி போகிறான். ''பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம்'' போல, ஜனக்கும்பல் அவனைச் சுற்றித் தொடருகிறது. தூரத்திலே ஒரு யுவதி இந்தக் காட்சியைப் பார்த்துப் பரவசங் கொள்ளுகிறாள். அவள் வேறு யாருமில்லை. அந்தப் பாண்டியனைக் காதலித்த ஒரு பெண்; தலைவி! அவளுக்கு எப்படியாவது பாண்டியனை அணைத்தின்புற வேண்டுமென்ற ஆவல், விஷம் போல ஏறுகிறது. ஆனால், ஜனங்கள் மட்டும் அவளுக்கு இடம் விட்டுக் கொடுப்பதாயில்லை. தங்கள் தங்கள் பாட்டில், இராச பவனியிலே லயித்து நிற்கிறார்கள். அவர்களுக்கு அரசன்மேல் அவ்வளவு விசுவாசம்! இந்த நிலையில், தலைவி என்ன செய்வாள்? பக்கத்தில் நிற்கும் தோழியிடம் தனது மனக்குறையை வாய்விட்டுச் சொல்லுகிறாள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அறிவாரார்? யாமொருநாள்
பெண்டிரே மாகச்
செறிவார் தலைமேல்
நடந்து—மறிதிரை
மாட முரிஞ்சும்
மதுரையார் கோமானைக்
கூட ஒருநாள்
பெற!''

மடங்கியெழும் (வைகைநதி) அலைகள், மாடத்தைத் தேய்க்கும்படியான வேகத்தோடு பாய்கிற—மதுரை மன்னனை, நாங்கள் ஒரு நாளைக்குப் பெண்களாகவே, இங்கு கூடிக் குவிந்திருக்கிற ஜனங்களின் தலைகளில் ஏறி நடந்து போய்ச் சேருவதற்குரிய வேளையை அறிந்தவர்கள் யார்?—என்பது தலைவியின் ஆவேசங் கலந்த கேள்வி.

ஆவல் எவ்வளவுக்குத் தூண்டுகிறதோ—அவ்வளவுக்கு, ஆத்திரங் கொள்வதும் மனித இயற்கை. சடவஸ்துக்களான அந்த நீரலைகளே, தமது போக்கைத் தடுத்துக் கொண்டருக்கும் மாடங்களோடு மல்லுக் கட்டிக்கொண்டிருக்கும்போது......ஆம். இந்தச் சரவஸ்துவான பெண் மட்டும் பொறுத்திருப்பாளா? ''எப்படியும் இந்த மூடப் பிரகிருதிகளான ஜனங்களின் தலையில் ஏறிப் போயாவது என் காதலனை அணையத்தான் வேண்டும்'' என்று சொல்வது போலிருக்கிறது அவள் பேச்சு.

''என் செயலைக் குறித்து, இந்த மனிதர்கள் 'ஆண்மாரி' 'ஆண்பிள்ளைத் தேவடியாள்'...... என்றெல்லாம் வக்கணை சொன்னாலும் பாதகமில்லை. நாங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும்!'' என்று அலட்சியமாகப் பேசுவதாகவும் தொனிக்கிறது.

''அறிவாரார்?'' என்ற வினா, ''இந்த ஜனங்கள் அறிந்திருப்பார்களானால், இதுவரையில் எனக்கு வழிவிட்டுருக்கமாட்டார்களா?''—என்ற ஏக்கக் குறிப்பையும் எதிரொலிக்கிறது.

— 2 —

பாயும் படுக்கையுமாக நோயுற்றிருக்கும் ஒருவனுக்கு, அவனுடைய பிறந்தநாட் கொண்டாட்டம் அவ்வளவாகச் சுவை கொடாது. விருந்துகள் கேளிக்கைகள் ஒன்றிலும், தான் ஈடுபட முடியாமல் இருக்கிறதே என்ற ஏக்கம், அவனுடைய நோயை இன்னும் அதிகமாக்கவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான தர்மசங்கடம் ஒரு பெண்ணுக்கு ஒருமுறை நேர்ந்த தாம். அந்தப் பெண்ணும் பாண்டியனையே கணவனாகப் பாவனை செய்யும் ஒரு 'பிரகிருதி'யாம். காதற் பிரேமை, அவளது உடல் நலத்தைப் பரிசோதிக்கத் தொடங்கியதாம். போருக்குப் போன பாண் டியன் வெற்றி விருதோடு வரும் நாளை எதிர்பார்த்து எதிர்பார்த்து அவள் மனம் சலித்துவிட்டதாம். ஒருநாள் மாலை, காம நோயினால் இளைத்துப்போன உடம்போடு அவள் படுத்திருந்தாளாம். 'எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊற்றியது போல' அந்த நேரத்தில் வாடைக் காற்றும் வளைந்தடிக்கத் தொடங்கியதாம், தோழி அவளது பரிதாப மான நிலைக்கு இரங்கிப் பின்வருமாறு தனக்குள்ளே முணுமுணுக் கிறாள்:

''பிணிகிடந் தார்க்குப்
பிறந்தநாள் போல
அணியிழை யஞ்ச
வருமால்—மணியானை
மாறன் வழுதி
மணவா மருள்மாலைச்
சீறியோர் வாடை
சினந்து!''

'மணிகள் கட்டிய யானைப்படையையுடைய பாண்டியன், எங்கள் தலைவியை மணந்து கொள்ளாமல் இருக்கிற மையல் விளைக்கும் இந்த மாலை வேளையிலே, வாடைக்காற்றானது, நோயாளிக்குப் பிறந்தநாள் வருவதுபோல, அழகிய ஆபரணங்களையணிந்த தலைவி பயப்படும்படியாகச் சீறிச் சினந்து வருகிறது'—என்பது தோழியின் இரக்கம் நிறைந்த பேச்சு. ''வாடையே, சந்தர்ப்பமறியாமல் எங்கள் தலைவியிடம் வந்து உனது திருவிளையாடலை நடத்துகிறாயே. இது உனக்குத் தகுமா?''—என்பது குறிப்பு.

தனது போர் யானைகளால் ஜனங்களுக்கு ஆபத்து நேரிடாதபடி, அவற்றின் கழுத்திலே மணிகளைக் கட்டிக்கொண்டு செல்லும் இந்தப் பாண்டியனது தர்மராச்சியத்திலே, 'பனையால் விழுந்தவனைமாடேறி மிதித்தது போல' பாண்டியனையே நினைத்துருகும் எங்கள் தலை வியை மேலும் வெதுப்புகிறதே வாடைக்காற்று. இந்தக் கொடுமை தீர பாண்டியன் அவளை மணந்து கொள்ளானா?—என்பது தொனிப் பொருள். 'மாறன்' 'வழுதி' என்று ஒரே பொருளில் வரும் சொற்களை அடுக்கிப் பேசினாலும், அது பாண்டியனிடத்து வைத்திருக்கும் மதிப்பை வெளிப்படுத்துவதற்கு மனஞ் செய்த தூண்டுதல் ஆகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— 3 —

"கனகசபாபதி தரிசனம்—ஒருகால்
கண்டாற் கலிதீரும்......".

என்று பாடிப் பரவசங் கொண்ட நந்தனுக்கு, அத்தரிசனத்தால் எவ்வளவு சாந்தி கிடைத்ததென்பதைப் புராணங்களிற் படித்தறிந்திருக்கிறோம். அதுபோல, கோதை என்ற சேரமன்னனது இராச பவனியைப் பார்த்துத் தனது காதல் வேட்கையைத் தணிக்க நினைத்தாளாம் ஒருத்தி. ஆனால், இங்கு விளைவு விபரீதமாக முடிந்ததாம். "சேரனைப் பவனியிற் கண்டால், எல்லாப் பெண்களுக்கும் பசலை மாறி விடுகிறது. எனக்கு மட்டும் தீராத நோயாய் இது இருக்கிறதே" என்று அவள் அங்கலாய்ப்பதைப் பாருங்கள்.

"வாமான்தேர்க் கோதையை
மான்தேர்மேற் கண்டவர்
மாமையே யன்றோ
இழப்பது மாமையிற்
பன்னூறு கோடி
பழுதோ என் மேனியிற்
பொன்னூறி யன்ன
பசப்பு?"

தாவிப் பாய்கின்ற குதிரைகள் பூட்டிய தேரையுடைய கோதையை, தேர்மேல் வைத்துப் பார்த்த பெண்கள், தங்களது பசலையை இழந்து விடுவார்கள். ஆனால், என்மேனியில், பொன் ஊறியது போன்று படர்ந்திருக்கும் பசலை மட்டும், அவர்கள் மேனியில் உள்ளதைக் காட்டிலும் பல நூறு கோடி மடங்கு பழுதானதோ?—என்பது அவளது சந்தேக வினா.

காதலுக்கும் காமத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அந்தப் பெண்ணின் அந்தரங்கக் காதல், அளவுக்கு மிஞ்சிய காமவெறியைக் கிளப்புகிறது. நிறைவேறாத அந்த இச்சையின் பிரதிபலிப்பாக, நெஞ்சு முகம் முதலிய இடங்களிலெல்லாம் தேமல் படருகிறது. ஆனால், அரசன் அவளைக் கடைக்கணிக்காத வரையில், அது எப்படிக்குறையும்? அரசன் மேலுள்ள பிரேமையால், அவனைக் குறை கூறாது தன்னையே தான்—தனது துர்அதிர்ஷ்டத்தையே—நொந்து கொள்ளுகிறாள்!

கோதை என்னை மணந்து கொள்ளானா?—என்பது குறிப்பு.

[*டி. கே. சி. அவர்களின் முத்தொள்ளாயிரப் பதிப்பில் 'விட்ட பாடல்கள்' என்ற ஒன்பது பாடல்களில் மூன்று பாடல்களுக்கு விமர்சனம் இது].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தொள்ளாயிரக்காதல் II

விட்ட பாடல்கள்

குழந்தைகளுக்குப் பிடிவாத குணம் அதிகம். அவர்கள் ஏதாவதொரு பொருளிலே மனம் வைத்துவிட்டால், பின்பு அதை மாற்றுவது கஷ்டம். கேட்ட பொருளைக் கொடுத்தே தீரவேண்டும்; அல்லது, அவர்களது கவனத்தைக் கலைக்கத்தக்க வேறொரு கவர்ச்சியை எழுப்பவேண்டும். குழந்தைகளோடு ஊடாடுபவர்களுக்கு இந்த உண்மைகள் தெரியும்.

காதலர்களுடைய மனநிலையும் இப்படிப்பட்டது தான். என்றாலும் ஒரு வித்தியாசம் உண்டு. காதலர்களை அணாப்பமுடியாது. பிடித்ததை அழுங்குப் பிடியாகச் சாதிப்பார்கள். ''காதல் காதல் காதல்; காதல் போயிற் சாதல் சாதல்!''—என்ற மந்திரத்தில் சுழலுவார்கள்.

'கோதை' என்றொரு சேரமன்னன். நல்ல ஆணழகன். அலங்காரப் பிரியன். அவன் அடிக்கடி வீதியிலே பவனி வருவது வழக்கம். ஓர் இளம் பெண், அவனைக் கண்டு காதலிக்கிறாள். தனது அந்தஸ்தைப் பற்றியோ, காரிய சித்தியைப் பற்றியோ அவள் எண்ணவில்லை. இந்த நிலையில், மனக்கோட்டை கட்டுவதில் அவள் மனம் ஈடுபடுகிறது. பகற்கனா, பலிப்பதில்லையே! ஆனால், ''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்ற விதமாக, அவளது காதற்பற்று வளர்ந்து வருகிறது.

ஒருநாள் இரவு. பால்போல நிலவெறிக்கிறது. பனியோ பல்லைக் கிடுகிடுக்கப் பண்ணுகிறது. அந்த வேளையில், அடைதற்கரிய இலட்சியத்தை அடையப்போகிறவர்கள் போல, அவள் வெளியே வருகிறாள். வெறும் பாழ் வெளியை உற்றுப் பார்க்கிறாள். ஒருவேளை, அரசன் தன்னைத் தேடிவந்தால், தானில்லாததைக் கண்டு திரும்பிவிடவுங் கூடும் என்ற கவலை அவளுக்கு. அதனால், நட்ட கட்டை போல, வெட்டவெளியில் கால்கடுக்க நிற்கிறாள்? இந்தப் பரிதாபமான நடவடிக்கைகளைக் காணச் சகிக்கவில்லை அவள் தோழிக்கு. ''அம்மா, உறக்கமின்றிப் பனியுள் நின்று உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. வா, படுத்துக்கொள்......'' என்று ஆதரவாக அழைக்கிறாள். அதற்குத் தலைவியின் பதில், பாட்டாக வருகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடும்பனித் திங்கள்தன்
கைப்போர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொல்
தோழி—நெடுஞ்சின வேல்
ஆய்மணிப் பைம்பூண்
அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றஎன்
நெஞ்சு!''

''தோழி, பெரிய கூரான வேலையும் ஆராய்ந்தெடுத்த இரத்தினாபரணங்களையும், பிரகாசமான மாலையையுமுடைய கோதையைக் காண்பதற்காக வெளியே சென்றிருக்கும் எனது மனம், கொடிய பனியோடு சேர்ந்த நிலவையே தனது கைப்போர்வையாகக் கொண்டு, நெடிய வாயிலின் புறத்தே நின்றுவிட்டதடி'' என்பது பொருள். மனம் வெளியே கிடக்க உடல் எவ்வாறு உறங்கும்? என்பது இதன் தொனிப் பொருள்.

''கலவிக்களியின் மயக்கத்தே
கலைபோயகன்ற தறியாமல்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்,
நீள்பொற் கபாடந் திறமினோ!''

என்ற கலிங்கத்துப் பரணிச் செய்யுளிலும், நிலவைத் துகிலாக உருவகித்திருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

— 2 —

ஏதோ ஒரு அரசாங்க இலாகாவில் வேலை பார்த்த ஒருவர், மேலதிகாரிகளால் தண்டிக்கப்பட்டாராம். அவர் அந்த ஆத்திரத்தைத் தமது மனைவியின் மேல் சாதித்தாராம். மனைவி, சமையல்காரன் மேல் சாதிக்க, சமையல்காரன், நாயின் மேல் சாதித்தானாம். நாய், பூனையின் மேல் சாதித்ததாம்...... இப்படியாக, அவரவர் தமக்கு எளிமையானவர்களிடத்திலே வஞ்சம் தீர்க்கும் வழக்கத்தைப் பற்றிய ஒரு வேடிக்கைக் கதை உண்டு. 'பழியோரிடம் பாவமோரிடம்' என்ற வேடிக்கைக் கதையும் இதே மனித இயற்கையைத்தான் சுட்டுகிறது.

ஒரு பெண், கிள்ளியென்ற சோழ மன்னனைக் காதலித்தாள். ஓயாமல் அவனைப் பற்றியே நினைப்பாள்; பேசுவாள்; எல்லாஞ் செய்வாள். ஆனால், அரசனோ அவளைக் கடைக்கணிக்கவில்லை. 'இன்று வருவான், நாளை வருவான்' என்று அவள் எதிர்பார்த்து எதிர்பார்த்து மனம் புண்ணானதன்றி அடைந்த பலன் ஒன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது காதற் பைத்தியம் ஒருநாள் அளவுக்கு மிஞ்சிவிட்டது. விரகதாபத்தினால் நொந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளது ஆசைநோயை அதிகரிக்க வந்தது போல, வாடைக்காற்றும் 'குளுகுளு' என்று சுழன்றடித்தது. 'வாடைக்காலந் தொடங்கிவிட்டால், மன்னன் போர்முனையில் இருந்து திரும்பி விடுவான். அதன் பிறகாவது என்னை வந்து அடைவான்' என்று நம்பியிருந்த அவளுக்கு, அன்றும் அவன் வராதிருந்தது ஆச்சரியத்தையும் மனத்துடிப்பையும் கூட்டி விட்டது. அதனால், அரசன்மேல் அவநம்பிக்கை கொள்ளுகிறாள். இரக்கமில்லாதவன், கல்நெஞ்சன், உலோபி—என்றெல்லாம் அரசனைச் சபிக்கவுந் தொடங்குகிறாள். அரசன் பக்கத்தில் இருந்தாலல்லவா, அவள் தனது ஆத்திரத்தைத் தீர்க்க முடியும்? ஆனால்......ஆம். இவ்வாறு தனது விரகதாபத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது எது? அப்பொழுது வீசிக்கொண்டிருக்கும் வாடைக்காற்றுத் தானே? அதைப் பார்த்துத் தனது வஞ்சத்தைத் தீர்க்க எண்ணுகிறாள். வக்கணைகள் பாட்டாக வருகின்றன:

''பேயோ? பெருந்தண்
பனிவாடாய், பெண்பிறந்தா
ரேயோ உனக்கிங்
கிறைக் குடிகள்?—நீயோ
களிபடு மால்யானைக்
கடுமான் தேர்க் கிள்ளி
அளியிடை அற்றம் பார்ப்பாய்!''

'பெரிய குளிர்ச்சி பொருந்திய பனியோடு கூடிய வாடையே, மத வெறி பிடித்த யானைப் படையையும், வேகமாய்ச் செல்லுகின்ற குதிரைகள் பூட்டிய தேரையும் உடைய கிள்ளி, எளிமையாய் (எனக்கிரங்காத அற்பகுணத்தோடு) இருக்கிற இந்தவேளை பார்த்து என்னை வருத்த முற்பட்டாய்; நீ உண்மையில் ஒரு பேய் தானோ? உனது தர்பாரில் இறை செலுத்துபவர்கள் என் போன்ற பெண்கள் தானா?'—என்பது கருத்து. பெண்ணாய்ப் பிறந்த என்னை வாட்டு வதை விட்டு அந்தக் கிள்ளியிடம் போய் உனது சாமர்த்தியங்களைக் காட்டி, அவனை வசப்படுத்தித்தரலாகாதா?—என்பது குறிப்பு. கோபமுந் தாபமும் நிறைந்த கலப்புச் சுவைக்கு இந்தப் பாட்டு நல்ல ஒரு எடுத்துக் காட்டாகும். நமது அன்புக்குரியவர் யாராவது நமது வைரிகளோடு உறவாடுவதை நாம் அனுமதிப்பதில்லை. அப்படியில்லை என்று நடந்துவிட்டால், அவர்களைச் சந்தேகிக்கவுந் தொடங்குகிறோம். இது மனித இயல்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணொருத்தி, தனது காதலன் பிறமாதரோடு நெருங்கிப் பழகுவதாக நம்பிவிட்டால், அப்புறம் அவர்களுக்கிடையே பிரிவினை உணர்ச்சி தோன்றிவிடுகிறது. மதனும் ரதியுமாக இருப்போமென்று எண்ணியவர்கள், நாயும் பூனையுமாக மாறிவிடப் பார்ப்பார்கள். பெண்களின் இயற்கை அது.

ஒரு பெண். 'கிள்ளி' என்ற சோழ மன்னனைத்தான் அவளும் காதலித்தாள். வீதியிலே வரும்போதும் போகும்போதும் 'மனங்குளிரக் கண்குளிர'ப் பார்த்து மோகித்தாள். சோழன் தன்னொருத்திக்கே சொந்தம் என்று உரிமை பாராட்டவும் தொடங்கினாள். காதலுக்கும் கற்பனைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இராவேளைகளிலெல்லாம், சோழன் தன்னை வந்து அணைவதாகக் கனாக்காண்பாள். பிதற்று வாள். ஆனால், நனவிலே மட்டும் அவன் வருவதாயில்லை. ஓரிரவு சோழனைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் போது, ஒரு வண்டு அவளுக்கு மேலாகப் பறந்து சென்றது. திடீரென அவளுக்கு ஞானோதயம் பிறக்கிறது. 'சோழன் ஒரு கூத்திக்கள்ளன்; அதனால்தான் அவன் என்னிடம் வருவதில்லை' என்று வண்டைப்பற்றி, வாடைக்காற்றினிடம் அவள் சொல்லும் குறிப்பிலிருந்தே இதை அனுமானிக்க முடிகிறது. பாட்டைப் பாருங்கள்:

''நாம நெடுவேல்
நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையும் நீலமும்
தைவந்து—யாமத்து
வண்டொன்று வந்தது;
வாரல் பணிவாடாய்;
பண்டன்று பட்டினங்
காப்பு!''

'குளிர்ந்த வாடையே, அச்சந்தைத் தருகின்ற வேலைத்தரித்த நலங்கிள்ளியினது சோழ நாட்டிலிருக்கும் தாமரை நீலோற்பலம் முதலிய மலர்களையெல்லாம் தடவிக்கொண்டு ஒரு வண்டு வந்தது. அரசனது பட்டின பரிபாலனம் முன்போலவில்லை. ஆகையால், நீயிவ்விடம் வந்து வீசி என்னை வெதுப்பாதே' என்பது பொருள். இந்த வண்டு பலவகையான பூக்களிலும் சென்று சென்று தேனுண்டு மகிழ்வது போல, நலங்கிள்ளியும் பரத்தையர் மனைகள் தோறும் நுழைந்து காமம் நுகர்ந்து கொண்டிருப்பான். பட்டினக் காவலென்ற சாட்டு; பரத்தையரோடு களியாட்டு! இந்த இலட்சணத்தில், அவன் என்னை நினைப்பானென்பது என்ன நிச்சயம்?—என்பது உள்ளுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய நோக்கில்:

1. புலவர் வறுமை

தமிழ்க் கவிஞர்களுக்குப் புலவர் என்ற பெயருமுண்டு. புலவர் சிந்தனையிலேயே பொழுதைக் கழிப்பதனால், தமது குடும்பப் பொருளாதாரத் தேவைகளைச் சீர்செய்யும் நேரவசதி போதுமானதாக ஏற்படாது. ஆகவே, அவர்கள் தமிழரசர்களையோ, வள்ளல்களையோ அணுகித் தமது வறுமை மிகுதியைப் புலப்படுத்தும் வகையில் இனிதான நல்ல கவிதைகளை அமைத்துப் பாடிப் பரிசு பெறும் வழக்கம் இருந்து வந்தது.

பெருந்தலைச் சாத்தனார் என்பவர் வறியவொரு புலவர். அவரது வறுமை மிகுதியினால் வீட்டு அடுப்படியிலே பலகாலம் சமையல் நடைபெறாதிருந்தது. அதனால் அவ்வடுப்பில் நிலக்காளான் பூத்திருந்தது. உணவின்மை காரணமாக அவரது நன்மனைவியின் முலையிற் பாலுஞ் சுரக்கவில்லையாம். குழந்தை பசியால் அழும்போது தாய் அதனைத் தூக்கியெடுத்துத் தனது முலையைச் சுவைக்க விடுவாளாம். ஆனால், அதிற் பால் வராமையால், குழந்தை தாயின் முகத்தை நோக்க, அந்தத் தாயானவள் என்னை நோக்க, யானும் உன்னை நோக்கி வந்தேன் என்கிறார் புலவர். (அவரது வறுமை மிகுதியை உணர்ந்து, வேண்டும் பொருள் வழங்கியிருப்பான் குமணவள்ளல் என்பது தொனிப்பொருள்).

பெருந்தலைச் சாத்தனாரின் கவிப்புலமையானது பின்வருமாறு குடும்ப வறுமையைப் புலப்படுத்துகின்றது:

> ''ஆடெரி படர்ந்த கோடுய ரடுப்பில்
> ஆம்பி பூப்பத் தேம்பசி யுழற்ற
> இல்லி தூர்த்த பொல்லா வறுமுலை
> சுவைத்தொறுஞ் சுவைத்தொறும் பால்கா ணாமல்,
> குழவிதாய் முகம்நோக்கத் தாயுமென் முகம்நோக்க
> யானும்நின் முகம்நோக்கி வந்தனன் குமணா''.

வறுமை மிகுதி சமையல் நடைபெறாமையையும், சமையல் நடைபெறாமை உணவின்மையையும், உணவின்மை பாலின்மையையும்,, பாலின்மை குழந்தையின் பசி நோக்கினையும், தாயின் பரிதாப நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நோக்கினையும் எனது ஆற்றாமை உன்னைத்தேடி வருவதை யும், காரண—காரியத் தொடர்பு முறையில் அமைந்திருப்பதை இந்தப் பாடல்கள் மூலம் அறியலாம்.

கோடு என்பது அடுப்பங்கால்களையும், குழவி என்பது பால்குடிப் பருவத்திலுள்ள பிள்ளையையும் ஆம்பி என்பது காளானையும் குறிக் கும். ''உள்ளக் கிடக்கை சொல்லிற் பிரதிபலிக்கும்'' என்பதனை இதன் மூலம் அறிய முடிகின்றது.

2. புலவர் வறுமை

சத்திமுற்றம் என்பது தென்னாட்டிலுள்ள ஓர் ஊரின் பெயர். அங்கு வாழ்ந்த காரணத்தால் வந்த பெயர் சத்திமுற்றப் புலவர் என்பதாகும்.

இயற்பெயர் மறைந்துவிட, ஊரால் வந்த பெயரே நிலைத்து விட்டது. அவரும் வறுமையில் வாடிய ஒரு புலவரே. அவர் பாண்டிய மன்னனை அணுகிப் பொருள் பெற்றுவரச் சென்றவர். ஆனால் மாறன் என்ற அந்தப் பாண்டிய மன்னனை அணுகுமுன்னரே, மாலைக் காலமாகிக் கொண்டிருந்தது. பாண்டிநாட்டுக் கூடல் என்றவூரிலுள்ள ஒரு சோலையில் அவர் தங்கியிருந்தார்.

அந்த வேளையில் வாடைக்காற்று வேகமாய் வீசிக் கொண்டிருந்தது. உடுத்திருந்த ஆடையைத் தவிர, போர்த்துக் கொள்வதற்குக் கூடத் துணியின்றி மிகவும் அவதிப்பட்டார். அந்தக் குளிரைத் தாங்கமுடியாது குந்தியிருந்து இருகைகளாலும் உடம்பைப் பொத்திக் கொண்டிருந் தார். அத்தருணத்தில் ஆணும் பெண்ணுமான இரு நாரைகள் குமரிக் கடலோரத்திலிருந்து வடக்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. அவ்விரு நாரைகளையும், தன் பரிதாப நிலைபற்றித் தன் மனையாளி டம் போய்ச் சொல்லுமாறு கேட்டுக் கொள்ளும் முறையில் அமைந்தது பின்வரும் பாடல்:

''நாராய் நாராய் செங்கால் நாராய்
பனம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீராயின் சிறந்த
சத்திமுற்ற வாவியில் தங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு,
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே''.

இப்பாடல் நாரையிடந் தூதுரைக்கும் வகையில் அமைந்துள்ளது. நாரை தூதுரைக்கும் என்ற நம்பிக்கையிற் பாடியிருப்பினும், மாறன் எனப்படும் பாண்டியனின் மனத்தில் இச்செய்யுள் உணர்வைத் தூண்டிப் பரிசு தரப்பண்ணும் என்பது இப்பாடலின் தொனிப் பொருளாகும்.

பனங்கிழங்கைப் பிழந்தது போன்ற கூரிய சிவந்த சொண்டையும், செங்கால்களையுமுள்ள நாரை என்பது புதியதோர் உவமைச் சொற்றொடராகும்.

தெற்கே குமரிக்கடலில் நீராடி வடதிசைக்கேகும் நாரையிடம், ''எமது அரசனாகிய பாண்டியனின் சோலையிலே, குளிர்ந்த வாடை வீசும் மாலை வேளையில், குந்தியிருந்தபடி குளிருக்கு இரு கைகளையும் மாறி மேலைப் பொத்தியபடி இருக்கும் ஏழைப் புலவனைக் கண்டோம்''—என்று சொல்வதால், புலவரின் வறுமை வெளிப்படையாகின்றது.

மனைவிக்குச் சொல்லியனுப்பும் தூதுரையைக் கேட்டு இரங்கிப் பாண்டியன் உதவ முன்வருவான் என்ற நம்பிக்கையிற் பாடப்பெற்ற பாடலெனவே கொள்ள வேண்டும்.

''ஆடையின்றி என்பது முதல் ஏழையாளனை'' என்பது வரையில் உள்ள பகுதி புலவரின் வறுமை மிகுதிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

3. புலவர் வறுமை

வறுமைக் கொடுமையால் வாடிய மற்றொரு புலவர் இராமச்சந்திரக் கவிராயர். அவர் நாயக்க வம்சத்தாரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த ஒருவர். அவர் வறுமை மிகுதியாற் பாடியது போன்ற ஒரு பாடல் உண்டு. படைத்தற் கடவுளை வெறுப்பது போன்ற நிலையிற் பாடிய ஒரு பாடலை இங்கு அறிமுகஞ் செய்து வைக்க விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?
அல்லைத்தான் இல்லைத்தான் ஆரைத்தான்
நோகத்தான் ஐயோ என்றும்
பல்லைத்தான் காட்டித்தான் சிரிக்கத்தான்
பதுமத்தான் படைத்திட்டானோ?''

இந்தப் பாடலிற் சொற்சந்தங்கள், மோனை முதலியன மிகுந்திருப்பதை அவதானிக்கலாம். தான் என்ற அசைக் குறிப்புச் சொற்கள் ஒவ்வொரு சொற்றொடரிலும் அமைந்து பாடலை அழகுபடுத்துவதை அவதானிக்கலாம். கல்லை, மண்ணைக் காய்ச்சிக் குடிக்குமாறு படிப்பித்தானா? அப்படி இல்லாமற் பொன்னைத் தந்து, விற்றுச் செலவழித்து நன்முறையில் வாழவழி செய்தானா? அவ்வாறுமில்லையானால், ஐயோ என்று பல்லிழித்துப் பிச்சை கேட்கும் நிலையிற் பிரமதேவன் என்னைப் படைத்துள்ளானோ? எனது நிலை பரிதாபத்துக்குரியதே என்பது தொனிப்பொருள். சொற்பின்வருநிலையணிக்குப் பொருத்தமான பாடல் இதுவாகும். புலவர் தனிப்பாடலாய் அமைத்துள்ளார்.

'எங்களூர் வைத்தியர்கள்'

எங்களூரில் வைத்தியர்களுக்குக் குறைவேயில்லை. படித்துப் பட்டம் பெற்ற வைத்தியர்கள் இருக்கிறார்கள்; பரம்பரைச் சுதேச வைத்தியர்கள் இருக்கிறார்கள்; தான்தோன்றி வைத்தியர்கள் இருக்கிறார்கள்; 'கற்றுக்குட்டி' வைத்தியர்கள் இருக்கிறார்கள்.

தனியே வைத்தியம் மட்டும் செய்பவர்கள், சோதிடம் பார்த்து வைத்தியம் செய்பவர்கள், மந்திரஞ் செபித்து வைத்தியஞ் செய்பவர்கள், மந்திரமுமின்றி மருந்துமின்றித் தந்திரமாக (மாய) வைத்தியஞ் செய்பவர்கள்—என்று அவர்களை வகைப்படுத்தலாம்.

இவ்வாறு ஆளுக்காள், மூலைக்குமூலை வைத்தியப் பைத்தியம் பிடித்தவர்கள் மலிந்திருக்கிறார்களென்றால், வைத்தியஞ் செய்விப்பதற்கு ஆட்களும் இருக்கத்தானே வேண்டும்? ஆம்; நிரம்பவும் இருக்கிறார்கள். வைத்திய சிரோமணிகளின் தாசானுதாசர் பக்தகோடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் எங்களூர்ப் பெருமக்களைத்தான் சொல்ல வேண்டும். இந்த வகையில் ஒரு போட்டி நிகழ்த்துவதாயிருந்தாலும் எங்களூருக்கே முதற் பரிசு கிடைக்கும்; நிச்சயமாக.

வைத்தியர்களைப் பற்றியும் வைத்திய அடியார்களைப் பற்றியும் கூறினால் போதுமா? அவ்விரு பகுதியாரையும் பிணைப்பதற்கு நோய்கள்......? அதைக் கேட்க வேண்டுமா? ''நோய்களை வைத்தியர்கள் தான் உற்பத்தியாக்குகிறார்களோ'' அல்லது ''நோய்கள் தான் வைத்தியர்களை உற்பத்தி ஆக்குகின்றனவோ'' என்று பிரித்துணரமுடியாத நிலையில், எங்களூர் இருக்கிறது. புதுப்புது நோய்கள்—வைத்திய சாஸ்திரத்திலும் காணமுடியாத விசித்திர வியாதிகள் எல்லாம் எங்களூருக்குத்தான் படையெடுத்துக் கொண்டிருக்கின்றன. ரூஷியர்கள்தான் தங்கள் பலத்தினாலும் மனவுறுதியினாலும் ஜேர்மனியரை எதிர்த்து நிர்மூலமாக்கினாலும் ஆக்கலாம். ஆனால், எங்களூரில் இடம்பிடித்துக் கொண்டிருக்கிற வியாதிகளை ஓட்டவே ஓட்ட முடியாது. இது சத்தியத்தின் மேற் சத்தியம்!

உலகத்திலே மும்மூர்த்திகள் இருந்து படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் புரிவதாகப் புராணங்கள் சொல்லுகின்றன! இதை நம்புகிறவர்கள் இக்காலத்தில் இல்லையானாலும், நானொரு வகையில் நம்பிக்கொண்டுதான் இருக்கிறேன். அது எப்படி? எங்களூர் வைத்தியர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களின் அசாதாரண ஆற்றலையும் அவதானியுங்கள். இப்பொழுதாவது காரணம் புலப்படுகிறதா, என்ன?

அதிகம் யோசிக்க வேண்டாம். மும்மூர்த்திகளும் இப்பொழுது எங்களூரில் தான் இருக்கிறார்கள். அவர்கள் தான் மும்மூர்த்திகளின், 'அவதாரங்'களான எங்கள் வைத்திய பரதேவதைகள். ஜப்பான் குண்டுக்குப் பயந்தோ, நாஸி யுத்தத்துக்கு வெருண்டோ, இந்திய பாதுகாப்புச் சட்டத்துக்கு ஒதுங்கியோ—என்னவோ தெரியாது, அந்த மும்மூர்த்திகளும் எங்களூரில் வந்து வசிக்கப்பார்த்தார்கள். வந்தாலும், ஊரவர்கள் தம்மைக் காட்டிக் கொடுக்காதிருக்க வேண்டுமே என்பதற்காக, பற்பல காலங்களில் பற்பல வைத்திய வேஷங்களில் காட்சியளித்துக் கொண்டும், முத்தொழிலைச் சரிவரச் செய்யாது காத்தல் தொழிலைத் தள்ளிவைத்துக் கொண்டும் காலங் கழிக்கிறார்கள்!

''இது என்ன புதுமையாக இருக்கின்றதே'' என்று நீங்களெல்லாம் மூக்கிலே விரலை வைத்து வியந்து கொள்வதோடு நில்லாது, ''மும்மூர்த்திகளே அபயம்! அபயம்!!'' என்று கொண்டு எங்களூருக்கே ஓடிவரவும் பார்க்கிறீர்கள். நல்லது, நல்லது, வாருங்கள்! எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயினும் எத்தனை முறையாயினும் வந்துவிட்டுப் போங்கள். அதில் எவ்வித குறையும் எங்களுக்கு வரப்போவதில்லை. ஆனால், நான் உங்களுக்குக் கூறக்கூடிய புத்திமதிகளையும் கேட்டுக் கொண்டு வாருங்கள்:—

''எம்மூர் வைத்திய பரதேவதைகளிடம் இப்பொழுது காத்தல் தொழில் கிடையவே கிடையாது. அதனால் உங்கள் அலைச்சலும் அபயக்குரலும் வீணாகும். அடுத்தபடியாக, இங்கு இப்பொழுது வயிற்றுப்பாடு முழு மோசம். 'கூப்ப'னுக்குத்தான் அரிசி கிடைக்கும். 'கூப்பன்' இருந்தாலும் 'கடைக்காரப்—புள்ளி'களிடம் இலேசில் வாங்க முடியாது. இதற்காக, வேண்டுமானால் நீங்கள் தங்கியிருக்கப்போகிற காலத்துக்குப் போதுமான (கொஞ்சம் கூடவாயினும் பரவாயில்லை) அரிசி கொண்டு வாருங்கள்''.

எங்களூர் வைத்தியர்களுக்குள்ளே செயல் வகையிலும், ஆற்றல் வகையிலுந்தான் ஒற்றுமை உண்டு. அவர்கள் மட்டும் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக இருப்பதில்லை!

''வேசியரும் நாயும் விதிநூல் வைத்தியரும்
பூசுரரும் கோழிகளும் பொன்னனையாய்—பேசிலொரு
காரணந்தானின்றியே கண்டவுடனே பகையாம்
காரணந்தானப்பிறப்பே காண்''.

என்ற பாடலை உண்மையாகவே மெய்ப்பிக்கக் கூடியவர்கள் எங்களூர் வைத்தியர்கள் தான்!

ஆனால், ஊரவர்கள் அவர்களை எப்படி நடத்துகிறார்கள்? சாதி சமய பேதம்பாராது, உயர்வு தாழ்வு கற்பிக்காது, பாரபட்சங் காட்டாது—எல்லா வைத்தியருக்கும் சமமான மரியாதையும், சம அளவான ஆதரவும் அளிப்பவர்கள் எங்களூரவர்கள். அவர்கள் மறந்துங் கூட ''பரியாரியார்'' என்று எந்த வைத்தியரையும் அழைத்தறியார்கள் அது அவர்களின் எண்ணப்படி ஒரு அநாகரிகப் பேர்போலும். ''டாக்குத்தர்'' என்றாவது ''டாக்டர்'' என்றாவது தான் அவர்கள் கூப்பிடுவார்கள். ''வைத்தியர்'' என்றும் அழைப்பதுமுண்டு. ஊரில், ஒருவருக்குக் 'காய்ச்சல்' வந்துவிட்டதாக வைத்துக் கொள்ளுவோம். உடனே 'புத்தம் புதிதாக' வைத்தியம் தொடங்கிய (ஒருவேளை அவர் செய்யப்போகும் முதல் வைத்தியமும் அதுவாகவே இருக்கலாம்) ஒரு 'பெருமா'னுக்குச் செய்தி அறிவிக்கப்படும் அல்லது அவர் நேராகவே வந்து அறிந்து கொள்வதுமுண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கள்ளிவேர், காகங் கிளறிவேர்'' என்று நூற்றெட்டு மூலிகைகளும் சொல்லி, சிவப்புக் கறுப்பான பல 'குளிசை'களையும் தீர்த்து விடுவார் அந்தப் பெருமான்!

அந்தக் 'கணத்'தில் வியாதி நிற்கவில்லை. அடுத்த 'கணம்' வேறு தெய்வத்தைக் காணலாம். அந்தத் தெய்வமும் சும்மா போவதில்லை. ''இந்த வருத்தம் காய்ச்சலல்ல, பித்த சுரம்'' என்று சொல்லித் தனது திருக்கருணையையும் செலுத்திவிடும்.

சில சமயங்களில் சொல்லியோ சொல்லாமலோ, கேள்விப்பட்டோ கேள்விப்படாமலோ ஊரிலுள்ள வைத்திய தேவதைகளெல்லாம் ஒரே நேரத்தில் அந்த நோயாளிக்குக் காட்சிதரவந்து, மெல்ல மெல்லவாக நழுவிவிடுவதுமுண்டு! நோய் மாறினாலென்ன—மாறாவிட்டாலென்ன, மருந்து கொடுத்தால் என்ன—கொடுக்காவிட்டாலென்ன எல்லாருக்கும் பணவசூல் இருந்து கொண்டேயிருக்கும்!

இந்தப்படியாக, ஊரிலுள்ள வைத்திய மூர்த்திகளெல்லாரும் அந்த நோயாளியிலே தமது அருள் நோக்கங்களைச் செலுத்தி, ஆற்றலையும் பரிசோதிப்பதற்கு முன்னரே, நோய் தீர்வதற்குப் பதிலாக நோயாளி தீர்ந்து விடுவதுமுண்டு. இப்படிச் சாவு எங்களூரில் அநந்தம்!

''இத்தனை திருவிளையாடல்களுக்கும் இந்த ஊர் இடம் கொடுக்கிறதே. இங்குள்ளவர்களுக்கு 'மூளை—கீளை' கிடையாதா?'' என்று நீங்கள் சந்தேகப்பட வேண்டாம்! எல்லோருக்கும் நிறைய நிறைய மூளை இருக்கிறது. ஆனால் வைத்தியர்களிடத்துக் கொண்ட பக்தி மிகுதியினால், சாவைக்கூடத் துச்சமாக மதித்து நடக்கிறார்கள் எங்களூரவர்கள்; அவ்வளவுதான்.

எங்கள் வைத்தியர்கள் 'வைத்தியம்' என்ற ஒரு வகையில் மட்டும் ஊரவர்களோடு தொடர்புற்றிருக்கிறதில்லை. ஊரில் உள்ள நன்மை—தீமை, இறப்பு—பிறப்பு எல்லாவற்றிலுந்தான் கலந்து கொண்டிருக்கிறார்கள்!

அதெல்லாஞ் சரி. வைத்தியப் பரதேவதைகளான அந்த மும்மூர்த்திகளின் 'குட்டை'யெல்லாம் உடைக்கிறேன் என்பதற்காக அவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து எனக்குப் ''பைத்திய''ப் பட்டமுங் கட்டி, புளியெண்ணையும் 'தப்பு'தற்கு ஆலோசிக்கிறார்கள்! ''நல்லது. என் பொருட்டாக ஆவது அவர்கள் ஒற்றுமையடைய வேண்டும்; ஊரிலுள்ள எலுமிச்சைகளுக்கெல்லாம் யோகமடிக்க வேண்டும்''. இதுவே என் பிரார்த்தனை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினக்கட்டான் வேம்பு

ஊர் நடுவே, தெரு ஓரமாக ஒரு வேப்பமரம் நிற்கிறது. அது ஒரு பழங் கிழட்டு வேம்பு; ஆறேழு தலைமுறை கண்டது.

அதற்கொரு பெயர்—'மினக்கட்டான் வேம்பு'!. சிவலிங்கப் புளியடி, முடமாவடி என்பன போல, அந்த வேம்பும் 'மினக்கட்டான்' பட்டத்தைச் சூட்டிக் கொண்டிருக்கிறது! வினை கெட்டான்—வினைக்கெட்டான்—மினைக்கெட்டான்—மினக்கட்டான் என்று அதன் சொல்லுருவம் மாறி வந்திருக்கிறது. இன்னும், ஆறேழு தலைமுறையின்பின் இப்பெயரில் எத்தனை மாற்றமோ யாமறியோம். 'இலக்கணப்புலி'களுக்கு எதிர்காலத்தைப் பற்றின தீர்க்கதரிசனமிருந்தால், இதை ஆராய்ந்து சொல்லட்டும்!

வேம்பு, குருவிச்சை ஆகிற விந்தையைக் கண்டிருக்கிறீர்களா? இல்லையானால், இந்த மினக்கட்டான் வேம்பை ஒரு தரம் வந்து பாருங்கள்! மந்திரமோ தந்திரமோ ஏதுவுமின்றி, உண்மையிலேயே அந்த வேம்பு குருவிச்சை மயமாகியிருப்பதைக் காண்பீர்கள். எட்டுக் கோடி வெள்ளையர் இந்த (எண்ணைந்து) நாற்பது கோடி இந்தியரை அடக்கியாளவில்லையா? அப்படியானால், அற்ப செடியாகிய குருவிச்சை அந்தப் பெரிய வேப்ப மரத்திலே ஆதிக்கம் பெற்றதில் என்ன அதிசயம்?

ஆடு மாட்டுக்கு முரித்துப் போட்டாவது இந்தப் பரசீவிப் பூண்டை அழித்து விடலாம். ஆனால், அந்த இந்திய மகா விருட்சத்திலே படர்ந்திருக்கிற குருவிச்சையை அகற்றுவதெப்படி? விருட்சம் வீறு கொண்டெழ எழ, குருவிச்சையும் நல்லாய்க் கொழுத்து முறுகி அதனை அழுத்துகிறதே; விதிக் கொடுமை! மினக்கட்டான் வேம்பு எங்களூர்ப் பொதுச் சொத்து. அங்கு கூடுவோர் ஒவ்வொருவரிடமும் இந்த எண்ணமே தடித்திருக்கிறது.

சாதிமத வேற்றுமைகளோ, முதலாளி—தொழிலாளிப் பிணக்குகளோ, படித்தவர் படியாதவர் என்ற பாகுபாடுகளோ அங்கு துளி கூடக் கிடையாது.

''எல்லாருமோர்குலம் எல்லாருமோரினம் எல்லாரு மிந்நாட்டு மன்னர்''—என்ற சமத்துவ உணர்ச்சி அங்கு வலுப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாதும் ஊரே யாவருங் கேளீர்'' என்று வாயினாற் சொல்லாவிடி னும், செய்கையிலே காண்பிக்கிறவர்கள், எங்கள் மினக்கட்டான் வேம்படியார்!

பொய்யர் புளுகர் புறஞ்சொல்வோர் கள்வர் கயவர் என்று யாரை யும் அந்த வேம்பு புறக்கணித்தது கிடையாது. எவரும் எந்நேரமும் வரலாம்; தத்தமக்குப் பிடித்த எந்தக் காரியத்திலும் ஈடுபடலாம். கட்டுப்பாடோ சட்டதிட்டங்களோ எதுவும் கிடையாது.

குடியரசு—ஜனநாயகம் என்று கூக்குரல் போடுகிறார்களே, அந்தப் 'பிரமுகர்'களெல்லாம் இந்த வேம்படியில் படிக்க வேண்டிய பாடங்கள் பலவுண்டு. அட்லாண்டிக் சாஸனத்திலுள்ள நாலுவகைச் சுதந்திரத்தை யும் நடைமுறையில் காண விரும்புவோர்கூட, இங்கு ஒருமுறை வந்து போனால் நல்லது!

மினக்கட்டான் வேம்படியில் இன்ன நேரம் இன்ன கருமந்தான் நடக்குமென்ற நியதியில்லை. எல்லாம் சமையோசிதமாகவே இருக்கும். ஒரே வேளையில் பல நிகழ்ச்சிகளும், ஒரே நிகழ்ச்சி பல வேளைகளிலும் நடப்பதுகூட உண்டு.

எங்களூர்க் கந்தசாமி கோவிலிலே இவ்வளவு காலமும் இல்லாத ஒரு காரியம்—திருக்கலியாணத்தன்று சின்னமேளக் கச்சேரி—நடந்துவிட்ட தென வைத்துக்கொள்வோம். இது ஊரிலே பெரிய கட்சி பேதங்களுக் குக் காலாய் விடும். சின்னமேளம் வேண்டும்—வேண்டா—வேண்டும் வேண்டாக்—கட்சிகள், மூலை முடக்குகளிலெல்லாம் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தாலும் முடிவான நியாயத் தீர்ப்பு மினக்கட்டான் வேம் படிக்கே வந்து தீரும்!

அதிலும், ஒரு விசேஷமென்னவென்றால், ஊர்ப் பெண்தெய்வங் களின் பொதுப்பட்ட சம்மதமெதுவோ அதன்படியே தீர்ப்பும் இருப் பது! 'சின்னமேளம் வேண்டும்' கட்சி பலவீனமாயிருந்தாலும், பெண் களின் அனுசரணை அதற்கிருக்குமானால் சின்னமேளக்காரிகளின் அதிர் ஷ்டத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

எங்களூர்ப் பெண்களுக்கு மினக்கட்டான் வேம்பென்றால் பிடியாது. வீட்டிலுள்ள நொட்டு நொடுக்குகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, பிள்ளைகுட்டிகளையும் பெருக்கிக் கொண்டு நடமாடும் யந்திரங்கள் போலத் திண்டாடும் அந்த வேம்படிச்சுகம் எங்கே கிடைக்கப் போகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எட்டாத பழம் புளிக்கு'மென்று நரி சொன்னது போல அவர்களும் 'ஆண்டிகள் கூடி மடங்கட்டுமிடம்' 'சோம்பேறிகளின் தங்குமிடம்' என்று அந்த வேம்பை இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், கோவிலிலே சின்னமேளக் கச்சேரி வைப்பது, அரசாங்க சபைத் தேர்விலே 'ஓட்டு'க் கொடுப்பது போன்ற கருமங்களிலே ஆடவர் எதைத்தான் உழறினாலும், பெண்களின் தீர்ப்புப்படியே முடிவிருக்கும். மினக்கட்டான் வேம்படியார் இந்த வகையில் பெண் களுக்கு மதிப்புக் கொடுப்பது, வீட்டு 'அகப்பைச் சூனிய'த்துக்குப் பயந்து போலும்!

பண்டைக் காலக் கிரேக்க வீரர், போர் முதலிய காரியங்களில் செல்வதானால் முதலில், 'ஒலிம்பஸ்' மலையில் இருக்கும் 'சீயஸ்' தேவதையிடம் குறி கேட்பார்களாம். இந்த வழக்கம் எங்கள் மினக் கட்டான் வேம்படியிலும் ஓரளவு அனுசரிக்கப்படுகிறதென்றால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்!

எங்கே சுவரிடிக்கலாம்? யாருடைய கழுத்திலே கைபோடலாம்? எந்த வாழைக்குலைக்குக் கத்தி வைக்கலாம்?—என்றிவ்வகையான, அபூர்வ யோசனைகளோடு திரிகிற சில 'பிரகிருதி'கள் இந்த வேம்படி யைத் தரிசித்தே தங்கள் தொழிலை மேற்கொள்ளுகிறார்கள்.

ஊரிலுள்ள ஆடவர்களெல்லாருமே அங்கு கூடியிருக்கும்போது அவர் களின் 'தீர்க்கதரிசனம்' நிறைவேறுவதற்கு வேம்பு விடை கொடுக்கா மல் வேறென்னதான் செய்யமுடியும்?

மதப் பிரசாரத்துக்குக் கூட இந்த வேம்பு உதவி செய்து வருகிறது. பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும், மாலை வேளைகளில் அங்கு பெரிய ஆரவாரமாயிருக்கும்.

'பைபிள்' பிரசங்க முழக்கம் ஒரு பக்கம்; ஊர்க்காரிகளின் வம்புமாரி ஒரு பக்கம்; பாதிரி கொடுத்த துண்டுப் பிரசுரங்களைப் பட்டம் விட்டுக் கொண்டு திரியும் பையன்களின் கூக்குரல் ஒரு பக்கம்—இவ்வாறு அந்த வேம்படி 'கலகல'க்கும்!

மொத்தமாகப் பார்க்கப்போனால், 'பைபிள்' பிரசங்கம் கேட்போர் ஐந்தாறு இளம் பெண்கள்—அந்தப் பிரசங்கியாருடன் திரிவோர்—தான்! மற்றவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக வந்தவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை நடந்த அதிசயமிது: ''விபசாரத்திலே கண்டுபிடிக்கப் பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் கொண்டு வந்து, இயேசு முன்னிலையில் நிறுத்தி 'இவளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும்; நீரென்ன சொல்லுகிறீர் போதகரே!'' என்று கேட்டதற்கு, இயேசு பிரதியுத்தரமாக 'உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் கல்லெறியக் கடவன்' என்று சொன்னார்......''. இவ்வாறு யோவான் சுவிசேஷத்தின் ஒரு பகுதியைப் பிரசங்கியார் பேசி முடித்தாரோ இல்லையோ, சொல்லிவைத்தாற்போல ஒரு 'மலைப்பிஞ்சு' பறந்து வந்து, அந்தக் கிறீஸ்தவ சேவிகைகளில் ஒருத்தியின் மண்டையைப் பதம் பார்த்து விட்டது!

பாவம்! யாரோ ஒரு போக்கிரிப் பையன் செய்த சேஷ்டை இது; அந்த மதப் பிரசாரத்துக்கே காப்புக் கட்டிவிட்டது!

மினக்கட்டான் வேம்பைப் பற்றி இப்படி எத்தனையோ தலபுராணங் கள் கற்பனையில் பாடிவிடலாம். ஆனால், அதையெல்லாம் இந்தக் காலத்தில் யார்தான் மெனக்கெட்டுப் படிக்கப் போகிறார்கள்? இருந் தாலும் ஒன்று மட்டும் சொல்லி வைக்கிறேன்.

மினக்கட்டான் வேம்படியில் வெளிப்படும் செய்திகளைப் பற்றித் தான் குறிப்பிடுகிறேன். இரகசியமோ—பரகசியமோ, ஊர்வம்போ—உலகப் புதினமோ எதுவானாலும் சரி அங்கு வெளிப்படும் வகையே வேறு.

'இருடிகர்ப்பம் இராத்தங்காது' என்று சொல்லுவார்கள். அது போலவே அங்கு எந்தச் செய்தியும் 'சட்டுச்சட்'டென்று பரம்பி விடும்!

உண்மையாயிருந்தாலென்ன, ஊகமாயிருந்தாலென்ன அவைநொடிப் பொழுதிலேயே அம்பலத்துக்கு வந்து விடும். 'கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான்' என்ற வகையில் நடக்கும் அசம்பாவிதங்களுக்கும் குறைவில்லை.

செய்திகள் பரவும் விரைவிலே, தந்தி—கம்பியில்லாத் தந்தி—ஒலி பரப்பி எல்லாம் இந்த வேம்படிக்குப் பிச்சை வாங்க வேண்டும்! சேவையில் திறமையிலென்ன, அல்லது விரைவிலென்ன—அந்த வேம் பில் ஏதாவது மந்திர சக்தி இருக்க வேண்டும்! விஞ்ஞான பண்டிதர்கள் இதை ஆராய்வார்களாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வைக்கற்' பட்டடை நாய்

தானும் தின்னாது, வருகிற மாடுகளையும் தின்னவிடாது—வைக்கற் பட்டடையிற் குடியிருக்கும் நாய். இந்த நாய்க்குணம், அந்த எளிய பிராணிகளிடத்து மட்டுமல்ல, மனிதப் பிராணிகளிடத்தும் உண்டு என்பதற்கு எங்களூர் 'வீமண்ணா'வே தக்க சாட்சி.

வீமண்ணா என்றால் எங்ளூரில் அறியாதவர் இல்லை. 'சின்னஞ்சிறு முளையான்கள்' கூட அவரைக் கண்டுவிட்டால்:

''வருகிறார் வருகிறார் வீமண்ணா
வைக்கற் பட்டடை நாயண்ணா;
வருகிறார் வருகிறார் வீமண்ணா
வழக்கிலே மாளும் பேயண்ணா!''

என்று இராகமிழுத்துப் பாடத் தொடங்கிவிடுவார்கள் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன் 'வீமண்ணாவின் பிரபல்யத்தை'.

வீமண்ணாவின் பேர் எங்களூர் எல்லைக்குள் மட்டும் அடங்கிவிடவில்லை. அது எங்களூருக்கு அயலூர், அயலூருக்கு அயலூர், அயலூருக்கு அயலூருக்கும் அயலூர்...... என்று எல்லாவூர்களையும் தாண்டி, அரசாட்சியாரின் நீதி விசாரணைக் 'கோடு'களுககுள்ளும் இடம் பிடித்துவிட்டது. அதிகம் சொல்வானேன். வீமண்ணா உலக மறிந்த மனுஷர்; இராசா அறிந்த குடி!

வீமண்ணா என்றதும் பருத்த உருவமும், நெறித்த புருவமும், வெறித்த விழிகளும், முறித்த கழிகளும்—முதலான தோற்றங்களே உங்கள் மனத்திரையில் வருகின்றனவாக்கும்! அவற்றை முற்றாக மறந்து விடுங்கள். ஒல்லியான உருவம்; குழிவிழுந்த கண்கள்; உச்சிக் குடுமி; கொச்சை பேசும் வாய்; கையிலே 'சவுக்கம்'; கக்கத்திலே பழம் உறுதிக்கட்டு—ஆகிய இத்தியாதி திருக்கோலங்களோடு 'விறுக் விறுக்' கென்று வீதியிலே போய்க் கொண்டிருக்கிறதே ஒரு உருவம், அந்த அவதாரந்தான் நமது வீமண்ணா; மறந்துவிடாதீர்கள்!

'நாய்க்கு வேலையில்லை; நடக்க நேரமில்லை''—என்று சொல்வார்கள். அந்த விதியை முற்றுமுழுதாக மெய்ப்பிக்கக் கூடியவர் வீமண்ணா தான். ஆறியமர்ந்து இருப்பதையோ, ஆடம்பரமாய் உண்டு உடுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிப்பதையோ வீமண்ணா விரும்பமாட்டார். பழைய உறுதிக் கட்டுகளையெல்லாம் கிளறி, கறையான் அபகரித்ததின் மேல்தான் ஆட்சிப் படுத்துவதற்கான காணிகளின் விபரமேதாவது கிடைக்குமோவென அங்கலாய்ப்பதும், ஊரவர்களோடு வீண் வழக்குப் பேசுவதும், தமிழ் அகராதிகளிலும் காணக்கிடைக்காத பழந் தமிழ்க் (கொச்சை)ச் சொற்களால் எதிரிகளை ஏசுவதும் ஆகிய இவைகளே அவரது 'நித்திய கரும இயல்பு'கள்! கனவிலே கூட, காசுத்துக்கு மலங் கிளறுகிற எண்ணமிருக்குமாம். வீமண்ணா (பகற்) கனவு காண்பதெல்லாம் பழந்தோம்புகளைப் பற்றித்தான்!

வீமண்ணா நல்ல சொத்துள்ள குடும்பத்திலே பிறந்தவர். அவருடைய முன்னோர் ஏழைகளைச் சுரண்டி இத்தனை சொத்துக்களையும் சேர்த்துக் கொண்டனராம். அந்தப் பழிதான் இவரை உருப்படவிடாமல் அலைக்கிறதோ என்னவோ? 'நீரில் விளைந்த உப்பு நீரிலேதான் கரைய வேண்டும்'. அடாத்து வழியிற் கிடைத்த சொத்து அடாத்தாக அழிவதற்கும் காலம் வந்து விட்டது. வீமண்ணா ஒரு பேராசைப் பேய். ஊர் முழுவதையுமே தத்தஞ் செய்துவிட்டாலும், அவர் மனம் அடங்காது. 'ஆடியகாலே பாடியமிடறே'—என்று, அயலூர்களிலும் தாவத் தொடங்கிவிடுவார். இந்தப், பிரகிருதி'யின் போக்கைத் தடைசெய்யாதிருப்பதற்குப் போலும், இவருடைய தர்மபத்தினியும் உத்தம புத்திரரும் நேரத்தோடே பரலோக யாத்திரை போய் விட்டார்கள்! இருக்கிற சகோதரங்கள் தானும், அவருடைய சொத்திலே ஒரு சுண்ணாம்புக்கட்டியைத்தானும் தொட முடியாது. அவ்வளவு கண்டிப்பான பேர்வழி!

''தின்னப் பொசிப்புள்ளவனுக்குத் திண்ணைக்கப்பிலே தேன்'' என்பது வீமண்ணாவைப் பொறுத்த வரையில் பொய்ப்பட்டு விட்டது. திண்ணைக் கப்பிலே தேனிருக்கிறது. ஆனால் தின்னப் பொசிப்பில்லை வீமண்ணாவுக்கு! அடபாவி மனுஷா! பணங்காக்கும் பூதமே!

''ஏன் வீமண்ணா! அந்தத் தோட்டம் வீணாகக் கிடந்து அழிகிறதே. பங்காளரைக் கூடச் செய்ய விடுகிறாயில்லை. யாரும் ஏழைகளாவது கொத்திப் பிழைக்க விட்டாலென்ன?'' என்று வீமண்ணாவின் காதில் ஓதிப்பாருங்கள். உருத்திரமூர்த்தி உக்கிரப் புன்னகை கொண்டதுபோல் வீமண்ணா உங்கள் மீது வலுத்தாக்குதலுக்கு ஆரம்பித்து விடுவார். வீமண்ணாவின் சொற்போரின் முன் எந்த வீராதிவீரனும் தலைகுனிய வேண்டியதுதான். குடி—குலம்—கோத்திரம் எல்லாம் கூறி வசவுமாரி பொழியத் தொடங்கினார் என்றால், அந்த ஆவேசம் தணியக் குறைந்தது ஆறேழு நாளாவது செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித சச்சரவுகள் சில சந்தர்ப்பங்களில் வீமண்ணாவுக்கே பாதகமாக முடிதலுமுண்டு. அடியினாலும் உதையினாலும் தேகம் வலுவடைகிறதா?—என்பதை வீமண்ணா தமது அனுபவத்திலேயே கண்டறிதற்கான சந்தர்ப்பங்களை அவருடைய எதிரிகள் அவருக்குக் கொடுப்பதுமுண்டு.

வழக்கின்மேல் வழக்குப் பேசினார் ஏறாத 'கோடே'ல்லாம் ஏறினார். ஊரிலுள்ள "அந்தக் காணி எனக்குச் சொந்தம்" "இந்தக் காணியில் எனக்குப் பங்குண்டு" என்றெல்லாம் வாதாடியும் பார்த்தார். கடைசி முடிவென்ன? "ஓலை வீட்டுப் பணம் ஓட்டு வீட்டுக்குப் போன' கதை தான்! அவருக்கு லாபமில்லை; நட்டத்தின் மேல் நட்டத்தையே கண்டார்.

வழக்கிலே கந்தறுந்தார் வீமண்ணா. காணி பூமியெல்லாம் விற்றுச் சுட்டார் வீமண்ணா. ஊரவர்களின் பழிப்பையும் எதிர்ப்பையும் பெற்றுக் கொண்டார் வீமண்ணா. எது என்னதான் ஆனபோதிலும் அந்த மனுஷனா அடங்கிக் கிடப்பார்? மீண்டும் மீண்டும் தமது பல்லவியைப் பாடிக்கொண்டே திரிகிறார். வீமண்ணாவின் விதியே விதி!

அது என்ன? பாடுங்குரல் கேட்கிறதே!...... ஆம். சிறுவர் கூடி "வருகிறார் வருகிறார் வீமண்ணா......" என்று கும்மாளமடித்துப் பாடுகிறார்கள். வீமண்ணா கிட்டடியில் வருகிறார் என்பதற்கு இது அறிகுறி. அந்தப் புண்ணியமூர்த்தி வந்து விட்டால், ஏதாவதொரு 'கொழுவ' லுக்கு இடம் வந்தாலும் வரலாம். கண்ணிலே படாமற் போய் விடுவோம்!

சிந்தனைப் பட்டறை!

"பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்து" இறவாத புகழடைந்து வரும் இன்றைய எழுத்தாளருக்குள்ளே அறிஞர் வெ. சாமிநாத சர்மா முதலிடம் பெறுகிறார்.

'பொது அறிவுப் போட்டி' 'சுய அறிவுப் போட்டி' 'பகுத்தறிவுப் போட்டி'..... என்றெல்லாம் அலங்காரமான தலைப்புகள் கொடுத்து விட்டு, பொதுசன வழக்கில் இல்லாது மங்கி மறைந்து போன பழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அகராதிச் சொற்களைப் பொறுக்கி வைத்துக் கொண்டு சொற் சூதாட்டம் நடத்திப் பணம் பறிக்கும் இன்றைய வியாபாரம் போலில்லாது, நேர்மையாக உழைத்து, நிதானமான அறிவு விளக்கங்களைத் தரும் அவரது சேவை தமிழரின் தேவைகளைப் பூர்த்தியாக்கவல்லது.

தமிழில் விமர்சனம் என்று தொடங்கியவர்களுக்குள்ளே வ. வெ. சு. ஐயர், கு. ப. ரா. முதலிய இரண்டொருவர் நல்ல வழிகாட்டியிருக்கிறார்கள். இலக்கியத்தில் (கம்பராமாயண ஆராய்ச்சி; கண்ணன் பாட்டின் முன்னுரை) வ. வெ. சு. ஐயரும், சிறு கதையில் (இரட்டை மனிதனில் உள்ளே போகவழி, சிறுகதை யந்திரம், முதற்காதல்—கட்டுரைகள்) கு. ப. ரா. வும் விமர்சனக் கலைக்கே விதைபோட்டு வைத்தார்கள். ஆனால், இதுவரை எவரும் துணிந்து இறங்காத வகையிலே, அரசியல் பொருளாதாரம், சமுதாயம் ஆதிய துறைகளிலே சிந்தனையைச் செலுத்தி, அருமையான வரலாற்று நூல்களை எழுதுவதில் அற்புதமாக முன்னேறிக் கொண்டிருப்பவர் நமது சாமிநாத சர்மாதான்!

பத்திரிகை உலகில், 'சக்தி'யை எவ்வளவு அழகாகவும் பொலிவாகவும் பிரசுரிக்கிறார்களோ—அதுபோலவே, சாமிநாத சர்மாவின் நூல்களையும் பிரசுரித்துப் பெருமை தேடிக் கொள்ளுகிறார்கள் 'சக்தி காரியாலய'த்தார்.

மானுட ஜாதியின் சுதந்திரம், சமுதாய ஒப்பந்தம், அரசியல், கார்ல் மாக்ஸ், ரூஸோ—முதலிய நூல்களையும், 'சக்தி', 'குமரி மலர்' முதலியவற்றில் வரும் அவரது கட்டுரைகளையும் படித்ததில் இருந்து 'சாமிநாத சர்மா ஓர் உயர்ந்த சிந்தனையாளர்—அது மாத்திரமல்ல, திறமையான எழுத்தாளருங்கூட' என்ற வகையாக நமது அபிப்பிராயம் வளர்ந்து வருகிறது. ஆராய்ச்சி பூர்வமாக, விஷயங்களை 'அக்குவேறு ஆணிவேறாக' அலசிப் பார்த்து, வாசகரது மனதிலே பதிய வைப்பதில் அவர் சமர்த்தர்!

''அழியாத ஆத்மாக்களையுடைய மனிதர்கள், ஏன் நீதி ஸ்தலங்களில் வழக்காடி வழக்காடிக் காலத்தை வீணாக்குகிறார்கள்?'' என்ற புரியாத பிரச்சனையோடு, ''தர்க்கஞ் செய்து தர்க்கஞ் செய்தே உண்மைகாணும் முயற்சியில் ஈடுபட்டிருந்த'' ஸாக்கிரட்டீஸ் என்னும் பண்டைய கிரேக்க அறிஞனை 'சிந்தனைப் பட்டறை' என உருவகிக்கிறார் சாமிநாத சர்மா. சாமிநாத சர்மாவின் நூல்களைப் படிக்கும் போதெல்லாம் அவரையும் ஒரு 'சிந்தனைப் பட்டறை' என்று சொல்லலாம் போலத் தோன்றுகிறது நமக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிந்தனை செய்யத் தொடங்குவதென்பது சுலபமான விஷயமல்ல. ஆனால், ஒருவன் சிந்தனை செய்யத் தொடங்கிவிட்டால், அதனை விடவே மாட்டான்'' என்ற ரூஸ்ஸோவின் வார்த்தைக்கு நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகிறார் சாமிநாத சர்மா. சுதந்திரத்தின் தேவைகள் யாவை? மனிதன் கடமை, மஹாத்மா காந்தி, சோவியத் ருஷியா, காந்தி யார்?, சுதந்திர முழக்கம், காந்தியும் ஜவகரும், காந்தியும் விவேகானந்தரும், நமது பிற்போக்கு, புதிய சீனா—என்றெல்லாம் அவரது நூல்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவரது சிந்தனையின் தீவிரமன்றி வேறென்ன?

சாமிநாத சர்மாவின் நூல்களுக்குள்ளே திறமெது? இழுக்கமெது?—என்று தீர்மானிப்பது கஷ்டம். ஏதாவதொரு வகையில் ஒவ்வொன்றும் திறமாகவே பிரகாசிக்கின்றன. எழுத எழுத, ஆராய்ச்சி ஞானம் விரிவடைந்து அவருக்கு நல்ல உதவி செய்கின்றது. பொதுவுடைமைத் தத்துவத்தை நடைமுறையிற் கையாளத்தக்க ஒரு புதுத் திட்டமாக வகுத்துத் தந்த கார்ல்மாக்ஸ் என்பவரை 'நடமாடும் புத்தகசாலை' என்று அக்காலத்தவர் அழைத்தனராம். கார்ல்மாக்ஸ், போகிறபோகிற இடங்களிலெல்லாம் ஏராளமான புத்தகக் குவியல்களுக்குள்ளேயிருந்து, தனக்குத் தேவையான குறிப்புக்களைத் திரட்டிக்கொண்டே நூலெழுதத் தொடங்குவாராம். அது போலவே சாமிநாத சர்மாவும் 'நடமாடும் புத்தகசாலை'யாக இருந்து வேலை செய்கிறாரென்பது, அவரது நூல்களில் விரவிக் கிடக்கும் உதாரணங்கள், அடிக்குறிப்புகள், சரித்திர சம்பவங்கள் முதலியவற்றிலிருந்து தெரிகிறது.

எது எப்படியானாலும், சாமிநாத சர்மா அதிகம் மனம்வைத்தெழுதிய நூல் 'அரசியல்' என்றே சொல்லலாம். இருநூற்றெழுபத்திரண்டு பக்கங் கொண்ட ஒரு நூலில், ஏறக்குறைய அதன் கால்வாசியில் (62 பக்கம்!), அருமையான ஒரு முன்னுரை எழுதி, ''இந்நூலை, குறைந்தது இரண்டுமூன்று தடவையாவது படிக்க வேண்டும். எத்தனை தடவை படித்தாலும் நல்லதுதான். முதலில் நூலை மட்டும், அதாவது சம்பாஷணை ரூபமாயுள்ள பாகத்தை மட்டும்படித்து விடவும். பிறகு முன்னுரையைப் படிக்கவும். முன்னுரையை முடித்துவிட்டு மறுபடியும் சம்பாஷணையைப் படிக்கவும். இப்படி மாறிமாறிப் படிப்பதில் அநேக அனுகூலங்கள்உண்டு என்பது, இப்படிப் படித்த பிறகுதான் தெரியும். ஒவ்வொரு தடவை படித்து முடிப்பது, நமது சிந்தனா சக்தியைச் சாணைக்கல்லில் சொடுத்து எடுக்கிற மாதிரி'' என்று வாசகர்களுக்குத் தன்னம்பிக்கையோடு கூடிய எச்சரிக்கை கொடுப்பதில் இருந்தே இது தெளிவாகிறது. இன்னும் அதே முன்னுரையில் வேறொரு வாக்கியம் பின்வருமாறுளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிளேட்டோ, தனது நூல்களில் என்ன கூறுகிறான்? அவற்றின் சாரமென்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள்'' என்று யாராவது நம்மைப் பார்த்துக் கேட்டால், நாம் என்ன பதில் சொல்லுவது? 'பிளேட்டோ, தனது நூல்களில் என்ன கூறவில்லை? அவற்றில் சாரமில்லாதது எது? அவன் சுருக்கமாகச் சொல்லாமல் விரிவாகச் சொன்னது எதைப்பற்றி?' —என்றுதான் திரும்பக் கேட்க வேண்டியிருக்கிறது......'' இதிலிருந்தும் சாமிநாத சர்மா, பிளேட்டோவை நன்கு படித்து விளங்கித் தெளிந்தபிறகே நூலெழுதினாரென்பது உறுதிப்படுகிறது. இதனால், அவர் மற்ற நூல்களை ஏதோ 'போகடி போக்கில்' எழுதினாரென்பது அர்த்தமல்ல. 'அரசியல்' என்ற நூலிலே அவரது மேதா—விலாசத்தைப் பரிபூரணமாக அறியமுடிகிறது என்பதற்காகவே இவ்வளவுஞ் சொன்னோம்.

இனி, அவரது தமிழ் நடையைப்பற்றி ஒரு வார்த்தை: சொற்செட்டும், பொருளாழமும், உணர்ச்சி பாவமும் நிறைந்தது அவரது வசன அடுக்கு. வாசிக்க வாசிக்க இன்பமாக இருக்கிறது அவரது வசனக் கட்டுக்கோப்பு. குறியீடுகளைப் போடும் விஷயத்தில் ஒரு வரையறையின்றி, நினைத்த நினைத்தவாறெல்லாம் எழுத்தாளர், எழுதுகிறார்கள். ஆனால், சாமிநாத சர்மா 'நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக்கிணங்கத் தமிழை மிகவும் லாவகமாக எழுதுகிறார். ரூஸ்ஸோவில் ஓர் உதாரணம்: ''அறியாமைச் சேற்றிலே உழன்று கொண்டிருக்கிற ஜனங்களை மேலே தூக்கிவிட எவனொருவன் தன் கையைக் கொடுக்கிறானோ, அந்தக் கையையே, அவனையேகூட, அந்த அறியாமை இழுத்துக் கொண்டு விடுகிறது! ஆயினும் அவன் துணிந்து கையைக் கொடுக்கிறான். ஏன்? அவர்களுடன் விழுந்து, உழன்று, அப்படியாவது அந்தக் குட்டையைக் கொஞ்சம் கலக்கி விடுவோம் என்ற எண்ணம்தான். கலக்கம் ஏற்பட்டால் தெளிவு உண்டாகுமல்லவா? இப்படி வலியக் கைகொடுப்பவன் நிகழ் காலத்திலே இறந்து விடுகிறான்; ஆனால் எதிர்காலத்திலே வாழ்கிறான். நிகழ்காலம் அவனைத் தூற்றுகிறது. கல்லாலும் கழியாலும் அடிக்கிறது, சிறை போன்ற குகையுள் கொண்டு போய்த் தள்ளுகிறது; கடைசியிலே தூக்குமேடையிலே கூட ஏற்றிவிடுகிறது. ஏற்றிவிட்டுச் சும்மாயிருக்கிறதா? இல்லை, இல்லை; கைகொட்டி ஆரவாரஞ் செய்கிறது. அட நிகழ்காலமே! மகான்கள் விஷயத்தில், மகாகவிஞர்களின் விஷயத்தில், தீர்க்கதரிசிகளின் விஷயத்தில் நீ ஒரு துரோகி; பாபி; நன்றி கெட்டவன். ஆனால் அந்த மகான்களை, மகா கவிஞர்களை, தீர்க்கதரிசிகளை, எதிர்காலம் எவ்வளவு அன்புடன் வரவேற்கிறது! எத்தனைபேருடைய இருதயத்தில் அவர்களுக்கு இட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படுத்திக் கொடுக்கிறது! இந்த எதிர்கால சாந்தியை எதிர்பார்த்துத்தான் மகான்கள், நிகழ்காலத் துன்பங்களை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்!''.

சடைசியாக. ''மொழிபெயர்ப்பே ஒருமுறையில் கடினமான இலக்கிய வேலை. அது முதல் நூல் எழுதுவதைக் காட்டிலும் அதிகமான தொல்லை கொடுப்பது. சீமை ஓட்டைப் பிரித்துவிட்டுக் கீற்றுவைக்கும் வேலை போன்றது. ஒரு கட்டுக்கோப்பைக் கலைத்து மற்றொரு கட்டுக்கோப்பை ஏற்றுவதில் எப்பொழுதுமே பூரண வெற்றி கொள்ள முடியாது. அடிக்கு அடி நிர்ப்பந்தம். எல்லைக்கோட்டைத் தாண்டினால் மொழிபெயர்ப்பில்லை, வியாக்கியானம். தாண்டாமல் வார்த்தைக்கு வார்த்தை போட்டால் கருத்து விளங்குவதில்லை; நடையும் சரளமாவதில்லை. இவைகளின் நடுவில் நீந்திக் கொண்டு போய்க் கரையேற வேண்டும்'' என்று கு. ப. ரா. சொன்னதைப் பரிபூரணமாக உணர்ந்து செய்பவர் போல, மொழிபெயர்ப்பு வேலையிலும் வெற்றி பெற்றிருக்கிறார் சாமிநாத சர்மா. அவரைப் பாராட்டுகிறோம். அவரது நூல்களை வரவேற்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழி இலக்கியம்

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தி, பழமொழியில் உண்டு. பழமொழி என்பது நம்முன்னோர் அனுபவ முதிர்ச்சியால் பெற்ற படிப்பினைத் தெளிவாகும்.

படிப்பு வாசனை இல்லாத பாமர மக்கள் அனுபவத்தாலறிந்து கொண்ட வாழ்க்கை உண்மைகளை, மந்திரங்கள் போன்ற சிறு வாக்கியங்களால்—பழமொழிகளாக—வழங்கி வருகின்றனர். நாட்டாரியல் வழக்கில் அதுவும் ஒன்று. கிராமியப் பாடல்களை மதிப்பது போலவே பழமொழிகளையும் மதித்துப் பேணுதல் வேண்டும்.

''பட்டறி கெட்டறி பத்தெட்டிறுத்தறி'' என்றொரு பழமொழி உளது. ஒருவன் அனுபவரீதியாகக் காரியங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற படிப்பினை இதிலுண்டு. அனுபவமே சிறந்த ஆசிரியனாக வழிநடத்துமல்லவா?

''ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்று வரும் பழமொழியில், எந்தவொரு பலசாலியாயினும் தோற்றுப் போகும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம் என்பது இதன்மூலம் கிடைக்கும் படிப்பினையாகும். இது போன்ற பற்பல சித்தாந்தக் கருத்துக்களைப் பழமொழி வடிவிலே பார்க்கின்றோம்.

நாலடியார் போன்ற சமண நூல்களில் பழமொழிகள் மிகுதியாகக் கையாளப் பெற்றுள்ளன. இதுபோலவே வேறு பல இலக்கியங்களிலும் பழமொழிகள் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு கையாளப் பெற்றிருப்பதை அறியலாம். இந்த வகையான பழமொழிகள் பல்லாயிரக் கணக்கில் உள்ளன. அவற்றைச் சேர்த்துத் தொகுக்கும் வேலை, கலை—மொழி வளர்ச்சிக்கு உதவலாம் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

இலங்கை, தமிழகம் முதலிய பிரதேசங்களிற் பயின்றுவரும் தமிழ்ப் பழமொழிகளே பல்லாயிரக்கணக்கில் அமையும். தமிழர் குடியேறி வாழும் இடங்களிலும் பழமொழிகள் வழங்கவே செய்யும். அவைகளைச் சேகரித்து அச்சிடும் ஆர்வம் நம்மிடையே ஏற்பட வேண்டும்.

நமது மூதாதையர் சொல்லி வைத்த ஒவ்வொரு பழமொழியும் சுய அனுபவத்திற் கிளைத்தெழுந்த படிப்பினைகளேயாகும் என்பதை நாம் அனுசரித்து நடக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பகுத்தறிவு கண்டு பிடிக்கும் உண்மைகள், சில நாட்களில் பொய் யாகி விடுகின்றன. ஆனால், அனுபவ உண்மைகள் நிரந்தரமானவை' என்று கவிஞர் கண்ணதாசன் பழமொழிகளைப் பற்றிக் கூறிய கருத்து சிந்திக்கத் தக்கவை.

கலையெழுச்சி மிக்கோங்கும் இக்காலத்தில் பழமொழிகளையும், பாதுகாக்கும் நோக்கம் நம்மிடையே உயிர்த்தெழ வேண்டும் என்ற கருத்தில், எனது நினைவுத் தூண்டலில் முகிழ்த்தெழும் சிற்சில பழமொழிகளை அகர வரிசைப்படுத்தி வெளிப்படுத்தலாமென எண்ணுகின்றேன். அவை அழிந்து விடாது நிலைக்க வேண்டுமென்பதே எமது ஆவல்.

இந்த வகையில், ''பழமொழி இலக்கியம்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை மற்றும் பல இலக்கியச் செல்வங்கள் 1987 ஆம் ஆண்டில் வந்த இந்திய அமைதிப்படையாற் சேதப்படுத்தப்பட்டு விட்டன என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பழமொழிகள் என்ற தலைப்பில் இலங்கை வானொலியிற் பேச்சு நிகழ்த்திய அறிஞர் ''சுசி'' அவர்களின் வழிகாட்டலையும் நன்றியோடு வரவேற்கின்றோம்.

பழமொழிகள்

அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
அக்கினி மலைமேலே கர்ப்பூரப்பாணம் விடுவதுபோல.
அக்காள் உள்ளவரைதான் அத்தானுறவு.
அக்காவின் சொத்து அரிசி; தங்கையின் சொத்துத் தவிடா?
அக்கா பிள்ளை பிள்ளையுமல்ல; செத்தையிற்பல்லி பல்லியுமல்ல.
அகத்தின் அழகு முகத்திற் தெரியும்.
அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே.
அகப்பை பிடிக்கிறவன் தன்னாளானால் அடிப்பந்தியென்ன? நுனிப் பந்தியென்ன?
அகல உழுவதிலும் பார்க்க ஆழ உழுவது நல்லது.
அகதிக்கு ஆகாயந்துணை; செட்டி கப்பலுக்குத் தெய்வந்துணை.
அகல இருந்தால் நீள உறவு; கிட்ட இருந்தால் முட்டப்பகை.
அகம்படியான் சோறு அகப்பையிலும் ஒட்டாது.
அங்குமிருப்பார், இங்குமிருப்பார், ஆக்கின சோற்றுக்குப் பங்குமிருப் பார்.
அச்சமற்றவன் அம்பலம் ஏறுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
அச்சின்றித் தேரோட்டுவதும் ஆம்படையான் இன்றிப் பிள்ளைபெறுவதும்போல.
அசைந்து தின்கிறது மாடு; அசையாமல் தின்கிறது வீடு.
அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்.
அஞ்சுவார்க்கில்லை அரண்.
அட்டமி நவமி தொட்டது நாசம்.
அட்டமத்துச் சனியன் தொட்டதுபோல.
அட்டையைப் பிடித்து மெத்தையில் வைக்காதே.
அட்டை கடித்தாற் குட்டை; அறணை கடித்தால் மரணம்.
அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கு.
அடக்கம் ஆயிரம் பொன்பெறும்.
அடக்கமற்ற பெண்ணுக்கு அழகை ஏன்?
அடாது செய்தவர் படாது படுவர்.
அடாது மழைபெய்தாலும் விடாது நாடகம் நடக்கும்.
அடிக்கும் ஒருகை; அணைக்கும் ஒருகை.
அடியைப்போல் அண்ணன் தம்பி உதவார்.
அடியாத மாடு படியாது.
அடிநாக்கிலே நஞ்சும், நுனிநாக்கிலே தேனும்.
அடிக்கரும்பிருக்க நுனிக்கரும்பு சுவைத்தல்போல.
அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
அடீ என்றழைக்கப் பெண்டாட்டி இல்லை; ஆணெத்தனை? பெண்ணெத்தனை?
அடுக்களைப்பூனை அம்பலம் ஏறுமா?
அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா?
அடுத்துக் கெடுப்பான் கபடன்; அணைத்துக் கெடுப்பாள் வேசி.
அடுத்துக் கெடுத்தானாம் சண்டாளன்.
அணில் வாலாலே கடலாழம் பார்த்தது போல்.
அணியெல்லாம் ஆடையின் பின்.
அணிலேற விட்ட நாய்போல.
அத்தி பூத்தது போல.
அத்தும் போச்சு அரகரா; செம்பும் போச்சு சிவசிவா.
அத்தஞ் சித்திரை அமைந்த வாழ்வு குன்றும்.
அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
அதிர்ஷ்டமிருந்தால் தரித்திரமென்ன செய்யும்?
அதிக ஆசை பெருநட்டம்.
அதைவிட்டால் கதியுமில்லை; அப்புறம் போக வழியுமில்லை.
அந்திமழை அழுதாலும் விடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரங்கத்தில் ஆடி அம்பலத்தில் ஆடுவதுபோல.
அப்பா வெடிசுடுவார்; இருமல் விடாது.
அப்பமென்றால் பிட்டுக் காட்டுவதா?
அப்பன் அருமை அப்பன் இறந்தால் தெரியும்; உப்பின் அருமை உப்பு சமைந்தால் தெரியும்.
அப்பத்தை அடித்துத் தீத்துவதா?
அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
அம்மான் மகளானாலுஞ் சும்மா வருவாளா?
அம்பியைக் கட்டிக்கொண்டு ஆற்றிலே போவதுபோல.
அம்பிட்டுக் கொண்டாரே தும்மட்டிக் காய்ப் பட்டர்.
அம்பு எட்டின மட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்.
அயிரை விட்டு வரால் பிடிப்பவர் போல.
அரசன் ஆனாலும் தாய்க்கு மகனே.
அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்.
அரசனில்லாத நாடு, புருஷனில்லாத வீடு.
அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி.
அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது போல.
அரசமரத்தைப் பிடித்தபேய் ஆலமரத்தையுஞ் சேர்த்துப் பிடித்ததாம்.
அரிசியள்ளின காகம் போல.
அரிசிப் பொதியோடு திருவாரூர்.
அரிசி காற்கொத்தானாலும் அடுப்புக்கால் மூன்று வேண்டும்.
அரிவாளுமாடக் குடுவையுமாடும்.
அருமையற்ற வீட்டில் எருமையும் இராது.
அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
அரைப்பணங் கொடுத்து அழச்சொல்லி ஒருபணங் கொடுத்து ஓயச் சொன்னது போல்.
அரைக்காசுக்குப் போனமானம் ஆயிரங்காசு கொடுத்தாலும் மீளாது.
அல்லாப்பிள்ளையில் இல்லாப்பிள்ளை.
அல்லைக்கிழங்கின் அடிமுறி தின்றவன் கல்லையுங் கிழப்புவான்.
அல்லல் ஒரு காலம்; செல்வம் ஒரு காலம்.
அல்லாப் பிள்ளைக்கு வல்லார் புத்திபுகட்டுவது போல.
அலை எப்பொழுது ஓயும்? தலை எப்பொழுது தோயும்?
அலைகிற விதியிருந்தால் யார் என்ன செய்ய முடியும்?
அலைந்த நாய் மலத்தில் விழுந்த மாதிரி.
அவசரக் கோலம் அள்ளித் தெளித்தல் போல.
அவளைத் தொடுவானேன்? கவலைப்படுவானேன்?
அவதந்திரம் தனக்கந்தரம்.
அவலை நினைத்து உரலை இடிக்கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் காணவில்லை; பிள்ளை எத்தனையாம்?
அவத்தேட்டம் சிவப்பொறுதி.
அவப்பொழுதிலும் தவப்பொழுது நல்லது.
அவரவர் கவலை அவரவர்க்கே தெரியும்.
அவன் கெட்டான் குடிகாரன், நீ போடு அரைக்கிளாசு.
அவனவன் செய்தவினை அவனவனுக்கே ஆகும்.
அவனின்றி ஓரணுவும் அசையாது.
அவரை புதைத்தால் துவரை முளைக்குமா?
அவிந்தும் பச்சையா?
அவிழ்த்துப் பார்க்கமுந்திப் பிடுங்கிப் பார்க்கிறது போல.
அழச்சொல்லுவார் தமர், சிரிக்கச் சொல்லுவார் பிறர்.
அழவழக் கொண்டதெல்லாம் அழவழப்போம்.
அழகேசன் ஆனாலும் அளவறிந்துண்.
அழகுக்கிட்டால் ஆபத்துக்குதவும்.
அழகிருந்தாற் போதாது, அதிர்ஷ்டமும் வேண்டும்.
அழகுக்கு அழகு செய்தாற் போல.
அழிவுக்கு முன் அகந்தை.
அழிந்தகொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன? கழுதை மேய்ந்தாலென்ன?
அழுதபிள்ளை பால் குடிக்கும்.
அழுவாரெல்லாந் தங்கரைச்சல்; துருவன் பெண்டிலுக்கு அழவாளில்லை.
அழுதும் பிள்ளை அவளே பெறுவாள்.
அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பாதே.
அழையா வீட்டில் நுழையா விருந்து.
அள்ளிக் கொடுத்தால் சும்மா; அளந்து கொடுத்தால் கடன்.
அள்ளின கிணறுதான் ஊறும்.
அள்ளுவாரோடிருந்தாலும் கிள்ளுவாரோடிருக்காதே.
அள்ளுகிற கவளமெல்லாம் தனக்கென நினைத்த நாய் போல.
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
அளக்கிற நாழி அகவிலை அறியுமா?
அற்றது பற்றெனில் உற்றது வீடு.
அற்ப சிநேகம் அளவிறந்த நட்டம்.
அறநனைந்தவனுக்குக் கூதலென்ன? குளிரென்ன?
அறக்கூர் முழுமொட்டை.
அறப்படித்தபல்லி கூழ்ப்பானையில் விழுந்தது போல.
அறிந்தவன் அறியவேணும் அரியாலைப் பனாட்டுத்தட்டை.
அறுதலி வாழ்க்கைக்கு அறுபத்தெட்டு இடைஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்டாட்டிகளாம்.
அறுபது நாளைக்கு எழுபது கந்தை.
அறுபது தேங்காயை எழுபது குயவர் சுமந்தது போல.
அறையில் ஆடியல்லவோ அம்பலத்திலாட வேண்டும்.
அன்னமிட்டவர் வீட்டிற் கன்னமிடலாமா?
அன்று எழுதிய கடவுள் அழித்து எழுதுவானோ?
அன்பான சிநேகிதனை ஆபத்திலறி.
அன்னநடை நடக்கப்போய்த் தன் நடையுங் கெட்ட காக்கை போல.
அன்னப்பா லுக்குத் தவண்டை அடித்தவன் போல.
அன்னைக்கு உதவாதவன் ஆருக்கும் உதவான்.
அன்று விட்டேன் கொண்டலடி.
ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்காரா?
ஆகாதார்க்கு ஆகுவதில்லை.
ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும்.
ஆங்காலம் வரும்; போங்காலம் போகும்.
ஆங்காலம் மெய்வருந்த வேண்டாம்.
ஆங்காலமெல்லாம் அவமே கழித்துச் சாங்காலமாச்சுதே சங்கரா, சங்கரா.
ஆண்டவன் விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடுக்காதது போல.
ஆசை அறுபது நாள்; மோகம் முப்பது நாள்.
ஆசைக்கோர் அளவில்லை.
ஆசை வெட்கமறியாது.
ஆசை இருக்கிறது அதிகாரம் பண்ண; அதிர்ஷ்டமிருக்கிறது கழுதை மேய்க்க.
ஆட்டுவெண்ணெய் ஆட்டுமுளைக்குப் போதாது.
ஆட்டிலும் பாய்ந்து குட்டியிலும் பாய்ந்தது போல.
ஆடத்தெரியாத தேவடியாள் முற்றங் கோணலென்றாள்.
ஆடிய காலே, பாடிய மிடறே.
ஆடிக்கூழ் தேடிக்குடி, ஆடியுழவு தேடியுழு.
ஆடிக்கறக்கிற மாட்டிலே ஆடிக்கற; பாடிக்கறக்கிற மாட்டிலே பாடிக் கற.
ஆடி விதை தேடி விதை.
ஆடி ஓய்ந்த பம்பரம் போல.
ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்.
ஆடு ஓடித் தழைகடித்தது போல.
ஆடு பிடிக்கப்போய்க் கரடி பிடித்தது போல.
ஆடை இல்லாதவன் அரை மனிதன், ஆடையுள்ளவன் அவைக்கஞ் சான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிகள் கூடி மடங்கட்டினது போல.
ஆண் கறுத்தாலும் ஆயிரம்; ஆனை கறுத்தாலும் ஆயிரம்.
ஆடிக் கொருக்கால், ஆவணிக் கொருக்கால்.
ஆண்பிள்ளையா? வீண்பிள்ளையா?
ஆண்டி மகன் ஆண்டியென்றால் நேரமறிந்து சங்கூதுவான்.
ஆண் நிழலில் நின்றுபோ; பெண் நிழலில் இருந்துபோ.
ஆண் பிள்ளையும் எருத்துமாடும் ஆருக்கும் உதவும்.
ஆணை அடித்துவளர்; பெண்ணைப் போற்றிவளர்.
ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
ஆப்பிழுத்த குரங்கு போல.
ஆபத்துக்குதவாத பூசனிக்காயைப் பந்தலிலே கட்டுவதா?
ஆய்ந்தோய்ந்து பாராதான் கருமம் தான் சாந்துயரம் தரும்.
ஆயிரம் வாழையுள்ள அம்மானுக்கு ஆக்கக் காயில்லை.
ஆர் குத்தியும் அரிசியாக வேண்டும்.
ஆர் குடி கெடினும் நீகுடி மிளகுசாறே.
ஆராத்தாள் செத்தாலும் பொழுதுவிடிந்தால் தெரியும்.
ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
ஆலமரத்தைச் சுற்றிவந்து அடிவயிற்றைத் தடவினாளாம்.
ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை.
ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
ஆவின் பாலுக்குச் சர்க்கரை தேடுகிறான்.
ஆழமறியாமற் காலை விடாதே.
ஆழ உழுதாலும் அகல உழாதே.
ஆள் பாதி; ஆடை பாதி.
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
ஆற்றிலே போகிற நீரை அண்ணை குடி, தம்பி குடி.
ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்.
ஆறிலுஞ் சாவு, நூறிலுஞ் சாவு.
ஆறு பணத்துக்குக் குதிரையும் வேண்டும்; ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
ஆறு கடக்குமட்டும் அண்ணன் தம்பி; ஆறு கடந்ததும் நீ யார்? நான் யார்?
ஆனைக்கும் அடிசறுக்கும்.
ஆனையுண்ட விளாங்கனி போலே.
ஆனைக்கொருகாலம்; பூனைக்கொருகாலம்.
ஆனைப் பசிக்குச் சோளப் பொரியா?
ஆனைப் பசிக்குச் சுக்குக் கஷாயம் கொடுத்தது போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைவரும் பின்னே; மணியோசை வரும் முன்னே.
ஆனை மதத்தால் வாழை; ஆள் மதத்தாற் கீரை.
ஆனை மேலிருந்தவனைச் சுண்ணாம்பு கேட்டானாம் பரதேசி.
ஆனை இருந்தாலும் ஆயிரம், இறந்தாலும் ஆயிரம்.
இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
இஞ்சிதின்ற குரங்குபோல இளிக்கிறான்.
இட்டவன் இடாவிடின் வெட்டுப் பகை.
இணக்கமறிந்து இணங்கு.
இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்.
இரக்கப் போனாலுஞ் சிறக்கப்போ.
இரப்பானைப் பிடித்ததாம் பறைப்பிராந்து.
இரவற் புடைவையிலே இது நல்ல கொய்யகம்.
இரந்தும் பரத்துக்கிடு.
இரண்டு தோணியிலே கால் வைத்தது போல.
இருந்தவன் எழும்பமுன் நடந்தவன் காதவழி.
இருதலைக் கொள்ளி எறும்பு போல.
இலவுகாத்த கிளி போல.
இலைமறைகாய் போல.
இளங்கன்று பயமறியாது.
இளநீர் குடித்தவன் போக, கோம்பை நக்கினவனுக்கா குற்றம்.
இளைத்தவன் பெண்டாட்டி, எல்லோருக்கும் வைப்பாட்டி.
இறால் போட்டுச் சுறா பிடிப்பது போல.
இறைத்த கிணறே ஊறும்.
ஈச்சப்பிவாயன் தேடினதைக் கர்ப்பூரவாயன் அழித்தது போல.
ஈட்டி எட்டினமட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்.
ஈயாதோர் இருந்தென்ன? செத்தென்ன?
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஈனவும் மாட்டாமல் நக்கவும் மாட்டாமல்.
ஈனுகின்ற மாட்டை நக்குகிற மாடு கெடுத்தது போல.
உங்கையிற் பிள்ளை உமக்கே அடைக்கலம்.
உச்சத்திற் பல்லிக்கு அச்சமில்லை.
உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசுவது போல.
உடையார் வீட்டு மோருக்கு அகப்பைக் கணக்கில்லை.
உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
உண்டி கூழுக்கழுகிறது; கொண்டை பூவுக்கழுகிறது.
உண்டகலை தொண்டருக்குமுண்டு.
உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்யலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாப் பண்டம் மண்ணாய்ப்போம்; உடாப்பிடவை கரியாய்ப் போம்.
உதைக்கிற மாடு கறக்காது.
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
உப்பினருமை உப்பு சமைந்தால் தெரியும்.
உப்பிட்ட பாத்திரம் போல.
உமியைக் குற்றிக் கைநொந்தவன் போல.
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
உரலிலே அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
உரலுக்கு ஒரு பக்கத்தில் இடி; மத்தளத்துக்கு இரு பக்கத்திலும் இடி.
உருட்டும் புரட்டுஞ் சிரட்டைக்கையில்.
உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல.
உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியாது.
உழைக்கிற அருமை ஊதாரிக்குத் தெரியுமா?
உழுகிற மாடென்றால் உள்ளூரிலேயே விலைப்படும்.
உள்ளது போகாது; இல்லது வாராது.
உள்ளக் கிடக்கை சொல்லிலே பிரதிபலிக்கும்.
உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோ.
உள்ளங்கை நெல்லிக்கனி போல.
உள்ளத்திலே நஞ்சும் உதட்டிலே தேனும்.
உற்றபோரிற் கற்றதை மற.
உறங்குபவனை எழுப்பலாம், உறங்குபவன் போல நடிப்பவனை எழுப்ப முடியாது.
உறியிலே தயிரிருக்க, ஊரெல்லாம் நெய் தேடியது போல.
உனக்கல்ல உபதேசம் ஊருக்கடி.
ஊக்கம் ஆக்கம் தரும்.
ஊசிபோகிற இடந்தெரியும்; உலக்கை போகிற இடந்தெரியாது.
ஊசிபோகிறபடி நூல்போகும்.
ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் ஊரான்பிள்ளை தன்பிள்ளையாகுமா?
ஊணன் கருமமிழந்தான்; உலாத்தன் பெண்டிலை இழந்தான்.
ஊதுகிற சங்கை ஊதிவைத்தாற் பொழுது விடிகிறபோது விடியும்.
ஊதுகிற சங்கை ஊதிக்கெடுத்தான் பரதேசி.
ஊம்பக் கொடுத்த சுருட்டும் உழக்கொடுத்த மாடும் உதவாது.
ஊமையன் கனாக்கண்டது போல.
ஊமையும் ஊமையும் மூக்குச் சொறிந்தது போல.
ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
ஊரார்வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
ஊருக்கெளியவன் பிள்ளையார் கோவிலாண்டி.
ஊரோடில் ஒத்தோடு, ஒருவனோடிற் கேட்டோடு.
ஊரோச்சம் வீடு பட்டினி.
எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?
எட்டாத பழத்துக்காகக் கொட்டாவி விட்டது போல.
எட்டாப்பழம் புளிக்கும்.
எடுப்பார் கைப்பிள்ளை போல.
எண்சாண் உடம்புக்குத் தலையே பிரதானம்.
எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்.
எய்தவனிருக்க அம்பை நொந்தது போல.
எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊற்றுவது போல.
எல்லோரும் ஓடிக்களைத்த குதிரையிலே சக்கடத்தாரோடிச் சறுக்கி விழுந்தாராம்.
எல்லா மாடும் ஓடுதென்று புதுவீட்டுக் கூழையனும் ஓடியது.
எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான்; பாடினவன் பாட்டைக்கெடுத்தான்
எழுதா விதிக்கு அழுதால் தீருமோ?
எள்ளு ஏன் காயுது எண்ணெய்க்காக; எலிப்பிழுக்கையேன் காயுது கூடக்கிடந்த குற்றத்துக்காக.
எள்ளென்று கேட்க எண்ணெயாய்த் தருவது போல.
எறும்பூரக் கற்குழியும்.
என்னமோ சொன்னான் கதையிலே, இழுத்தடிச்சான் சபையிலே.
ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.
ஏட்டிக்குப் போட்டியாக.
ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல.
ஏழு வீட்டிலே பூசை, இடையிலே போகுது வாணாள்.
ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்.
ஏழை சொல் அம்பலமேறாது.
ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்.
ஏறாத மேட்டுக்கு இரண்டு துவை.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
ஐந்தும் மூன்றும் உண்டானால், அறியாப் பெண்ணுங் கறிசமைப்பாள்.
ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?
ஒட்டைக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள் இட்டது போல.
ஒண்ட வந்தபேய் ஊர்ப்பிடாரியைத் துரத்தியது போல.
ஒய்யாரக் கொண்டையாம், தாளம்பூவாம்; உள்ளேயிருக்குமாம் ஈரும் பேனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம்; ஒரு பானை தயிருக்கு ஒரு துளி உறை.

ஒளிக்கத் தெரியாதவன் தலையாரி வீட்டிலே ஒளித்தானாம்.

ஒட்டைக் குடத்திலே வார்த்த நீர் போல.

ஒட்டைச் சட்டியிலே கொழுக்கட்டை வேகுமா?

ஓடுகிற முயலைக் கண்டால் துரத்துகிற நாய்க்கு வேட்டை.

ஒரெறியில் இரண்டு மாங்காய் விழுத்தியது போல.

ஓலைவீட்டுப் பணம் ஓட்டு வீட்டுக்குப் போவது போல.

ஔவை தின்ற நெல்லிக்கனி போல.

கட்டைக்குப்போய் முட்டை ஆராய்வது போல.

கட்டாப்பாரை சுட்டாலும் மணவாது.

கட்டையனையும் நெட்டையனையும் நட்டாற்றில் தெரியும்.

கடற்கரைத் தாழங்காய் அக்கரையிலே கிடந்தாலென்ன, இக்கரையிலே கிடந்தாலென்ன.

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

கடுமுடுக்குச் செட்டியார் குடுமுடுக்கிச் செத்தார்.

கண்ணைக் குத்திற்றென்று விரலை வெட்டுவதா?

கண்டது கற்கப் பண்டிதனாவான்.

கண்டாற் பத்தினி காணாவிட்டாற் சித்தினி.

கண்டது நின்றது சொல்லாதே; கண்ணிலே கற்கட்டி கட்டாதே.

கண்கண்டது கைசெய்வது போல.

கண்கெட்ட பிறகு சித்திரம் வரைவதா?

கண்டறியாதவன் பெண்டிலைக் கொண்டால் காடுமேடெல்லாம் கொண்டு திரிவான்.

கண்டவன் விலைசொன்னாற் கொண்டவன் கோடியுடான்.

கண்ணுக்கு வரவேண்டியது கண்புருவத்தோடு விட்டதுபோல.

கண்டியில் அடிபட்டவன் கம்பளையில் படபடத்தான்.

கர்ப்பூரங் கொழுத்தமுந்திச் சன்னதங் கொள்ளுவதுபோல.

கரைப்பார் கரைத்தாற் கல்லுங்கரையும்.

கல்லடி மங்கன் போனவழி கதவுகளெல்லாந் தவிடுபொடி.

கல்லானாலுங் கணவன் புல்லானாலும் புருஷன்.

கலியாணச் சந்தையிலே தாலிகட்ட மறந்தவன்போல.

கழுதைப் புண்ணுக்குப் புழுதி மருந்து.

கழுதை கெட்டாற் குட்டிச்சுவர்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல.

கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூரவாசனை.

கழுதைக்குபதேசங் காதிலே ஓதினாலும் அபயக் குரலொழிய அங் கொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளுக்கொள்ளாத வயிறுமில்லை; முள்ளுக்கொள்ளாத வேலியுமில்லை
கள்ளக்கும்பிடு, உள்ளக்கேடு.
களவுக்கு வந்தவன் இழவுக்கு நில்லான்.
களவெடுத்தாலும் பொய் சொல்லாதே.
கறந்தபால் முலைக்கேறாது.
கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்டதுபோல.
கனத்தைக் கனந்தேடும்; கருவாட்டுத் தலையை நாய் தேடும்.
காக்கைக்குந் தன்குஞ்சு பொன்குஞ்சு.
காகமிருக்கப் பனம்பழம் விழுந்ததுபோல.
காசிக்குப் போயுங் கர்மந் தொலையவில்லை.
காட்டிலே நிலவெறித்தது போல.
காடு வா வா என்கிறது, வீடு போ போ என்கிறது.
காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டு போனான்.
கார்த்திகைப்பிறை கண்டதுபோல.
காலத்தைப் பேணான், கனகத்தைக் காணான்.
காவோலை விழக் குருத்தோலை சிரித்தது போல.
காற்காசுப்பூனை முக்காற்சட்டி தயிரை நக்கியதாம்.
கிட்டாதாயின் வெட்டென மற.
கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல.
கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பந் தெரியுமா?
கிளியை வளர்த்துப் பூனைக்கு இரைகொடுப்பதா?
'கிளீன் ஷேவ் எம்ரி பொக்கற்'.
கீரைதின்றவன் மேல் கைக்கிரான்.
கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
குட்டியைத் தின்ற நரி பட்டியைச் சுற்றியது.
குட்டக்குட்டக் குனிகிறவனும் மடையன்; குனியக் குனியக் குட்டுகிற
வனும் மடையன்.
குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.
குடத்தில் வைத்த விளக்குப்போல.
குடிப்பது கூழ், கொப்புளிப்பது பன்னீர்.
குடிகாரன் பேச்சு விடிந்தாலே போச்சு.
குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணி மங்காது.
கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல.
குரங்குப்பிடி அழுங்குப்பிடி.
குரங்கின் தலையில் விளக்கு வைத்ததுபோல்.
குரங்குக்கு முசுறு குலப்பலகை.
குருணி கூட்டிக் கப்பலுக்கேற்றலாமா?
குருவிக்கேற்ற இராமேஸ்வரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் குசுவினாற் குற்றமில்லை.
குருடனுக்குக் குருடன் வழிகாட்டியதுபோல.
குரைக்கிற நாய் கடியாது.
குலவித்தை கல்லாமற் பாதிபடும்.
குழந்தைப் பிள்ளைக்கும் குட்டி நாய்க்கும் இடங்கொடாதே.
குளத்தைக் கலக்கிப் பருந்துக்கிரையாக்கியது போல.
குளிக்கப் போய்ச் சேறுபூசியதுபோல.
கூரையேறிக் கோழி பிடிக்காதவன் வானத்தைக்கீறி வைகுந்தங் காட்டுவானா?
கூலிக்கு வேலைசெய்யப்போய் வேலிக்கு வழக்குப்பேசியதுபோல.
கூழுக்குமாசை, மீசைக்குமாசை.
கூழுக்கு மாங்காய் தோற்குமா?
கெஞ்சப் போனால் மிஞ்சப் போவான்.
கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குள் தெரியும்.
கெட்டமாட்டைத் தேடமுந்தி எட்டுமாட்டை வாங்கிவிடலாம்.
கெட்டாலுஞ் செட்டி; கிழிந்தாலும் பட்டு.
கெட்ட கழுதைக்குப் பட்டது ஆதாயம்.
கெட்ட குடிக்கொரு கேட்டை.
கெடுவான் கேடு நினைப்பான்.
கெடுகிறேன் பந்தயம் பிடி.
கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே.
கேள்விச்செவியன் ஊரைக்கெடுத்தான்.
கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை.
கையால் கிழிக்கிற பனங்கிழங்குக்கு ஆப்பு வல்லீட்டுக்குத்தி தேடினது போல.
கையிற் புண்ணுக்குக் கண்ணாடி தேவையா?
கொஞ்ச இடங்கொடுத்தால் மிஞ்ச இடங்கேட்பது.
கொடுத்த பலன் குறையாது.
கொல்ல வீதியில் ஊசிவிற்றதுபோல.
கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்.
கோவிற் பூனை தேவரை மதியாது.
கோழியைக் கேட்டா ஆணங்காய்ச்சுவது?
கோழிதின்ற கள்வனும் கூடநின்றுலாவுறான்.
கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை.
கையிற் புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமா?
சட்டி சுட்டதோ, கைவிட்டதோ.
சண்டியன் பேச்சு சபைக்குதவாது.
சண்டை முடிந்தபின் தடியெடுத்தவன்போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தித்தால் வத்திக்கும்.
சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தது மாதிரி.
சந்தியிற் பேச்சு சபைக்குதவுமா?
சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்ததுபோல.
சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரங் கால்மட்டு.
சாகிறேன் பந்தயம்பிடி.
சாட்டில்லாமற் சாவில்லை.
சாடிக்கேற்ற மூடிபோல.
சாணேற முழஞ் சறுக்கியதுபோல.
சாதிக்கேற்ற குணம், குலத்துக்கேற்ற பண்பு.
சாதுமிரண்டால் காடுகொள்ளாது.
சாமி விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடாததுபோல.
சிங்கத்துக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன்போகுது.
சிரித்த பெண்ணையும் விரித்த புகையிலையையும் நம்பாதே.
சிலுசிலுப்புத் தேவையில்லை; பணியாரமே வேண்டும்.
சிறியார்க்கினியது காட்டாதே; செம்புக்குள் புளி விட்டாக்காதே.
சிறு பிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது.
சிறு துளி பெரு வெள்ளம்.
சீவனஞ் செய்வதற்காய் நாவினை விற்காதே.
சுகம் துக்கம் சுழல் சக்கரம்.
சுட்டமண் ஒட்டாது.
சுடுகுது மடியைப் பிடி.
சுண்டங்காய் காற்பணம்; சுமைகூலி முக்காற்பணம்.
சும்மா போகமாட்டாத மூஞ்சூறு விளக்குமாற்றையுஞ் சேர்த்திழுத்தது
சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி.
சும்மா வந்த நாச்சியாருக்கு அரைப் பணத்துக்குத் தாலி போதாதா?
சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்.
சுற்றிச் சுற்றிச் சுப்பர் கொல்லைக்குள்.
சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.
செட்டிக்குக் கப்பல் துணை, அகதிக்குத் தெய்வந்துணை.
செட்டியார் வாழ்வு செத்தபிறகு தெரியும்.
செத்த பாம்பை அடிப்பதுபோல.
செத்தவன் பெண்டிலைக் கட்டினாலும் விட்டவன் பெண்டிலைக் கட்டாதே.
செய்தாருக்குச் செய்வது செத்ததின் பிறகா?
செல்லும் செல்லாததைச் செட்டியாரிடங் கேள்.
செல்வஞ் செருக்குது, வாசற்படி வழுக்குது.
சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறவனுக்கு வாய்ச்சொல்; செய்கிறவனுக்குத் தலைச்சுமை.
சோழியன் குடுமி சும்மா ஆடுமா?
சோறிடுபவன் தன்னாளானால் அடிப்பந்தி என்ன? நுனிப்பந்தி என்ன?
ஞானநூற் கல்வியும் நாழி அரிசியிலே.
தட்டிக்கேட்க ஆளில்லையானால் தம்பி சண்டப்பிரசண்டன்.
தட்டான் தட்டாமற் கெட்டான், தட்டானைத் தொட்டானுங் கெட்டான்.
தண்ணீர் கலங்கித் தெளிவது போல.
தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.
தம்பி பிறக்கத் தரைமட்டமானது.
தம்பி உள்ளான் சண்டைக்கஞ்சான்.
தருமத்துக்கு வளர்த்த பன்றியைப் பல்லுக்குப் பதம்பார்த்த மாதிரி.
தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்.
தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது.
தலைவலி போய் திருகுவலி ஆனது போல்.
தவித்த முயல் அடிக்கிற மாதிரி.
தன்கையே தனக்குதவி.
தன்னைக் கண்டு தானம் வழங்கு.
தன்னைப் பெற்றவள் பிச்சையெடுக்கத் தம்பி தானம் வழங்கினான்.
தன்னைப் பெறாதவள் தாயுமல்லள், தனக்குப் பிறவாதது பிள்ளையுமல்லள்.
தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்.
தன்தொழில் விட்டவன் சாதியிற் கெட்டான்.
தன்னைப்போற் பிறரையும் நேசி.
தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாகட்டும்.
தனக்குத் தெரியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்.
தனக்குத்தனக்கென்றால் சுளகு படக்குப்படக்கென்றடிக்கும்.
தனக்கெளியது தாரம்.
தனி மரம் தோப்பாகுமா?
தாய்க்குப் பிறகு தாரம்.
தாயிடம் பால் குடித்தாலும் தான் வளருவது புத்தி.
தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு.
தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை.
தாயைச் சந்தையிலே பார்த்தால் பிள்ளையை வீட்டிலே பார்க்க வேண்டியதில்லை.
தான்தின்னி பிள்ளைவளரான்; தவிடுதின்னி மாடுவளரான்.
தான் பெறாதது பிள்ளையுமன்று; தன்னைப் பெறாதவள் தாயுமன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கள்ளன் பிறரை நம்பான்.
தான் பாராத காரியம் அரைமுழங் கட்டை.
தான் ஆடாவிடினுந் தனது தசை ஆடும்.
தானே உணராதவன் பிறர் உணர்த்தினால் உணர்வனோ?
திரைகடலோடியுந் திரவியந்தேடு.
தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
துட்டரைக் கண்டால் எட்ட நில்.
துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதே.
தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி.
தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாது.
தெருச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி.
தென்னம்பிள்ளையை நம்பினாலும் அண்ணன் பிள்ளையை நம்பாதே?
தென்னையிலே தேள்கடிக்கப் பனையிலே நெறிகட்டியது.
தேங்காய் தின்றவன் ஒருவன்; தெண்டங் கட்டினவன் ஒருவன்.
தேடிவந்த சீதேவியைக் காலால் உதைப்பதுபோல.
தேடிய பொருள் காலிலே தடக்கியது போல.
தேனுள்ள இடத்தில் ஈக்கள் மொய்க்கும்.
தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங் கிள்ளிவிடுவது போல.
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
தோளுக்கு மிஞ்சினால் தோழன்.
தை பிறந்தால் வழி பிறக்கும்.
நக்குகின்ற நாய்க்குச் செக்கென்ன? சிவலிங்கமென்ன?
நண்டு கொழுத்தால் வளையிற் கிடவாது.
நம்பநட, நம்பி நடவாதே.
நல்லாரை நாவிலுரை, பொன்னைக் கல்லிலுரை.
நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நற்பெண்டாட்டிக்கொரு வார்த்தை.
நாட்டுக்கொரு மழை; நமக்கிரண்டு மழை.
நாமொன்றை நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது.
நாய்க்குத் தெரியுமோ தோல்த் தேங்காய்.
நாய் வாலை நிமிர்த்த முடியுமா?
நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணீர்.
நாயக்கு வாலிலே தேனைப் பூசினால் வளைந்து வளைந்து நக்கும்.
நாய்க்கு எங்கே அடித்தாலும் காலையே முடவும்.
நாய்க்கு வேலையுமில்லை, நடக்க நேரமுமில்லை.
நாய் கெட்ட கேட்டுக்கு ஞாயிறு ஒரு சாட்டா.
நாயும் வர உறியும் அறுந்தது.
நாயோட்டமும் சில்லறைப் பாய்ச்சலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளெண்ணிக் கருமமிழந்தான்.
நாள் செய்வதை நல்லவர் செய்யார்.
நித்தம் போனால் முற்றஞ் சலிக்கும்.
நித்திய கண்டம் பூரண ஆயுள்.
நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
நிறைகுடந் தழம்பாது.
நீற்றுப் பூசனிக்காய் எடுத்தவனைத் தோளிலே தெரியும்.
நீறு பூத்த நீற்றுப் பூசனிக்காய் போல.
நுனி மரத்திலிருந்து அடி மரத்தைத் தறிப்பது.
நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத் தீரும்.
நெருப்பில்லாமற் புகை வருமா?
நெய்க்குடமுடைந்தால் நாய்க்கு வேட்டை.
நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துவிட்டாற்போல.
நேரா நோன்பு சீராகாது.
நோயாளி வியாளியானால் பரிகாரி பேராளி.
நைடதம் புலவர்க்கு ஔடதம்.
பகலானாற் பார்த்துப் பேசு, இரவானால் அதுவும் பேசாதே.
பகிடியைப் பாம்பு கடித்ததுபோல.
பஞ்சம் போம், பஞ்சத்திற் பட்ட வடுப்போகாது.
பட்டாலறிவான் சண்டாளன்.
பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்.
பட்டிக்காட்டான் பட்டணம் போனது போல்.
படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில்.
படை முகத்திலும் அறிமுகம் பெரிது.
பண்ணிய கருமத்திற் புண்ணியந் தெரியும்.
பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே.
பணம் பத்துவிதஞ் செய்யும்.
பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்.
பத்தில் வியாழன் பதியை விட்டுக் கிளப்புமாம்.
பந்திக்கு முந்து; சண்டைக்குப் பிந்து.
பருமரத்தைப் பற்றிய பல்லியும் பாமுறா.
பருவத்தே பயிர் செய்.
பருப்புக்கு மிஞ்சின கறியுமில்லை; செருப்புக்கு மிஞ்சின அடியுமில்லை.
பலமுறை யோசித்து ஒருமுறை பேசு.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
பழக்கங் கொடிது, பாறையிலுங் கோழி கிளறும்.
பழகாதது பழகினாலும் பரவணி போகாது.
பழிக்குச் செத்தான் ஆண்டி, எடுத்துப் புதைக்க ஆளில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளத்தை வெள்ளம் நாடும்; பாரைக் கருவாட்டை நாய் தேடும்.
பற்றைக்கெறியப் பறவையிற் பட்டது போல்.
பன்றியோடு கூடின கன்றும் மலந் தின்னும்.
பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சாது.
பாடிப் பாடிக் குத்தினாலும் பதர் அரிசியாகுமா?
பாத்திரமறிந்து பிச்சைபோடு; கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு.
பாம்பின் கால் பாம்பறியும்.
பாம்பென்றாற் படையும் நடுங்கும்.
பாலுக்குங் காவல்; பூனைக்குந் தோழன்.
பாவத்துக்குப் பிள்ளை பெற்றால் பரிகாரி என்ன செய்வான்?
பாவியார் போகிற இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்.
பிச்சை வேண்டாம் நாயைப் பிடி.
பிச்சைக்காரன் சத்தி எடுத்ததுபோல.
பிறப்பிலே சொத்தியைப் பேய்க்கிட்டுக் கழித்தாலும் மாறாது.
பிறர்க்கிடு பள்ளம் தான் விழும் பள்ளம்.
புது விளக்குமாறு நன்றாகக் கூட்டும்.
புதுமைக்கு வண்ணான் கரைகட்டி வெளுத்தான்.
புயற்கடல் நடுவே அமைதி பெறவே.
புலியூருக்குப் பயந்து எலியூருக்குப் போக எலியூரும் புலியூரானது.
புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?
பூராடக்காரி சீராடத் தீரும்.
பெட்டைக் கோழி கூவிப் பொழுது விடியுமா?
பெண்ணென்றாற் பேயுமிரங்கும்.
பெருமைக்குப் பன்றி வளர்த்தவர் போல.
பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனம் கல்லும்.
பேச்சுப் பல்லக்கு; தம்பி கால்நடை.
பேசுமுன் யோசித்துப் பேசு, பாயுமுன் பார்த்துப் பாய்.
பேந்தென்பதும் பின்னையென்பதும் இல்லையென்பதற்குச் சரி.
பேர் பெரிது, வீடு பட்டினி.
பேராசை பெருந்தரித்திரம், தீராத உபத்திரவம்.
பொங்கினவன் புக்கையிலுந் தண்டினவன் புக்கை கூட.
பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லு.
பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை; மெய் சொல்லிக் கெட்டாருமில்லை.
பொரிமாவை மெச்சினாளாம் பொக்கை வாய்ச்சி.
பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டது போல.
பொன் வைத்த இடத்திலே, பூ வைத்தது போல.
மடியிற் கனமிருந்தால் வழியிற் பயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் குதிரையை நம்பி ஆற்றில் குதியாதே.
மதில் மேற் பூனை போல.
மந்திரத்தாலே மாங்காய் விழுத்தலாமா?
மயிலே மயிலே இறகு போடென்றால் போடுமா?
மரமறியாதவனுக்கு இலை பிடுங்கிக் காட்டினது போல்.
மருந்தும் விருந்தும் மூன்று நாள்.
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
மலைவிழுங்கி மாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளம்.
மலையே வரினும் தலையே சும.
மழைவிட்டுந் தூவாணம் விடவில்லை.
மனமது செம்மையானால் மந்திரம் வேண்டாம்.
மாடு முக்கிவர வீடு நக்கிவரும்.
மாப்புளிப்பது அப்பத்துக்கு நல்லது.
மாமியார் வீடென்றால் மகாயோக்கியம்; நாலுநாட் சென்றால் நாய்படாப்பாடு.
மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும்.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
மீன்பிடிகாரனுக்கு மிதப்பிலே கண்.
முக்காலுங் காக்கை முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமா?
முகம் ஆகாவிடிற் கண்ணாடி என்செயும்?
முகம் பாதி, பண்டம் பாதி.
முட்டாளுக்குக் கிட்டவழி.
முட்டையில் மயிர் பிடுங்குகிறது போல.
முடக் கழுதைக்குச் சறுக்கினது சாட்டு.
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல.
முருக்குப் பருத்தாலும் தூணுக்குதவாது.
முழுப் பூசனிக்காயைச் சோற்றிலே புதைத்தது போல.
மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது.
மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாது.
மொட்டைச்சியைக் கூந்தலழகி என்பது போல.
வண்ணான் துறை முயல் போல.
வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையும் தள்ளிச் சென்றதாம்.
வல்லார்க்கு வல்லார் வையத்திலுண்டு.
வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும்.
வழுவழுத்த உறவிலும் பார்க்க வயிரம் பற்றின பகை நன்று.
வளர்த்தமாடு மார்பிலே பாய்ந்தது போல.
வறுமையுஞ் செல்வமும் ஒருவழி நில்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைப்பழந் தின்ன வாடையும் வேண்டுமா?
வாழைப்பழத்தில் ஊசி ஏறினது போல.
விடிய விடியத் தண்ணீரெடுத்து விடிந்து குடமுடைந்ததாம்.
விடிய விடிய இராமர் கதை; விடிந்தபின் இராமருக்குச் சீதை என்ன முறை.
வித்தையடி மாமி, உன்னைக் கொத்துதடி கோழி.
விந்துவிட்டவர் நொந்து கெட்டவர்.
விரல் குத்திற்றென்று கைவிரலை நறுக்குவதா?
விளையாட்டு வினையாய் முடிந்தது.
வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினையறுப்பான்.
வீட்டுக்கு வீடு வாசற்படி.
வீடு சுடுகிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கிற மந்திரி.
வெங்கலப் பானைக் கடையிலே ஆனை புகுந்தது போல.
வெட்டொன்று துண்டிரண்டாக.
வெட்டினால் மொட்டை, விட்டாற் குடுமி.
வெட்கங்கெட்ட மூளிக்கு முக்காடு எதற்கு?
வெண்ணெய் திரள்கையில் தாழி உடைந்தது.
வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை.
வெள்ளம் வருமுன்னே அணைகட்டு.
வெளுத்ததெல்லாம் பாலாமோ?
வெறுங்கை முழமிடுமா?
வேகிற உடலுக்கு வெள்ளியென்ன? செவ்வாயென்ன?
வேரோடி விளாத்தி காய்த்தாலும் தாய்வழி தப்பாது.
வேலியம்பலம் படலை சங்கடம்.
வேலிக்கு ஓணான் சாட்சி சொன்னது போல.
வேலியே பயிரை மேய்வது போல.
வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு.
வைக்கோற்பட்டடை நாய் போல.
வௌவால் வீட்டுக்கு வௌவால் போனால், நீயுந் தூங்கு, நானுந்தூங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. இ. சரவணமுத்து (சாரதா)

'' 'கிராம ஊழியன்' பத்திரிகையிலே முளைவிட்டு, 'ஈழகேசரி'ப் பண்ணையிலே வளர்ச்சிபெற்ற 'மறுமலர்ச்சி வட்டார'க் கவிஞர் சரவணமுத்து, புதிய சிந்தனையும் உணர்ச்சி ஓட்டமும் நிரம்பப்பெற்ற அநேக கவிதைகளைப் பாடியுள்ளார். 'சுவர்க்கபூமி' முதலிய சிறுகாவியங்களை அவர் அருமையாகப் படைத்துள்ளார். 'இரட்டையர்' என்ற புனைபெயரில் கிராமக் கவிதைகள் பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடாத்தியுள்ளார். 'சாரதா', 'மகேஸ்வரன்' என்பனஅவர் புனைபெயர்கள்''

— 'ஈழத்துக் கவிமலர்களி'ல் **இரசிகமணி கனக. செந்திநாதன்**

'' நூலாசிரியர் சரவணமுத்து அவர்கள் பழைய மரபிற் காலூன்றி, புதிய சிந்தனைகளிற் திளைத்துத் தமது கட்டுரைகளை ஆக்கியுள்ளார். அவரது நீண்டகால எழுத்துப் பணியின் ஒரு அறுவடையாக இந்நூல் விளங்குகின்றது. ஒரு பழம்பெரும் எழுத்தாளரும், கவிஞருமாகிய க. இ. சரவணமுத்து (சாரதா) அவர்களின் இந்நூல் வாசகர்களுக்குச் சுவையையும், புதிய அனுபவத்தையும் ஏற்படுத்தும் என நம்புகிறேன்.''

— இந்நூல் முன்னுரையிற் **கலாநிதி துரை. மனோகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org